பரமபதி துணை.

# இரக்ஷணிய சரிதம்.

பாளையங்கோட்டை

மகரிஷி

## ஸ்ரீமத் H. A. கிருஷ்ண பிள்ளை

அவர்களியற்றிய

## மூலமும்

---

புதுக்கோட்டை

## ஸ்ரீ P.S. கடம்பவன சுந்தர நாயனார்

அவர்களெழுதிய பொருள் விளக்க

## உரையும்

---

PRINTED AT THE

N. M. S. PRESS, VEPERY,

MADRAS.

விலை 1932 ரூ. 1.

# PREFACE

BY

## The Rev. H. A. Popley, B.A.

I am delighted to respond to the request of Mr. P. S. Kadambavanam to write a short preface to his annotated edition of the *Ratchanya Saritha Padalam* of Vidvan H. A. Krishna Pillay. The Ratchanya Saritha Padalam is one canto of the famous work Ratchanya Yathrikam written by the great Christian poet of Tinnevelly, Vidvan H. A. Krishna Pillay, about 40 years ago. This work was first published by the Christian Literature Society in 1894 and just recently a second edition has been published by the same society, as the result of the efforts of the poet's grandson Doss Krishniah, to whose charge the copy-right of all the poet's works has been entrusted. It was hoped to print the annotations of Mr. Kadambavanam to this Padalam in the second edition referred to above, but unfortunately for various reasons only a few of them are found there. With the permission of the Christian Literature Society, Madras, and of Mr. Doss Krishniah it is now possible to publish the whole of Mr. Kadambavanam's annotations and notes on this Padalam as a separate book.

The Ratchanya Saritha Padalam is one of the finest Padalams in the whole work and gives the poet's description of and reflection upon the main events of the last few weeks of the life of our Lord. The poet has written in classic Tamil, which is not always easy for ordinary Tamil readers to follow, and so these annotations and paraphrases are very valuable. They will be of great help to readers of this classic work in understanding the meaning of his stanzas and in appreciating the beauty of his language. The paraphrase and notes are clear and to the point and there is no addition of useless materials.

It may not be possible for many Tamil Christians to purchase the complete book in its two volumes but it should be possible for every one to purchase this little book. They will find in this work not only a very fine description of the passion and death of ou

Lord but also the experience of one of the greatest saints and poets of Tamil Church as he realised all that this meant to him. We hope that many of those who purchase this little book will feel that they must also have the complete work which can be obtained from the Christian Literature Society. This work is the one great Christian classic of the Tamil Church and we hope that more and more as the days pass it will be studied and appreciated by Tamil Christians who love their own language and who wish to understand how one of the greatest of our Christian scholars entered into the mind and purpose of our Lord and Saviour.

This little book may be very heartily recommended to Theogical School and Seminaries as a suitable text book for study. The story of the poet's experience and the rich metaphors and similies in which he clothes his ideas will be a great help to all those who are training for the service of the Gospel of Christ.

Mr. Kadambavanam in his preface tells us that the taking up of the task of annotating this Padalam.is the result of a definite command given to him by the poet himself in a vision. Mr. Kadambavanam has for so many years studied and meditated upon the work of the poet that it is no wonder he should have had such a vision and I can assure readers that he has entered into the very spirit of the poet and will enable them to understand him more perfectly.

I commend this work to the Tamil Christian public with all my heart.

CALCUTTA
*9th December 1931*

H. A. POPLEY.

# OPINION

BY

## The Right Rev. D. Bexell,

*Bishop of Tranquebar.*

Mr. P. S. Kadambavanam has asked me to write a few words commending *Ratchanya Saritha Padalam.* I fully endorse the high opinion of the book expressed by Mr. H. A. Popley. I remember some 40 years ago, when Mr. Krishna Pillai's book was first published, how my young Munshi, himself a poet, was deeply moved when explaining the stanzas to me. When coming towards the end of the book he once stopped and with tears in his eyes he confessed his firm belief in Christ and his desire to be received into the Christian Church. The then Subramanian Chetty became Paul Arulappan, who served the Church as a Pastor and author of Tamil poems.

With warm sympathy I have followed Mr. Kadambavanam's career from the time of his school-days at Pudukottah. As previous books published by him have served good purposes, I hope that these Annotations also will meet with the full appreciation they deserve.

BISHOP'S HOUSE,
TRICHINOPOLY,
*13th January 1932*

D. BEXELL
*Bishop.*

---

BY

## The Hon'ble Sir. M. D. Devadoss, Kt.

*Member. Council of State.*

I have persued with some care and great pleasure portions of the Commentary of Mr. P. S. Kadambavanam on Ratchanya Saritham. Too much praise cannot be bestowed on his earnestness and enthusiasm for the task he set before himself. He has given the meaning of the stanzas in lucid and idiomatic Tamil and his comments are illuminating. Evidently, his has been a labour of love and what he has done he has done admirably well.

The Christian public owes a deep debt of gratitude to the Rev. H. A. Popley for his untiring efforts to get a second edition of the *Ratchanya Yathrikum* published and for his encouragement of Mr. Kadambavanam with his advice and help to bring out this work.

Mr. Krishna Pillay's Ratchanya Yathrikum is an epic poem of great merit free from the obscenities and puerilities which disfigure some of the noblest poems in the Tamil language. The Yathrikum is a pure well of Tamil undefiled. Its imagery and metaphors and similies compare favourably with those of the immortal Kamban's great work, whereas its theme is a much nobler one—the journey of the sin-burdened soul through the mazes of this world seeking peace and rest with implicit trust and faith in the Lord Jesus. It is not a free translation of John Bunyan's pilgrim's progress. As the *Madras Mail* said about 40 years ago when the first edition was passing through the press " what the plays of Shakespeare are to Plutarch's lives such is Mr. Krishna Pillay's Ratchanya Yathrikum to Bunyan's Pilgrim's Progress." On the foundation of that famous allegory has been erected a noble fabric full of charm and grandeur with all the characteristics and incidents of Tamil classic poetry. Though it is an epic poem yet its language is not pedentic but simple and its meter is smooth and flow ing. The subject is treated in a highly devotional manner. The *Thevaram* beginning with the words *சத்தாய் நிஷ்களமாய்* will stand comparison as regards language sentiment and music with the highest efforts of the human mind in any language ancient and modern. The beauties of the Yathrikum once appreciated will always be a source of pleasure and deep devotion. Mr. Kadambavanam's commentary will greatly help to make the Ratchanya Yathrikum widely known and read.

My sincere desire is that the Tamil knowing people should make it a part of their daily reading.

WESTERN HOSTEL
NEW DELHI
*3rd April 1932*

DAVID DEVADOSS.

# முன்னுரை.

புவன இரக்ஷாபெருமானாகிய ஸ்ரீ இயேசுகிறிஸ்துநாதரை யான் வழிபடுங் கடவுளாக, இன்றைக்குச் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குமுன் என்னிதயா சனத்திலிருத்தித் தியானித்து வருங்காலத்துக் கவிதொடுப்பதில் கம்பர் முதலிய கவீஸ்வரர்களுக்குச் சமானமானவரென்று ஆன்றோர்களால் மதித்துப் போற்றப்படும், மகரிஷி ஸ்ரீமத் கிருஷ்ணபிள்ளையவர்களின் மாணவரும், தன் குடும்பசகிதமாகக் கிறிஸ்து சமயத்தைத் தழுவினவருமான எனதரிய அம்மான் இராவ் சாஹீப் தாமஸ் கதிர்வேல் நாயனார் அவர்களால் அம்மகரிஷியவர்கள் திருவாய் மலர்ந்தருளிய இரக்ஷணிய யாத்திரிகம் என்னுந் திவ்யகாவிய மொன்றை தரப்பெற்றேன், இந்நூல் சொற்சுவையுடன் பொருட் சுவையு மலிந்து பக்திரசமான வுபதேசப் பொக்கிஷமாகக் காணப் பெற்றமையால், காந்தஞ் சமீபித்த ஊசியொன்றை விடாது கவருவது போலும் என் மனதைக் கவர்ந்து கொள்ளை கொண்டது. எனவே இவ்வரிய நூல் முழுவதையுங் கற்றுத் தெளியவேண்டு மென்ற அவா கொண்டவனாய்ப் பன்முறையு மென்னோய்வு நேரங்களில், இந்நூலைப் படித்துவந்த தல்லாமல் எனது சொந்தப் பிரயோசனத்திற் கென்றே சில படலங்கட்கு அரும் பதவிளக்கமும் குறிப்புகளு மென்புல் லறிவுக் கெட்டிய மட்டி லெழுதியும் வந்தேன்.

இக்குறிப்புகளைத் திருக்கண்ணோக்கிய திருவாளர் திவான்பகதூர் எ. எஸ். அப்பாசாமிப் பிள்ளை யவர்களும், சங்கை தாமஸ் உவாக்கர்[1] போதகரவர்களும், களிப்பெய்தியவர்களாய், இதனைப் பொழிப்புரையாக மாற்றி ஓர் சிறு நூலாக வெளியிடின் தமிழுலகு மிக்கப் பயன்படுமென வபிப்பிராயப்பட்டனர்.

இதுகேட்ட என் மனம் உற்சாகத்தில் மூழ்கவே, இரக்ஷணிய சரிதப் படலத்தைத் தெரிந்து, அதற்குள்ளக் குறிப்புகளையே ஆதாரவாகக் கொண்டு உத்தியோகத்தும் மற்று மின்றியமையாக் காரியங்களிலுஞ் செலவிட்ட நேரம்போக எஞ்சிய நேரத்தில் விசேஷமாக இரவி லியன்றமட்டில் ஆக்கியோன் கருத்துக்கிசைய சிறுவரு மெளிதி லுணருமாறு, பொழிப்புரை எழுதிவந்தேன்.

இங்ஙனம் நிகழுமோரிரவில், நேரே பொருள் விளங்காது ஆழ்ந்த கருத்தமைந்த சில கவிதைகள் என தறிவிற் கெட்டாமற் போயது. இயன்ற மட்டிற் பிரயாசப்பட்டும் அக் கவிகளின் புதை பொருள்யாதும் விளங்காமையால், இரவு இரண்டு மணிபோல் அத் திருநூலை மிகச் சலிப்புடன் மூடி நித்திரைக்குச் சென்றேன். கரணங்க ளோய்ந்து அயர்ந் துறங்கு மென் கனவில், யான் கண்ட காட்சியை யிங்கெடுத் துரைக்க நேர்ந்தது சில பெரியோர்களின் சம்மதியே யாதலால், இதன் மாட்டு யான் கொண்டுள்ள வென் றுணிவை அறிவுடையோர் பொறுத்தல் கடன்.

---

1. The late Rev. Thomas Walker, C.M.S. of Palamcotta.

**அக்கனவின் விபரமாவது:—**

நான் என் னில்லத்திற் பாயொன்றின்மே லுட்கார்ந்து மேற்கூறிய கருத்து விளங்காக் கவிகளைப்பற்றி நீண்ட யோசனையி லிருக்கும் தருணம், திடீரெனப் பிரகாசமான வொளி அவ்வறை முழுவதையும் நிறப்பியது. உடனே நெடிய உடலும், சிவந்தமேனியும், தூய வெண்வஸ்திரமும் தலைப் பாகையுந் தரித்தவராய் கரத்தி லோர் கோல் பிடித்தவராக ஒருத்தம புருஷன் அவ்வறையி னுட்புகுந்தார். ஸ்ரீமத் கிருஷ்ணபிள்ளை யவர்களை யான் நேரில் தரிசிக்கப் பாக்கியஞ் செய்யாதவனாக விருந்தும், அவர்களது திரு வுருவப் புகைப் படத்தி னுருவும் என் முன் தோன்றிய உருவத் திற்குப் பொருந்தி யிருந்தமையால ஸ்ரீமத் கிருஷ்ணபிள்ளை யிவர்களே யென வென் மனதிற்கொண்டு எழுந்து அவர்களை நமஸ்கரித்துத் "தாங்கள் எங்கிருந்து இவ்வெளியன் குடிலுக்கு விஜயமானீர்" என மிக்கப் பணி வுடன் அப் புருஷோத்தமனை வினவினேன். அவ்வான்றோர் எனக் காசிகூறி, பகரரிய பழமறை பழுத் தொழுகு சிறு நகைப் பவளஞ் சிறந்த தம் வாயைத் திறந்து உனக்கு விளங்காச் சிலகவிதைகளை உன் னகங்குளிர விஸ்தரிக்க வேண்டியே நான் மோட்சத்திலிருந்து வந்துள்ளேன்." எனக் கனிவுடன் மொழிந்து, என் னருகி லுட்கார்ந்து என முன்னுள்ள அவரது திவ்ய காவியத்தைச் சிக்குப் பலகையுடன் எடுத்துத் தன்முன் வைத்து, என்னறிவுக் கெட்டாத கஷ்டமான கவிதைகளின் பொருட்களை விபரப்பட வெனக் குபதேசித்தனர். இவ் வுத்தம வுபதேச முடிந்ததும் மகரிஷி யவர்கள் மறைய யானுந் திடுக்கிட்டு விழித்தேன்.

இவ்வரிய காட்சி, கனவைப் போலல்லாது ஆன்றோரது ஆசீர்வாத மொழிபோலும், ஆண்டவனது கருணைபோலு மென் மனதிற்பட, அஃ தெனக் குள்ளுவகையையு முற்சாகத்தையும் நிலைநாட்டியது. அக் காட்சியை யுடனே என் துணைவிக் கறிவித்த தல்லாமல் அக்கால் சென்னையில் பிரசுர மாகிவந்த ஆங்கிலேய பத்திரிகையிலும் * வெளியிட்டேன்.

இச் சம்பவம் நிகழ்ந்த பின்னர், உரையை மனஞ் சலியாது எழுதி முடிப்பது என் முக்கிய கடமையும் தெய்வ சித்தமுமா மென என் மனதிற் பட்டது, அவ்வித மதனை முடிக்கவும் இறைவ னருளைப் பெற்றேன்.

மேலும் மகரிஷியவர்களது நூலின் சுதந்தர வுரிமை, எவருக்கு மளிக்கப் படாமல், நியாயஸ் தலத்தி லிருந்தமையால் யான் மனஞ்சோராது எழுதி முடித்த உரையை, அச்சு வாஹனமேற்றச் சாத்தியப்படாது ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் போல் கைப்பிரதியாகவே வைத்திருக்க நேர்ந்தது.

சிறிது காலத்திற்கு முந்திதான், மகரிஷி யவர்களின் சகல சுதந்தர வுரிமைகளும், அவரது பௌத்திரராகும் திருவாளர் தாஸ் கிருஷ்ணையாப் பிள்ளை யவர்கட் களிக்கப் பட்டிருப்பதை யுணர்ந்து, அவருக் கென்னுள்ளக் கிடையைத் தெரிவித்தேன். அன்னவர் யான் கோரிய வண்ணமே இரக்ஷ ணிய சரிதப் படலத்தைத் தனிப் பிரதியாக அச்சிட்டு வெளியிட மனப்பூர்வ மான வன்புட னெனக் கனுமதி யளித்தனர். இவ் வனுமதியைப் பெற்ற பின்னும், உரையை அச்சிட்டு வெளியேற்றப் போதுமான பொரு ளில்லா மையால் மீண்டு மிரண்டாண்டுபோல், இக்கைப்பிரதியை வைத்துக்கொண்டு மெய் சோர்ந்து நின்றேன்.

---

* "The Christian Patriot" Madras, dated 3rd May 1924.

இவ்வாறு மனம்வாடி நிற்குங்கால், தமிழ்ப் பாஷையிற் தேர்ச்சியுடைய வரும், "இரக்ஷணிய யாத்திரிகம்" இரண்டாம் பதிப்பாகி வெளிவரக் காரணராக விருந்தவரும், இரண்டு பத்தாண்டுகள் போல வெனக் கரிய நண்பராக விருந்தவருமான சங்கை பாப்லி போதக ரவர்கள்[1], இரங்கூனுக்கு விஜயஞ் செய்தனர். இப் பெருந்தகையார் எனனகத்திற்கு ஓர் தினம் வந்திருந்த போது என்னிடத்திருந்த ஷை கைப்பிரதியைக் கண்ணுற்று, அதனை மிகவும் பாராட்டி, இதனை எவ்விதத்திலும் அச்சியற்றுவித்தல் வேண்டுமெனத் திடங் கூறித் தம்மா லியன்ற பொருளுதவியுஞ் செய்வதாக வாக்கிட்டனர். மேலும் மற்ற கிறிஸ்தவ பக்தர்க ளிடமிருந்து எடுத்த காரியத்தை முற்று விக்க வேண்டிய பொருளை, யான வசூலித்து, இந்நூலைச் சம்பூர்ணமாக்கு வதே தகுதியென வற்புறுத்தி யேகினர். அவ்வாறே நெடுநாளாக என்னை யறிந்த நண்பர்களிற் சிலருக்குத் தனித் தனியாக நிருபங்கள் விடுத்து விஷயத்தை யறிவித்து வந்தேன். அந் நண்பர்க ளனைவரும் மனங்கோணாது என்னையும் யானச்சிட முயன்றுள்ள திவ்ய நூலின் உரையையும் பொருட் செய்து, யான் கோரியப் பொருளுதவியைப் புரிந்தும், என்னரிய முயற் சியை ஆதரித்தும்,எடுத்த காரியத்தை இனிது முடித்து வைத்தபடியால் என் மனதிலுள்ள ஆனந்தத்தை எவ்வித மெடுத்துக் கூறுவேன். ஆ! பலவாண் டுகளாக என்வசமுள்ள கைப்பிரதி அச்சுயந்திரசாலையில் நுழையத் தக்க நற்காலம் பிறந்ததும் அஃது புத்தக ரூபமாக வெளி வந்துள்ளதை என் கண் கள் கண்டு புனிதமாயதும் எல்லாம் வல்ல இறைவனருளே: இப் பேருதவி புரிந்த வன்பர்களது திருநாமதேயங்களை யிதனடியிற் குறிப்பிட்டுள்ளேன் —

The Rt. Rev. பிஷப் பெக்ஸல் அவர்கள்
The Hon'ble. சர் டேவிட் தேவதாஸ் அவர்கள்
The Rev. Dr. L. P. லார்ஸன் அவர்கள்
The Rev. Dr. A. J. அப்பாசாமி அவர்கள்
The Rev. Dr. J. J. பெனின்ங்கா அவர்கள்
The Rev. Dr. J. H. மெக்லீன் அவர்கள்
Rao Sahib. T. கதிர்வேல் நாயனுர் அவர்கள்
The Rev. C. H. மோனகன் அவர்கள்
The Rev. J. S. M ஹூப்பர் அவர்கள்
The Rev. H. A. பாப்லி அவர்கள்
The Rev. H. பிரீகாம் அவர்கள்

"கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய் வருந்தித் தம்மாலியலுதவி தாஞ்செய்வர்" என்ற முதுமொழிக் கொப்ப, மேற்கூறியத் திருவாளர்க ளுதவிகொண்டு இந்நூலச்சிடப்பட்டுப் பிரசித்திச் செய்யப் பெற்றமையால் இந்நூலின் விற்பனையால் வருந் தொகை முழுவதையும் நன்கொடையாக நாஷனல் மிஷனெரி சங்கத்திற்கென[2] விடுத்துள்ளேன்.

இது நிற்க ஓர் காவியத்திற் குறையெழுதப் புகுவோர், அக்காவியக் கர்த்தாவுக்குச் சற்றுச் சமானமாகவே கவிபாடுந்திறமை வாய்ந்தவராக விருந்

1. The Rev. H. A. Popley, B.A,
2. The National Missionary Society of India, Vepery, Madras.

தல் வேண்டும். அவர் மாணாக்கராகவேனும் அல்லது அவரது நடை, பாவனை, சம்பாஷணை, பக்தியின் கிரியை முதலியவைகளைச் சகவாசத்தா லறிந்தவ ராகவேனு மிருத்தல் வேண்டும் ஈண் டெடுத்துக் கூறிய விலக்ஷணங்களி லொன்றேனு மமையப் பெறாத யான் இத்திவ்ய காவியத்திற்கு உரை யெழுதத் துணிந்தது, நரியின் வாலைக்கொண்டு விரி நீராழியி னாழத்தை யளக்க முயற்சித்த பேதையை யொத்திருப்பதால், கல்வியில் வல்லார் இவ்வுரையிலுள்ள வழுக்களை யாராயப்புகின் "மணற் சோற்றில் கல் லாராய்வதை யொக்கு" மென்பதற்குச் சந்தேகமுமுண்டோ? இவ்வுரை யெழுதப் பெற்ற சந்தர்ப்பத்தை மேலே சுருக்கி விவரித்துள்ளபடியால் அறிவுடையோர் என்றுணிவை க்ஷமிப்பார்களெனப் பெரிதும் நம்புகின்றேன்.

தமி ழுலகு புகழும் "தமிழ்ப் பிரகாசிகை" முதலிய பல அரிய நூல்களி னாசிரியரும என்னிலுழுவலன்புடையாருமான, இரங்கூன் திருவாளர் ந. கபாலமூர்த்திப் பிள்ளை யவர்கள், இவ்வுரையின் கைப்பிரதியைக் கண்ணுற்ற காலந்தொட்டு இது வெளி வரும்வரை பல வாண்டுகளாக வென்னுட னுழைத்த வைழத்த அவரது தமிழபிமானத்தையும்; இப்பட லத்தைத் தனிப் பிரதியாக வெளியிட எனக் குரிமை யீந்த திருவாளர். தாஸ் கிருஷ்ணையாப் பிள்ளை யவர்களது தயவையும்; கிறிஸ்தவ கல்வி யபிவிருத்தி சங்க அதிபதியாகும் கனம். வாரன் துரை யவர்களது1 கருணையையும், இன்ன லொழித்துப் பன்னலந் தரூஉங் கன்னல் முக் கனியெனுஞ் சொன்னயம் வாய்ந்த இரக்ஷணிய சரிதப்படலத்தின் உரையை அச்சியற்று மாறு, என்னைப் பலவிதத்து முற்சாகப் படுத்திவந்த சங்கை பாப்லி போதகர் அவர்களது போன்பையும்; அச்சேந்திரசாலையின் செலவைத் தங்கள் பொறுப்பாக வேற்றுக்கொண்டு இந்நூல் குன்றின் மேலிட்ட தீபம் போலும் பிரகாசிக்கச் செய்வித்த கனதனவான்களின், போற்றுதற் கரியதும் புகழ்வதற்குங் கீர்த்திக்கு முரியதுமாகிய வுதாரகுண சீலத்தையும்; எம் மொழிகொண்டும் நன்றி கூறவறிகிலேன்.

எனதற்ப முயற்சிக்கு மேலே குறிப்பித்த வண்ணம் பெருந்துணையாக நின்று ஊக்கமளித்து நீண்டகாலமாக வுத்தேசித்திருந்த பெருமையும் மகிமையும் பொங்கித் ததும்பும் இவ்விரக்ஷணிய சரிதப்படலம் என்னெளிய வுரையுடன் ஒளிகாலச்செய்த எல்லாம் வல்ல இறைவனின் அற்புத பொற்பாத கமலங்களை அடியேன் சதா இறைஞ்சா நிற்கின்றேன்.

"தான்கண்ட நிட்சேபத்தைத் தமர்க்கெலா மறிவிப்பான்போல்
வான்கொண்டமகிபன் றிவ்யமாக்ஷிசேர் காதையென்னும்
யான்கண்டநிட்சேபத்தை யாவருந்தெரிவான்செய்தேன்
தேன்கண்டவிந்நூலீட்டற் செய்குவாருய்குவாரே."

இரங்கூன், பர்மா,
கிறிஸ்து ஜயந்தி 1931

இங்ஙனம்
P. S. கடம்பவனம்.

---

1. W. H. Warren Esqr., Secretary, C.L.S., Madras.

# கவிப்பிழை திருத்தம்.

| பக்கம் | கவி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | யெம்மான் | மெப்மான் |
| 23 | 59 | 1 | பூன்னமிவ | முன்னமிவ |
| 29 | 74 | 2 | வாகிய | மாகிய |
| 30 | 78 | 3 | வெண்பதி | வெண்மதி |
| 32 | 87 | 2 | மீன்களான | மீன்களான் |
| 33 | 91 | 2 | காமற் | காமர் |
| 35 | 96 | 4 | சருக்குலம | தருக்குலம் |
| ... | 98 | 1 | லூன்றி | ஞான்றி |
| 94 | 319 | 2 | லுழந்தார் | லுழ்ந்தார் |
| 108 | 378 | 4 | விட்டர் | விட்டார் |
| 124 | 438 | 2 | கரும்பூ | கருமபூ |
| 140 | 498 | 3 | வாறு | மாறு |

# தமிழ் இலக்கம்.
# TAMIL NUMERALS.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | .... | ௧ | 20 | ... | ௨0 |
| 2 | .... | ௨ | 30 | ... | ௩0 |
| 3 | .... | ௩ | 50 | ... | ௫0 |
| 4 | .... | ௪ | 80 | .. | ௮0 |
| 5 | .... | ௫ | 95 | ... | ௯௫ |
| 6 | .... | ௬ | 100 | ... | ௧00 |
| 7 | .... | ௭ | 256 | ... | ௨௫௬ |
| 8 | .... | ௮ | 374 | ... | ௩௭௪ |
| 9 | .... | ௯ | 490 | ... | ௪௯0 |
| 10 | .... | ௧0 | 500 | ... | ௫00 |

# பொருளடக்கம்.



| | | | கவிகள் | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | திருவிருந்து காண்டம் | ... | 72 | 9 |
| 2. | கெத்ஸமனே காண்டம் | ... | 82 | 29 |
| 3. | விசாரணை காண்டம் | ... | 76 | 51 |
| 4. | தீர்ப்புக் காண்டம் | ... | 73 | 71 |
| 5. | மரண காண்டம் | ... | 72 | 89 |
| 6. | சமாதி காண்டம் | ... | 50 | 109 |
| 7. | உயிர்த்தெழுந்த காண்டம் | ... | 54 | 121 |
| 8. | பரமேறிய காண்டம் | ... | 19 | 135 |

பரம பதி துணை.

# இரக்ஷணிய சரிதம்.

## சிறப்புப் பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

*தந்தையாகி உலகனைத்துந் தந்து மறுக்க டமைப்புரக்க*
*மைந்த னாகிப் புனிதாவி வடிவாய் ஞான வரமருளிப்*
*பந்த மறநின் றிலங்குதிரி யேக பரமன் பதாம் புஜத்தைச்*
*சிந்தை யாரத் தொழுதேத்திச் சேரவாரும் ஜெகத்தீரே.*

இதன் பொருள். நமக்குப் பரம பிதாவாக நின்றும், இவ்வுலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்து மானிடர்களை ஈடேற்றிக் காத்து இரட்சிக்கக் குமாரன் அவதாரமெடுத்தும், பரிசுத்த ஆவியின் வடிவாய் ஞான வரங்களை நல்கியும் யாதொரு பாசபந்தமுமில்லாது பிரகாசித்தொளிரும் திரியேகக் கடவுளின் தாமரைப்போன்ற திவ்விய திருவடிகளை மனதார வணங்கித் துதித்து அவரை (தஞ்சமென்று) அடைய ஜெகத்தீரே வாருங்கள்.

அற்பணம்

*கருணை யங்கடலே அந்த காரமாம் வினையைப் போக்கு*
*மருணனே யடியேற்காக ஆருயிர் விடுத்த தேவே*
*பொரு ணயந் தெரியாத்தீய புல்லிய னெனை யாட்கொள்ளத்*
*தருண மென்னிதய நிற்க சமர்ப்பணந் தரும மூர்த்தி.*

(இ...ள்.) கருணா சமுத்திரமே! பாபாந்த காரமாகிய இருளை யொழிக்கும் ஞானசூரியனே! அடியேனுக்காக (மனுட அவதார மெடுத்து) அருமையான ஜீவனை விட்ட கடவுளே! தருமப் பிரபுவே! (சத்திய வேதத்தின்) பொருளையும் அதன் நலத்தையும் அறியாத கொடியனும் ஈனனுமாகிய என்னை (உமக்கு) அடிமையாக்கிக்கொள்ள இதுவே (ஏற்ற) தருணம். என்னுள்ளத்தை உமக்கே அற்பணஞ் செய்கின்றேன்.

இது நம் வித்வான் கிறிஸ்து மார்க்கத்தை வந்தித்துப் பாடின முதற் கவி.*

* இதன் வரலாற்றை இவ்வுரை யாசிரியர் எழுதியுள்ள வித்வானின் ஜீவிய சரித்திரத்திற் காண்க.

### வேறு

கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு ஜீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனு மூர்த்தியை யஞ்சலித் திடுவாம்.

(இ...ள்.) கன்னிமரியாளின் பாலகனாய் இந்த உலகத்தில் அவதரித்து, நிலைபெற்ற ஜீவகோடிகளெல்லாம் மோட்சகதியைப் பெறும்படிக்கு தன் ஜீவனையும் பலியாகச் சிலுவையிற்கொடுத்த நமது வழிபடு தெய்வமாகிய இரக்ஷண்ய மூர்த்தியை அஞ்சலிசெய்வாம்.

### நுதலிய பொருள்

வெற்று நேரப்போக் காய்ப்புகல் விநோதமு மன்று
புற்ற ராவிடம் பொதிந்தசெப் பெனக்கவி புனைந்து
சிற்றின் பத்திறம் திருத்திய காதையு மன்று
மற்றி தாத்தும ரக்ஷணை வழங்குமோர் மருந்தாம்.

(இ...ள்.) இத்திவ்ய நூல் வெறும் பொழுது போக்குமாறு சொல்லப்படும் விநோதப் பேச்சல்ல, புற்றில் வாழும் பாம்பை யடக்கி வைத்துள்ள பாத்திரத் தைப்போலக் கவிகளால் அலங்கரிக் கப்பட்டு சிற்றின்பத்தைப் பேரின்பமெனப் பாவிக்குங் கதையுமல்ல, ஆகையாலிது ஆன்மாக்களுக்கு யீடேற்றத்தை யளிக்கும் ஒப்பற்ற அமுதமாகும்.

### நூற்பயன்

தீவினைஜலதி வீழ்ந் தழியும் ஜீவரை
வீவிலாக் கதிக்கரை வீடு சேர்க்குமோர்
தாவரு புண்ணியத் தனி மரக்கலம்
ஜீவர க்ஷணியசரிதமிது தேர்மினே.

(இ...ள்.) தீவினையாகிய சமுத்திரத்தில் வீழ்ந்து அழிகின்ற ஜீவகோடிகளை அழிவில்லாத கதிக்கரையாகிய மோக்ஷவீட்டில் சேர்க்கவல்ல இடைத்தற்கரிய ஒரு தரும மயமான ஒப்பற்ற கப்பலாகும். இந்த ஜீவரக்ஷணிய சரிதமென யாவரும் அறியுங்கள்.

தீவினை ஜலதி என்றது பாவசாகரத்தை அலங்கார உருவகம். இப்பாட்டால் இந்நூலைக் கற்போர் கேட்போர் பெறக்கூடிய பயன் கூறப்பட்டது.

### யாப்பு

முதிர்க டுத்தழை நுகர்ந்திடு மொட்டையின் மூர்க்கர்
கதிவ முக்கிய பாழ்ங்கதை கற்றுநாட் கழிப்பர்
புதிய தேனுக ரளியெனப் புனிதர் யாத்திரிகம்
மதிந லந்தரு மமிழ்தெனப் புசித்துள மகிழ்வர்.

(இ...ள்.) முதிர்ந்த கசப்பான (வேப்பந்) தழைகளைச் சாப்பிடு கின்ற ஒட்டகத்தைப் போல் கீழ்மக்கள் நன்னெறியி னின்று விலகிய வீண்கதைகளைக் கற்று தமது வாழ்நாளை வீணே கழிப்பர். புதிய தேனை யுண்ணும் வண்டைப்போல் பக்தர்கள் இரக்ஷணிய யாத்திரிகம் (என்னும் காவியத்தின் ஒரு பகுதியாகும் "இரக்ஷணிய சரிதம்") என்னும் நூலை தமது புத்திக்கு நலந்தரும் தேவாமிர்தமென்று நினைத்து இதைப் புசித்துக் களிப்பர்.

பன்மணி

முனைவனை யறிய வேண்டில் முற்றுநீ யியற்றும் பாவ
வினையெலாந் தொலைய வேண்டில் வீட்டின்ப மடைய வேண்டில்
இனிவருந் தேவ கோப மெரித்திடா திருக்கவேண்டில்
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே.

(இ...ள்.) நெஞ்சே! நீ ஜெகதீசனை அறியவேண்டுமானாலும், நீ செய்யும் பாவதோஷங்கள் முழுவதும் உன்னைவிட்டு நீங்கவேண்டுமானாலும், மோட்ச இன்பத்தை நீ பெறவேண்டுமானாலும், இனிமேல் வரும் தேவ கோபமாகிய அக்கினி உன்னை தகிக்காதிருக்கவேண்டுமானாலும், மனித ரூபமாக இங்குவந்துதித்த ஸ்ரீ கிறிஸ்துநாதரின் மலர்போன்ற பாதங்களை வணங்குவாயாக.

தனியிடத் திருந்து பாவச் சழக்கினைக் கருதி யாவி
அருமதி பெற்றுத் தேவ வன்பினை யிதயத் துன்னி
கனியுமுள் ளன்பி னோடு கண்கணீர் ததும்ப நின்று
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே.

(இ...ள்.) என் மனமே நீ தனிமையாக ஓரிடத்தில் (தியானத்தில்) இருந்து, பாவத்தினால் உண்டாகும் அறிவீனத்தைச் சிந்தித்து, தேவ ஆவியினது அநுக்கிரகத்தையடைந்து, ஜெகதீசனது அன்பை மனதிலே நினைத்து கனிந்திருக்கும் உள்ளன்பினால் கண்ணீர் பெறுக (பக்தியின் நெறியில்) நின்று மனித ரூபமாக இங்கு வந்துதித்த ஸ்ரீ கிறிஸ்துநாதரின் மலர் போன்ற பாதங்களை வணங்குவாயாக.

தனுகர ணங்க ளோய்ந்து தளர்ந்துமூச் சொடுங்கு காலை
மனைமகார் துணையா வாரோ மருங்கிருந் தழுவ தல்லால்
அநவா தமுமு னக்கோ ராந்துணை விரும்பி வின்னே
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே.

(இ...ள்.) என் தேகத்திலுள்ள மெய் வாய் செவி கண் மூக்கு எனப்படும் ஐம் பொறிகளும் தத்தம் தொழிலை விட்டு அவைகளின் நாடி தளர்ந்து எனது மூச்சு ஒடுங்கும் சமயத்தில் மனைவியும் மக்களும் என் பக்கத்திலிருந்து அழுவதல்லாமல் எனக்கு அவர்கள் அம்மரண வேளையில்

துணையாவார்களோ? ஆகையால் என் மனமே, எந்நாளும் உனக்கு ஒரே தன்மையில் துணையாக விருக்கக்கூடியதை நீ விரும்புவாயாகில் மனித ரூபமாக இங்கு வந்துதித்த ஸ்ரீ கிறிஸ்துநாதரின் மலர்போன்ற பாதங்களை வணங்குவாயாக.

வேறு

தெய்வாசீர் வாதம்

சிந்தையாத் திரையி னோர்ந்த திவ்விய சரித மற்றிவ்
விந்தையைக் கருத்தி லுய்த்து விழுத்தகு நோன்பு பற்றி
அந்தண ராகி வேத வறநெறி வழுவார்க் கெல்லாஞ்
சந்தத மழிவில் பேறு தருவர்நம் பரம தந்தை.

(இ...ள்.) மனதிற்குகந்த இரக்ஷணிய யாத்திரிக மென்னுங் காவியத் திலடங்கிய இரக்ஷணிய சரிதமென்னும் இந்நூலிலுள்ள ஆச்சரியமான போதனையை மனதில் கிரகித்து போற்ற தகுந்த நெறியைக்கைப்பற்றி பக்தர்களாகி வேதத்தின் தரும நெறி தவறாதவர்களுக்கெல்லாம் எந்நாளு மழியாத மோட்ச இன்பத்தைப் பரம பிதாவாகிய கடவுள் தந்தருளுவார்.

இரக்ஷா பெருமான் துணை.

# இரக்ஷணிய சரிதம்.

## மூலமும் உரையும்.

இரக்ஷணிய சரிதம் என்பது இவ்வுலகத்திற் கிரட்சிப்பு வந்த விதத்தை சத்தியவேத ஆதாரப்படி விளக்கிக் காட்டும் நூலென விரியும். இஃது பெரும்பாலும் உலகத்திற் கிரக்ஷிப்பைத் தந்திருப் பாடுகளால் தந்தருளிய இரக்ஷா பெருமானும், கதா நாயகனுமாகிய, ஸ்ரீ இயேசு கிறிஸ்து நாதரின் ஜீவிய சரித்திரத்தின் ஓர் பாகத்தை விளக்கும். அதாவது: பலஸ்தீனா நாட்டிலுள்ள எருசலேம் நகரின்கண் சுமார் ஈராயிர வாண்டுகளுக்கு முன் நடந்த பஸ்காப் பண்டிகை நாளில் இயேசு பிரான் திருவிருந்தளித்தது முதல் அவர் மேக வாகனரூடராய் விண்ணேறிய வரையிலுமுள்ள சரிதம் இந்நூலி லடங்கும்.

ஜான் பனியன் என்னும் பக்த னெழுதிய மனோ பாவனா சரிதமாகிய "மோட்ச பிரயாணம்" என்னும் வியாச நூலில், மோட்ச பிரயாணி யாகிய கிறிஸ்தியான் நாச தேசம் விட்டகன்று மோட்ச வாயிலை நாடிப் பிரயாணஞ் செய்யுங்கால், பற்பல மோசமான பாதை வழியாகச் சென்று, சிங்கார மாளிகை யொன்றை யணுகி யங்கோரிரவு தங்கினன். அவ்விரவில் போஜன மருந்து முன் அங்குள்ள கன்னிகைகளில் "பக்தி" யென்னுமோர் பெண் இச்சரிதத்தைப் பிரயாணியாகிய கிறிஸ்தியானுக் குணர்த்திக் காட்டினதாக ஆக்கியோன் பாவித்து, அந்நூலை மிகத் திறமையுடன் கவியா மைத்துள்ளார்.

எனவே இது "இரக்ஷணிய யாத்திரிகம்" என்னும் பெருங் காப்பியத்தில் இரண்டாம் பகுதியிலுள்ள குமார பருவத்தின் இறுதியில் "இரக்ஷணிய சரிதப்படலம்" என்னும் பெயரால் விளங்கா நிற்கும்.

## கடவுள் வாழ்த்து.

### பிதா வணக்கம்

அகில லோகம்ப டைத்தளித் தன்பினாற்
சகல மன்னுயி ருங்கதி சார்ந்துய
மகவை நல்கிய மாண்புறு தாதையாம்
பகவ னுக்கித யாஞ்சலி பண்ணுவாம்

(இ...ள்.) உலகமெல்லாம் படைத்துக் காப்பாற்றி, அங்குள்ள சகல மானிட ஜீவன்களும் மோட்ச கதியை யடைந்து சுகிக்குமாறு அவர்கள் பேரிலுள்ள அன்பினால் தன் குமாரனை பலியாகக் கொடுத்த மகிமை தங்கிய பிதாவாகிய கடவுளுக்கு மனதால் வணக்கம் செய்வோமாக.

அஞ்சலி-இரண்டு கைகளையும் தலைமேல் குவித்துக் கும்பிடல்.

இதயாஞ்சலி - மனதினால் வணங்குதல். இஃதே மானச ஜபமென்னப்படும். நாம்-தோன்றா எழுவாய்.

இது இலக்கிய வழக்கு. "மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என சேக்கிழார் சாமிகளும் "ஆரிய வளன்றன் காதை யற முதல் விளங்கச் சொல்வாம்" என வீரமாமுனிவரும் விளம்பியிருத்தல் காண்க. (௧)

### குமாரசாமி வணக்கம்

உலகமகிழ்ந் தீடேறப் பரலோக வாசிகளுக் குவகை யேற
அலகையுளந் திகிலேற வகண்டபரி பூரணனா ருண்மெய் வாக்கு
விலகிலதாய் நிறைவேறத் துதியேற நரவுருவாய் விளங்கி யன்பாற்
சிலுவைமிசை யேறியமெய்ஞ் ஞானசூ ரியனடியைச் சிந்தை
[செய்வாம்.

(இ...ள்.) உலகத்திலுள்ள மானிடர்கள் சந்தோஷத்துடன் கடைத்தேறவும், மோட்சத்திலுள்ளவர்கட்கு ஆனந்த முண்டாகவும், சாத்தான் மனதில் பயமுண்டாகவும், எங்கும் நிறைந்த கடவுளது அருள்வாக்குகள் தவறாது நிறைவேறவும், பக்தர்கள் மனதில் ஸ்தோத்திர மதிகரிக்கவும் மனித அவதாரமெடுத்து அவர்கள்பேரிலுள்ள கருணையால் சிலுவை மரத்தில் ஏறிய உண்மை யறிவை விளக்க வந்த வொப்பற்ற பானுவாம், இரட்சா பெருமானின் பாதங்களை தியானிப்போமாக.

அகண்ட பரிபூரணர்-எங்கும் நிறைந்தவர். "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தி" என்றும் "சர்வபரிபூரணவகண்ட தத்துவம்" என்றும் "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம்!" என்றும் பாடியுள்ளார் தாயுமானவரும். (௨)

### தேவாவி வணக்கம்

துனிதரு வினைமுனி தூய சிந்தனை
கனிதர நன்னெறி கடைப்பி டித்திட
இனிதுவந் தடியவ ரிதயத் தென்றும்வாழ்
புனிதநல் லாவியைப் போற்று வாமரோ.

(இ...ள்.) துன்பத்திற்குக் காரணமானவைகளை நீக்கி, நல்லெண்ணமாகிய கனிகள் உண்டாகுமாறு, சன்மார்க்கத்தை உறுதியாக நாம் கைக்கொள்ள, இனிமையாக இறங்கி பக்தர்களுடைய இதயத்தில் வாசஞ் செய்யும் பரிசுத்தமாகிய தேவாவியை எப்பொழுதும் துதிப்போமாக.

இனிது உவந்து-இனிமையாகக் களி கூர்ந்து எனவும், புனித நல்லாவியை என்றும் போற்றுவாம் எனவும் கூறுதல் பொருந்தும். (௩)

### சிந்தைவிட்டகலாதவை

காவ னத்திலே நிசியிடைத் தனியிருந் துலகெலாங் கதிசேர
ஜீவ னைக்கொடுத் திடவரு திறநினைந் திரத்தவேர்த் துளிசிந்தி
ஆவி யிற்கொடுந் துயரமுற் றைபருக் கபயமிட் டதுமந்நாள்
தேவ மைந்தனுர் சகித்தவே தனையுமென் சிந்தைவிட் டகலாவே.

(இ...ள்.) மரங்களடர்ந்த சோலையில் ஓர் இரவில் தேவகுமாரன் தனியாக இருந்து, உலக முழுவதும் நற்கதியடைய தான்உயிரைக் கொடுக்கவேண்டிவரும் ஸ்திதியை உணர்ந்து, வேர்வைத் துளியை இரத்தமாகச் சிந்தி கொடிய ஆத்தும வருத்தத்தையடைந்து பிதாவினிடம் அபயமிட்டதும், அக்கால் அவர் அடைந்த வேதனையும் என் மனதைவிட்டு நீங்கமாட்டா.

"நான் ஒருநாளும் மறவேன்" என்றாலும் பொருந்தும். காவனம்-கெத்ஸமனே தோட்டத்தைக் குறிக்கும். இத்தோட்டத்தின் சிறப்பை 85 கவிமுதல் அதனை யடுத்துவரும் 18 கவிகளிலும், தேவ மைந்தனுர் சகித்த வேதனையை 104 கவிமுதல் அதனை யடுத்துவரும் 26 கவிகளினுலுமாண்டுணர்க. (௪)

மூசு முண்முடி முடித்திட முனிவுறா முகசரோ ருகப்போதும்
நேச மோடுபே துருமனங் கசந்தழ நோக்கிய நெடுங்கண்ணுந்
தேசு குன்றிவெங் குருதிநீர் பொழிதரு செய்யமே னியுமெம்மான்
ஏசு நாயகன் றிருவடித் துணையுமென் னிதயம்விட் டகலாவே.

(இ..ள்) அடர்ந்த முட்கள் நிறைந்த முடியை சிரசில் சூட்டப்பெற்றும் கோபமடையாது தாமரைப் புஷ்பத்தைப்போல் வாடாமலிருந்த அவர் முகமும், பேதுரு மனங்கசந்தழும்படி அவனை நேசத்துடன் பார்த்த நீண்ட கண்களும், அழகு குன்றிப்போய் இரத்தமும் நீரும் வடியப்பெற்ற மாசற்ற சரீரமும் ஸ்ரீ இயேசுபிரானின் திருவடித்துணையும் என் மனத்தைவிட்டு நீங்கமாட்டா.

ஜென்ம மாசில்லாமல் அவதரித்த திருமேனியானதால் செய்யமேனி யென்றார். "சேதலாங் கதிரொறிக்குஞ் செழுவெய்யோன் றனையுடுத்த செய்யமேனி, மீதிலாந் தாரகையை விளக்கிமைக்கு மகுடமென வேய்ந்த சென்னி": யென வீரமாமுனிவர் தேம்பாவணியில் விளக்கியிருத்தல் காண்க. (ரு)

பாவி யென்றெனக் குணர்த்திய கருணையும் பாவநா சரைக்காட்டி
ஏவி யென்னையுங் கவர்வழி னடத்திடு மிருந்திற மையுமெற்காய்
ஓய்வி லாதுபி தாவைமன் றாடலி லுற்றெழு பெருமூச்சுந்
தேவ ஆவியின் புனிதமாச் செயலுமென் சிந்தைவிட் டகலாவே.

(இ-ள்.) நான் பாவியென்று எனக்கு உணர்த்தியருளிய கருணையும், பாவநாசகராகிய இரட்சா பெருமானை எனக்குக் காட்டி என்னைத் தூண்டி அவரிடம் நடத்திக்கொண்டுபோகும் பெரிய திறமையும், எனக்காகப் பிதாவின்முன் ஓயாமல் மன்றாடுவதால் உண்டாகும் பெருமூச்சும், தேவ ஆவியின் பரிசுத்தஞ்செய்தலாகிய பெரிய கிரியைகளும் என் மனதை விட்டு என்றும் நீங்கமாட்டா. (சு)

முதலாவது

# திருவிருந்து காண்டம்.

---

திருவிருந்து காண்டம் என்பதற்கு நசரேயனாகிய இயேசு பிரான் நற்கருணை யென்னும் திருவிருந்தை ஸ்தாபித்த வகையை எடுத்துரைக்குங் காண்டமெனப் பொருள்.

கலி விருத்தம்

மாக வேந்தற்கு மானத பூசனை
ஓகை யோடளித் தொண்பொன்வள் ளத்தூறு
பாகு குத்தப ரிசெனப் பத்தியாந்
தோகை யின்னன சொல்லுதன் மேயினாள்.

(இ...ள்.) பத்தியென்னும் பெண் தேவலோக அரசனாகிய கடவுளைச் சந்தோஷத்துடன் மனதினால் பூசைசெய்து, பிரகாசமான தங்கக் கிண்ணத்தினின்று சர்க்கரைப்பாகு சொரியுந் தன்மைபோல (இரக்ஷணிய சரிதத்தைக் கிறிஸ்தியானுக்கு)பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.(எ)

ஓகை-உவகை யென்பதன் மருவு. தோகை-மயிலின் வால், இது பெண்ணுக்காயது, ஆகுபெயர்.

கோட்ட மின்மனத் தீரிளங் கோமகன்
தீட்டு மானிடம் யாவையுந் தீச்சிறை
மீட்டு மேக்குயர் வீட்டுல கத்தினைக்
கூட்டு வானுற்ற வாதைகு றிக்கொளில்.

(இ...ள்.) மாசற்ற மனதுடையீர்! சிருஷ்டிக்கப்பட்டுள்ள மனிதர்கள் எல்லோரையும் பாவமாகிய அக்கினிபோன்ற சிறையினின்று விடுவித்து, மேலேயுள்ள பரம உலகத்தில் அவர்களைச் சேர்க்கும் பொருட்டு, அரசனாகிய கடவுளது இளவரசிற்குரிய நம்பெருமான் பட்டவாதைகளை யோசித்தால் (அது பெரிதாகும்) (அ)

மற்றை நாண்மனு மக்களி ரக்ஷணை
முற்று மென்றமு னிவின்றி முற்படும்
அற்றை நாளிர வில்லடி யாரொடும்
உற்ற ருந்தினர் நல்விருந் தோர்மனை.

(இ...ள்.) அடுத்த தினத்தில் மனிதர்களது இரட்சிப்பு நிறைவேற வேண்டி (தானடையப்போகிற துன்பங்கட்காகக்) கோபங்கொள்ளாமல், (அவ்வாறு துன்பம் வருவதற்கு) முன்னிரவில் தன் (பன்னிரண்டு) சீஷர்களுடன்கூட ஓர் வீட்டில் நல்ல விருந்து உட்கொண்டார். (௯)

மருந்தெ னத்தகு மந்திர வற்புத
விருந்த ருந்துமவ் வேளையில் வித்தகந்
திருந்து சிற்சில திவ்விய போதனை
பொருந்து மாறுபு கன்றனர் புண்ணியர்.

(இ...ள்.) தேவாமிர்தம் என்று சொல்லத்தகும் அந்த அற்புதமான விருந்தை சாப்பிடுஞ் சமயத்தில், புண்ணிய புருஷனாகிய நம்பெருமான் ஞானம் நிறைந்த சில நற்போதனைகளைக் கேட்பவர் மனதிற் பதியும்படி சொன்னார். (௧0)

உந்து தண்ணளி யாலுல கத்திடைத்
தந்தை தன்னைவி டுத்ததுந் தாம்வரு
விந்தை யுந்திரு வுள்ளம்வி ழைந்திடும்
அந்த ரங்கம வனிக்க ளித்ததும்.

(இ...ள்.) ஜெகதீசன் தம் இருதயத்தில் ததும்பிக்கொண்டிருக்குங் கருணையால் இவ்வுலகத்திற்குத் தம்மை யனுப்பினதையும், தாம் (அவதாரமெடுத்து) வந்த அற்புதத்தையும், கடவுளது மனதிலுள்ள ஆலோசனையை பூலோகத்திற்கு வெளிப்படுத்தினதையும். (௧௧)

விதிவி லக்கின்சு டரைவி சும்புதோய்
மதிவி ளக்கிற்பொ ருத்திய மாட்சியுங்
கதிபு குத்துமெய் யன்பின்க னிதரூஉ
முதிரு மெய்விசு வாசத்தின் மொய்ம்பதும்.

(இ...ள்.) இதைச் செய் இதைச் செய்யாதே என்னும் விதி விலக்குப் பிரமாணமாகிய சுடரை ஆகாயத்தில் பொருந்தியிருக்கின்ற சந்திர ஜோதியைப்போல ஏற்றிவைத்த மாட்சிமையையும், பரமகதிக்குக்கொண்டு செலுத்தக்கூடிய உள்ளன்டாகிய கனிகளைத் தருகின்ற (மாமாகிய) மெய் விசுவாசத்தின் வலிமையையும். (௧௨)

கால முற்றுங்க டவுள்க ருத்தினுக்
கேனு நற்கரு மங்களி யற்றிய
சீல மும்பரி விற்றெரி யச்சொலி
மேலும் விள்ளுவர் ஞானவி ரோசனன்.

(இ...ள்.) ஞானசூரியனும் நம்பெருமான் கடவுளது நோக்கத்தை அநுசரித்தே சதா காலமும் நற்கருமங்களைத் தாம் செய்துவந்த சற்குணத்தையும், அன்பினாலே தெளிவாகச் சொல்லியபின் வேறு விஷயங்களைப் பற்றியும் திருவுளம் பற்றுகிறார். (கரு)

சருவ வல்லதி ரித்துவ தற்பரத்
தொருவன் யானொரு மூவரொன் றுயுள
நிருவி கற்பநி லையைவி சுவசித்
தொருவு கிற்கிலி ரேலெமக் குள்ளுளீர்.

(இ...ள்.) எல்லாம் வல்ல கடவுளாகிய திரித்துவ மூர்த்திகளுள் நான் ஒருவன். (பிதாவும் நானும் பரிசுத்த ஆவியுமாகிய) மூவரும் ஒன்றாக உள்ள வித்தியாசமற்ற தன்மையை நீங்கள் யாவரும் நம்பி என்னை விட்டு விலகாதிருப்பீராயின் என்னில் தரித்திருப்பீர், (கசு)

தொன்மை மாநில மெங்குந்து ருவிநீர்
விள்ளு மின்சுவி சேஷத்தின் மெய்ம்மையைக்
கொள்ளு மாவுல கம்பகை கொள்ளினும்
வள்ள லாரருள் வாய்க்கும லங்கலீர்.

(இ...ள்.) பழமையான இப்பெரிய உலக முழுவதும் நீங்கள் சுற்றித் திரிந்து சுவிசேஷ சத்தியத்தைப் பிரசங்கியுங்கள். உலகம் அதனை யேற்றுக்கொள்ளும். அங்ஙனமின்றி உங்களைப் பகைத்தாலும் பயப்படாதீர்கள், கடவுளது அருள் உங்களுக்குக் கிடைக்கும். (கரு)

சொற்ற வென்னுரை யுட்கொடு தூநெறி
பற்றி மெய்ம்மைப கர்ந்திடு சான்றிராய்
நிற்றி ரென்னிலங் நின்மல வீடடைந்
துற்றெ னேடரு காசனத் தோங்குவீர்.

(இ...ள்.) நான் சொன்ன வார்த்தைகளை நீங்கள் மனதில் கொண்டு சன்மார்க்க நெறியையடைந்து, சத்தியத்தைச் சொல்லும் சாட்சியாக நீங்கள் நிலைபெறுவீர்களானால், பரிசுத்தமான அந்த பரம வீட்டையடைந்து என் ஆசனத்தின் பக்கத்தில் வந்துசேர்ந்து என்னுடன் விளங்குவீர். (கஅ)

எண்ட ரும்பர லோகவி ராஜ்ஜியத்
துண்டு பற்பல தானமங் குற்றியான்
ஒண்ட லந்தெரிந் தும்பொருட் டன்பினீர்
கண்டு மீள்குவ னெஞ்சங்க லங்கன்மின்.

(இ...ள்.) அன்பர்காள்! மாட்சிமை தங்கிய வானுலகத்தில் அநேக இடங்கள் உண்டு. நான் அங்கே போய் சிறந்த இடத்தை உங்களுக்காக ஆயத்தம் செய்துவிட்டுத் திரும்பவும் வருவேன், மனங்கலங்காதீர். (கஎ)

அழிவி னின்பவு லகத்தை யாக்குமெய்
வழியு மாசறு சத்திய மாண்பதும்
ஒழிவி னித்திய ஜீவனு முண்மையா
மொழியின் யானல தின்றிதை முன்னுமின்.

(இ...ள்). அழிவற்ற மோட்ச உலகத்தைக் கொடுக்கும் உண்மை யான வழியும், குற்றமற்ற சத்தியத்தின் மாட்சிமையும், ஒழிவற்ற நித்திய ஜீவனும், உண்மையாகச் சொல்லுமிடத்து என்னைத் தவிர வேறில்லை. இதை யறியக்கடவீர். (கஅ)

என்னில் வேறல ரெந்தையு மெந்தையார்
தன்னில் வேறலன் யானுமித் தன்மையின்
மன்னு மென்னைம யிலறக் காண்டலே
உன்ன தேசனைக் காண்டலென் றுன்னுமின்

(இ...ள்). என் பிதா என்னில் வேறானவரல்லர். என் பிதாவி னில் யானும் வேறல்லேன். இந்த நிலைமையில் நிலைத்திருக்கும் என்னைச் சந்தேகமற்றவராகக் கண்டு தரிசிப்பதே பரமபிதாவைக் காண்பதாகு மென்று உணருங்கள். (கக)

பிரிவை யுள்ளிக்க லங்குதல் பெற்றியன்
றுரிமை யோடென்னு ரைபிடித் தொண்டவம்
புரிமின் யான்புனி தாவியைப் புக்கிவண்
வரவி டுப்பனு மக்கருண் மல்கவே.

(இ...ள்). நான் உங்களைவிட்டுப் பிரிந்துபோகுதலை நினைத்துக் கலங்குதல் சரியல்ல. என் வார்த்தையை நீங்கள் சொந்தம் பாராட்டிச் சிறந்த பக்தி செய்துகொண்டிருங்கள். உங்களுக்கு அருள் பெருகும்படி நான் போய் பரிசுத்த ஆவியை இங்குவந்து சேரும்படி யனுப்புவேன். (உ0)

எந்தை யாவியி ருநிலத் தெய்திடிற்
பந்த நீதிப கர்நடுத் தீர்வையென்
றிந்த ஞேயமெ ளிதிற்பு லப்பட
விந்தை யாகமெய்ஞ் ஞானம்வி ளங்குமால்

(இ...ள்.) 'என் பிதாவினது பரிசுத்த ஆவி இப்பெரிய உலகத்தில் வந்தால், பாவம், நீதி, நடுத்தீர்ப்பு முதலிய அன்பின் விஷயங்கள் தெளிவாக விளங்குமாறு மெய்ஞ்ஞானம் இன்னதுதானென்று உங்கள் உள்ளத்தில் நன்கு புலப்படும்.' (உக)

ஏது கேட்பினு மென்னொரு நாமத்திற்
றாதை வேண்டுவ தந்துச தோதயம்
ஆத ரிப்பரென் றின்னன வாண்டகை
ஏத மில்லுரை யாடிடு மெல்வையில்.

(இ...ள்.) 'நீங்கள் என் ஒப்பற்ற நாமத்தில் எதைக் கேட்டாலும் என் பிதா நீங்கள் கேட்டதைத் தந்து, எந்நாளும் உங்களைக் காப்பாற்றுவார்' என்று எம்பெருமான் இவ்வாறான மாசற்ற வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கும் இராக்காலத்தில். (உஉ)

ஆத்து மத்தின ளவிலு பாதிகண்
மீத்தி ரண்டொரு மித்துவி ழுங்கனல்
நீத்த மென்னநெ ருங்குபு கைவரத்
தீர்த்த னாவிக லங்கித்தி கைத்ததே.

(இ...ள்.) அவருடைய ஆத்துமாவில் அளவுகடந்த பாடுகள் மென்மேலும் திரண்டு ஒன்றாகச் சேர்ந்து நெருப்பின் சுவாலை மூடிக்கொள்வது போல அவரை நெருங்கிச் சூழ, பரிசுத்தமான நம்பெருமானது ஆவி கலங்கித் திகைத்தது. (உங)

வேறு

(யூதாஸின் வஞ்சகம்)

புரையிலாப் புண்ணிய புருஷ வுத்தமர்
தரையில்வாழ் நரருயக் கலக்கந் தாங்கியே
கரையிலாப் பவக்கடல் கடத்தி லாரெனில்
நிரையநித் தியந்தரு கலக்க நீங்குமோ.

இ...ள்.) குற்றமற்ற புண்ணிய புருஷோத்தமரான நம் பெருமான் பூலோகத்தில் வாழும் மானிடர்கள் இரட்சிப்படையும்படி மனவேதனையடைந்து, எல்லையில்லாப் பாவக்கடலைத் தாண்டும்படியான ஏதுவைச் செய்யாவிட்டால், நரகத்தால் வரும் அழியாத வேதனை அவர்களைவிட்டு நீங்குமோ? (உச)

இறைவரவ் விருந் தினுக் கிசைபஸ் காவெனும்
மறியுணு மடியரின் வதன நோக்கிமீண்
டுறைதரு முங்களி லொருவ னேயெனைச்
செறுநர்கைப் படுத்துவ னென்றுஞ் செப்பினார்.

(இ...ள்). அரசனாகிய நம்பெருமான் இவ்விருந்துக்கு ஒத்த பஸ்கா வெனும் ஆட்டிறைச்சியை (யூதர்கள்) அருந்தும் பண்டிகையின்போது சீஷர்களது முகத்தைப் பார்த்து, 'இங்கேயிருக்கிற உங்களில் ஒருவனே என்னைப் பகைவர் கையில் ஒப்புக்கொடுப்பான்' என்றுஞ் சொன்னார். (உரு)

ஆங்கது கேட்டமெய் யடியர் யாவனித்
தீங்கினை நினைத்தன னென்னத் தேர்கிலார்
தாங்கருந் துக்கமுந் திகிலுந் தம்முளே
வீங்கிடத் தனித்தனி வினவி னாரரோ.

(இ...ள்). அப்போது இவ்வாறு சொல்லக் கேட்ட மெய் அடியா ராகிய சீஷர்கள் தம்மில் யார் இத்தீங்கை நினைத்திருக்கிறான் என்று அறியக்கூடாதவர்களாய், தாங்க முடியாத வருத்தமும் பயமும் தங்களில் அதிகரிக்க, ஒருவரையொருவர் தனித்தனியாக விசாரித்தார்கள். (உசு)

ஈண்டுறுந் துரோகியா ரெனக்கொ திப்புடன்
ஆண்டகை மடியருகணைந்த வன்பனைத்
தூண்டினன் பேதுரு சமிக்கை தோன்றுற
வேண்டின னவனும்யார் விள்ளு கென்னவே.

(இ...ள்). பேதுரு என்னும் சீஷன், 'இங்குள்ளவர்களில் அப் பேர்ப்பட்ட துரோகி யார்?' என்று நம்பெருமானது மார்பில் சாய்ந்து கொண்டிருந்த அன்புள்ள சீஷனாகிய யோவானை மனவருத்தத்துடன் சைகைகாட்டிக் கேட்டான். அது தெரிந்த யோவானும் 'அவன் யார் சொல்லும்' என எம்பெருமானை வேண்டினான். (உஎ)

அன்பருக் காரமு தனைய வஞ்சொலார்
இன்புறுந் துணிக்கையொன் றெடுத்துத் தங்கையால்
வன்புறு மனத்தனுக் களித்து மற்றவன்
என்பதை நண்பனுக் கிசைத்துப் பின்னரும்.

(இ...ள்). பக்தர்கட்குச் சிறந்த அமுதத்திற்கொப்பான அழகிய வார்த்தைகளைப் பேசும் நம்பெருமான (உண்போருக்கு) இனிமையைத் தரக்கூடிய அப்பத்துண்டொன்றைத் தம் கையால் எடுத்து, கடினமான மனதையுடைய ஸ்காரியோத்து என்பவனுக்குக் கொடுத்து தன்னைக்காட்டுபவன் அவன்தான் என்பதை அன்புள்ள சீஷனாகிய யோவானுக்குச் சொல்லி மறுபடியும், (உஅ)

என்னொடுங் கலத்திற்கை யிடுகின் றோனெவன்
அன்னவ னேயெனை யளிப்பன் றெவ்வர்க்கு
முன்னவை மொழிந்தவா றெனக்கு மூள்வன
பின்னவற் குறுதுயர் பேசற் பாலதோ.

(இ...ள்). 'என்னுடன் பாத்திரத்தில் கையிடுகிறவனாகிய அவனே என்னைப் பகைவரிடம் ஒப்புவிப்பான். ஆதிகாலத்தில் என்னைப்பற்றி சொல்லியிருக்கிறவண்ணம் எனக்கு சம்பவிக்கும், இதற்குப்பின் அவனுக்கு வரும் துன்பம் நாம் பேசுந்தன்மையுடையதோ?' (உகூ)

பிறந்திடா திருப்பனேற் பெரிய நன்மையென்
றறைந்தனர் பேதுரு வாதி யன்பர்க்கு
மறைந்துபுட் சிமிழ்க்கும்வேட் டுவனில் வஞ்சகம்
நிறைந்தவன் மற்றிவை நிகழுங் காலையில்.

(இ...ள்). ஒளித்துக்கொண்டு பட்சிகளை வலைவைத்துப் பிடிக்கும் வேடனைக் காட்டிலும் அதிக வஞ்சகத்தையுடைய 'இவன் பிறந்திராவிட்டால் பெரிய நன்மையாக இருக்கும்' என்று பேதுரு முதலான தொண்டர்களுக்குச் சொன்னார். இவ்வாறு நடக்கும் சமயத்தில், (௩0)

அகத்தெழு சாக்ஷியை யடக்கி மானத்தை
உகுத்துநன் மதியினை யொழித்து நன்றியைச்
செகுத்துவன் னெஞ்சொடு தியங்கி யான்கொனீர்
வகுத்துரைத் தவனென வாயிற் கேட்டனன்.

(இ...ள்). உடனே யூதாஸ் நெஞ்சத்திலிருந்து புறப்படும் மனச்சாட்சியை அடக்கி, வெட்கத்தை உதறிவிட்டு, நல்லறிவையும் இழந்து, நன்றியை மறந்து, கடினமான மனதுடன மயங்கி, (உம்மை ஒருவன காட்டிக்கொடுப்பான் என) 'நீர் பிரித்துச் சொன்னவன் நான்தானோ?' என்று வாயினால் கேட்டான். (௩க)

உள்ளுவா ருள்ளுவ துடனு ணர்ந்திடும்
வள்ளலார் திருமுன மிருமனத்தனாய்
விள்ளுவான் றுணிந்தமை யறிந்த மெய்ப்பரன்
கொள்ளுநீ யுரைத்தவை யென்னக் கூறலும்.

(இ...ள்). நினைப்பார் நினைப்பனவற்றை உடனுக்குடனே அறியும் எம்பிரான் சந்நிதானத்தில் இருமனமுடையவனாக அவ்வாறு கேட்கத் துணிந்ததையறிந்த சத்தியமூர்த்தியானவர், 'நீ கேட்டது சரி' யென்று சொல்ல, (௩உ)

நஞ்செனக் கொடியவ னுளத்து நாடிய
வஞ்சகம் வெளிப்பட வைரக் கல்லினும்
நெஞ்சகங் கடினமாய் நிறுவ நேர்பழிக்
கஞ்சிடா னமலனை யகன்றிட் டானந்தோ.

(இ...ள்). கொடியவனுடைய மனதிலிருந்த வஞ்சகம் விஷத்தைப்போல் வெளிப்படவே, அவன் மனம் வைரக்கல்லைவிடக் கடினப்பட்டு அங்குண்டான நிந்தைக்குப் பயப்படாமல் பரிசுத்தமான கடவுளை விட்டு (வெளியிலே) போய்விட்டான். பரிதாபம். (௩௩)

எறிந்தவேன் மெய்நுழைந் திருக்க வாண்டையென்
றறிந்துவால் குழைத்துவந் தணுகுங் குக்கலுஞ்
சிறந்தபே ரருளொடுஞ் செய்த நன்றியை
அறிந்திடா தகன்றனன் யார்கொ லாமிவன்.

(இ...ள்). நாயுங்கூட தன் எஜமானன் தன்னைக் குத்தின வேல் தன் தேகத்தினுள் இருக்கும்போதே, அவ்வாறு தன்னைக் குத்தினது தன் எஜமானன் என்றறிந்தும் வாலை ஆட்டிக்கொண்டு அவனிடமே வந்துசேரும். அப்படியிருக்க, சிறந்த பொருளோடு கடவுள் செய்தவைகளுக்கேற்ற நன்றியை யுணராமல் போய்விட்டான். இவன் எப்பேர்ப்பட்டவனோ? (௩௪)

காத்தநல் லாவியைக் கடிந்து கண்டகச்
சாத்தனுக் கிதயத்தைத் தானஞ் செய்பவர்
கூத்தர்கைக் குரங்கிலக் குணுங்க ராட்டிடத்
தீத்தொழின் முயன்றழிந் தொழித றிண்ணமே.

(இ...ள்), தன்னை இதுவரை காப்பாற்றிவந்த பரிசுத்த ஆவியை வெறுத்து, கொடிய சாத்தானுக்குத் தன் இருதயத்தைத் தானமாகக் கொடுப்பவர், கூத்தாடி கையில் அகப்பட்ட குரங்கைப்போல பிசாசுக்கள் தன்னையாட்ட (அதின் பலனாக) தீய செயல்களைச் செய்ய ஆரம்பித்து கெட்டு நாசமடைவது உண்மையே. (௩௫)

அடுத்துநான் கெடுப்பனென் றறைந்த சூழ்வினை
முடித்திடுந் தருணமீ தென்ன முன்பணங்
கொடுத்தவப் பதிதரைக் குறுகி னன்கொலுங்
கடுத்துறு மனத்துயூ தாசென் கள்வனே.

(இ...ள்.) கோபம் மிகுதியாயுள்ள யூதாஸ் என்னும் கள்ளன்தானே 'நான் அண்டியிருந்து கெடுப்பேன்' என்று சொல்லிய வஞ்சகமான எண்ணத்தை நிறைவேற்றுங்காலம் இதுவெனக் கண்டு, முன்னமே பணம் கொடுத்திருந்த அந்தப் பாதகரிடம் போய்ச் சேர்ந்தான்போலும். (௩௬)

துன்மதி போயபின் சூழ்ந்த தொண்டர்க்கு
நன்மதி சிற்சில நவிற்ற நாயகன்
தன்மனத் தெண்ணிமேற் றதும்பு மன்பினாற்
கன்மனங் கரைந்திடக் கழறு வாரரோ.

(இ...ள்). கெட்ட எண்ணமுடைய யூதாஸ் அவ்விடம் விட்டு நீங்கியபின், நம்பெருமான் தம்மைச் சூழ்ந்திருந்த அடியார்கட்கு அவர்கள் மேல் அதிகரித்துள்ள அன்பினால் சில நல்ல புத்திமதிகளைச் சொல்ல தம் மனதில் எண்ணங்கொண்டு, கடினமான அவர்கள் மனம் கரையுமாறு (பின்வருமாறு) சொல்லுவார். (௩எ)

மனுமக னாற்பிதா மகிமை யோங்கலால்
நனிவிரைந் தவனுக்கு மகிமை நல்குவார்
இனியொரு சிறுபொழு திருப்ப னும்முடன்
கனிவொடும் பின்னெனைக் கருதித் தேடுவீர்.

(இ...ள்). மனுஷ குமாரனை முன்னிட்டு, தேவனுடைய மகிமை யுயர்ச்சி பெறுவதால், அதிசீக்கிரத்தில் (பரம பிதா) அம்மனுஷ குமாரனுக்குப் பெருமையை யளிப்பார். நான் இனி கொஞ்சங்காலந்தான் உங்களுடனிருப்பேன். பின்னர் நீங்கள் என்னை அன்போடு நாடித் தேடுவீர்கள். (௩அ)

மக்களே யான்செலு மிடத்து வந்துநீர்
புக்கிடக் கூடிய தன்றிப் போழ்திலே
மிக்கவன் புடையராய் விளங்கு வீரெனிற்
றக்கவென் சீடரென் றறியுந் தாரணி.

(இ...ள்). 'என் பிள்ளைகளே! நான் போகுமிடத்திற்கு நீங்கள் வந்து சேரமுடியாது. இப்பொழுது நீங்கள் மிகுந்த அன்புடையவர்களாய் தெளிவுகொண்டு நடப்பீர்களானால் நீங்கள் எனக்குகந்த சீஷர்கள் என்று உலகம் அறிந்துகொள்ளும்.'

சீஷர்களை 'மக்களே' என்று அன்புடன் அழைக்கிறார். யோவான் 13 : 33. (௩௯)

ஆதலா லொருவரி லொருவ ரன்புகூர்ந்
தேதமில் குணத்தரா யிருமி னீண்டுநும்
மீதுநா னேசத்தை விளைத்த வாறுபோல்
ஈதொரு கற்பனை யியம்பி னேனென.

(இ...ள்). 'ஆகையினால் நான் இங்கே உங்கள்பேரில் அன்பு பாராட்டினதுபோல, நீங்கள் ஒருவர்பேரில் ஒருவர் அன்புகூர்ந்து, குற்றமற்ற குணசாலிகளாக விங்கு நடந்துகொள்ளுங்கள். இதை ஒப்பற்றக் கற்பனையாக உங்களுக்குப் போதிக்கின்றேன்' என்றார். (௪0)

(பேதுருவின் வீண் சபதம்)

*மூண்டெழு துயரினன் முடுகிப் பேதுரு*
*ஆண்டவ வெங்குநீ ரணைகின் றீரென*
*வேண்டிட வின்றலை மேவிச் சில்பகல்*
*மாண்டபின் பற்றுவை மனக்கொள் வாயென்றார்.*

(இ...ள்). பேதுரு என்னும் தொண்டன் (அவர்களை விட்டுப் பிரிந்து போவீதாக இரட்சா பெருமான் சொன்னது கேட்டு) மனதி லெழுகின்ற அதிக வருத்தத்தினால் அவரை யணுகி, 'ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்' என்று கேட்க, அதற்கு அவர்: 'இற்றைக்குச் சில நாள் கழிந்தபின் என்னைப்பற்றித் தெரிந்துகொள்ளுவாய். இதை யுன் மனதிற் பதியவை' என்றார். (சக)

*ஏனுமைத் தொடர்ந்திடே னின்றென் ஜீவனை*
*நானுமக் காகவே நல்கு வேனெனத்*
*தானுடைப் பலத்தையே சார்ந்து பேசலும்*
*வானவர் கோமகன் மறுத்துங் கூறுவார்.*

(இ...ள்). அதைக் கேட்ட பேதுரு, 'நான் உமது பின்னே ஏன் வரமாட்டேன். இன்று உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்' என்று தன்னுடைய பெலத்தை நம்பிப்பேச, வானவர்களுக்கு அரசனாகிய நம்பெருமான் அதைத் தடுத்துச் சொல்லுகின்றார். (சஉ)

*நின்னுடை ஜீவனை நீக்கு வாய்கொலோ*
*என்னுடை நிமித்தமா யிடங்கொ டாமல்யான்*
*துன்னிய பசாசினைத் துரந்தென் றந்தையை*
*உன்விசு வாசநன் றாக்க வேண்டினேன்.*

(இ...ள்). 'உன் உயிரை எனக்காக விட்டுவிடுவாயோ? என்னிமித்தமாக பிசாசுக்கு இடம் கொடாமல் உன்னை நெருக்கியுள்ள சாத்தானைத்துரத்தி உன் விசுவாசம் நன்றாக உறுதிப்பட என் பிதாவிடம் நான் ஜெபித்தேன்' என்றார். (சஙு)

*உரப்படும் பின்னர்நீ யுன்ச கோதரர்*
*திரப்படு மாறுசிந் தனைசெய் வாயென*
*நிரப்பினர் பேதுரு நிலைக்கப் பூமிசைப்*
*புரப்பது கருதிவந் தணைந்த புண்ணியர்.*

(இ...ள்). ஆத்துமாக்களை ஈடேற்ற வெண்ணி இப்பூலோகத்திற்கு அவதார மெடுத்துவந்த நம்பெருமான் அவனை நோக்கி: 'நீ பக்தியில் உறுதிப்பட்டதின்பின் உன் சகோதரர் பக்தியில் ஸ்திரப்படுமாறு நீ நினைப்பாய்' எனப் பேதுருவின் விசுவாசம் இப்பூமியில் நிலைபெறச் சொல்லி முடித்தார். (சச)

கேட்டவன் றன்பலக் கேடு ணர்ந்திடான்
மீட்டுமும் முடன்சிறை மேவு வேன்றலை
நீட்டுவன் சாவினு மெனத்தன் னேசத்தைக்
காட்டினன் வருவது கருது வாரெவர்.

(இ...ள்). இதைக் கேட்ட பேதுரு தன்னுறுதி மொழிகளின் பல வீனத்தை யறியாமல் 'உம்முடன் சிறைச்சாலைக்கும் வருவேன். மரணம் வந்தாலும் தலை கொடுப்பேன்' என்று மறுபடியும் சொல்லி, அவர்பேரி லுள்ள அன்பை வெளியிட்டான். இனி நடக்கப்போகிறவைகளை நினைக் கிறவர் யார்? (சரு)

ஆவது கருதிய வமலன் பேதுரு
சேவலின் றிரவிலே தெருளக் கூவுமுன்
மூவிசை யென்னைமறு தலிப்பை முற்றுநீ
மேவுறு மெய்ம்மையை விளம்பி னேனென்றார்.

(இ...ள்). இனி நடக்கவேண்டியவைகளை நினைத்துள்ள நம் பெருமான்: 'பேதுருவே, இன்றிரவில் சேவல் தெளிவாகக் கூவுமுன் நீ என்னை மூன்றுதரம் முற்றிலும் மறுதலிப்பாய். இனி நடக்கப்போகும் உண்மையை உனக்குச் சொன்னேன்' என்றார். (சசு)

இன்னண நிகழ்வுழி யிருந்த சீடருந்
தன்னிக ராயதற் பரனுந் தம்முனம்
மன்னுபஸ் காவெனு மறியைத் துய்த்துமே
முன்னிய மப்படி முடித்திட் டாரரோ.

(இ...ள்). இவ்வாறு நடக்கும்பொழுது அங்கிருந்த சீஷர்களும் தமக்குத்தாமே சமானமாகும் இரட்சா பெருமானும் தம்முன் வைக்கப் பட்டுள்ள பஸ்கா ஆட்டை ஆதிவழக்கத்தின்படி புசித்து அப்பண்டிகையை முடித்தார்கள். (சஎ)

வேறு

(திருவிருந்தளித்தல்)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொங்குபர மானந்த நமக்கருள வந்தமனுப் புதல்வர் தாமே
செங்கரத்தா லப்பமெடுத் ததைப்பிட்டுத் தோத்திரித்துச் சீடர்க்
கீந்தீ
துங்களுக்காய் மரணத்துக் கொப்புவிக்கு மெனதுடலீ தென்னை
யுன்னித்
தங்கிடுநீ ரிந்தவகை யியற்றியெனக் கருணையொடு சாற்றிப் பின்
னும்,

(இ...ள்). பொங்குகின்ற மோட்ச இன்பத்தை நமக்கு அருள அவ தாரம் எடுத்துவந்த மனுஷகுமாரனாகிய அவரே (செந்தாமரைப்போன்ற)

தம் சிவந்த கையினாலே அப்பத்தையெடுத்து அதைப் பிட்டு ஸ்தோத்திரஞ் செய்து சீஷர்களுக்குக் கொடுத்து : 'உங்கள் நிமித்தம் மரணத்திற்கு ஒப்புவிக்கப்படும் என் சரீரம் இது. என்னை நினைவுகூறும்படி இவ்வாறு இதைச் செய்துகொண்டிருங்கள்' என்று கருணையாகச் சொல்லி மறுபடியும், (சஅ)

இனிமைதரு பழரசபாத் திரமேந்தி ஸ்துதிசெலுத்தி யிதிலே நீங்கள்
அனைவிரும் பருகுமின்மற் றிதுபுதிய வுடம்படிக்கைக் கமையச் சிந்தும்
எனதிரத்தம் பாவமன்னிப் பிதனாலே யுண்டாகு மினியிப் பானந்
தனைநுகரே னென்பரம தந்தையிராஜ் ஜியந்தனினீர் சாருமட்டும்.

(இ...ள்). உருசியுள்ள திராட்சப்பழரசம் நிறைந்த பாத்திரத்தைக் கையில் எடுத்து அதை ஆசீர்வதித்து : 'நீங்கள் எல்லாரும் இதைப் பானம் பண்ணுங்கள். இது என் புதிய உடன்படிக்கைக்காக சிந்தப்படும் என் இரத்தமாக இருக்கிறது. பாவமன்னிப்பு இதனாலே உண்டாகும். என் பிதாவின் இராஜ்ஜியமாகிய மோட்சவீட்டிற்கு நீங்கள் வந்து சேருமட்டும் இதை இனிமேல் நான் பானம் பண்ணுவதில்லை' என்றார். (சக)

என்றுதிரு வாய்மலர்ந்தன் புருவாக வெழுந்தருளி யேசு நாதர்
ஒன்றியதம் மடியரொடும் பாவிகளுக் கரயிரங்கி யொருபே றான
தன்றிருமைந் தனைக்கொடுத்திவ் வளவாக வுலகிலன்பு சார்ந்த தேவை
நன்றுநினைத் தேத்தியொரு தோத்திரகீ தமுமிசையாய் நவிற்றி னரால்.

(இ...ள்). அன்பே உருவாக அவதாரமெடுத்தருளிய ஸ்ரீ இயேசு பிரான இவ்வாறு சொல்லி, பாவிகளுக்காக மனமிரங்கி தனக்கு ஒரே பேறான அருமைக்குமாரனை அனுப்பி இவ்வளவாய் இவ்வுலகத்தில் அன்பு கூர்ந்த கடவுளை அதிகமாக நினைத்து, அவரைத் துதித்து, ஒரு தோத்திரப் பாட்டை தன்னுடனிருந்த சீஷர்களோடும் இனிமையாகப் பாடினார். (ருo)

பரசமய விருளகலச் சுவிசேஷ விரிகிரணம் பரப்பி நின்ற
இரவியெனுந் திருச்சபையி னிலையாக வழங்கிவரு மிரண்டு ஞான
வரமிகுசாக்கிரமெந்தின் முன்னதுஞா னஸ்நானம்மற்றொன்றிந்தப்
பரமவிருந் தாநமது பரமகுரு வேயிவையேற் படுத்தி னாரே.

(இ...ள்). சுவிசேஷமென்னும் விரிந்த கதிரை, மற்றச் சமயங்களின் இருள் நீங்கும்வண்ணம் (எப்பக்கமும்) பரம்பச்செய்யும் சூரியனுக்கு ஒப்பான திருச்சபையில் ஸ்திரமாக வழங்கிவரும் ஞான வரம் நிறைந்த பரிசுத்த ஒழுங்குக ளிரண்டு. அஃதில் முந்தினது ஞானதீட்சை, மற்றொன்று இந்தத் திருவிருந்தாகும். இதனை நமது பரம குருவாகிய இரட்சா பெருமானே ஏற்படுத்தியுள்ளார். (ருக)

சாக்கிரமெந்து—இஃது ஆங்கிலேய பதம்.

முந்துறஞா னஸ்நான மடைவர்திருச் சபைபுகுவோர் முறையி
னின்று
பந்தமணு காதபரா பரன்மதலை யெம்முடைய பாவந் தாங்கிச்
சிந்தினர்செங் குருதியுயிர் விடுத்தனரென் றுளநினைந்து சிந்தை
யன்பால்
நைந்துருகி விசுவாசத் தூன்றிநிற்பர் நற்கருணை நயந்துட் கோள்
ளில்.

(இ...ள்). ஞானதீக்ஷை பெறுகிறவர்கள் (கிறிஸ்துவின் மந்தை யென்னும்) திருச்சபையில் முதலாவதாகச் சேருகிறவர்களாவார்கள். பாவப் பற்றில்லாத பராபரனின் குமாரனுகிய நம்பெருமான் (உலக வழக்கத்திற்கு மாறுக) தமது பாவத்தைச் சுமந்து சிவந்த இரத்தத்தைச் சிந்தினர். (சிலுவையில்) தம் உயிரையும் (தம்மை இரட்சிக்க) விட்டார் என்று மனதில் தியானித்து இருதயத்திலுள்ள அன்பால் உள்ளங் கசிந்துருகி நற்கருணையை பயபக்தியுடன் உட்கொண்டால் பக்தியில் நிலைநிற்பார்கள். (௩௨)

வேறு

ஒலிகட லுலக மெல்லா முயர்பர கதியிற் சேர
மலிதரு கருணை யாலே மானிட வுருவந் தாங்கி
மெலியராய் வந்த மேசி யாவிவை விளம்பிப் பின்னர்
நலிவுறு மடியர்க் காகச் செபத்திலே நாட்டம் வைத்தார்.

(இ...ள்). சப்திக்கிற கடலினல் சூழப்பட்ட உலகத்திலுள்ள யாவரும், மேலேயுள்ள மோட்ச பதவியை யடையுமாறு, நிறைந்த கருணையாலே மானிட ரூபமெடுத்து ஏழையாக வந்த மேசியாவாகிய நம்பெருமான் இவ்வாறு சொல்லியபின், மனம் வருந்தும் சீஷர்களுக்காக ஜெபத்தில் தன் மனதைச் செலுத்தினர். (௩௩)

வேறு

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆதிமத் யாந்த ரகிதநிஷ் களங்க
வநாதியை யருட்பெருங் கடலை
ஓதுதற் கரிய மூலதத் துவத்தை
யொப்புற வுயர்பரஞ் சுடரை
வேதநா யகனைத் தமினிரு விகற்பாய்
விளங்கிய விபுதர்தம் பிரானைக்
காதன்மீ தூரச் சிந்தையு ணினைந்து
முதுமறை கனிந்தவாய் திறந்தார்.

(இ...ள்). ஆதி மத்தியம் அந்தம் என்பவையில்லாதவராய், களங்கமற்றவராய், அநாதியாகவுள்ளவராய், கருணை சமுத்திரராய், வர்ணிப்புக்

கெட்டாத மூல தத்துவமாய், தனக்குச் சமானமற்றுயரும் பரஞ்சோதியாய், வேதத்திற்குத் தலைவனாய், தம்மில் வித்தியாசமற்றவராக விளங்குபவனாய், அமரர்கட்குத் தலைவனாய் விளங்கும் கடவுளை, அன்பு மிகுந்த மனதில் தியானித்து, பழமையான வேதத்தைப் போதித்தத் திருவாயால் (பின்வருமாறு) ஜெபித்தார்.

மேற்காட்டியவை தெய்வ லட்சணங்களிற் சில, இது முதல் எட்டுக் கவிகளில் நமது இரக்ஷகர் செய்த பிரார்த்தனைகள் அடங்கியுள்ளது. (ருச)

தந்தையே நேரம் வந்தது நீர்நுந்
தனையனுக் களித்தவ ரெவரும்
உய்ந்திட நித்ய ஜீவனை நல்கு
முரிமையை யருளினீ ருமையும்
மைந்தனு மெனையு மறிந்துகொள் வதுவே
மாசறு நித்திய ஜீவன்
எந்தையே முன்ன முமிலெனக் கிருந்த
மகிமையை யீந்திட வேண்டும்.

(இ...ள்). பிதாவே! வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவரும் பிழைக்குமாறு, அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும்பொருட்டு அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறீர். என் பிதாவே! ஆதியில் உம்மில் எனக்கிருந்த மகிமையை எனக்குக் கொடுத்திடும். உம்மையும் உமது குமாரனாகிய என்னையும் அறிந்துகொள்வதே மாசற்ற நித்திய ஜீவன். (ருரு)

எனக்குள யாவு முமக்குமற் றுமக்கு
ளனவெனக் காதலி னிவர்தாம்
எனக்குநீ ரளித்தோ ராயினு முமக்கே
யுரியவ ரிவரை யிவ் வுலகிற்
றனிக்கவிட் டும்பால் வருகின்றேன் பரம
தந்தையே யிங்கிவர் நமைப்போல்
இனிக்கலந் திருக்கத் திருவருட் டுணைநீ
ரீந்திடப் பழிச்சுகின் றேனே.

(இ...ள்). எனக்குண்டானவைகளெல்லாம் உமக்கே உரியது. உமக்குள்ளவைகள் என்னுடையவைகளானபடியால் இவர்களை நீரே எனக்குக் கொடுத்திருந்தபோதிலும் இவர்கள் உம்முடையவர்களே. ஆகையால் பரம பிதாவே! இவர்களை இந்த உலகில் தனிமையாக விட்டு உம்மிடம் வருகிறேன். நாம் ஒன்றாக இருக்கிறதுபோல் இவர்களும் இனிமேல் ஐக்கியமடைந்திருக்கும்படி திருவருள் துணையை நீர் தரும்படி உம்மைத் துதித்துக் கேட்கின்றேன். (ருகூ)

சொற்றமெய் வசனம் பிழையுறு வண்ணந்
துன்மதி படைத்துளா னன்றி
மற்றிவர் தம்முள் ளொருவரு மிதய
மருண்டுகே டடைந்திடா ராக
இற்றைஞான் றளவு முமதுநா மத்திற்
காத்தனன் யான்பிரி தருணம்
உற்றதா லென்னி லிவர்மனத் துவகை
யுதித்திட விவற்றையீண் டுரைத்தேன்.

(இ...ள்). திருமறையில் கூறப்பட்டுள்ளவை பொய்க்காமல், கெடுநி நெஞ்சு படைத்த யூதாஸ் ஒருவன் தவிர, மற்ற சீஷர்களில் எவரும் மன மயங்கிக் கெட்டுப்போகாமல் இதுவரையிலும், உமது நாமத்தினாலே அவர் களைக் காத்துக்கொண்டேன். நானிவர்களை விட்டுப் பிரிந்துபோகும்வேளை வந்திருக்கிறபடியால், இவர்கள் மனதில் என்னைப்பற்றி சந்தோஷம் உண் டாக இவைகளை இங்கே உமக்குச் சொன்னேன். (ருஎ)

நலனுறு முமது திவ்விய வசன
மிவர்க்கியா னல்கலி னெனைப்போல்
உலகிய லிகந்து நீத்தன ரதனு
லுவரிநீர்க் கடல்புடை சூழும்
நிலவிய லுடையார் மிகப்பகைக் கின்றார்
நெருங்குபொல் லாங்கினின் றென்றும்
விலகிமெய் நெறியில் வழுவுறு திவரைக்
காத்தருண் மிகத்தர வேண்டும்.

(இ...ள்). நன்மை நிறைந்த உமது திவ்ய வசனங்களை இவர்களுக்கு யான் போதித்தலால், இவர்களும் என்னைப்போல் உலகத்தின் தன்மையை ஒழித்துவிட்டார்கள். ஆகையால் உப்பு நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட உலகத்தின் தன்மையை யுடையவர்கள் இவர்களை மிகவும் பகைக்கிறார்கள். இவர்களைச் சேர்வனவாகிய தீங்குகளினின்று விலக்கி சத்திய நெறி தவறாது என்றைக்கும் இவர்களைப் பாதுகாப்பதல்லாமல், உமது கிருபை யையும் அதிகமாகப் பொழியவேண்டும். (ருஅ)

முன்னமிவ வுலகி லென்னைநீர் விடுத்த
முறைமைபோல் யானுமீங் கிவரை
இந்நிலத் தனுப்பு கின்றன னதனு
லிவர்க்கும தரியமெய்ப் பொருள்கள்
மன்னுதெய் வீக முறும்பர மார்த்த
வசனத்தாற் பரிசுத்தம் வழங்க
என்னையே யுமக்குச் சமர்ப்பணஞ் செய்தே
னிரங்கியாண் டருளுக வெந்தாய்.

(இ...ள்). ஆதியில் என்னை நீர் இவ்வுலகத்தில் அனுப்பின விதத் தைப்போல, நானும் இவர்களை இந்த உலகத்தில் அனுப்புகிறேன்.

ஆதலால் கிடைப்பதற்கரிய மெய்ப்பொருள் நிலைத்துள்ள தெய்வத் தன்மை பொருந்திய சத்திய வசனத்தைக்கொண்டு நீர் இவர்களைப் பரிசுத்தப்படுத்தியருளும்படி என்னையே உமக்கு ஒப்புக்கொடுத்தேன். என் பிதாவே! மனமிரங்கி இவர்களைக் கடாக்ஷித்தருளும். (ருக)

பேதமற் றொன்றாய் நாமிருந் தலைப்போற்
பேசுமித் தொண்டர்வாய் மொழியாற்
பூதல மாந்த ரென்னைநீர் விடுத்த
புதுமையைப் புகரற வுணர்ந்து
போதமுற் றென்னின் மெய்விசு வாசம்
பொருந்திநம் முட்கலந் திருக்கத்
தாதையே யுமது கிருபையீந் திடற்காய்த்
தமியன்மன் றாடுகின் றேனே.

(இ...ள்). நாமிருவரும் வித்தியாசமில்லாமல் ஒன்றாயிருப்பதைப் போல, இப்போது நான் உம்மிடம் பரிந்து பேசிவரும் இவ்வடியார்களது உபதேசத்தால் இப்பூமியிலுள்ளோர் என்னை நீர் இங்கனுப்பின புதுமையை களங்கமில்லாமலறிந்து ஞானமடைந்து என்னில் மெய் விசுவாசம் பொருந்தி நம்மில் ஐக்கியப்பட்டிருக்க, பிதாவே! உமது கிருபையை ஈந்தருளும்படி அடியேன் மன்றாடுகிறேன். (சுO)

அகிலலோ கங்க ளமைக்குமுன் னென்னி
லன்புகூர்ந் தையநீ ரளித்த
மகிமையை நீரெற் குதவிய விவர்கண்
மயக்கறக் கண்டுகண் களிப்புற்
றகமகிழ் வெய்தற் கியானினி திருக்கு
மத்தலத் தென்னோடு மமர்ந்து
தகவுட னிருக்க வேண்டுமிவ் வருத்தி
தரித்திருக் கின்றதென் னுளத்தே.

(இ...ள்). பரம பிதாவே, எல்லா உலகங்களையும் நீர் படைக்குமுன் என்னிலன்பு கூர்ந்தளித்த மகிமையை, நீர் எனக்குச் சீடராகத் தந்த இவர்கள் சந்தேகப்படாமல் களிப்புடன் கண்டு ஆனந்தமடைய, நான் சுகமாக இருக்குமிடத்திலேயே இவர்களும் என்னுடன் சேர்ந்து உரிமையுடனிருக்கவேண்டும் என்ற ஆசை என் மனதிலிருக்கிறது. (சுக)

வையக மறியா தும்மையா னறிவன்
மற்றிவர் தாமுமீங் கென்னை
ஐயநீர் வரவிட் டதையுநன் கறிந்தா
ராதலி னரியவும் மன்பு
மெய்யுற வென்னில் விளங்குதல் போல
விவருளும் விளங்குக வென்று
தெய்வமாக் குமரன் வெளிப்படை யாக
ஜெபித்தனர் சிந்தனை யுருகி.

(இ...ள்). அய்யனே, உலகம் உம்மையறியவில்லை. நான் உம்மை அறிந்திருக்கிறேன். நீர் என்னை யனுப்பினதை இவர்களும் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் விசேஷித்த உமது அன்பு உண்மையாகவே என்னில் விளங்குவதுபோல இவர்களிடத்தும் விளங்கவேண்டும் என்று தேவனின் சிறந்த குமாரனான எம்பெருமான் மனதிருக்கத்துடன் பகிரங்கமாகப் பிரார்த்தித்தார். (௬௨)

### வேறு

தாதை யார்திருமு னம்ப ணிந்துசுத னின்ன வாறுபல தண்ணறும்
போத விழ்ந்துமது வார்ந்தெ னப்புனித வாய்தி றந்தினிய புத்துரை
ஓதி மானிடவு யிர்க்க ணங்கடிரி யேக நாதரையு ளத்துனி
ஆத ரத்தொடுஜெ பிக்கு மாறி தனைமாதி ரிக்கருள்செய் தாரரோ.

(இ...ள்). பிதாவின் சந்நிதானத்தில், குளிர்ந்த வாசனையுடைய அரும்பு மலர்ந்து, அதிலிருந்து தேன் சொரிவதுபோல, குமாரக்கடவுளாகிய எம்பிரான், பரிசுத்தமான வாயைத் திறந்து, இவ்வாறு பலவிதமான புதிய விஷயங்களை வணக்கத்துடன் சொல்லி, இவ்வாறே மனுக்குலங்களும் திரியேக நாதரைத் தங்கள் மனதில் தியானித்து ஆசையோடு ஜெபிப்பதற்கு முன்மாதிரியாக தாமே ஜெபம் செய்தருளினார். (௬௩)

### (கிறிஸ்தவனின் நெறி)

துருவ மீனின்வழி துருவி நண்ணுவர்தி ரைக்கடற் றுறைமரக் கலத்
தருவி னைஞரருண் மூர்த்தி சிந்தனையை யமுத வாக்கையவர் செயலையுட்
கருதி நீக்கமற முன்னர் வைத்துவில காது நன்னெறிக டைப்பிடித்
துரிமை சேர்பரம பதம டைந்துநனி யுய்வ ருத்தமகி றிஸ்தவர்.

(இ...ள்). கடலிலே கப்பலோட்டும் அரிய தொழிலையுடையவர்கள் துருவ நட்சத்திரத்தைக் குறியாகக்கொண்டு நாடி அலைகளோடு கூடிய கடலைக் கடந்து துறைமுக ஸ்தலத்தை அடைவர். அதுபோல உத்தம கிறிஸ்தவரென்பார், அருள்நாதரின் சிந்தனை, அமிர்தம்போன்ற அவர் திருவாக்கு, அவர் திருச்செய்கை என்பவற்றை ஓயாது நினைந்தவராய் அவற்றையே தம் இலக்காக முன் நிறுத்தி, அவற்றினின்றும் விலகாது காத்து நடந்து, நல்ல வழியைக் கடைப்பிடித்து, தமக்குரியதாகிய பரலோக பாக்கியத்தை யடைந்து இனிது வாழ்வர். (௬௪)

(பிரார்த்தனை செய்யும் வகை)

தணிந்தி டாதுபரி சுத்த வாவியன றங்கு பத்தர்கள்ச தோதயம்
பணிந்தி டும்மிதய கார்மு கத்தை நனி பற்றி யன்புநெடு நாணியும்
அணிந்த ருஞ்செபமொ ழிக்க ணைக்குநம தாண்டை செங்குருதி யாட்டியுட்
டுணிந்து பக்திவிசு வாச மர்ம்பெரிய தோட்ப லங்கொடுதொ டுத்துமே.

(இ...ள்). பரிசுத்த ஆவியாகிய அக்கினி என்றும் அவியாமல் தங்கும் பக்தர்கள், கடவுளைப் பணியும் இருதயமாகிய வில்லை நன்றாகப் பிடித்து, அன்பாகிய நீண்ட நாணேற்றி, அருமையான ஜெபவார்த்தைகளாகிய அன்புக்கு நமது ஆண்டவரது சிவந்த இரத்தத்தைப் பூசி, மனத்தினுட்டெளிந்து, பக்தி விசுவாசமென்னும் தோட்பலங்கொண்டு, அவ்வம்பை பிடிதது தொடுத்தலே ஜெபமாகும். (கூடு)

நெட்டு யிர்ப்புவிசை மூட்டி யுன்னதநி லத்து லாவுபரி சுத்தருஞ்
சிட்டருந்தொழுபி ரானிருஞ்செவிதொ ளைத்த ருட்டிருவு ளக்குடத்
துட்ட தும்பிநிறை கருணை மாநறவு குக்க வெய்துமகி ழோங்கவும்
மட்ட ருந்தியன வரத வின்பமெனு மாண்க ளிப்பினிடை வைகுவார்.

(இ...ள்). பெருமூச்சாகிய வேகத்தைச் சேர்த்து, வானுலகத்தில் வசிக்கும் நீதிமான்களும் அடியார்களும் தொழும் கடவுளது சிறந்த செவிகளிரண்டினு மூடுருவும்படி, அருள் நிறைந்த திருவுளமாகிய குடத்தினுள்ளே, வழிந்து பொங்கித் ததும்புகின்ற கருணையென்னுஞ் சிறந்த தேன் வடியும்படி, ஜெபமாகிய அம்பால் எய்து சந்தோஷமுண்டாக அத்தேனையுண்டு, என்றைக்கும் இன்பமெனும் மாட்சிமை பொருந்திய ஆனந்தத்தில் நிலைபெறுவர். (கூகூ)

(பிரார்த்தனை யென்பது யாது?)

அழிம்ப னேவுகன லஸ்தி ரங்களைய கற்று கேடகமெவ் வுலகமுந்
தொழும்ப ராபரன்வி ரும்பு கின்றபலி துய்ய ஜீவநதி நீர்தருஞ்
செழுங்கு டம்பரம நாய கன்றிருமு னஞ்செல் தூதுசெய்ப வங்களால்
அழுங்கு கின்றவித யத்துணின் றெழுநல்லாவி தந்தஜெப மாமரோ.

(இ...ள்). செய்கிற பாபத்தால் வருந்தும் இருதயத்தினின்று, பரிசுத்த ஆவியினருளால் புறப்படும் ஜெபம், சாத்தான் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் தடுக்கிற கேடகம், உலகமெல்லாம் வணங்குகிற ஈசன் விரும்பும் பலி, பரிசுத்தமான ஜீவநதியின் நீரைக்கொடுக்கும் சிறந்த குடம், அதுவே கடவுள் முன் செல்லுந் தூது. (கூஎ)

(இரக்ஷா பெருமானின் மகிமை)

*ஆன்ம ரக்ஷிதனை நீவி ழைந்தனைசொல் கேள்பி தாவொடரு ளாளரிம்*
*மானு வேலரையு மறிதி யென்றுநசி யாத ஜீவநிலை மருவுவாய்*
*ஞான தேசிகன் விண்ற வாய்மையிஃ தன்றி வேறுவழி நாடுதல்*
*கான லம்புனலெ னத்து ணிந்தடவி யோடி மெய்ப்பது கடுக்கு மால்.*

(இ...ள்). ஆத்ம இரட்சிப்பை நீ விரும்புவாயாகில், நான் சொல்வதைக் கேள். ஜெகதீசனுடன் சமத்துவம் பெற்று அவரது கிருபையையும்பெற்ற இம்மானுவேலாகிய ஸ்ரீ இயேசுபெருமானைத் தெரிந்துகொள். அப்பொழுது என்றும் அழியாத நித்ய ஜீவ பதவியை யடைவாய். ஞான குரு உபதேசித்த சத்தியம் இது. இதுவன்றி வேறு வழியை நாடுதல் வெய்யிலின் உக்கிரத்தை தூரத்திலிருந்து பார்த்து அது நீரோடையென்று நினைத்து வீணாகக் காட்டிலோடிக் களைத்துப்போவதை யொக்கும். (சுஅ)

*முத்தி வீடுபெற நித்தமான வொரு முத்தனைப்பரவு முத்தம*
*பத்தி யொன்றமையு மென்ப ரண்ணல்பரி சுத்த நீதியது பான்மையை*
*உய்த்து ணர்ந்தறிவு றுத மாந்தரிஃ தென்னை யாழிநடு வுற்றுழன்*
*றெய்த்த வந்தகன டுத்த நற்புணைவி டுத்தி ருங்கரையி றுப்பனோ.*

(இ...ள்). கடவுளது பரிசுத்த நீதியின் தன்மையை ஆராய்ந்துணர்ந்து அறியாத மானிடர், மோட்சமடைய ஒப்பற்ற நித்திய கடவுளை துதிக்குஞ் சிறந்த பக்தியொன்றே போதுமென்பார்கள். சமுத்திரத்தின் நடுவில் கிடந்து தத்தளித்து வருந்துங் குருடன் தன் சமீபத்திலுள்ள நல்ல மிதப்புக் கட்டையை விட்டுவிட்டுத் தானாகவே அப்பெருங்கரையை யேறுவானோ! இது என்ன ஆச்சரியம்! (சுகூ)

*நாச மேதருபொ லாத பாதகந யந்தி யற்றியப சாசன்யான்*
*ஈச னேபவந ராத்து மங்களையெ ரிக்கு மங்கியினி யென்செய் கேன்*
*ஏசு வேயெனது பாவ நாசருபி ரீந்த வள்ளலிவ ரென்றறிந்*
*தாசை யோடுவிசு வாசி யாரைநர காக்கி னிப்புழுவ யின்றிடும்.*

(இ...ள்). 'நானே அழிவையே யுண்டுபண்ணக்கூடிய பொல்லாத பாவத்தை விரும்பிச்செய்த பேயன். ஈசனே பாவமனிதர்களை எரிக்கும் அக்கினி. ஆகையால் நான் என்ன செய்வேன். ஸ்ரீ இயேசுபெருமானே என் பாவத்தை நீக்கினவர். எனக்காக உயிரைக் கொடுத்த வள்ளல் இவரே!' என்று அறிந்து ஆசையோடு அவரை விசுவாசியாதவர்களை நரகாக்கினிப் புழுவெனுந் தீச்சுவாலை வதைக்கும். (எ0)

எவன்ற னைக்கொடிய பாவியென்றுளமிகக்க சந்துதுயரெய்துவான்
எவன்ற னக்குவரு தேவ கோபழுவ லஞ்சி யோடவகை யெண்ணு
வான்
எவன்ற னக்கழிவி லாத முத்திநலமெய்து மிச்சையதி னைந்
துளான்
அவன்கி றிஸ்துவில்மெய் யன்பு கூர்ந்துவிசு வாசம் வைத்திடி-
லடுக்குமே.

(இ...ள்). எவன் தன்னைக்கொடிய பாவியென்று மிகவும் உள்ளங்கசிந்து வருத்தத்துடன் துக்கப்படுகிறானோ, எவன் பாபத்தினால் தன்மேல் வரும் தேவ கோபமாகிய அக்கினிக்குப் பயந்து ஓடும் வகையைத் தேடுகிறானோ, எவன் அழியாத மோட்சத்தின் மேன்மையை யடையும்படியான விருப்பத்தை அதிகமுடையவனா யிருக்கிறானோ, அவன் ஸ்ரீகிறிஸ்து பெருமானில் மெய்யாக அன்புகூர்ந்து அவர்பேரில் விசுவாசம் வைததால் தகுதியாகும்.(எக)

நாயி னுங்கடைய பாவி யேனையெரி நரக வாயிலு நடுக்குறும்
பேய்கொ டுங்கையிலு நின்றி ழுத்தழிவில் பேற ளித்தபெருமான
ருள்
தாயி னுஞ்சதம டங்கு நேயமுறு தற்ப ரன்சரண மன்றியென்
வாய்மறந்துதுதி யாது சென்னியும் வணங்கி டாதிறுதி வரினுமே.

(இ...ள்). நாயைவிடக் கேவலமான பாவியாகிய என்னை நெருப்பு எரிகின்ற நரகவாசலிலிருந்தும், நடுங்கத்தக்க சாத்தானின் கொடிய கையினின்று மிழுத்து, என்றுமழியாத மோட்ச இன்பத்தை யெனக்களித்த கடவுளது கிருபையானது, பெற்ற தாயின் அன்பைவிட நூறுபங்கு பெரியதாகும். மரணம் வருவதாக இருந்தாலும் அன்பு மிகுந்த அந்த ஈசனது பாதத்தை யல்லாது வேறொன்றையும், என் வாய் மறந்துந் துதியாது, என் தலை மறந்தும் வணங்காது. (எஉ)

## திருவிருந்துகாண்டம் முற்றிற்று.

**காண்டம் ஒன்று திருவிருத்தம் 72.**

இரண்டாவது

# கெத்ஸமனே காண்டம்

கெத்ஸமனே காண்டம்—இதற்கு இரட்சாபெருமான் கெத்ஸமனே யென்னுந் தோட்டத்தில் பட்ட ஆத்தும பாடு முதலியவைகளை விவரிக்கும் பாகமென்பது பொருள்.

ஒலிவமலை

மன்ப தைக்கொரு மருந்துமாய் மருந்தென வருந்தும்
அன்ப ருக்கழி யாதபே ரின்பமு மாகி
என்பு ருக்கிடுங் கருணையா னேகநா யகனார்
முன்பி ரார்த்தனை செய்தபி னிகழ்ந்ததை மொழிவாம்.

(இ...ள்). மானிடர்கட்கு ஒப்பற்ற அமிர்தமாகியும், அவரது ஆத்தும போதனைகளை தேவாமிர்தமெனக்கருதி யுண்ணுமன்பர் கட்கு என்றுங் கொடாத பெரிய மோட்ச பாக்கியமாகியும் எலும்பையு முருக்கக்கூடிய தயாளுவாகவும் விளங்கும் கிறிஸ்து நாதர், எல்லாம் வல்ல இறைவன் முன் தம் பிரார்த்தனையை யொப்புக் கொடுத்தபின்னர் நடந்தவைகளைச் சொல்வாம். (எ௩)

கத்து ருத்துவக் கடவுளின் கற்பனை கடந்து
சத்து ருத்துவ வாகிய தாரணி யோர்க்கு
மித்து ருத்துவம் பூண்டுள மேசியா தமது
மத்தி யத்தொழி லால்வருந் துயரெலா மதித்தே.

(இ...ள்). கர்த்தத்துவமுடைய கடவுளது கற்பனைகளை மீறியவற்றால், அவருடைய சத்துருவுக்குச் சமமானவரென மதிக்கப்படும் உலகத்தவர்களுக்கு, சினேகத் தன்மையடைந்த மேசியாவாகிய ஸ்ரீ இயேசுபிரான் (கடவுளுக்கும் மனிதர்கட்கும் இடையில் நின்று செய்யும், மத்தியஸ்தத்தால் வரக்கூடிய துன்பங்களை யெல்லாம் நினைத்து. (எச)

புனித நீதியும் பரமகா ருணியமும் பூத்த
முனைவ னின்னருள் வேண்டுவான் முழுதுணா ரகத்தில்
நினைவு கொண்டொலி வாசலச் சாரலி னின்ற
புனைம லர்த்தடஞ் சோலையை நோக்கினர் போனார்.

(இ...ள்). பரிசுத்தமான நீதியும் பரமவருளு நிறைந்த ஈசனது இனிய கருணையை நாடியவராய், (தான் படப்போகிற பாடுகள்) எல்லாவற்

றையும் அறிந்திருக்கிற மனதில் அவைகளை நினைத்து, ஒலிவமலைச் சாரலி லிருந்த அழகிய புஷ்பம் நிறைந்த பெரிய (கெத்ஸமனே) தோட்டத்தை நோக்கிச் சென்றார். (எரு)

ஊசி நூலென வுடனிழ லெனப்பிரி வின்றி
ஆசை யோடுபின் றொடர்ந்திடு மடியரோ டமுத
வாச கம்பல பேசியிம் மானுவேல் மலினக்
காசு றும்புனற் கீதரோ னாற்றையுங் கடந்தார்.

(இ...ள்). ஊசியும் நூலும் போலவும், சரீரமும் நிழலும் போலவும், இணைப்பிரியாமல் அன்புடன் பின்றொடர்ந்து வரும் சீஷர்களுடன், இம் மானுவேலாகிய நம்பெருமான், அமிர்தத்திற் கொப்பான விஷயங்கள் பல வற்றைப், பேசிக்கொண்டே, மாசுபடிந்துந் தெளிவற்றதுமான நீரை யுடைய கீதரோன் என்னும் ஆற்றையுங் கடந்தார். (எசு)

மும்மை யாயவோர் முதலுக்கு நடுநின்ற மூர்த்தி
செம்மை சேருளங் கவன்றிடத் திருவுரு வடைந்த
வெம்மை யைச்சிறி தாற்றுவ லெனவிரைந் தெழல்போல்
விம்மு தண்சுடர் வீசிமே லெழுந்தவெண் டிங்கள்.

(இ...ள்), திரித்துவமாகிய ஒரு முதலுக்கு நடு நாயகமாக நின்ற ஸ்ரீ இயேசுபிரானுடைய சர்வ நலங்களும்பொருந்திய திருவுள்ளமும் திகைக்கத்தக்கதாக, அவரது திருச்சரீரமடைந்த வேதனையின் வெப்பத் தைச் சிறிது குறைப்பேனென்று, விரைவிலெழுந்து வருவதுபோல் பெருகுகின்ற குளிர்ந்த காந்தியை மிகுதியாகப் பரப்பிக்கொண்டு சந்திரன் வானிலு தயமானன். (எஎ)

எண்ண ருங்குணத் தெம்பிரான் மனுவுரு வெடுத்திம்
மண்ணு ளோர்வினை தொலைத்தல்போன் மையிரு டொலைத்து
விண்ணி னோங்கிய வெண்பதி வியன்கதி கூட்டும்
புண்ணி யம்மெனத் தண்ணிலாத் தாரைகள் பொழிந்த.

(இ...ள்). எண்ணுதற்குரிய பல நற்குணங்கள் வாய்ந்த எம்பெரு மான், மானிடவுருவந்தாங்கி யவதரித்துப் பூலோகத்திலுள்ள மானிடர்க ளின் பாவ வினையைத் தீர்ப்பதுபோல கருமைபோன்ற விருளைத் தொலைத்து, ஆகாசத்தில் எழுந்த வெண்ணிலாவானது, மேன்மைதங்கிய மோட்சத்தை யடைவிக்கும் புண்ணியத்தையொப்ப, குளிர்ந்த தங்கிரணங் களைப் பொழிந்தது. (எஅ)

இரவி பாலொளி பெற்றிரு நிலமிசை யெங்கும்
விரிநி லாக்கதிர் வீசிய மதியமெய்ஞ் ஞானம்
பரம சூரியன் பாலடைந் துலகெலாம் பரப்புங்
குரவ ராமெனத் திகழ்ந்தது விசும்பிடைக் குலவி.

(இ...ள்). சூரியனிடமிருந்து பிரகாசத்தையடைந்து, இப்பெரிய பூமி யெங்கும் விரிந்த நிலா வெளிச்சத்தை வீசிய சந்திரன், மெய்ஞ்ஞான

ஒளியைப் பரம சூரியனாகிய ஜெகதீசனிடமிருந்து பெற்று, உலகங்களுக்கெல்லாம் அருட்பிரகாசத்தைக் கொடுக்கும் குருவாகிய ஸ்ரீ இயேசுபிரானைப்போல், ஆகாயத்தில் மகிழ்ந்து பிரகாசித்தான் (எகூ)

படைத்து நித்தமும் பாலனம் புரிகின்ற பரமன்
எடுத்த கோலமும் படுந்துய ரமுநினைந் தெறிநீர்
உடுத்த வையகத் துறுபொரு ளனைத்துமுள் ளுடைந்து
சடைத்து மேல்வெளுத் தென நிலாத் தயங்கின வெங்கும்.

(இ...ள்). உலகத்தைப் படைத்துப் பிரதிதினமும் பரிபாலனஞ் செய்கின்ற கடவுள், அடைந்த ரூபத்தையும் படுகின்ற ஆத்தும வருத்தத்தையும் நினைந்து, அலைவீசும் சமுத்திரத்தை வஸ்திரமாகத் தரித்திருக்கும் உலகத்திலுள்ள பொருட்களெல்லாம் மனம் உடைந்து வருந்தி, சரீரம் வெளுத்ததுபோல, அவைகள்மேல் எங்கும் நிலவு வீசியது. (அ0)

ஆற்று நீரெலாம் பாலென லாயதவ் வாற்றை
ஏற்ற வாரிதி நீரெலாம் படிகமொத் தியைந்த
ஊற்ற மிக்குயர் கிரியெலாம் வைரமே யொத்த
தோற்றி ருங்கலை நிரம்பிய மதிச்சுடர் தோய்ந்தே.

(இ...ள்). அக்காலத்து ஆகாயத்தில் உதயமான பெருங் கிரணங்கள் நிரம்பிய சந்திரனது ஒளி வீசுதலால், ஆற்றிலேயுள்ள ஜலமெல்லாம் பால் போலாயிற்று. அந்த ஆற்றை ஏற்றுக்கொள்ளுஞ் சமுத்திரத்தின் ஜலமெல்லாம் பளிங்கைப்போல் பிரகாசித்தது. அருவி ஊற்று மிகுந்து உயர்ந்து வளர்ந்திருக்கும் மலைகளெல்லாம வைரக் கற்களைப்போல் பிரகாசித்தன. (அக)

வேதம் வேதியர் விட்புலத் தவர்விழை தேத்தும்
நாதன் சேவடி நடுக்குறு கல்லதர் நடத்தல்
தீது றும்பவ வினையெலாந் தேய்க்கவும் ஜெகத்தை
ஆதி நல்லற நிலையினி னிறுத்தவு மன்றோ.

(இ...ள்). வேதமும், வேதபாராயணஞ் செய்கிறவர்களும், வானுலகத்தவர்களும், விரும்பி துதிக்கும் நமது நாதரது தாமரை மலர் போன்ற சிவந்த பாதங்கள் நடுங்கத்தக்க கல் நிறைந்த பாதையிலே நடத்தல், தீமையை யுண்டாக்கும் பாவவினையை யெல்லாந் தொலைக்கவும, இப்பூலோகத்தை முதன்மையான நல்ல தரும நெறியில் நிறுத்தவும் அல்லவோ (அஉ)

எய்துந் துன்பத்தைப் பெருமையைச் சிறுமையை யெண்ணாத்
துய்ய வன்பினைப் பிறர்துயர் மேற்கொண்டு தோன்றித்
தெய்வ மாணடி சிவப்புறக் கானிடைச் சேறும்
ஐயன் பாலன்றி நமராங்காள் யாரிடத் தறிவீர்.

(இ...ள்). நம்மவர்களே! பிறர் துன்பத்தைத் தான் தாஙகி வந்து, தெய்வீக மாட்சிமைபொருந்திய தமது பாதங்கள் சிவக்கும்படி காட்டில் நடந்து செல்லும் நம்பெருமானிடத்தே யல்லாமல், தானடையுந் துன்பத்

மையும் தமது பெருமையையும் அதனால் விளைந்த சிறுமையையுமெண்ணாத தூய அன்பை வேறு யாரிடத்தில் நீங்கள் அறிந்துகொள்ளக்கூடும்?

இல்லை யில்லையோ ரிளக்கமும் பாவத்தா லிறுகி
வல்லு ருக்கினும் வைரத்தும் வலுத்தவென் னெஞ்சக்
கல்ல ரக்கிய திருப்பதங் கான் வழிப் பட்ட
புல்லி தாம்பரற் கொல்குமென் றெங்ஙனம் புகல்வேன்.

(இ...ள்) ஒரு உருக்கமும் என் மனதில் இல்லையே! பாவத்தினுலுரம்பெற்று எஃகைப்போலவும் வைரக்கல்லைப்போலவும் உறுதியடைந்த எனது நெஞ்சமாகிய கல் லுருத்திய எம்பெருமானுடைய பரிசுத்தமாகிய கால்கள் காட்டு வழியில் நடந்துசென்றன. எத்துணை இழிவான பருக்கைக் கல்லுகளுக்கு அவை துவளும் என்று எவ்வாறு நான் சொல்லுவேன்! (அச)

வேறு

கெத்ஸமனே சிறப்பு.

கலிவிருத்தம்

மண்டலம் புரிபவஞ் சுமந்த மாட்சியால்
அண்டர்நா யகனுளத் தாத்து மத்துயர்
கொண்டுபா டுகள்படக் குறித்துச் செல்லுமத்
தண்டகா ரணியத்தின் றன்மை யுன்னுவாம்.

(இ...ள்). பூமியிலுள்ள ஜனங்கள் செய்த பாவத்தை சுமந்த தன்மையால் வானோருக்குத் தலைவனான எம்பெருமான், தன் மனதில் ஆத்துமத் துயரடைந்து பாடுகள் பட உததேசித்துச் செல்லுமக் கெத்ஸமனே தோட்டத்தின் சிறப்பைச் சிந்திப்போம். (அரு)

இருளெலாங் கதிரவற் கீட ழிந்து போய்
ஒருவழித் தொக்குறைந் தென்ன வோங்கிய
தருநிழல் கதுவிய தண்ணந் தாதுகு
விரிமலர்ப் பரிமளம் வீசுங் காவனம்.

(இ...ள்). அத்தோட்டம், சூரியனுக்கு முன்பாக இருளெல்லாம் பெருமை குலைந்துபோய் ஓரிடத்தில் கூடியிருக்கிறதென்று சொல்லும்படி வளர்ந்த விருக்ஷங்களின் நிழல் பரவியதும் குளிர்ந்த அழகிய புஷ்பங்களின் பொடி உதிரும்படி மலர்ந்த பூக்களின் வாசனை வீசியதுமாக விளங்காநிற்கும். (அசு)

தண்ணறுந் தடங்களாற் றடத்து லாவகொழு
வண்ணவான் மீன்களான் மலர்ந்த கொம்பரால்
விண்ணுற நிவந்தெழு வியன்பொ தும்பராற்
கண்ணிணை களிப்புறுங் கடிகொள் காவனம்.

(இ...ள்). குளிர்ந்த வாசனையுடைய குளங்களாலும், அக்குளத்தி லுலாவும் அழகிற் சிறந்த மீன்களாலும், புஷ்பங்கள் மலர்ந்திருக்கும் மாக் கொம்புகளாலும், ஆகாயத்தை முட்டும்படியாக நிமிர்ந்து வளர்ந்திருக்கும் அழகிய சோலையாலும், பார்ப்பவரது கண்களுக்கு இனிமையைக் கொடுத்து வாசனைவீசுந் தோட்டமாம் அது. (அஎ)

விரும்புநற் குழலியா ழிசையும் வீழ்வுறச்
சுரும்பின முரலுமின் னிசையுந் துன்னரும்
மரம்பயில் புட்குலம் வழங்கு மோசையும்
நிரம்பலாற் செவிக்கின்ப நிறைக்கும் பூம்பொழில்.

(இ...ள்). சகலரும் விரும்பும் இனிய புல்லாங்குழல், வீணை முத லிய வாத்தியங்களின் இராகத்தொனியுந் தோற்கும்படி வண்டுக்கூட்டங் கள் பாடும் இனியசப்தமும், நெருங்கி வளர்ந்திருக்கும் மரங்களில் வசிக்கும் பறவைக்கூட்டங்களின் சப்தமும் நிரம்பி யிருப்பதால், காதுக்கு இனிமை யைக் கொடுக்கும் அழகிய தோட்டம் அது என்பாம். (அஅ)

குளிர் தடந் தோய்ந்தலர் குலவு வாசனை
அளவிநன் னிழற்படிந் தசையுந் தென்றலால்
இளமரக் காவினின் றெறியுஞ் சாரலாற்
புளகுற மெய்விடாய் தணிக்கும் பூம்பொழில்.

(இ...ள்). குளிர்ந்த குளங்களில் படிந்து, புஷ்பங்களின் வாசனை கலந்து, நல்ல நிழலிலிருந்து வீசும் தென்றற் காற்றாலும் இளமையான மரம் நிறைந்த சோலையிலிருந்து வீசுகிற சாரற் காற்றாலும், பூரிப்பையுண் டாக்கும்படி சரீரத்தின் களைப்பைத்தணிக்கும் அழகிய தோட்டம் அது. (அக)

தெளிபுனற் றரங்கமுஞ் செறிந்த மேகமும்
வளர் தருக் குலங்களும் வசந்த வாடையும்
உளைபரி யாதியா யுவந்திச் சோலைவாய்க்
குளிரர சிருத்தலாற் கோடை நாடலா.

(இ...ள்). தெளிந்த ஜலத்திலுண்டாகும் அலைகளும், நெருங்கிய மேகமும், வளர்ந்திருக்கும் விருக்ஷக்கூட்டமும், வசந்தகாலத்திற்குரிய வாடைக்காற்றும், பிடரி மயிருள்ள குதிரை முதலான படைகளைக்கொண்டு இச்சோலையில் களிப்புடன் பனிக்காற்றானது தன்னரசாட்சியை செலுத் துவதால் வேனிற்காலமங்கு அணுகுவது அரிதாகும். (கூ0)

தினகரன் கதிரொளி சேர்கி லாமையாற்
கனவிரு ணிறைந்தவிக் காமற் சோலைதான்
புனிதநல் லாவியின் கதிர்பு குந்திடா
மனமென லாயபொய் மதமும் போன்றது.

(இ...ள்). சூரிய கிரணங்களின் பிரகாசமில்லாமையால், மிகுந்த இருள் நிறைந்த இவ்வழகிய சோலையானது, எப்படி யிருந்ததென்றால்,

பரிசுத்த ஆவியினது ஞான திருவொளி நுழையாத மனதைப்போலவும், பொய் மார்க்கத்தைப் போலவும் உவமை கொண்டு நின்றது. (கக)

உள்ளன வறியவர்க் குவந்து நல்குமவ்
வள்ள லுக் கிருநிதி வளஞ்சு ரத்தல்போற்
றெள்ளுநீங் கனிமுத லாய செம்பொருள்
கொள்ளினும் வண்பயன் குன்றி டாதது.

(இ...ள்). தன் கையிலுள்ளதை ஏழைகளுக்குச் சந்தோஷத்துடன் கொடுக்கும் தருமசாலிகளுக்குச் செல்வத்தின் அந்தஸ்து ஏராளமாகப் பெருகுவதுபோல, அத்தோட்டத்திலுள்ள மதுரமான சிறந்த பழம் முதலான அரிய வஸ்துக்களைப் பறித்தாலும் அதின் நல்ல பயன் (தொகையில்) குறையாத தன்மையை யுடையது. (கஉ)

வண்டுகண் மலர்குடைந் தினிய மாநற
வுண்டிசை முரன்றுதா லாட்ட வொண்பொழிற்
றண்டலை சினைக்கர மசைத்துத் தாங்குறக்
கொண்டலங் குழுவிவர் துறங்குங் கொள்கைத்த.

(இ...ள்). வண்டுகள் புஷ்பத்தைக் கிளறி, இனிமையான தேனை யுண்டு, இராகங்களைப் பாடித் தாலாட்ட, அவ்வழகிய சோலையிலுள்ள மரங்கள் கிளைகளாகிய தங்கைகளால் அசைத்துத் தாங்கிக்கொள்ள, சிறு மேகங்கள் வந்து அக்கிளைகளில் நித்திரைசெய்யும் தன்மையையுடையதாம். (கங)

ஓடையுங் கோடையு மோடுங் கான்மலர்
வாடையும் வாடையு மலியும் புட்பரி
பாடையும் பாடையும் மயங்கும் பைம்புயல்
ஆடையும் மேடையு மணியுந் தாருவே.

(இ...ள்). நீரோடைகளும் கோடைக்காற்றும் ஓடிக்கொண்டிருக்கும். அக்காட்டிலுள்ள மரங்களின் வாசனையும், வடகாற்றும் மிகுந்திருக்கும். பறவைகளின் குழுவுக்குறியான ஒலிக்குறிப்பும் அவற்றின் பாஷையும் ஒன்றோடொன்று மயங்கும். அங்குள்ள விருட்சங்களோ பசுமையான மேகமாகிய ஆடையை யணியப்பெற்று விளங்கிற்று. (கச)

பனிமகன் மழைமுழ வொலிக்கப் பாட்டளி
இனியதே னமுதமுண் டிசைக்கக் கற்பக
நனைவிரி நறுநதொடை சூட்டி நல்லெழில்
வனமடந் தையைமணம் புரிவன் வைகலும்.

(இ...ள்). அங்கே மழையின் சப்தம் வாத்தியத்தைப்போல் தொனிக்க, பாடுகிற வண்டுகள் இனிய தேனாகிய அமிர்தத்தைக் குடித்துப் பாட, கற்பக விருக்ஷத்தின் புஷ்பங்களினுடைய அரும்பு மலர்ந்த வாசனையுடைய மாலையைச் சூட்டி, பனியென்னும் புருஷன் அழகிய காடாகிய பெண்ணுடன், தினமும் விவாக வைபவம்போற் சந்தோஷித்திருப்பான். (கரு)

அனவரதமுந் திருமொழியை யன்பினால்
நினைவினி லுன்னியந் நிலையி னிற்பவர்
நனிசெழித் திடுதல்போ னறுமதெண் ணீர்க்கரைப்
பனிமலர்த் தருக்குலம பயன்கொண் டோங்குமே.

(இ...ள்). எந்நாளும் ஈசனது திருவாக்கை பக்தியுடன் மனதில் தியானித்து, அந்நெறியில் நிற்பவர் மிகவும் செழித்து வாழ்வதுபோல, தெளிந்த நல்ல நீர் நிறைந்த ஆற்றங்கரையில் குளிர்ந்த மலர்களையுடைய விருக்ஷக்கூட்டங்கள் பலனைக் கொடுத்துக்கொண்டே வளரும். (கசு)

படருமுந் திரிகொழு கொம்பு பற்றியே
கெடலரு நறுங்கனி கிடைத்த தோற்றமெய்த்
திடவிசு வாசமோ டையன் சேவடி
அடைபவர் நடையினை யடுத்துக் காட்டுமால்.

(இ...ள்). படர்ந்திருக்கும் கொடிமுந்திரியானது மரக்கொம்புகளை ஆதாரமாகப் பற்றிக்கொண்டு, கெடாத ருசியுள்ள பழங்களைக்கொடுக்கும் காட்சியானது, உண்மையும் உறுதியும் பொருந்திய பக்தியுடன் ஈசனது திருப்பாதங்களைப் பற்றிக்கொள்பவர்களது (நற்கனியாகிய) நடக்கையை ஒத்துக்காட்டுவது போலிருக்கிறது. (கள)

சந்தத முடங்குதா டரைக்க லூன்றிமின்
றந்தர நோக்கியே யலர்க்கண் ணீர்சொரி
கந்தமல் லிகையுளக் கசிவோ டண்ணலை
வந்தனை புரிபவர் செயலை மானுமால்.

(இ...ள்) வளைந்திருக்குங் காலை எப்போதும் பூமியிலூன்றி நின்று ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு, மலராகிய கண்களிலிருந்து தேங்கிய நீரைச்சொரிகிற வாசனை பொருந்திய மல்லிகைச் செடியின் காட்சியானது, மனக்கசிவுடன் ஈசனது பாதங்களை வணங்குகிறவர்களது செய்கையை யொத்திருந்தது. (கஅ)

வேறு

ஆத்தும வேதனை.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

இனையன வளங்கொண் டோங்கி யிறும்புசூழ் கிடந்த வந்தப்
புனைமரக் காவின் பாங்கர் பொலன்கெழு கெதுசே மென்னும்
நனிசிறந் தொப்பி கந்த நறுமலர்ச் சோலை கண்ணுற்
றனகனு மன்பின் மிக்க வடியரு மாண்டு புக்கார்.

(இ...ள்). இவ்வாறான சிறப்பமைந்து, பெரிய மலைகளால் சூழப்பட்ட விருக்ஷங்களடர்ந்த அக்காட்டின் ஓர் பக்கத்திலுள்ள மேன்மை பொருந்திய கெதசெமனே யென்னும் மிகச்சிறந்த ஒப்பற்ற வாசனையுடைய புஷ்பம் நிறைந்த சோலையை நோக்கி, எம்பெருமானும் அன்புமிகுந்த சிஷர்களுஞ் சென்றார்கள். (கசு)

*சோலைவாய் விளைந்த பாவச் சுமைசுமந் ததனு லிந்தச்*
*சோலைவா யணைந்து தேவ சுதன்றம தாத்து மத்தில்*
*மூலகா ரணமாய் நிற்கு முழுமுதன் முனிவு தாங்கிச்*
*சாலநோ வடைந்து தீர்த்தல் தகுதியென் றடைந்தார் போலும்.*

(இ...ள்). தேவகுமாரன் ஆதியில் ஏதேன் தோட்டத்தில் உண்டான பாவச் சுமையை சுமந்ததினுலே, இந்தத் தோட்டத்தில் வந்து எல்லாவற்றிற்கும் மூலகாரணராகிய கடவுளது கோபத்தைத் தனது ஆத்துமத்தில் தாங்கி மிகவும் வருந்தித் தீர்த்தலே நியாயமென்று அங்கு சென்றூர் போலும். (கoo)

*காரிருண் மலிந்த வந்தக் கடிபொழிற் சுருங்கை தோறுந்*
*தாரகா பதியின் கற்றை தவழ்ந்தொளி தயங்க வாங்கே*
*ஆரருட் டரும மூர்த்தி யடுத்தமை யண்ண லாவி*
*சீருறத் திகழு மன்பர் சிந்தையுட் சேறல் போலும்.*

(இ...ள்). கரிய இருள் நிறைந்த வாசனையுடைய அந்தச் சோலையிலுள்ள பாதைகளில், நட்சத்திரங்களுக்குத் தலைவனுன சந்திரனினெளியமர்ந்து பிரகாசிக்க, கிருபைமிகுந்த தருமப் பிரபு அங்கு வந்து சேர்ந்ததானது, சிறந்த பக்தர்களது மனதில் பெருமை மிகுந்த பரிசுத்தாவி வந்து சேர்வது போலுமாம். (கoக)

*செழுமலர்ச் சோலை யோங்கு சினைதொறு நிறையப் பூத்த*
*கொழுமுகை யவிழ்ந்து செந்தேன் குளிர்நறுந் துளிவார் காட்சி*
*அழகிய மணவா ளன்ற னகத்துவந் தடையு மான்மக்*
*கழிதுயர்க் கிரங்கிச் சிந்துங் கண்ணினீர்த் தாரை போலும்.*

(இ...ள்). செழித்த அந்த புஷ்பச் சோலையிலுள்ள செடிகளின் கணுக்களிலெல்லாம், நிறையப் பூத்திருக்கும் பெரிய மொட்டுகள் மலர்ந்து அதிலிருந்து சிவந்த தேன் குளிர்ந்த வாசனையுடன் சொட்டுந் தோற்றமானது, அழகிய மணவாளனுகிய கடவுள் தன்னிடத்திற்கு வந்தடைந்து மிகுதியாக ஆத்ம வேதனைப் படுவதால் மனமிரங்கித் தாரை தாரையாக வடிக்கும் கண்ணி னீரை யொத்தது போலாம். (கoஉ)

*பொழிலுறு பறவை யாவும் புண்ணிய மூர்த்தி வந்து*
*கழிதுய ரடைவரென்று கருதின கொல்லோ கங்குல்*
*வழிவரு மியற்கை தானே வாய்விடா தொழிந்த வண்பூந்*
*தழையெலாங் குழைந்து சாம்பித் தருக்களுஞ் சடைத்த மாதோ.*

(இ...ள்). அச்சோலையிலுள்ள பட்சிகளெல்லாம், புண்ணிய புருஷன் இங்கு வந்து துன்பத்தை மிகுதியாக அடைகிருர் என்று நினைத்தனவோ? அல்லது, இரவு காலத்திற் கேற்கும் இயற்கையினுலேயோ சப்திக்காமலிருந்தன. நல்ல புஷ்பமிகுந்த தழைகளெல்லாம் சோர்ந்து வாடி, மரங்களும் சோம்பிப்போயின. (கoங)

முத்தமி ழாதி பாடை முழுதுணர் கவிஞ ரேனும்
வித்தக னடைந்த வான்ம வேதனை யினைய வென்று
வித்தரித் துரைக்க வல்லா ரல்லரிம் மெய்மை தேர்ந்தும்
பித்தரிற் பிதற்று கின்றேன் பேதைபே ராசை கொண்டே.

(இ...ள்). மூன்று வகைப்பட்ட தமிழ் முதலான சகல பாஷைகளையும் முழுதுங் கற்றுணர்ந்த வித்துவான்களானாலும், அற்புத மூர்த்தியாகிய இரட்சா பெருமான் அடைந்த ஆத்துமபாடுகளின் விதம் இன்னதுதானென்று விஸ்தரித்துக் காட்ட முடியாதவர்களாவார்கள். இந்த உண்மையைப் பேதையாகிய யானறிந்தும், என் மனதிலுள்ள அணைகடந்த வன்பினாலே பைத்தியக்காரர்களைப்போல அதைச் சொல்லுகிறேன்.

முத்தமிழ்—இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழைக் குறிக்கும். (௧0௪)

எங்கணா யகன்பூந் தோட்டத் திருத்தபின் கருணை பூத்த
பங்கஜ விழிலாச னத்தாற் பாங்குறுஞ் சீட ரெண்மர்
தங்களை நோக்கி யான்போய்த் தனிஜெபம் புரிந்து மீள்வல்
இங்கிரு மென்னச் செவ்வா யிதழ்திறந் தியம்பிப் பின்னர்.

(இ...ள்), எங்கள் எஜமானனாகிய ஸ்ரீ இயேசுபிரான் இப்பூந்தோட்டம் வந்து சேர்ந்தபின், கருணை நிறைந்த தாமரைபோன்ற கண்களால் அருகிலிருந்த சீஷர்கள் எட்டுப்பேரையும் பார்த்து: 'நான் போய்த் தனி ஜெபம் செய்து வருகிறேன். நீங்களிங்கே இருங்கள்' என்று, சிவந்த புஷ்பத்திற்குச் சமானமான வாயைத்திறந்து சொன்னார். அதன்பின், (௧0௫)

கிரிமிசை முன்னர்த் தம்மைக் கேழ்கிளர் மகிமை யோடு
தரிசனஞ் செய்த மூன்று தாஸரை யுடன்கொண் டேகி
ஒருசிறை யுற்றுத் துன்ப முறுவதற் குரிய தான
நரசுபா வத்திற் பாடு நயந்தனு பவிக்க லுற்றார்.

(இ...ள்). முன் ஒரு காலத்தில் மலையின்மேல் ஒளிபொருந்திய மகிமையுடையவராகத் தனது காட்சியைக் கண்ட (பேதுரு, யோவான், யாக்கோபு என்னும்) மூன்று சீஷர்களைக் கூட அழைத்துக்கொண்டுபோய், ஒரு பக்கமாகச் சென்று, துன்பமடைவதற்கேற்ற மனுஷத்தன்மையில் ஆத்தும பாடுகளை மனப்பூர்வமா யனுபவித்தார். (௧0௬)

வாக்கினுக் கதீத மான மகிமையை யிழந்துங் கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப் பையுளே பழங்க லுற்றும்
ஆக்கமற் றேழை யாகி யலைந்துஞ்சற் றவியா தோங்கி
மீகிளர் தேவ நீதி வெர்தழல் குளிப்ப தானார்.

(இ...ள்). விஸ்தரிப்புக் கடங்காத மோட்ச மகிமையை யிழந்தும், (ஸ்திரீகளுக்குள்) பாக்கியசாலியாகிய கன்னிமரியாள் வயிற்றின் கர்ப்பப்

பையிலே (பத்துமாதம்) துன்பத்திற்குள்ளாகியும், செல்வமற்ற தரித்திரனாகி உலகத்தில் சஞ்சரித்தும், கொஞ்சமும் தணியாமல் வளர்ந்து பெருகும் தேவ நீதியாகிய வெப்பமான நெருப்பில் மூழ்கினார். (௧௦௭)

மட்டறு கருணைத் தாதை மகத்துவ புனித நீதிப்
பட்டய மெழும்பி யாவி பதைக்கவூ டுருவிப் போக
முட்டிய தேவ கோப முழுங்கனன் முடுகிப் பொங்கிச்
சுட்டிடத் தூய வுள்ளந் துடிதுடித் ததுதுண் ணென்றே.

(இ...ள்). அளவற்ற கிருபையையுடைய கடவுளது மகத்துவமான நீதியென்னும் பரிசுத்த பட்டயம் எழும்பி, அவரது ஆவி பதைக்க இருதயத்தைத் துளைத்துச்செல்ல, அதிகரித்துள்ள தேவ கோபமாகிய பெரும் நெருப்பு விரைவாகப் பொங்கி யவரைச் சுட, பரிசுத்தமான அவரது மனம் துடிதுடித்தது. (௧௦௮)

தடித்திடு கரிய மேக சாலங்கள் ககன கோளத்
திடித்தெழுந் துகாந்த காலத் திரவியைப் புதைத்தா லென்ன
மடித்திடு மகோர பாவ வாதனை யொருங்கு கூடிப்
பிடித்திட நீதா தித்தன் பேரொளி யிழந்த தம்மா,

(இ...ள்). கனமான கருத்த மேகக் கூட்டங்கள் ஆகாய வட்டத்தை இடித்துவிட்டு, முடிவுநாளில் சூரியனை மறைத்தாற்போல, திரும்பத் திரும்ப வந்து மடக்கும் கொடிய பாவ வேதனை யொன்றாகக் கூடிப்பிடிக்க, நீதி சூரியனாகிய எம்பெருமான் தன் மகிமையான ஒளியை யிழந்தார். (௧௦௯)

பாபத்தின் கூலி நித்ய பயங்கர மெனத்தே ராது
மாபத்து விதியை மாந்தர் வரைந்திட வெழுந்த தேவ
கோபத்தின் மிகுதி யாலே கூடிய குரூர மான
சாபத்தின் றிரள்க ளெம்மான் றலைமிசை விழுந்த வன்றே.

(இ...ள்). பாபத்தின் சம்பளம் நித்திய பயங்கரமாகிய நரகம் என்பதை யுணராமல், சிறந்த பத்துக்கற்பனைகளை, மானிடர்கள் மீறியதால் வந்த தேவ கோபத்தின் மிகுதியாலே உண்டான கடுமையான திரண்ட சாபங்கள் எம்பெருமானது தலையில் விழுந்தன. (௧௧௦)

மண்ணுல கனைத்துந் தீக்க வானிடைக் குமுறி நின்ற
அண்ணலா ருக்கிர தண்ட மாகிய வசனிக் கூட்டந்
தண்ணளி சுரக்கும் ஜீவ தாரக மாம்ர க்ஷண்ய
புண்ணியப் பொருப்பின் மீது பொருக்கென வுரறி வீழ்ந்த.

(இ...ள்). உலக முழுவதையும் எரித்துச் சாம்பலாக்க மேலுலகத்திற் குமுறி நின்ற கடவுளது கொடிய தண்டனையாகிய இடிகளின் கூட்டம், சிறந்த கிருபையை யளிக்கும் ஜீவனுக்கு ஆதாரமான இரட்சிப்பின புண்ணிய மூர்த்தியாகிய மலையின்மேல் திடீரெனறு சப்தத்துடன் விழுந்தது. (௧௧௧)

வெந்துய ரென்னுந் தாப மிகுகனன் மூள மூளச்
சுந்தரக் குமர னாவி துடித்துள முடைந்து சோர்ந்து
சைந்தனன் மெழுகு போல வுருகியே குடரி னுப்பண்
சிந்திய தென்னை பேது பாவியேங் தீமை யன்றோ.

(இ...ள்). கொடிய துயரமென்னும் வெப்பமாகிய நெருப்பு, மேலு மேலு மதிகரித்து, அழகுள்ள குமாக்கடவுளது ஆவி துடித்து மனமுடைந்து வாடி மெலிந்து நெருப்பில் பட்ட மெழுகுபோல உருகினவண்ணமாய் அவர் குடலின் நடுவிலுள்ள அடி வயற்றில் ஊற்றப்பட்டது, எதினால் என்றால், பாவிகளாகிய நாம் செய்த பொல்லாங்கினா லல்லவா ? (கக௨)

அன்றொரு சிமயத் துச்சி யலர்கதிர் ஞாயி றென்னத்
துன்றொளி விரித்த ஜோதிச் சுடர்த்திரு முகங்கு ருவி
நன்றிலா மாந்த ரீட்டும் லஜ்ஜையா னுண முற்றுப்
பொன்றிய வதனம் போலப் பொலிவிழந் திருந்த தின்றே.

(இ...ள்). முன்னொரு காலத்தில் ஒரு மலையின்மேல் விரிந்த கதிர்களையுடைய சூரியனைப்போல, (மறுரூப மடைந்த சமயத்தில்) நிறைந்த ஜோதிப் பிரகாசத்தைவீசிய அவரது திருமுகமானது சோர்ந்து, நன்றி கெட்ட மானிடர் செய்யும் இழிவால் வெட்கமடைந்து, இறந்தோர் முகத்தைப்போல இன்று பிரகாசமற்றிருந்தது. (ககங)

அருண்மகோ ததியிற் பூத்த வரவிந்த மமுத தாரை
சொரிதர நித்ய ஜீவ சுருதித்தேன் றுளித்த தெய்வ
மருமலி குமுதப் போது வாயறப் புலர்ந்த தாலும்
உரைதர வரிதாய் மீயுற் றொடுங்கிய துரைக்கற் பாற்றோ.

இ...ள்). கருணையாகிய மகா சமுத்திரத்தில் மலர்ந்த தாமரைப் புஷ்பங்களான அவரது திருக்கண்களினின்று அமிர்தம்போன்ற கண்ணீர் தாரை தாரையாய்ச் சொரிய, நித்திய ஜீவனாகிய வேதத்தேனைச் சிந்திய தெய்வீக வாசனையுடைய அல்லிப் புஷ்பத்தை யொத்த அவரது வாய், நீரில்லாமல் உலர்ந்ததால், பேசமுடியாமல மேலிட்டு ஒடுங்கிப்போன விதத்தைச் சொல்லவுங் கூடுமோ ? (ககச)

அன்புரு வான நம்பிக் கருந்துமா கார மான்ம
துன்பமே பருகும் பானஞ் சொரிகணீ ராத லாலே
என்பெலாங் கட்டு விட்ட தெழிற்றிரு மேனி வாடித்
தன்பல மோடு போலக் காய்ந்தறச் சலித்த தம்மா.

(இ...ள்). தம் அன்பே உருவான எம்பெருமானுக்கு ஆத்மாவிலடையும் வருத்தமே உண்ணும் உணவாம். விடுங்கண்ணீரே அவர் அருந்தும் பானமாம். இவ்வாறிருப்பதால் அவரது எலும்பெல்லாம் கட்டுவிட்டது. அழகிய திருச்சரீரமும் வாடி, தன் தேகவலி ஓடுபோலக் காய்ந்து மிகவும் சலித்துப்போனது. (ககரு)

கெந்தக நாறிச் சாவாக் கிருமிகள் கெழுமி நித்ய
வெந்துயர்க் குறையு ளாகி மிகக்கொதித் தெழும்புங் கும்பிச்
செந்தழற் கொழுந்து வீசி ஜெகதலம் புரக்க வந்த
சுந்தரன் றுய்ய மேனி துவண்டதோ வறிகி லேமால்.

(இ...ள்). கந்தக நாற்றம் வீசி, புழுக்கள் சாகாமல் நிறைந்து, என்று மழியாத கொடுந்துயர் வசிக்குமிடமாகி மிகவும் பொங்கியெழும்பும் நரகத்தினுடைய சிவந்த நெருப்பின் அனல் வீசியதால், இப்பூலோகத்தை இரட்சிக்க வந்த சுந்தரேசனது திருமேனி வாடிற்றோ? நாம் அறியோம். (கககு)

தாங்கரும் பாவ பாரஞ் சமழ்த்திடு மொருபா னீதி
ஓங்கிய கட்க நெஞ்சை யுருவிநின் றுடற்று மோர்பால்
வீங்கிய தேவ கோப வெங்கனல் வெதுப்பு மோர்பால்
நீங்கரு மரணங் கிட்டி நெடுந்திகில் விளைக்கு மோர்பால்.

(இ...ள்). தாங்க முடியாத பாவத்தின் பாரம் ஒருபக்கம் அவரை இறுத்தும், தெய்வநீதி ஓங்கிய வாள் நெஞ்சைத் துளைத்து ஒருபக்கம் வருத்தும், மிகுதியாயுள்ள தேவ கோபத்தின கொடுமையான அனல் ஒரு பக்கம் எரிக்கும், விலக்கமுடியாத மரணம் ஒருபக்கம் நெருக்கி மிகுந்த பயத்தை அவருக்கு உண்டாக்கும். (ககஎ)

பயங்கர மரண பாசம் பிணித்தலாற் படருண் மூழ்கி
இயங்குறு புலன்க ளெல்லா மொடுங்கின விந்தி யங்கள்
மயங்கின மனாதி யந்தக் கரணங்கள் மருண்டு மாழாந்
துயங்கின வவய வங்கள் மற்றினி யுரைப்ப தென்னே.

(இ...ள்). பயங்கரமான மரணத்தின் கயிறுகள் அவரைக் கட்டுதலால், மனவருத்தமடைந்து, இயங்குகிற புலன்களெல்லாம் ஒடுங்கிப்போயின. இந்தியங்கள் மயங்கிப்போயின, மனம் முதலிய அவாது அந்தக் கரணங்கள் பயந்தன. அவயவங்கள் வருத்தங்கொண்டு வாடின. இனி நான் சொல்லக்கூடியது வேறு யாது?

புலன்—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்
இந்தியம்—மெய், வாய், கண், மூக்கு, செவி. (ககஅ)

முழங்கெரி நடுவ ணுய்த்த முருகுலா மலங்கல் போலுந்
தழங்குவெண் டிரைவா யுற்றுத் தளர்ந்துழல் திரணம் போலும்
பழங்கணுக் குடைந்து தேம்பிப் பரிவுறீஇப் பாருக் கின்பம்
வழங்குவான் றுணிந்து வந்த மாநுவேல் வருந்தி னானால்.

(இ...ள்). சப்தத்துடன் எரிகிற நெருப்பின் நடுவில் அகப்பட்ட வாசனை வீசும் பூமாலையைப்போலவும், ஒலிக்கிற வெண்மையான அலையிலகப்பட்டுச் சோர்ந்து சுழலுகிற துரும்பைப்போலவும், துன்பத்தால் மனம் வருந்தி வாடி, இப்பூலோகத்திற்கு இன்பமுண்டாக்கும்பொருட்டு, அன்புடன் துணிந்து அவதரித்த ஈசன் மனவேதனையை யடைந்தார். (ககசு)

கணங்தொறு மினைய துன்பங் கதித்திடக் கருணை யென்னுங்
குணங்குடி யிருந்த சிந்தைக் குரிசிலுட் கோட்ட மின்றி
இணங்கின ரலமந் தேங்கி யிடர்க்கடற் கெல்லை காணு
துணங்கிவெய் துயிர்த்தார் மாந்த ருயிர்க்குயி ராகி நின்றூர்.

(இ...ள்). இவ்வாறுன துன்பம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரிக்க கருணையென்னும் நற்குணத்திற்கு உறைவிடமாயுள்ள எம்பிரான் மனங்கோணுமல் (இக்கஷ்டத்திற்கு) உள்ளானுர். மனிதரின் உயிருக்குயி ராகி வந்த எம்பெருமான், வருந்தி எங்கி, மிகுதியாயுள்ள துன்பக்கட லுக்கு எல்லை காணுதவராய் வாடி பெருமூச்சுவிட்டார். (கஉ0)

ஒருசிறு பவத்தா னித்ய வூழித்தீக் கடற்குண் மூழ்கிப்
பரிபவ மடையும் ஜீவன் பாருல காதி யந்தம்
புரிபவ வாதை யெல்லாம் புனிதனிப் பொழுதி னுக்குள்
ஒருதனி யடைய வென்று லதன்திற மூறைப்பார் யாரே.

(இ...ள்). ஒரு ஆத்துமாவானது தான் செய்யும் ஒரு சிறிய பாவத் தினுல். அழியாத நரகமென்னும் அக்கினிக்கடலில் விழுந்து வியாகூலத்தை யனுபவிக்கும், உலகத்திலுள்ள ஜனங்களெல்லாரும் சிருஷ்டி காலமுதல் உலக முடிவுபரியந்தம் செய்கிற பாவம் யாவையும் பரிசுத்தமான கடவுள் இச்சமயத்தில் தான் ஒருவராக ஒப்புக்கொண்டு சகிக்கிறதென்றுல், அதன் கொடுமையை விஸ்தரிக்கக்கூடியவர் யார்?

ஒரு ஆத்துமா செய்த ஒரு சிறு பாவம், அதை நித்திய நர்கத்தில் செலுத்தும். அப்படியிருக்க மனிதர்கள் ஆதிமுதலாகச் செய்த சகல பாவங்களையும் ஒருவர் தாஞகவே ஒரே நேரத்தில் சுமப்பதாக இருந்தால் அதன் அகோரத்தை யார்தான் அளவிடக்கூடும், என்பது கருத்து. (கஉக)

பாருண்ட பாவக் கொண்டல் படர்ந்துவே தனையா மாழி
நீருண்டு பொழிந்த நீத்த நீடிய மரண வாற்றிற்
சீருண்ட பெருமா னெண்ணில் ஜீவரை யிடுக்கி நீந்தி
ஈருண்டு தவித்துங் கைவிட் டிலர்தனி யிடர்ப்பட் டாரால்.

(இ...ள்). பூலோகத்தை விழுங்கின பாபமென்னும் மேகமானது எங்கும் பாவி, துன்பமென்னும் சமுத்திரத்தின் நீரைக்குடித்து, மழை யாகப் பெய்த ஜலம் ஓடுகின்ற மரணமென்னும் ஆற்றில் சிறப்புள்ள இரட் சாபெருமான, எண்ணமுடியாத ஆத்துமாக்களைத் தான் ஒருவரே இடுக்கிக் கொண்டு நீந்தியும், அத்தண்ணீரில் இழுப்புண்டும், தவித்தும், அவ்வாத்து மாக்களைக் கைவிடாதபடி அவைகளின் இரட்சிப்பைக் கருதினவராய் கஷ்டப்பட்டார். (கஉஉ)

நலனுறு நித்ய செல்வ நல்நூர வதனி னின்றும்
அலகிலா நித்யா னந்த மரியவே தனையி னின்றும்
இலகுறு நித்ய ஜீவ னிழிமர ணத்தி னின்றுங்
குலவிவந் துதித்த தன்றேற் கும்பிநங் குடியா மன்றே.

(இ...ள்). தரித்திரத்தினின்று அழியாத சிறந்த ஐசுவரியத்தையும், கொடிய வேதனையினின்று அளவற்ற நித்யானந்தத்தையும், கேவலமான மரணத்தினின்று ஒளியுள்ள நித்ய ஜீவனையும், நமக்களிக்குமாறு அவரிங்கு வந்திராவிடில், நரகம் நமக்குச் சொந்தமாகு மல்லவா? (கஉந)

சொல்லரு மரணோ பாதிச் சுடுகனற் சுவாலை மீக்கொள்
எல்லையி றுன்ப மென்னு மெறிதிரைக் கடலுண் மூழ்கி
அல்லலுற் றழுங்கி யந்தோ வருட்கும ரேசன் றூதை
தொல்லையன் பிதயத் துள்ளித் தனித் தொருசூழல் புக்கு.

(இ...ள்), விஸ்தரிக்க முடியாத மரண வேதனை யென்னும் எரிகின்ற நெருப்பின் சுவாலை படர்ந்து, வீசுகிற அலையையுடைய எல்லையில்லாத் துன்பக்கடலில் முழுகி, அருள் நிறைந்த குமாரக்கடவுள் துன்பப்பட்டு வருந்தித் தன் பிதாவின் ஆதியன்பை மனதில் நினைத்துத் தனியாக ஓரிடம் போய், (கஉச)

காலிணை முடக்கி யந்தக் கரணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத் திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக் கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன தயாளரின் னருளை நாடி.

(இ...ள்). தன்னிரண்டு கால்களையும் முடக்கி, அந்தக்கரணங்களை யொடுக்கி, அன்பின் மயமாய் விளங்கும் தாமரைபோன்ற முகத்தை பூமியில் படவைத்து, அழகும் விசாலமும் பொருந்திய கைகளைக் குவித்துக் கும்பிட்டு, கண்களில் நீர் வடிய மிகவும் பணிந்து, ஏழைப்போர்க்கு இரங்கும் ஈசனது அருளை நாடி, (கஉரு)

அப்பனே யெல்லா மும்மா லாகுமிவ் வவஸ்தை யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக் கழித்திடக் கருத்துண் டாயின்
அப்படி யாக வன்றே லையவென் சித்த மன்று
மெய்ப்படு முமது சித்தம் விழைந்தமே யாக வென்றார்.

(இ...ள்). 'பிதாவே! எல்லாம் உம்மாலாகும். இத்துன்பம் நிறைந்த வெருக்கத்தக்க பாத்திரத்தை என்னைவிட்டு நீக்கிவிட மனமுண்டானால், அப்படியே நீக்குக. பிதாவே அப்படி யில்லாவிடில் என் சித்தத்தின்படி யல்ல, சத்தியம் நிறைந்த உமது மனம் விரும்பினவாறே நடப்பதாக' என்று ஜெபித்தார். (கஉசு)

இம்முறை யாக மேனி யிரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய சிந்தையுள் ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக் கிட்டி ஜெபித்தனர் முனிவொன் றின்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கியா தரிக்கு மீசன்.

(இ...ள்). கோபமற்றவராக எங்களுடைய முறையீட்டுக்கு மன மிரங்கி எங்களை யாதரிக்குங் கடவுள், இவ்வாறு சரீரத்தில் இரத்த வேர்வை வடியும்படி சிறந்த நீதி தவறாத பரிசுத்த மனமுடைந்து அழுது, மூன்று தரம் பிதாவை யணுகி பிரார்த்தித்தார். (கஉஎ)

அத்தனைக் கருதிக் கூவு மளவைபி லடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித் தேற்றினன் சென்றா னாக
இத்தரா தலத்து மாந்த ரெவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி யெழுந்தனர் விமலற் போற்றி.

(இ...ள்). பிதாவை நினைந்து ஜெபிக்குமவ்வேளையில், ஒரு தேவ தூதன் அவரிடம் வந்து அவரது மனமயக்கத்தையாற்றி, அவரைத் தேற்றிச் சென்றான். அதன்பின் இப்பூலோகத்திலுள்ள ஜனங்கள் யாவரையும் இரட்சிக்க வந்த பரிசுத்தமான எம்பெருமான் பிதாவைப் போற்றிய வண்ணம் முழங்காலிலிருந் தெழுந்தார். (கஉஅ)

உலகினுக் கிரக்ஷை நல்கு மொருதனி நடுவ ராவிக்
கலகறு துன்ப மாய கடுவிட மருத்தி யின்னும்
விலகில தாகி மேன்மேல் வேதனைப் பகழி சிந்தி
இலகரு ளுருவ மாய்க்க வெதிர்ந்தது கடவு ணீதி.

(இ...ள்). உலகத்திற்கு இரட்சிப்பையளிக்கும் ஒப்பற்ற மத்தியஸ்தரான தேவாவிக்கு, அழியாத துன்பமென்னுங் கொடிய விஷத்தை யூட்டியபின், ஒன்றின்மேலொன்றாக வேதனையென்னு மம்புகளை ஓயாமல் எய்து, பிரகாசமான அருளே உருவான எம்பிரானது சரீரத்தை யழிக்க தேவ நீதியானது எதிர்ப்பட்டது. (கஉகூ)

வேறு

பேசரிய பெருந்துன்பப் பிரளயவெங் கனல்கொளுத்தப் பேதுற் [றந்தோ
ஆசகன்ற புனிதமனத் தலக்கணுறுந் திருக்குமர னன்பை [யாய்ந்தும்
நேசவொரு மகவென்றுங் கருதாது தகித்தபரன் நீதி கண்டும்
பாசவினைக் காளாகி நாசமுறத் துணிவதறப் பாவம் பாவம்.

(இ...ள்). அளவிடக்கூடாத பெரிய துன்பத்தினின் வெப்பமான நெருப்புக் கொளுத்த, மதிமயங்கி மாசற்ற பரிசுத்தமான மனதில் துன்பத்தையடையுங் குமாரக்கடவுளது அன்பையறிந்தும், நேசமான ஒரே மகனென்றும் பாராமல், (ஆத்தும வேதனையென்னும் நெருப்பில் போட்டு) தகித்த கடவுளது நீதியைக் கண்டும், நாம் பாவ பாசத்திற்குள்ளாகி அழிந்துபோகத் துணிவது கொடிய பாவமே. (கூ0)

கட்டுண்டேகல்.

வேறு

கலி விருத்தம்

ஆத்துமவ வஸ்தைசிறி தாறியரு ளுதன்
மாத்தகைய நம்பனைவ ழுத்திவழி தேகி
ஆத்தரையு ணர்த்தியிவ ணின்றகறு மென்னுத்
தீத்தொழிலர் வந்துபுரி தீவினைதெ ரித்தார்.

(இ...ள்). அருள் நாதனுகிய இயேசுபிரான் சிறுமையுற்று ஆத்தும வாதை சிறிது குறைந்தபின், மகிமை பொருந்திய கடவுளை ஸ்தோத்தரித்து, தோழர்களாகிய சீஷர்களை அழைத்து "தீய தொழிலையுடையவர்கள் வந்து நமக்குக் கெடுதி செய்யப் போகிறார்கள். நாம் இவ்விடத்தை விட்டுச் செல்லுவோம்" என்றார். (கூக)

அந்தவமை யத்தசட ராயவர்விடு ப்பப்
பந்தமொடு பல்வகைய வேதிகள்ப ரித்து
வெந்தறுக ணாளர்பலர் வல்விதின்வி ரைந்து
வந்தனர்யு தாசொடும ருங்குறநெ ருங்கி.

(இ...ள்). அந்த சமயத்தில் ஈனர்களா லனுப்பப்பட்டவர்கள், நெருப்புப் பந்தத்தோடு பலவகையான ஆயுதங்களை யணிந்தவர்களாய், கோபத்தால் கண்கள் சிவப்ப யூதாஸுடன் சீக்கிரமாகவே வந்து இரட்சா பெருமானின் பக்கத்தில் நெருங்கினார்கள். (கூஉ)

நஞ்சமனை யான்கடுகி நம்பனொரு பேறும்
மஞ்சனைய டுத்திரபி வாழ்கவென முத்தி
வஞ்சரையு ணர்த்தலும காகருணை வள்ளல்
விஞ்சியது ரோகிமுக நோக்கியிது விள்ளும்.

(இ...ள்). விஷத்திற்குச் சமானமான யூதாஸ் ஜெகதீசனது ஒரே பேரான குமாரனை விரைவி லணுகி "இரபி வாழ்க" வென முத்தந் தந்து தன்னோடு வந்த வஞ்சகருக்கு அவரைக் காட்டிக் கொடுத்தபோது, சிறந்த கருணாகரக் கடவுள் அக்கொடிய துரோகியின் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார். (கூங)

அடுக்கவரு மித்திரவ கத்துளதென் னீண்டு
கடுக்கிவரு வஞ்சநெறி யாளர்கையிற் காட்டிக்
கொடுக்கவெனை முத்தமிடு கிற்றிகொல்கு றித்தென்
றடுக்குநவெ லாமறியு மாண்டகை மொழிந்தே.

(இ...ள்). "என்னைக் கிட்டிவரு நண்பனே, உன் மனதிலுள்ள எண்ணந்தானென்ன? இங்கே உன்னைத் தொடர்ந்து கோபித்து வரும்

வஞ்சகக் குணமுடையவர்கள் கையில் என்னை ஒப்புவிக்க முத்தமிடுகின்றாயோ? அதன் நோக்கமென்ன? என்று பின்னால் நேருங் காரியாதிகள் யாவற்றையு முன்னறியும் கடவுள் சொல்லி........ (கருச)

வேடுவரெ னுவுரறும் வெய்யவரை நோக்கித்
தேடுவதி யாரையென லோடுநெறி தீயர்
நாடுவமி யேசுநச ரேயனையெ னுநான்
தேடலிர்வே றுருமல னென்றிறைதெ ரித்தார்.

(இ...ள்). வேடர்களைப்போல அதட்டிப் பேசும் அக் கொடியவர்களைப் பார்த்து: "யாரைத் தேடுகிறீர்கள்" என்று கேட்க, அதற்கு அம் மிலேச்சர்கள "நசரேயனாகிய இயேசுவை" என்று சொல்ல, அதற்கு அரசனாகிய நம்பெருமான் நீங்கள் தேடவேண்டுவதில்லை" அவர் வேறு யாருமல்ல, "நான் தான்" என்று சொன்னார். (கருரு)

நானவரெ னுவிறைந விற்றிமுடி யாமுன்
ஆனவரொ ருங்குயிர விந்தனர்கொ லாமென்
றானிவரு டற்பொறைநி லத்துற வுருண்டார்
ஏனவர யிர்த்திதுவெ னென்றுதிகி லுற்றார்.

(இ...ள்). அரசனாகிய நம் பெருமான் "நான்தான் அவர்" என்று சொல்லி முடிவதற்குள்ளாக அங்கு வந்தவர்கள் எல்லாரும் ஒன்றாக வுயிரை விட்டவர்கள்போலும், மாம்சம் நிறைந்த உடலாகிய தங்கள் சுமை நிலத்திற்பட வுருண்டார்கள். மற்றவர்கள் சந்தோஷத்துடன் "இது என்ன" வென்று பயந்தார்கள். (கருசா)

பூரியர்வி ழுந்தழிபு ணர்ப்புநடு நின்ற
காரியமு டிக்கவரு கன்னலினை ணித்துஞ்
சீரியம றைப்பொருள்தெ ரித்திடுக ருத்தும்
ஆரியனி னைத்தனரு ருட்டிருவு ளத்தே.

(இ...ள்). ஈனர்கள் விழுந்து அழிந்துபோகும் தன்மையையும், தான் மத்தியஸ்தராக விருந்து காரியம் முடிக்கவேண்டிய நேரம் வந்ததையும், மேலான வேதநூலிற் சொல்லியுள்ள கருத்தையும், எம்பெருமான் அருள் நிறைந்த தமதுள்ளத்திலே அத்ததியில் நினைத்தார். (கருஎ)

அய்யரிஃ துள்ளலுமந நுக்கிரக சத்தி
ஒய்யெனவு லாய்த்துயிலொ ழித்தெனவு ணர்த்த
வெய்யவரெ ழுந்தழல்வி ழிக்கடைசி வக்க
மெய்யுயிரை வாதைபுரி வாமெனவெ குண்டார்.

(இ...ள்). எம்பெருமான் இவ்வாறு நினைத்தவுடன கருணையின் வல்லமை திடீரென விளங்கிற்று. அக்கொடியவர்கள் தூக்கத்தை விட்டு

எழுந்தவர்களைப்போலத் தெளிவு கொண்டெழுந்து அக்கினிபோன்ற தங்கள் கண்கள் சிவக்க இயேசுபிரானின் உயிர் நீங்குமாறு அவரை வதை செய்வோமென கோபங் கொண்டனர். (கஙஅ)

ஜீவாதி பன்கருணை மல்கியதி றத்திற்
சாவாதெ ழுந்தமையு ணர்ந்திலர்ச ழக்கர்
கூவாவ கந்தை மொழி சிற்சிலகு ரைத்துத்
தேவாதி பன்றனைநெ ருக்கினர்செ ருக்கே.

(இ...ள்). ஜீவனுக் கதிபதியானவரின் கருணைப்பெருக்கால் தாங்கள் சாகாமல் எழுந்ததை அவ்வஞ்சகர்கள் சற்றுமெண்ணாது சொல்லத் தகாத ஆங்காரமான வார்த்தைகள் சிலவற்றைச் சொல்லி தேவாதி தேவனை இறுமாப்புடன் நெருக்கினார்கள். (கஙகூ)

உருத்தெதிர்பி ணிக்கவரு மொன்னலரை யுங்கள்
கருத்தெனைய டர்ப்பதெனி லிங்கிவர்க லங்க
வருத்தலிர்வி டுத்திடுமி னென்றுமறை வாய்மை
பொறுத்தமுறு மாறுநம தாண்டகைபு கன்றார்.

(இ...ள்). கோபத்துடன் தன்னைக் கட்டவரும் பகைவர்களைப் பார்த்து: "என்னைக் கொல்லுவது உங்க ளெண்ணமாக விருந்தால் இங்குள்ள (என் சீஷர்களாகிய) இவர்கள் வருத்தப்பட்டுக் கலங்காதபடி அவர்களை விட்டு விடுங்கள்" என்று வேதாகமம் முன்கூறி யிருப்பதற்கொப்ப நமதாண் டவர் சொன்னார். (கசo)

வேதமுத வின்னணம்வி ளம்புமமை யத்தே
பாதகர்பி டித்துடல்பி ணிக்கும்வகை பாராப்
பேதுருசி னந்தெரிபி றங்குகதிர் வாளாற்
காதறவெ றிந்தனனோர் காதகனை வெம்பி.

(இ...ள்). வேதத்திற்குக் காரணராகிய எம்பிரா னிவ்வாறு சொல்லுந் தருணத்தில், பேதுரு வென்னுஞ் சீஷன் அவரது திருமேனியை யப்பாதகர்கள் கட்டுவதைப் பார்க்கச் சகியாது, சினங்கொண்டு அதன் பயனாய், அக்கினிபோல் பிரகாசிக்கும் ஒளியையுடைய பட்டயத்தை ஒரு கொடியவனது காது அறும்படியாக வீசி யெறிந்தான். (கசக)

ஆங்கதைய றிந்துநம தன்பன்முக நோக்கி
ஈங்கிதுகொ லோவறவி யற்கையெவ ரேனும்
ஓங்குசுரி கைத்தொழிலு வப்பினத னாலே
நீங்குவர்தம் மின்னுயிரு மன்றிநெறி யின்றால்.

(இ...ள்). அச்சமயத்திலதை யறிந்த எம்பெருமான் அச்சீஷனது முகத்தைப் பார்த்து: "நீதிநெறியின் தன்மை யிதுதானோ? யாவரேனுங்

கத்தியால் வெட்டுந் தொழிலை விரும்பினால் அவர்கள் தங்களினிமையான உயிரை அக்கருவியினாலேயே நீக்கும்படியாக நேரிடும். ஆகையால் நீ செய்த விக்காரியஞ் சரியல்ல" என்றார். (கசஉ)

ஆண்டகையை வேண்டிடுவ னாயினரு ளார்கொல்
ஈண்டொருக ணத்திலோரி லக்கமுறு தூதர்
வேண்டுகிலன் யானதுவி ழைந்தியலு வேனேற்
காண்டகைய வேதமொழி மெய்ம்மைகவி னுங்கொல்.

(இ...ள்). "நான் கடவுளை வேண்டினால் ஒரு நொடிக்குள்ளாக இலட்சக் கணக்கான தூதர்களை அனுப்பமாட்டாரோ! அது எனக்கு வேண்டாம். அவ்வாறு ஆசைப்பட்டுச் செய்வேனேயாகில் சிறப்புள்ள வேத வாக்கியத்திற் கூறியுள்ள வுண்மை எப்படி விளங்கும்" என்றார். (கசரு)

மாத்தகைய தந்தைதரு வன்றுயர்ம லிந்த
பாத்திரமி திற்பருகு பான்மைதக வேயென்
றேத்தரிய புண்ணியமி ழைக்குமரு ளாதன்
ஆத்தமுறு தொண்டரைய மைத்திவைவி ளம்பும்.

(இ...ள்). மிகப் பெருமையுடைய கடவுளால் கொடுக்கப்பட்ட பாத்திரமாகிய இதை அனுபவிப்பது தகுதியென்று புகழத்தக்க புண்ணியம் நிறைந்த நமது அருள்நாதன் அன்புமிகுஞ் சீஷரை கையமர்த்தி (தன்னைப் பிடிக்க வந்தவர்களைப் பார்த்து) சொல்லுகிறார். (கசச)

மாண்டநக ரூர்மனைம டங்கள்பொது மன்றம்
நீண்டமறு காலயமி டங்கடொறு நின்றே
காண்டகைய போதனைக ருத்துறவி சைத்தேன்
ஆண்டெனைவி டுத்தனிரி தென்கொலும தச்சம்.

(இ...ள்). "மாட்சிமை பொருந்திய பட்டணம், ஊர், மைதானம், மடங்கள், பொது ஸ்தலங்கள், நீண்ட வீதி, ஆலயங்கள் முதலிய விடங்களில் நின்று கேட்போர் மனதில் படும்படியாய்ச் சிறந்த போதனைகளைச் செய்தேன். அவ்விடங்களி லென்னைப் பிடித்துக்கொள்ளாமல் விட்டு விட்டீர்கள். உங்களுள் ளிவ்வச்சம் நுழைந்தது எக்காரணம் பற்றியோ?" (கசரு)

நள்ளிரவி லேகுழுமி நாந்தகம்வி திர்த்துக்
கொள்ளிதிக ழத்துருவி வந்தனிர்கு றிப்பென்
கள்ளுநர்க ரந்துறைதல் கண்டுபிடிக் கின்றீர்
உள்ள முடை யீர்கொலென வுள்ளவரு மாலோ.

(இ...ள்). நீங்கள் நடு இராத்திரியிலே ஒன்றாய்க்கூடி கத்தியை வீசிக்கொண்டு தீவட்டிகள் பிரகாசிக்க என்னைத் தேடி வந்தீர்கள். இதன் நோக்க

மென்ன? உங்களை திருடர்கள் ஒளிந்து வசிப்பதைக் கண்டுபிடிக்கின்ற மன முடையவர்களென்று நினைக்கவேண்டி யிருக்கிறது." (கசசு)

ஞாலமிசை யேகருவி யாகவுமை நாடிச்
சாலமிகு தீயலகை தன்னெணமு டிக்குங்
காலமிது வாதலின டர்ந்தனிர்க டுத்து
மேலினிவி ரும்பியவி தம்புரிமி னென்னா.

(இ...ள்). தந்திர மிகுந்த கொடிய சாத்தான் இப்பூமியில் உங்களைக் கருவியாகக்கொண்டு தன் எண்ணத்தை நிறைவேற்றுங் காலம் இதுவாதலால் நீங்கள் கோபத்துடன் வந்தீர்கள். இனிமேல் நீங்கள் விரும்பியவாறு செய் யுங்கள்" என்று (கசஎ)

வேதமுத னாதனனி வேதனையு ழக்குங்
காதறைதி றத்தருள்க னிந்துமட லொட்டி
ஆதரவ ளித்தனர்கி றிஸ்தவவ டர்க்கும்
பாதகமெ னாதுபுரி பூததயை பாராய்.

(இ...ள்). வேதமூர்த்தியாகிய கடவுள் காதறுபட்டுத் துன்பப்படுபவன் மேல் கிருபை கூர்ந்து அவன் காதின் மடலை ஒட்டவைத்து அவனுக்காதர வளித்தார். கிறிஸ்தவர்களே! தன்னைக் கொல்லும் பகைவரென்றும் பாராமல் நம்பரமன் பாராட்டிய ஜீவகாருண்யத்தைப் பாருங்கள். (கசஅ)

முத்தருமை பன்றியறி யுங்கொன்முறை தேராப்
பித்தரது போலறிய கிற்கிலர்பி ரானங்
குய்த்தவுத வித்திறனை யொல்லைகொடு போனார்
வித்தகவி வேசனவி யோமரைவி சித்தே.

(இ...ள்). முத்தின் அருமையைப் பன்றி யறியுமோ? நீதிநெறி யறியா வப்பித்தர்கள் அப்பன்றியைப்போல தங்களுக்கு எம்பிரான் செய்த வுதவியின் மேன்மையை யறிய மாட்டாதவர்களாய் ஞானமும் விவேகமு முடையவரும் ஆவியாகவு மிருக்குங் கடவுளைக் கட்டி சீக்கிரத்தில் கொண்டு போனார்கள். (கசகூ)

வல்லியம்வெ ரீஇயிரிம டங்கலரி யேற்றைக்
கொல்லியவ ளைந்துபல குக்கல்கள்கு ரைத்துச்
செல்லியவெ னப்புடைசெ ருக்கிகர தேவைப்
புல்லிய ரிகழ்ந்துபல பேசிநெறி போனார்.

(இ...ள்), புலி பயந்தோடும்படியான பிடரி மயிரினையுடைய ஆண் சிங்கமொன்றைக் கொல்லுமாறு அதை வளைந்து பல நாய்கள் குரைத்துக்

கொண்டுபோனதுபோல, நானும் தேவனுமாகிய அம்மேலோன் பக்கத்தில் இறுமாப்புடன் அவ்வீனர்கள் அவரை யிகழ்ந்து பலவிதமாகப் பேசிக் கொண்டே வழிநடந்தார்கள்.

நரதேவன்—மனிதச் சுவாபமுந் தேவ சுவாபமும்] பொருந்த அவதரித்தவர். (கரு௰)

மெய்ப்படுத வச்சுருதி வித்தகனி றிஸ்து
பொய்ப்படும னக்கொடிய புல்லியர்பி ணிப்பிற்
கைப்படுத லும்பரவு தொண்டர்கள லங்கி
மைப்படுபொ ழிற்கிடைநு ழைந்தனர்ம றைந்தார்.

(இ...ள்) சத்திய வேதத்திற் காட்டியுள்ள ஞானபோதகராகிய நம் பெருமான், பொய் நிறைந்த மனதையுடைய கொடிய வீனரது கட்டிலகப் பட்டவுடன், அவரைச் சூழ்ந்து துதித்துக்கொண்டிருந்த சிஷர்கள் மனங்கலங்கி இருண்ட சோலையில் நுழைந்து ஒளித்துக்கொண்டார்கள். (கருக)

தெள்ளமுத வாய்மொழிச்செ விப்புலனு கர்ந்துங்
கள்ளமில்ப லற்புதம்வி ழித்துணைகள் கண்டும்
உள்ளுறநன் மாதிரியு ரைத்துமடி யார்பாற்
பிள்ளைமைபி றங்கல்பிற விக்குணபி ராந்தி.

(இ...ள்) தெளிந்த அமிர்தத்தைப்போன்ற அவர் வார்த்தைகளைக் காதால கேட்டும், அவர் செய்த மாயமற்ற பல அற்புதங்களை தங்களிரண்டு கண்களாற் பார்த்தும், இவர்கள் மனதிலாழப்படியும் படியாக பலபல நன்னெறியை யவர் உபதேசித்திருந்தும், அச்சீஷர்களிடம் சிறு பிள்ளைத்தனம் காணப்பட்டது அவர்களது பிறவிச் சுவாபமாகும். (கருஉ)

திருவுளம்வெ தும்பிஞேர்க ணத்தினிடை தீயுஞ்
சருவவுல கங்களுமெ னுந்தகைமை சான்ற
ஒருவருரை யாடிலர்மற் றொன்றும்வினை வுன்னித்
திருவடிவ ருந்தவிட ரோடுநெறி சென்றார்.

(இ...ள்). மனதிற் கோபம் வரும்பட்சத்தில் ஒரு விநாடிக்குள்ளாக உலக முழுவதும் வெந்துபோகும் என்று சொல்லும்படியான வல்லமையுடைய ஒப்பற்ற நம் பெருமான், இனி நடக்கவேண்டிய காரியத்தை நினைத்தவராய், வேறொன்றும் பேசாது அழகிய பாதங்கள் நோக அம் மூர்க்கர்களோடு அவர்கள் நடத்திய வழியே சென்றார். (கருங)

7

பிணித்தவித மாகமபெ ருந்தகையை வெய்யோர்
அணித்துறவ ளைந்தொலிவ வாரணிய நீத்து
மணித்தவள மாடநிரை மல்கெருச லைக்குள்
குணித்தமனை நாடிமறு கூடுகொடு போனார்.

(இ...ள்). அக்கொடியவர்கள் நம் பெருமானைக் கட்டின வண்ணமாகவே, அவரைச் சூழ்ந்து ஒலிவ மரங்கள் நிறைந்த காட்டைவிட்டு, மாட மாளிகை கூடகோபுர நிறைந்துள்ள எருசலேம் நகரத்திற்குள் அவரைக் கொண்டுபோக வேண்டுமென்று நினைத்திருந்த வீட்டை நாடி வீதிவழியாக அழைத்துக்கொண்டு போனார்கள். (௧௫௪)

## கெத்ஸெமனே காண்டம் முற்றிற்று.

காண்டம் இரண்டுக்குத் திருவிருத்தம் 154.

மூன்றுவது

# விசாரணை காண்டம்

---

விசாரணைகாண்டம் என்பதற்கு யூதர்கள் இரட்சாபெருமானைப் பிடித்தபின் அவருக்குச் சட்டத்தின்படி கொலைத் தீர்ப்பு நியமிக்கவேண்டி அந்நாட்டின் வைதிக லௌகிக அதிகாரிகளின் முன்னர் கொண்டுபோய்விட அவர்களால் நடைபெற்ற விசாரணையின் கிரமத்தை யுணர்த்துந் தொகுப் பென்பது பொருள்.

வேறு

கலி விருத்தம்.

(காய்பா முன்னிலை)

*வாசால கன்றினமு மாலயம ரீஇச்செய்*
*பூசா கைங்கிரிய போதனது போழ்துக்*
*காசாட பூதிமறை யந்தணரின் முந்தும்*
*மாசாத கன்காயி பாவெனுமோர் வன்மி.*

(இ...ள்). காய்பா வென்னுந் துஷ்டன் வாய்ப்பேச்சில் வல்லவனாகவும், பிரதிதினமும் தெய்வாலயம்போய் பூசைமுறைகளைச் செய்யும் ஆசாரியனும் வஞ்சனையில் மிஞ்சிய ஆஷாடபூதி யென்னும் பிராமணனையும் மேற்கொண்டவனாகவு மிருந்தான்.

ஆஷாடபூதி—தேவசன்மா வென்னும் சந்நியாசி யொருவன் மிக்கப் பிரயாசையாற் றேடிய திரவியத்தை கந்தைத் துணியில் பொதிந்து வைத்திருப்பதையறிந்த ஆஷாடபூதி யென்னும் பிராமணன், அவனிடம் ஞானோபதேசங் கேட்பவனைப் போல் நடித்து அக்கந்தைப் போர்வையை திரவியத்துட னபகரித்துச் சென்றதாகப் " பஞ்சதந்திரத்தில் " ஒரு கதையுண்டு. (௧௫௫)

*மூர்க்கரைமு கப்பர்பல மூர்க்கரெனல் போலுந்*
*தீர்க்கருணை நாடியறி யார்பலர்தி ரண்டு*
*சீர்க்குணமி லானுறையுள் சேர்ந்துதிரை யாழி*
*தூர்க்கமுயல் வாரின்வரி தியோசனைது ணிந்தார்.*

(இ...ள்). தீயவர்களைத் தீயவர்களே திரண்டு நாடிச் சகவாசஞ்செய்வார்களெனபதுபோல, தீர்க்கதரிசிகளது வாக்கை ஆராய்ந்தறியு மாற்றலில்லாத பலர் சேர்ந்து, நற்குணமற்ற காய்பாவின் அரண்மனையில்கூடி அலைகளையுடைய சமுத்திரத்தைத் தூர்க்க முயல்பவரைப்போன்று வீணைப் பலவிதமாக தங்கள் மனம்போன்ற போக்கில், யோசிக்கலானார்கள. (௧௫௬)

இங்கிவர்போ லாங்குபுரி யெண்ணமிடு மெல்லை
நங்களரு ளுதனைந ராந்தகர்கொ ணர்ந்தே
சங்கமற வேர்ரெதிர்நி றுத்தவொரு தானுந்
துங்கவுல காதிபரு நின்றனர்சு சீல.

(இ...ள்). நண்பனே! இவர்களிவ் விடத்தில், நம்பெருமானுக்குத் தீமையை யுண்டுபண்ணும்படியாய் யோசிக்குஞ் சமயத்தில், கொலையாளிகள், கருணை நிறைந்த நமது நாதனை அங்கே கொண்டுவந்து, ஆங்கு கூடியிருக்கும் வீரர்முன் நிறுத்த, ஒப்பற்ற பரிசுத்தமுடைய உலோகாதிபதியும் நின்றார். (கருள)

எல்லையில்பல் கோடியுல கங்களையி மைப்பிற்
சல்லியெறி வார்மறிக புங்கெனநி லாவ
நில்லெனநி றுத்துவரி யக்கிடுவர் நீறு
ஒல்லையெரி யுண்டொழியு மோரிவரு ருப்பின்.

(இ...ள்). ஒப்பற்ற இவர் கோடங்கொண்டால் எல்லையில்லாத பலவுலகங்களை யொரு நொடியிற் றேண்டி எறிவார். ஆடும் அம்மானையைப் போல நில்லென்று நிறுத்துவார். அதை ஆட்டியும வைப்பார். அது சாம்பலாக விரைவில் எரிந்து அழியும்படியும் செய்வார். (கருஅ)

கோடிரவி போலவொளிகு லாவுசமு கத்தில்
நீடுபுவி மாந்தரனை வோரையுநி றுத்திப்
பீடுபெறு நீதிமுறை பேசுகும ரேசன்
பாடுறவி னீசர்முன நிற்குநிலை பார்மின்

(இ...ள்). (இரண்டாம் வருகையில்) கோடி சூரியனைப்போல் ஒளி வீசும் தன் சமுகத்தில், இப்பெரிய பூமியிலுள்ள மனிதர்கள் யாவரையு நிறுத்தி வைதது, பெருமை தங்கிய நீதிமுறைமைகளைப் பேசவல்ல குமாரக் கடவுள், இப்பொழுது துன்பத்தைச் சகித்தவராய், பாவிகளின்முன் நிற்கும் விதத்தைப் பாருங்கள். (கருக)

மன்பதைக ளுக்குருகி வான்பதம்வ ரைந்து
துன்புமிடி நிந்தைசுடு சொற்சுடவி முதத்தி
வன்புலையர் முன்பதம்வ ருந்தும்வகை விட்ட
தன்பிதில றக்கொடிதி யாதுபிறி தம்மா.

(இ...ள்). மானிடர்பேரில் மனமிரங்கி, மோட்ச பதவியை விட்டு, துன்பம், வறுமை, நிந்தை, கடூமான வார்த்தை முதலியவற்றை, மனம் வருந்தக் கேட்டுச் சகிக்குமாறு, அவரது திவ்ய பாதங்கள் வருந்த, அக் கொடிய நீசர்கள்முன் கொண்டுவந்து விட்டது அன்பாகுமா? இதைவிடக் கொடிய செய்கை வேறு யாதேனுமுளதோ? (கசூ0)

அன்பிலர்த மக்குரிய ரன்புடைய ராக்கை
என்புமுரி யார்பிறருக் கென்னுமுரை யெம்மான்
தன்புடைய லாதெவரிற் சான்றுபடுமாயின்
முன்புமிலை பின்புமிலை மூதுலகின் மாதோ.

(இ...ள்.) அன்பற்றவர்களே சுயநலம் பாராட்டுகிறவராவர். அன்புடையவரோ வெனில், தன் சரீரத்தையும் எலும்பையும் பிறருக்குக் கொடுக்கும் உரிமையுடையவராவர். இம் மூதுரைக்கிலக்கியமாக, நம்பெருமானுர், மனித அவதாரமெடுத்து அதனை விளக்கிக் காட்டினர். மற்றோருக்கிது பொருந்து மென்பது, இப்பழமையான வுலகத்தில், அவருக்கு முன்னிருந்தவருக்குமில்லை, பின்னிருப்பவருக்கு மில்லை யென்பாம்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு"—(திருக்குறள்). (கசுக)

பாசமென வுன்னலிர்பி ணித்தமைப கைத்த
நீசமனு மக்களைநி னைத்துருகு மன்பின்
நேசமெனும் வல்லியதை நீக்கவச மின்றி
ஈசன்மக னின்றனரோ ரேழையென வோர்மின்

(இ..ள்) அவர் கட்டப்பட்டிருப்பது கயிற்றுவென்று நினையாதீர்கள். தன்னை விரோதித்த ஈன மனிதர்களை நினைத்து மனதுருகும் அன்பென்னுங் கட்டை நீக்கிக்கொள்ளச் சக்தியற்ற வோரேழையைப்போல் தேவபுத்திரன் ஆங்கே நின்றுரென் றறியக்கடவீர். (கசுஉ)

வேறு

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

விண்ணிழி மதிய மென்ன வேதவே தாந்த மூலப்
புண்ணிய மூர்த்தி யந்தப் புல்லிய குழுவி னுப்பண்
நண்ணிய பரிசை யோர்ந்து நலமிலாக் காய்பா சென்னுங்
கண்ணிலான் கருதி நோக்கிக் கனன்றிது கழறுகின்றுன்.

(இ...ள்.) ஆகாயத்திலிருந்து வந்த சந்திரனைப்போல, வேதத்திற்கும் வேதத்தின் முடிவுக்கும் காரணமாயுள்ள புண்ணிய புருஷன் அந்த அற்பர்களின் கூட்டத்தில் வந்திருக்கும் விதத்தை யறிந்து, நற்குணமற்ற காய்பா வென்னும் அறிவீனன் அவரை யுற்றுப்பார்த்துக் கோபித்துப்பின்வருமாறு சொல்லலுற்றுன். (கசுஙு)

எண்டகு வேதநூலின் முறைமையை யிகந்த நேகர்
தொண்டுனக் காகு மாறு துணிந்துசில் லுபதே சங்கள்
விண்டநீ யவற்றை யீண்டு விள்ளுதி தெரிய வென்று
கண்டகன் வினவக் கேட்டுக் கருணையெம் பெருமான் கூறும்.

(இ...ள்). "பெருமையாகப் பாராட்டத்தக்க வேத நூலின் ஒழுங்கை மீறிப், பலருனக்குச் சீஷராகும்படி சில உபதேசங்களைத் துணிந்து செய்த நீ, அவைகளை நான் நன்கு அறியும்படி, இப்போது விளக்கமாகச் சொல்," என்று கொடியவனாகிய காய்பா கேட்கக் கருணாகரக் கடவுள் திருவுளம் பற்றுகிறார். (கசுச)

புனிதவா லயத்தும் வீதிப் புரத்தினும் பொதுமன் றத்தும்
மனிதஜீ வனுக்கீ டேற்றம் வழங்குமெய்ச் சுருதி வாய்மை
நனிதிக ழுபதே சத்தை நவின்றனென் னைவர்க்கு நாடி
இனிதுகேட் டுய்ய வேதும் ரகசியத் திசைத்த தின்றால்.

(இ...ள்). "பரிசுத்த ஆலயத்திலும், தெருப் பக்கங்களிலும், பொது ஸ்தலங்களிலும், மானிட ஆவிக்கு இரட்சிப்பைக் கொடுக்கக்கூடிய சத்திய வேதத்தின் உண்மையான பெருமை பொருந்திய உபதேசத்தை, யாவரும் இனிமையுடன் நாடிக்கேட்டுய்யப் போதித்தேனே யல்லது இரகசியத்தில் யாதுமென்றால் செய்யப்படவில்லை. (கசுரு)

மேவர வென்பா னீவிர் வினவுவ தென்னை யான்சொல்
ஜீவவாக் கதனைக் கேட்டோர் செப்புவர் கேண்மி னென்னுத்
தாவில்சீ ரமலன் சாற்று மளவையிற் றலைவன் கூற்றுக்
காவதிவ் விடையோ வென்ன வழன்றங்கோ ரசடன் சீறி.

(இ...ள்). அப்போதனையை என்னிடம் விரும்பிக் கேட்பதென்ன? நான் உபதேசித்த அந்த ஜீவ வார்த்தைகளைக் கேட்டவர்கள் உமக்கதனை விபரப்படச் சொல்லுவார்கள். அவர்களைக் கேளும் என்று மங்கா சிறப்பை யுடைய கடவுள் சொன்ன உடனே அங்கிருந்த வோரசடன் "பிரதான ஆசாரியனுடைய வினவுக்குக் கொடுக்கக்கூடிய பதில் இதுதானோ?" என்று கோபத்துடன் சொல்லி, (கசுசு)

யாதென வியம்பு கிற்கே னேழைநா வெழும்பி யீசன்
மாதயா ரூப மான மானுவேல் வடிவஞ் சேப்ப
நோதக வறைந்தா னந்தோ நோன்பிலே மிழைத்த பொல்லாப்
பாதகத் துருவம் வாய்ந்த பனைநெடுந் தடக்கை யோச்சி.

(இ...ள்). ஏழையாகிய நான் என் நாவை யெடுத்து என்னென்று சொல்லுவேன். பக்தியற்ற நாமனைவருஞ் செய்த பொல்லாப் பாவமே உருவாக வந்த அக்கொடியோன், பனை மரத்தைப்போன்ற நீண்ட விசாலமான தன் கையை யுயர்த்தி, ஜெகதீசனது சிறந்த கருணையின் உருவாக வந்த, இம்மானுவேலரை அவரது திவ்ய தேகஞ் சிவக்கவும் கன்னம் வலிக்கும்படி யறைந்தான். (கசுஎ)

ஆங்கவன் றுணிந்து கண்ணின் றநீதியாய்ப் போத மின்றி
ஓங்கியுள் ளகங்கா ரத்தா லடித்தது முலப்பில் பெம்மான்
தீங்கணு வாத தூய திருப்படி வத்து நோவு
தாங்கிகின் றருளி நோக்கிச் சமித்துமற் றிதனைச் சாற்றும்.

(இ...ள்). அப்பொழு தவன் மனந்துணிந்து இரக்கமற்று, அநியாய மாய் அறிவின்றி மனதிலோங்குகின்ற, அகந்தையினாலே வரை ஓங்கியடித்த வுடனே, என்று மழியாத எம்பெருமான், முன்னொருக்காலு மிவ்வித நோயைச் சகித்திராத திருமேனியில் அந்நோயைத்தாங்கியருளி, அவனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறார். (கசுஅ)

உள்ளதை யுள்ள வாறே யுரைத்தன னதினி யாயக்
கள்ளவா சகமுண் டேனீ காட்டிடல் வேண்டு மன்றி
எள்ளியிங் கெனைய டித்த னடுநிலைக் கிசையத் தக்க
ஒள்ளிய செயலோ வென்று ருலகெலா முய்ய நின்றார்.

(இ...ள்). உலகெல்லாம் இரட்சிப்படையுமாறு அங்கு (குற்றவாளி போல்) நின்ற நம் பிரான் "உள்ளதை யுள்ளபடி சொன்னேன், அதிலேதா வது கள்ளப் போதகமிருக்கும் பட்சத்தி லதை யெனக்குக் காட்டவேண்டு மேயல்லாது, என்னை யிகழ்ந்து நீ அடித்தது நியாயத்திற்கு ஒத்திருக்கு மறி வுடையோரது செய்கையாகுமோ" என்றார். (கசுகூ)

நடுப்புரி நம்ப னீது நவிற்றலு நாச வஞ்சக்
கடுப்பயில் மனத்த ரெல்லாங் கவன்றினிக் குற்றஞ் சாட்டி
வடுப்படுத் திவனைக் கோறும் வகையெது வென்று தம்மைக்
கெடுப்பதே கரும மாகப் புறம்புபோய்க் கேடு சூழ்ந்தார்.

(இ...ள்). நியாயத்தையே செய்யும் நம்பிரா னிவ்வாறு சொன்ன வுடனே, அழிவை யுண்டாக்க வல்ல வஞ்சமாகிய விஷமுள்ள மனதை யுடைய வரெல்லாமி வர்பேரில் குற்றத்தை சுமத்தி, அவமானப்படுத்திக் கொன்றுவிடும் வகை எதுவென்று கவலையுடையவராய், அதனால் தங்களைக் கெடுத்துக்கொள்ளும் நோக்கமாக வெளியிற்போய் அவருக்கு தீங்கையுண் டாக்குவதையே தங்கள் கருமமாகக் கொண்டாலோசித்தனர். (கஎ0)

கொலைக்களப் படுத்த வல்ல குற்றங்க ளிவன்பா லுண்டென்
றுலைக்கருஞ் சான்று சொல்வா ரெவரென வுசாவுங் காலை
புலைக்குணப் பதிதர் சில்லோர் பலபடப் புகன்ற பொய்ச்சான்
றலைக்கலை யழியு மாபோ லொன்றையொன் றழித்த தன்றே.

(இ...ள்). "கொலைக்களத்திற் கனுப்புவதற்கேற்ற குற்றங்களிவன் பேரிலுண்டென்று, ஒருவராலும் மறுக்கக்கூடாத சாட்சி சொல்லக்கூடிய வர்கள் யார்" என்று கேட்ட தருணத்தில்; ஈன குணத்தை யுடைய பாவி களிற் சிலர், வற்புறுத்திச் சொன்ன பலவாறான பொய் சாட்சிகள், சமுத் திரத்தில் தோன்று மோரலை மற்றோரலையை யழிப்பதுபோல, ஒருவன் சொன்ன சாட்சி மற்றவன் சொன்னதைக் கெடுத்தது. (கஎக)

அந்தவோ லையிலே பொல்லாங் கறிதுமென் றிருவர் பொங்கி
இந்தவா லயத்தை யானே யிடித்தொரு மூன்று நாளில்
விந்தையாய்ச் சமைப்ப னென்ன விளம்பிடக் கேட்டோ மென்றார்
தந்திரத் தவர்கொலைக்குத் தக்கசான் றிதுவன் றென்றார்.

(இ...ள்). அந்த சமயத்தில், இரண்டுபேர் "இவன் செய்த தீமையை நாங்கள் அறிவோம்" என்று கோபத்துடன் எழுந்து, "இந்த தெய்வாலயத்தை நானே இடித்து மூன்று நாட்களில் வேறோராலயமிதனினு மழகாகக் கட்டி முடிப்பேன்" என்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள். தந்திரசாலிகளாகிய மற்றவர்கள் "இவனைக் கொல்லுவதற்கேற்ற சாட்சி இதுவல்ல" என்றார்கள். (௧௱௭௨)

பற்பல வுபதே சத்தைப் பலபடப் பழுது கூறி
அற்புத கிரியை யாவு மபத்தமென் றழிம்பு பேசும்
கற்பித மாய கட்டுக் கரியெலாங் கரிந்த வம்மா
எற்படு பகலைச் சில்லோ ரிரவென்று விளையுங் கொல்லோ.

(இ...ள்). அவர் செய்த பலவிதமான உத்தம வேத உபதேசங்களை வேறுவிதமாக மாற்றிக் குறைகூறி, அவர் நடத்திய அற்புத செய்கைகள் யாவற்றையும் பொய்யென்று புரட்டி இஃது யாவுங் கட்டுக்கதையென மாற்றிய பொய் சாட்சிகளெல்லாம் அழிந்தொழிந்தன பட்டப்பகற் பொழுதை சிலர் இரவென்று கூறுவதால் நியாயத்திற்கது பொருந்துமா? (௧௱௭௩)

சான்றுவே றில்லை யென்னத் தம்முளே கவன்று சங்கத்
தான்றவர் மறுத்து முந்தை யரங்கணைந் தமர வம்மான்
தோன்றலைக் காய்பா சென்னுந் துர்ஜனத் தலைவன் கண்கள்
ஊன்றிநின் றுருத்து நோக்கி யிவையிவை யுரைப்ப தானான்.

(இ...ள்). வேறு சரியான சாட்சி யகப்படவில்லையென்று, அங்குகூடியிருந்தவர்களிற் சிலர் கவலைப்பட்டு, சபைக்குமுன் போய் வெட்கத்துடன் உட்கார, துஷ்ட ஜாதிக்குத் தலைவனான, காய்பா வென்பவன் தன் கண்களையூன்றி தெய்வ குமாரனை யுற்றுப்பார்த்து பின்வருமாறு சாற்றினான். (௧௱௭௪)

வேதியர் பலரு னக்கு விரோதமா யுரைத்த சான்றுங்
கோதற விருவர் வந்து கூறிய வாய்மைக் கூற்றும்
ஈதிது வாக நீசொல் லெதிர்மொழி யேது மின்றோ
ஓதுதி யுளவே லென்று னுரைத்தில ரமல னென்றும்.

(இ...ள்). "இங்குள்ள ஆசாரியர்களில் அநேகர் உனக்கு விரோதமாகச் சொன்ன சாட்சியும், வேறு இரண்டுபேர் வந்து சொன்ன குற்றமற்ற உண்மையான வார்த்தைகளும், இவ்வாறிருக்க, இதற்கு நீ சொல்லவேண்டிய மறுமொழி ஏதாவதுண்டா இருந்தால் சொல்" என்று காய்பா கேட்க, அதற்கு எம்பெருமான் என்றுஞ் சொல்லாதிருந்தனர். (௧௱௭௫)

பின்னருஞ் சினந்து மேலாம் பெருந்தகை யாய வெம்மான்
தன்னொரு நாமத் தாணை சாற்றுதி யுண்மை நீயப்
பன்னரும ஜீவனுள்ள பராபரன் புதல்வனான
உன்னருங் கிறிஸ்து வோவென் றுசாவினன் கபட மாக.

(இ...ள்). மறுபடியும் அவன் கோபத்துடன், மேன்மைதங்கிய ஒப்பற்ற அரசனாகிய கடவுளுடைய நாமத்திலே ஆணையிட்டு, "உண்மையாகவே நீ வர்ணிக்க வியலாத ஜீவனுள்ள ஜெகதீசனின் புத்திரனும் நினைத்தற்கரிய கிறிஸ்துவும் நீதானோ சொல்" என்று கபடமாகக் கேட்டான். (கஎசு)

தூயநல் லுரையுந் தேவ தோற்றமுஞ் சுகிர்த மாண்பும்
நாயினுங் கடைப்பட் டேமை நயந்துபா ராட்டு மன்பின்
நேயமு மெதிரி னின்று நிகழ்த்துசான் றமையா தென்ன
மீயுய ராணை கூறி விசாரிக்கு முறைமை யென்னோ.

(இ...ள்). பரிசுத்த நல்வாக்கும், தேவ சாயலும், சிறந்த அழகும் நாயைவிடக் கேவலமாக விருக்கும் நம்மை, நேசித்துப் பாராட்டும ன்புடைய கடவுளின் எதிர்நின்று சொல்லப்படும் சாட்சி போதாதென்று மீண்டும் பெரியதோராணையிட்டுக் கேட்டுங் காரணமென்ன?

(இஃது ஆக்கியோன் கூற்று) (கஎஎ)

கண்ணுளார் கண்டுங் காணார் காதுளார் கேட்டுங் கேளார்
எண்ணிரு தயத்தி னாலு முணர்ந்திடா ரிவர்மற் றென்ற
புண்ணிய வசனம் யாண்டும் பொய்க்குமோ வருளொன் றின்றேன்
மண்ணுளார் பொறியு மந்தக் காரணமு மண்ணே யன்றோ.

(இ...ள்). "கண்ணுள்ளவர்கள் கண்டுங் காணாதவர்களாவார்கள், காதுள்ளவர்கள் கேட்டுங் கேளாதவர்களாவார்கள், சகலத்தையும் நினைக்கும் மனதினாலு மிதனை கிரகிக்கமாட்டார்கள்" என்னுஞ் சத்திய வசனம் எப்பொழுதாவது பொய்யாகுமோ? தெய்வகிருபை யில்லாவிடில் பூலோகத்திலுள்ளவர்களது ஐம்புலன்களும் அந்தகாரணமும் மண்ணாகு மல்லவோ? (கஎஅ)

பொறிபுல னொருங்க நோற்றுப் புதுமைசெய் புலவ ரேனும்
வெறுமையிற் றிகழ்வ ராயில் வெறுத்தவ மதிக்கு மொல்லை
சிறுமைதீர்ந் துயர்வு காணிற் சேவடித் தொழும்பு செய்யும்
எறிதிரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ.

(இ...ள்). மனம் வாக்கு காயங்களினால் (மனம் வேறொன்றை நினைக்காமலும், கண் வேறு விஷயங்களைப் பார்த்துக்கொண்டிராமலும், காது அயற் சங்கதிகளைக் கேட்டுக்கொண்டிராமலும், வாய் வேறு விஷயங்களைப் பேசாமலும்) புலனானது அவ்வப் பொறிகளுடன் ஐக்கியப்பட்டுக் கடவுளை தியானிக்குந் தன்மையை யுடையவர்கள், அற்புதங்கள் செய்யவல்ல பக்தர்கள், எளிய நிலைமையிலுள்ளவர்கள்போற் றோன்றினால், உலகத்தார் அவர்களை அவமதித்து எளனம் பண்ணுவார்கள். இவ்வித மிகழப்பட்ட அவர்கள் தம் மேழைமை நிலைமையை விட்டு (ஆடை யாபரணங்களா லலங்கரித்து) கையிலுண்டானவர்களைப்போல் காணப்பட்டால், உலகத்தார் அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்குவார்கள். அலைகளை வீசுகின்ற கடல் சூழ்ந்த உலகமானது இத்தகைய கேவலத்தன்மையை யுடையதே. (கஎகூ)

இறைவன்மே லாணை மற்றீ தியம்புகென் றிசைத்த மாற்றம்
மறைமுதல் கேட்டுத் தெய்வ மைந்தனுங் கிறிஸ்து நானே
தறையிலித் தகைய னேனுந் தாதையின் வலப்பா கத்தும்
முறைபுரி நடுநாட் கொண்மூ முற்றத்தும் விளங்கக் காண்பீர்.

(இ...ள்), "கடவுள்பேரில் ஆணையிட்டுச் சொல்" என்று சொன்ன சொல்லை, வேதத்திற்குக் காரணராகிய நம்பெருமான் கேட்டு, "தெய்வ குமாரனாகிய கிறிஸ்து நானே. பூமியில் இத்தன்மையுடையவனாக இருந்தாலும், நியாயத்தீர்ப்பு நாளில், பரம பிதாவின் வலது பக்கத்திலும் மேகத்தால் போடப்பட்ட பந்தலிலும் நானிருப்பதைக் காண்பீர்கள்" என்றார். (கஅ0)

ஒளிப்பற நியாய முங்கட் குணர்த்தினு முணரீர் யாவும்
வெளிப்படை யாய போதும் விசுவசித் திடுவீ ரல்லீர்
அளிப்படா மனத்தீ ரென்னு வறத்துறை யமுது மல்கித்
துளிப்படு குமுதச் செவ்வாய்த் துவரிதழ் விண்டு சொன்னார்.

(இ...ள்). அன்பற்ற மனதையுடையவர்களே, "உங்களுக்கு நியாயத்தை நான் மறைக்காமல் போதித்தாலும், அதை உணரமாட்டீர்கள். சகலமும் தெளிவாகவிருந்த போதிலும் அவைகளை விசுவாசிக்கவு மாட்டீர்கள். இது யாதுக்கோ?" என்று தர்ம மார்க்கமாம். தேவாமிர்தம் நிறைந்து வழிந்துசொட்டு மல்லிப் புஷ்பத்தை யொத்த சிவந்த வாயின் பவளம் போன்ற தந்திருவுதட்டைத் திறந்தருளினார். (கஅக)

வன்மனக் காய்பா சோடு சூழுற்று மருங்கு தொக்க
கன்மனத் தவரு மையன் கழறிய செஞ்சொற் றேரார்
துன்மதி யாகத் தேவ தூஷணஞ் சொன்னா யென்னப்
புன்மொழி பலவா றுகப் புகன்றனர் வெகுளி பொங்கி.

(இ...ள்). கொடிய மனதையுடைய காய்பாவின் பக்கத்தில் சூழ்ந்து நெருங்கியிருந்த, கடின மனதை யுடையவர்கள், நமது ஐயன் வெளிப்படையாகச் சொன்ன போதனையை அறியாதவர்களாய் "தேவதூஷணஞ் சொன்னாய்" என்று கெட்ட எண்ணத்தோடு பலவாறாக மிக்கக் கோபத்துடன் கொடூரமான வார்த்தைகளா லவரை வைதார்கள். (கஅஉ)

எம்பிரா னுரைச்சஞ் சீவி யிருந்தவப் பதிதர்க் கெல்லாம்
வெம்புதீ விடம்போ லாகச் செவித்தொளை வெதும்பிற் றென்னில்
நம்பினோர்க் கெல்லாம் ஜீவ வாசனை நல்கு நம்பா
வம்பருக் கென்று நீங்கா மரணவா சனையா மன்றே.

(இ...ள்). எம்பெருமானது, மாண்டவரை யுயிர்ப்பிக்குஞ் சஞ்சீவி போன்ற, வார்த்தையானது, அங்கிருந்த பாவிகட்கெல்லாம் வெப்பமாகிய நெருப்பை யொத்த விஷம்போல் அவர்கள் காதின் துவாரத்தில் விழுந்ததென்றால், அவரை நம்பினவர்களுக்கெல்லாம், அது ஜீவ வாசனையை யொத்ததாகும். நம்பாத துஷ்டருக்கு அது என்றும் நீங்காத (நரகத்திற்குரிய) மரண வாசனை யாகுமல்லவா? (கஅங)

காயிபா னென்னும் பொல்லாக் கடினவன் னெஞ்சன் வஞ்ச
மாயமூ டியமே லங்கி வல்லையிற் கிழித்துத் துக்கம்
மேயவன் போல நின்று வேறுசான் றினிவேண் டுங்கொல்
நீயிரே யிவன்வாய் சொற்ற நிமலதூ ஷணங்கேட் டீரால்.

(இ..ள்). காய்பா வென்னும் பொல்லாக் கடின சிந்தையை யுடைய வன், தன் வஞ்சகத்தையும் மாயத்தையும் மூடியுள்ள மேல் வஸ்திரத்தைப் பலத்தோடு கிழித்து, துக்கங்கொண்டவன்போல நின்று "வேறு சாட்சி வேண்டுமோ? இவன் தன் வாயாற் சொன்ன தேவதூஷணத்தை நீங்கள் கேட்டீர்கள் அல்லவா" என்றான். (கஅச)

மற்றினி யுரைப்ப தென்னே மதிவலீ ரிதனை யொத்த
குற்றம்வே றுளது கொல்லோ குறித்திடிற் கூறிற் றெல்லாம்
எற்றெனக் கருது கின்றீ ரேற்றதண் டனைதான் யாது
தெற்றெனப் பகர்மி னென்றான் றீவினை திருத்த நின்றான்.

(இ...ள்). "நான் சொல்லவேண்டியது வேறென்ன? புத்தியுள் ளவர்களே! யோசிக்குங்கால் இதைப்போல் குற்றம் வேறுளதோ? அவன் சொன்னதெல்லாம் யாதென்று நினைக்கிறீர்கள்? இவனுக்குக் கொடுக்கக் கூடிய தண்டனைதா னென்ன? தெளிவாகச் சொல்லுங்கள்" என்று கெடுதி செய்வதற்கென்றே வுரங் கொண்டிருந்த காய்பா கூறினான். (கஅரு)

நன்றிலா னுரைத்த மாற்ற நடுவிலாச் சங்க மேய
புன்றொழில் யூதர் கேட்டுப் பொருக்கென விவனை யின்னே
கொன்றுயிர் களைவ தல்லாற் குறிப்பிடு தண்டம் வேறொன்
றின்றென வுரக்கக் கூவி யிரைந்தன ரிகலி மாதோ.

(இ...ள்). நற்குணமற்ற காய்பா வென்பவன் சொன்னவைகளை, நீதியற்ற சங்கத்திலுள்ள கேவலமாந் தொழிலுக்காளான யூதர்கள் கேட்டு, "சீக்கிரத்திலிவனை யிப்பொழுதே கொன்று, இவனுயிரை நீக்குவதல்லா மல் குறிப்பிட்டுச் சொல்ல வேறு தண்டனை யாதுமில்லை," எனக் கோபா வேசத்துடன் அவரை விரோதித்தவர்களாய் உரக்கக் கூச்சலிட்டார்கள். (கஅசு)

உலப்பிலா வாதி மூலத் தொருபரம் பொருளென் றுன்னுப்
புலைப்படு மனத்த ரேனும் புரையிலா வொருவற் பற்றிக்
கொலைப்படுத் துகவென் றிட்ட கூக்குரல் குறித்து நோக்கில்
அலைப்புநீ ருடுத்த வையத் தழிம்பினுக் கவதி யுண்டோ.

(இ...ள்) முடிவில்லாத ஆதி மூலமாம் ஏக பரனென்றும் பாராமல், தீய மனதை யுடையவர்களெல்லாம், குற்றமற்ற ஒருவரைப் பிடித்துக் கொன்றுவிடுங்கள் என்று கூக்குரலிட்டதை யோசித்துப் பார்த்தால், சப் திக்கும் அலையையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்திலுள்ள அக்கிரமத் திற்கோர் அளவுமுண்டோ என்பதாக முடியும். (கஅஎ)

எண்ணிய வெண்ணம் வாய்த்த தென்பதோ ரேம்பல் விஞ்சிக்
கண்ணிலாத் தலைவ னேகக் காவல்செய் திருந்த கள்வர்
புண்ணிய மூர்த்தி தன்னைப் புறக்கணித் தகந்தை யோடும்
நண்ணியா கடியஞ் செய்ய நாடினர் நிந்தை பேசி.

(இ...ள்). தன் மனதில் நினைத்த வெண்ணம், கைகூடிற்றென்ற சந்தோஷம் அதிகரிக்க, காருண்யமற்ற (காய்பா வென்னும்) தலைவன், அவ்விடத்தை விட்டுப்போக, அங்கு காவல் காத்துக்கொண்டிருந்த பாதகர்கள் நம் புண்ணியமூர்த்தியை அவட்சியஞ் செய்தவர்களாய் இறுமாப்புடன், அவர் முன்னின்று தூஷித்துப் பரிகாசஞ் செய்ய வாரம்பித்தார்கள். (கஅஅ)

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை யென்னுங் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மா னிருதயத் தூன்ற வூன்ற
வேதனை யுழந்து சிந்தை வெந்துபுண் பட்டா ரல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

(இ...ள்). அப்பாதகர்கள், ஒன்றாய்க்கூடி, பரிகசித்த வார்த்தையென்னும் நெருப்பு, மாசற்ற கருணாகரக் கடவுளது மனதில் படப்பட, வேதனைப்பட்டு மனம் நொந்து வருத்தங்கொண்டாரே யல்லாமல், இனி நடக்க வேண்டியவைகளை நினைத்தவராய், அவர்கள் மனம் வருந்தும்படி கோபித்து ஒரு வார்த்தையேனுஞ் சொன்னாரில்லை. (கஅக)

மறுமையு மிம்மை தானு நோக்கிலா மடமை பூண்ட
குறுமையோ ரமலன் றூய குணத்தைவிட் டுணையெண் ணாது
வெறுமையை நினைத்துத் துன்பம் விளைத்தனர் மேன்மே லாகப்
பொறுமைகண் டெள்ள லிந்தப் பூதலத் தியற்கை யன்றோ.

(இ...ள்). இவ்வுலக வாழ்க்கையும், அவ்வுலக வருளையுங் கவனியாது, மந்த புத்தியுடைய வீனர்கள், நம்பெருமானது பரிசுத்த குணத்தை எள்ளளவும் மெண்ணாமல், வீணான காரியத்தை நினைத்து, அவருக்குத் துன்பத்தை அதிகப்படுத்தினார்கள். ஒருவனது பொறுமையைக் கண்டு அவனை அதிகமாக நிந்திப்பது இவ்வுலகத்தின் இயல்பல்லவோ? (கக௦)

கறுத்திடி னுலக மெல்லாங் கவிழ்ந்தழிந் தொழியு மேனும்
பொறுத்தன ரிருந்தார் தாஞ்சொல் புத்துரைக் கொருசான் றாக
ஒறுத்திடு மதுகை மிக்க வுரனுடை யாள னுள்ளம் [கோர்.
பொறுத்திடும் பொறையை யன்றோ பொறையென்பர் புலமை மிக்

(இ...ள்). அவர் கோபங்கொண்டால் உலகமெல்லாம் தலை கீழாகக் கவிழ்ந் தழிந்துபோகும், அப்படியிருந்தும் தான் செய்த புதிய வுபதேசத்திற்குத் தானே ஒரு முன்மாதிரி காட்டும்பொருட்டுப் பொறுமையாக

*விருந்தார். அவர்களைத் தண்டிக்கத்தக்க சக்தி அவரிடமிருந்தும், வல்லமையுள்ள அவர் மனம், இத்துன்பங்களை யெல்லாஞ் சகித்திடுஞ் சாந்தத்தையல்லவோ, அறிவின் மிக்கார் பொறுமை யென்பார்கள்.* (கககக)

*திருந்திய செவ்வி வாய்ந்த திருமுகத் துமிழ்ந்தார் சில்லோர்*
*வருந்துற வடித்தார் சில்லோர் மலர்த்திரு வதனஞ் சேப்பக்*
*கருந்தடங் கண்ணைப் பொத்திக் குட்டினர் சிலர்கை யோங்கிப்*
*பெருந்தகாய் யாவ ரென்னப் பேசுகென் றிகழ்ந்தார் சில்லோர்.*

(இ...ள்). *திருத்தமான அழகு வாய்ந்த அவர் திருமுகத்தில் சிலர் துப்பினார்கள். வலிக்கும்படி சிலர் அடித்தார்கள். அதனால் அவரது மலர்ந்த திருமுகம் தாமரைப்பூ நிறம் போன்று சிவந்து போனது. அவரது கருணையான பெருமை பொருந்திய கண்களை மூடி ஓங்கித்தலையில் குட்டினார்கள். "மாட்சிமை மிகுங் குணத்தை யுடையாய் உன்னைக் குட்டினது யார் என்று சொல்லும் பார்ப்போம்" என்று சிலர் பரிகாசமுஞ் செய்தார்கள்.* (கககஉ)

## (பேதுரு மறுதலித்தல்.)

*விடியுமட் டிறைவன் றூய மேனிநொந் தலசி யுள்ளந்*
*துடிதுடித் திவ்வா றுகத் துயருழந் திடையுங் காலை*
*கடிமனை முன்றி னின்று கன்மலை யெனப்பேர் பெற்ற*
*அடியவன் குளிருக் காற்று தனன்முகத் தமர்ந்தா னிப்பால்.*

(இ...ள்). *பொழுது விடியும்வரை நம் பெருமானது பரிசுத்த சரீரம், நொந்து தளர்ந்து மனம் பதை பதைத்து துக்கத்தால் வாடுஞ் சமயத்தில், "பாறை" யென்னும் பேர் பெற்ற சீஷன், (பேதுரு) இராட்சா பெருமானை யடைத்து காவற் செய்யப்பட்டுள்ள அரண்மனை வாசலின்முன் குளிர் தாங்க முடியாமல், நெருப்பின் பக்கத்தி லுட்கார்ந்திருந்தான்.* (கககங)

*ஆங்கவன் றன்னைக் காணு வயலுளார் யாவ னீயத்*
*தேங்கமழ் சோலை வாயிற் சேசுவோ டிருந்தா யன்னோன்*
*பாங்குறுஞ் சீட ருக்குள் ளொருவனீ போலும் பார்க்கில்*
*ஈங்குநின் னுரையே சாக்ஷி யியம்புகின் றதுமற் றென்றார்.*

(இ...ள்). *அச்சமயத்திற் பக்கத்திலுள்ளவர்கள் அவனைப் பார்த்து "நீ யார்? வாசனை வீசும் (கெத்ஸமனே) தோட்டத்தில் நீ இயேசு வோடிருந்தாய். யோசிக்குங்கால் அந்த இயேசுவின் போதனைக்குட்பட்ட சீஷர்களில் நீயுமொருவன்போற் றோன்றுகிறது. இங்கு உனது பேச்சே அதற்கிசைய சாட்சியுஞ் சொல்லுகிறது. அப்படியில்லையாயின் உன் விர்த்தாந்தமென்ன" வென்றார்கள்.* (கககச)

*ஒருமுறை போல முக்கா லுசாவலு மச்சத் தாலே*
*திருமுறை யறிந்த சீடன் சிந்தனை கலங்கி யந்தோ*
*குருமுறை நிறுத்த தூய குமாரனை யறியே னென்று*
*வருமுறை தோரான் முக்கான் மறுத்தனன் மருண்டு மன்னோ.*

(இ...ள்). ஒரு தரத்தைப்போல் மூன்றுதா முறுத்திக் கேட்டவுடனே, வேத நெறியை யறிந்த வச்சீஷன், பயத்தால் மனங்கலங்கி, குருவாகிய அவர் (நீ மும்முறையென்னை மறுதலிப்பாய் என்று முன்னரே சொன்ன) வார்த்தை ஸ்திரப்படும்படி இனி வருங்காரியத்தை யுணராதவனாகத் திகைத்து பரிசுத்தக் குமாரக்கடவுளைத் தனக்குத் தெரியா தென்று பயத்துடன் மூன்று தரமும் மறுதலித்தான். (க௱ரு)

வேறு

மன்னுங் கருணைப் பெருநிதிய வைப்பை யறியே னெனமறுத்துக்
கொன்னே மறங்கூர் பொய்யாணை கூறிக் கடிய கொடுமொழியால்
அன்னோ தன்னைச் சபித்திடவு மமைந்தா னென்னில் யாவரினித்
துன்னு மிடருக் கலசாமே யுண்மை மொழியுந் துணிவுள்ளார்.

(இ...ள்) அழிவில்லா கருணையாம் செல்வத்திற்கு இருப்பிடமாகிய, நம்பெருமானை "அறியேன்" என்று மறுதலித்து பாவமாகிய ஆணையை வீணே யிட்டு, ஐயோ! மிகக் கொடிய வார்த்தையால் தன்னை சபிக்கவு மேற்பட்டானேயானால், இனி யார் அணுகி வரும் துன்பத்திற்குப் பயப்படாமல் உண்மையைப் பேசுந் தைரியமுடையவ ராவர்? (க௱சு)

முக்காற் கலங்கி மறுதலித்து முடிய விரண்டா முறைசேவல்
தக்கோ யிதுவோ விசுவாசச் சமைவு மன்புந் தைரியமும்
எக் காணிங்கு மிவ்வசை யென் றிழித்துவிளிக்கு மியல்பேபோற்
கொக்கோ வென்னக் கொக்கரித்துக் கூவிற் றமலன் கூறியபோல்.

(இ...ள்). மனக் கலக்கத்துடன், மூன்று தரமும் மறுதலித்து முடிந்தபின், சேவலானது இரண்டாந்தரமாகப் (பேதுருவைப் பார்த்து) "அறிஞனே, நீ விசுவாசமுடையவனாகவும், அன்பும் தைரியமுடையனாகவுமிருப்பது இதுதானோ? இப்பழி எப்பொழு துன்னைவிட்டு நீங்கும்" என்று இழித்திடித்துக் கூறுவதுபோல நம்பெருமான் கூறியவண்ணம், கொக்கரக்கோ வென்று கொக்கரித்துக் கூவிற்று. (க௱எ)

ஜீவ நெறியை யறமயக்கி ஜெகத்தை யகத்துப் புடைவளைந்த
பாவ நிசியை யிருஞ்சிறகாற் பறக்க வடித்துப் பகைத் தோட்டிப்
பூவ லயத்துக் கிரக்ஷணியம் பொலிய வருபுண் ணியப்பகலை
வாவென் றுரக்க விளிப்பது போன் றெழுந்த மதவா ரணத்துழனி.

(இ...ள்). சன்மார்க்கத்தை முழுது மழித்து, பூலோகத்தைத் தன் வசப்படுத்தியுள்ள பாவம் என்னும் இருள் பறந்துபோகும்படி அதாவது இரண்டு இறக்கைகளாலு மடித்து வீரோதித்து ஒட்டிவிட்டு, பூலோகத்திற்கு இரட்சிப்பை யுண்டுபண்ண வரும் புண்ணியமாகிய பகற்பொழுதை "வா" வென்று (தன் தலையை நீட்டி) உரக்கக் கூப்பிடுவதுபோல் அப்பெரிய சேவலின் சத்தம் புறப்பட்டது. (க௱அ)

வேறு

கலி விருத்தம்

கோழி கூவிய கூக்குரல் செவிகுறு குதலுந்
தாழி மத்துறு தயிரென வுடைந்துளந் தளர்வுற்
றூழி நாயக னுரைத்தமை யுள்ளுளே யுள்ளிப்
பாழி னீத்தனன் ஜீவகன் மையையெனப் பரிந்தான்.

(இ...ள்). கோழி கூவின சத்தமானது பேதுருவின் காதில் பட்ட வுடனே, சட்டியிலே மத்தால் கடையப்படுந் தயிரைப்போல் மனமுடைந்து சோர்வடைந்து, முடிவுகாலத்தே தோன்றும் பகவான் முன்னறிவித்ததை மனதில் நினைத்து, "நான் எடுத்த ஜென்மத்தின் பலனை வியர்த்தமாக்கிக் கொண்டேனே" என்று சஞ்சலப்பட்டான். (௧௯௯)

அயில்கொள் வேலென வுளத்திடைக் குளித்தசெதம் மையன்
துயிலி லாதெமைப் புரந்திடும் விழிக்கடை தொண்டன்
பயிலு ளக்கரி கடிந்துபுண் படுத்தது பதைத்து
வெயிலி டைப்படு கிருமியிற் றுடித்தனன் வெதும்பி.

(இ...ள்). கூர்மையான அம்பைப்போல் (இவ்வெண்ணம்) அவன் மனதில் பாய்ந்தது. தூங்காமல் எங்களைக் காக்குங் கருணையாம் கண்களை யுடைய நமதாண்டவரின் சீஷனது மனச்சாட்சி, அவனை வருத்தி வாதிக்க வெய்யிலி லகப்பட்டப் புழுவைவிட அதிகமாக வாடித் துடித்தான். (௨00)

இனைய தன்மைய னாகியீட் டியபிழை யெண்ணித்
தனைவெ றுத்துரை யிடற்கரு மெய்மனத் தாபம்
நினைவி லோங்கவு நிருமல னருட்டிற நினைந்தம்
மனையி னோர்சிறை வறிதுபோய் மனங்கசந் தழுதான்.

(இ...ள்), இக்கதியை யடைந்த பின்னர், தான் செய்த குற்றத்தை யுணர்ந்து, தன்னைச் சினந்து அடக்கமுடியாத மெய் மனஸ்தாபம் தன் மனதில் அதி கரிக்கவும், எம்பெருமானது கிருபா கடாட்சத்தை நினைத்து, அந்த அரண்மனை யிலொரு பக்கத்தில் வீணே போய் நின்று மனமாழ்கி யழுதான். (௨0௧)

தேவ வாவியி னருட்செயல் சிறக்கின்ற செய்ய
ஜீவன் முத்தரோ திறம்பிய பிழையினைத் தேறித்
தாவ முற்றுளந் திரும்பிவை திகந்தலைப் படுவர்
பாவ காரியர் லௌகிக வளற்றிலே பதிவார்.

(இ...ள்). பரம ஞானிகள், தாங்கள் தவறிச் செய்த பாவமான குற்றத்தை, பின்னருணர்ந்து, வியாகூலமுற்று, மனந் திரும்பி தேவாவியின் அருள் நிறைந்த திருப்பணிகளைச் செய்ய வைதீக வழிக்கு வருவார்கள். பாவத் தொழிலாளர்கள் சிற்றின்பச் சேற்றிலே மூழ்கிக் கரையேற வழி காணாது தவிப்பார்கள். (௨0௨)

அவல மேயதம் மன்பர்கா லடிநிலை பிசகித்
தவறிப் பாவவெஞ் சேற்றிடை வீழினுந் தாங்கிக்
கவலை யோடெடுத் தாதரம் புரிவர்தாய் கடுப்பப்
புவன ரக்ஷணை சமைத்தநம் புண்ணிய மூர்த்தி.

(இ...ள்). உலகத்திற்கு இரட்சிப்பருளிய புண்ணியமூர்த்தியாகிய நம்பெருமான், பலவீனமுள்ள தன் சீஷர்கள், தங்கள் காலடியின் நிலை மாறித் தவறிப்போய் பாவமாகிய கொடிய சேற்றிலே விழுந்தாலும், அவர் களைக் கவலையோடு தூக்கி யெடுத்துத் தாயைப்போல வவர்களை யாதரித் தருள் புரிவார். (உ0௩)

அழுது நைந்துபே துருதிரு வருட்டுணை யடைந்து
தொழுத வாறிது சுருதிமா முதல்வனைத் துணிந்து
முழுதுங் கொல்வமென் றொருப்படு மனத்தராய் முடுகிப்
பழுது மல்கிய சூழ்ச்சியி னமைந்தனர் பதிதர்.

(இ...ள்). பேதுரு அழுது மனம் வருந்திக் கடவுளின் திருவருட் டுணையை யடைந்து, அவரைத் தொழுது கரையேறின விதமிவ்வாறிருக்க, வேதத்திற் காதாரமான கடவுளைக் கொன்று விடுவோ மென்று அப்பாவி கள் முழு தைரியத்துடன், ஒரே மனதுடையவர்களாய் அவரை யணுகிக் குற்றம் நிறைந்த வாலோசனையி லாழ்ந்தி யிருந்தார்கள். (உ0௪)

(பிலாத்து முன்னிலை.)

கலி விருத்தம்.

எண்ண மிட்டவர் பொந்தியுப் பிலாத்தெனு மிறைமுன்
அண்ண லைத்தனி நிறுவவு மாக்கினைத் தீர்ப்புப்
பண்ண வும்மென நிண்ணயம் பண்ணினர் பகைகொண்
டொண்ணு மோவறுங் கூவலுக் குததியை யொடுக்க.

(இ...ள்). இவ்வாறு எண்ணங்கொண்டவர்கள், அவரைப்பகைத்து, பொந்தியு பிலாத்து என்னும் அரசன்முன் தனியாக அவரை நிறுத்தவும் அவனைக் கொண்டவருக்கு (மரண) ஆக்கினைத் தீர்ப்புச் செய்துவைக்கவும் வேண்டுமென நிச்சயித்தார்கள். ஒரு கிணறு தனக்குள் சமுத்திரத்தை யடக்கிக்கொள்ள வியலுமோ? (உ0௫)

முடிந்த தன்றிரா முன்னவன் முகமறைத் தோங்கிப்
படிந்த பாவமா நடுச்சுவ ரடியொடு பாழ்பட்
டிடிந்து போகந ராத்தும ஜீவருக் கிரக்ஷை
விடிந்த தாமென விடிந்தது நலந்தரு வெள்ளி.

(இ...ள்). அன்றிரவு கழிந்தது, கடவுளது சந்நிதானத்தைநமக்கு மறைக்குமாறு ஓங்கி இடையில் படர்ந்த பாவமாகிய சுவர், அடியோ டிடிந்து பாழாய்ப் போக அதனால் மானிடருக்கு இரட்சிப்புண்டானது போல, வெள்ளி யென்னும் நன்மை தரக்கூடிய நட்சத்திர முதயமாயிற்று. (உ0௬)

துரிய மாமுதல் ஜீவருக் கிரக்ஷணை தொகுத்து
விரிய வைத்தபுண் ணியம்பொலி தசும்பென விளங்கிப்
பெரிய வெள்ளியென் றுரைபெய ருலகெலாம் பிறங்கச்
சூரிய தாயுவப் பகற்பொழு தோங்கிய துவரி.

(இ...ள்). முதன்மையான கடவுள் மனிதர்கட்கு இரட்சிப்பை யுண்டாக்கு நோக்கத்துடன் பரவச் செய்த புண்ணியம் நிறைந்த பொற் குடத்தைப்போல் விளங்கி சகலரும் பெரிய வெள்ளி யென்று சொல்லக்கூடிய சூரியன் சமுத்திரத்திலிருந்து தோன்றிற்று, எனவே ஒளிவீசத் தகுந்த பகற்பொழுது புலர்ந்தது. (உ0எ)

மதலை யாகிய திரித்துவத் தொருத்துவர் மநுவாய்
முதுத ராதலத் திரக்ஷணை சமைத்திடு முறைமை
புதுமை யீண்டது காண்டுமென் றுவவிற் போந்து
கதுமெ னக்குணக் குன்றின்மீ திவர்ந்தனன் கதிரோன்.

(இ...ள்). திருத்துவத்தில் ஒருவராகிய குமாரக்கடவுள், மனித அவதார மெடுத்து பழமையான இவ்வுலகத்திற்கு இரட்சிப்பளிக்கும் விதத்தின் அற்புதத்தை இப்பொழுதே போய் பார்ப்போமென்ற ஆசையால் சூரியன் கிழக்கு மலையில் விரைவாகத் தோன்றினான். (உ0அ)

துதித்து யாவருந் தொழத்தகு நீதசூ ரியனை
மதித்தி டாதபுன் மாக்கண்மேல் வஞ்சினந் திருகி
விதிர்த்து மெய்யெலாஞ் சிவப்புற நெடுங்கைவாள் வீசிக்
கதித்தெழுந்தன னெனக் கதிர்கனன் றெழுந்தான்.

(இ...ள்). யாவருந் துதித்துப் போற்றத்தகும் நீதி சூரியனாகிய கடவுளைச் சற்று மதியாத (யூதர்களாகிய) அறிவீனர்கள் மேலுள்ள கோபத்தால், மாறுபட்டசைந்து சரீரஞ் சிவக்க, நீண்ட கைவாளை வீசி கோபத்துடன் வருகிறவனைப்போல், தன் கிரணங்களை நீட்டி சூரியன் உதயமானான். (உ0கூ)

அருட்ப டுங்கிறிஸ் தகச்சம யத்தொளி யலர
இருட்ப டும்பல புறச்சம யங்களு மிடையே
தெருட்ப டுஞ்சில கொள்கையுஞ் சிதைந்தொழிந் திடல்போல்
மருட்ப டும்நிசி யோடுவான் மீன்கண மறைந்த.

(இ...ள்). ஜெகதீசனது அருள் நிறைந்த கிறிஸ்து மார்க்கத்தின் பிரகாசம் வீசினவுடன், இருள் நிறைந்த பல்வேறு மார்க்கங்களும், இதற்கிடையிலுண்டாகிய பல்வேறு கொள்கைகளும் கெட்டு நாசமானதுபோல் (சூரியோதயமானதும்) இருள் நிறைந்த இரவோடு வானத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களு மறைந்து போயின. (உக0)

விஞ்சொ லித்திரள் விளைந்தன விழிக்கத வடைத்துத்
துஞ்சி யோருணர்ந் தெழுந்தனர் முதல்வனைத் தொழுது
வஞ்ச மின்மனை மக்களோ டளவளாய் மகிழ்ந்து
செஞ்செ வேதொழில் தொடங்கின ரறநெறி திறம்பார்.

(இ...ள்). (அதிகாலையில் பகலுக்குரிய) சப்தம் உண்டாயின. கண்களை மூடித் தூங்கினவர்கள் விழித்தெழுந்தார்கள். கடவுளைப் பிரார்த்தனைச்செய்துகொண்டு கபடமில்லாமல் மனைவி மக்களோடு கலந்து சந்தோஷமாய் வாழும் நீதி தவறாதவர்கள் தத்தம் வேலையைச் செம்மையாகச் செய்ய வாரம்பித்தார்கள். (உகக)

ஜீவ நாசமின் றுகமேய்த் திருவுளந் தெரித்த
பாவ நாசரைப் பிணித்ததும் படுகொலைத் தீர்ப்பு
மேவ நாசமோ சனைசிலர் விளைத்ததும் வெருக்கச்
சாவ நாசம்வந் துற்றதென் றணிநகர் சலித்த.

(இ...ள்). ஜீவனுக் கழிவில்லாதிருக்கும்படி ஜெகதீசனை உலகத்திற்கு வெளிப்படுத்தின பாவ நாசராகிய எம்பெருமானைக் கட்டினதாலும், கொடிய கொலைத தீர்ப்படையும்படி சிலர் துற்போதனை செய்ததினாலும், பொழுது விடிந்த உடனே, அழகுள்ள (எருசலேம்) நகரத்தார் தாங்கள் அழிந்து போகக்கூடிய காலஞ் சமீபித்து விட்டதென்று மனஞ் சோர்ந்தார்கள். (உகஉ)

ஆய் காலையிற் பாதகந் திரண்டுரு வமைந்த
பேய ரோர்சிலர் நம்பனை யிறுகுறப் பிணித்து
நாயெ னுக்குரைத் தணிநகர் வீதியி னடத்திப்
போயி னார்பதைத் தெவருங்கண் புதைத்தழு திரங்க.

(இ...ள்). அச்சமயத்தில், பாவமே கூடி மனிதரூபமாக வந்த பேய்க்குச் சமமான சிலர், எம்பிரானை இறுகக் கட்டி நாய்போலும் (பல துன்மொழிகள் கூறி), கூச்சலிட்டுக் கொண்டு, அழகு பொருந்திய எருசலேம் பட்டணத்தின் வீதியிலுள்ள யாவரும், தத்தங் கண்களை மூடி, அழுது மனமிரங்கும்படியாக அவ்வளவு பரிதாப நிலையி லவரை நடத்திக்கொண்டு போனார்கள். (உகங)

ஐய னைக்கொடு பிலாத்துமுன் னடுத்திவன் கிறிஸ்தாம்
வைய வேந்தொரு மன்னர்க்கும் வரியொலா தென்ன
மெய்யு றப்பல கலகங்கள் விளைத்தன னிவற்கு
வெய்ய வாக்கினைத தீர்ப்பிடு கென்றனர் வெகுண்டு.

(இ...ள்). சமதய்யனைக் கொண்டுபோய் பிலாத்து முன்பாக நிறுத்தி "பூமிக்கரசனே இவனதான் கிறிஸ்துவாம். எந்த ஒரு அரசனுக்கும் (நாங்கள்) வரி கொடுப்பது தகாதென்றும் உண்மையாகவே பல கலகங்களையுமுண்டாக்கினான். ஆகையா லிவனுக்குக் கொடிய தண்டனை விதியுங்கள்" என்று கோபாவேசத்துடன் சொன்னார்கள். (உகச)

செற்ற மில்கிறிஸ் தியேசுவின் றிருமுகக் குறிப்புஞ்
சொற்ற குற்றமெய்ப் படாமையும் யூதர்தந் துணிவுந்
தெற்றெ னப்பிலாத் தறிந்தன னாயினுந் திகைத்திங்
குற்றி டும்பெருங் கலகமென் றஞ்சியுள் ளுடைந்தே.

(இ..ள்). (இவ்வளவு கஷ்டமனுபவித்தும்) கோபமடையாம லிருக்கும் ஸ்ரீ கிறிஸ்தேசு பெருமானின் அழகிய திருமுகக் குறிப்பையும், அவருக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட சாட்சிகளின் மொழி பொருத்தமில்லாமற் போனதையும், யூதர்கள் தங்கள் மனதிற் கொண்டுள்ள நோக்கத்தையும், பிலாத்து அறிந்துகொண்டவனாகி யிருந்தாலும், (பகவானை விட்டுவிட்டால்) இங்கோர் பெருங் கலகமுண்டாகுமென்று பயந்து வருத்தத்துடன் யோசிக்கலானான். (உகறு)

வேத பாரகர் யூதமார்க் கத்திலே விதித்த
நீத வாக்கினை செய்துகொண் மின்னென நிகழ்த்த
ஆத காதெமக் கரசனே கோறலாக் கினைக்கு
நாத னென்றுநின் பாற்கொணர்ந் தனமென நவின்றார்.

(இ...ள்). "வேதவொழுக்கங்களை கடைப்பிடித் தொழுகுபவர்களே! யூத மார்க்கத்திலே சொல்லியிருக்கும் நியாயப் பிரமாணத்தைக் கொண்டு இவனுக்குத் தகுந்த தீர்ப்புச் செய்யுங்கள்" என்று பிலாத்து சொல்ல அதற்கு அவர்கள்: "அரசனே, ஆ! ஆ! அது எங்களுக்குத் திருப்திகரமாகாது. மரணத் தீர்ப்பு அளிக்கவல்ல அதிபதி நீரொனறே யிவனை உங்கள் சமுகங் கொண்டுவந்தோம்" என்றார்கள். (உகசு)

மூர்க்க ருள்ளமும் வாய்மொழி மூர்க்கமு முணர்ந்து
பார்க்க ணின்றநம் பரமபொருள திருமுகம் பார்த்துத்
தீர்க்க மாயெலாந் தெரிந்தனை நீயினிச் செப்பும்
மார்க்கம் யாதுநின் பொருட்டென வுசாவினன் மன்னன்.

(இ...ள்). பிலாத்து இக்கொடியவர்களது மனதையும், அவர்கள் வார்த்தைகளிலுள்ள தீய நோக்கத்தையு மறிந்து பூமியில் (மனுஷவதாரமெடுத்து) நின்ற நம்பெருமானது திருமுகத்தைப் பார்த்து: "நீ எல்லாவற்றையுந் தெளிவாக அறிந்திருக்கின்றாய். இனிமேல் உனக்காக நீ சொல்லவேண்டிய வழி யேதேனுமுண்டோ" வெனக் கேட்டான். (உகஎ)

ஒன்றும் பேசல ருத்தமர் மற்றதை யுணர்ந்து
மன்று ளேயொரு தனிச்சிறை வரதனை நோக்கி
வென்றி சேர சன்கொலா நீயென வினவ
என்று மாறிலா விறைமக னெதிருரை யியம்பும்.

(இ...ள்). அதற்கு உத்தமராகிய இரட்சா பெருமான் ஒன்றும் பதிற்சொல்லாதிருப்பதை பிலாத்து மன்னன் அறிந்து, சபையிலேயிருந்து அவரை தனியாக ஓரிடத்திற் கழைத்துக்கொண்டு போய், அவரைப்

பார்த்து: "வெற்றி பெறக்கூடிய அரசன் நீதானோ" வென்று கேட்க, எக்காலத்தும் மாறுதலடையாத தெய்வ குமாரன் பின்வருமாறு பதில் கூறுகிறார். (உகஅ)

அரசன் யானெனை தரசிய லுலகர சியல்போல்
உரைசெ யுந்தர மன்றது வாயினென் னுழையர்
விரசி நின்றுபோ ராடுவ திலையதால் வேந்தென்
அரசி யல்லுல கரசிய லன்றென வறிதி.

(இ...ள்). "நான் அரசனே! ஆனால் எனது அரசாட்சி உலக வர சாட்சியை யொத்ததென்று சொல்லக்கூடியதல்ல. அப்படியானால், அரசனே, என் சிஷர்கள் என்னோடு நின்று எனக்காகப் பரிந்து பேசாத தால், என் அரசாட்சி உலக வரசாட்சிக் கொத்ததல்ல" என்று அறிந்து கொள்வீராக. (உகக)

இத்த ராதலத் திறுத்தன னென்றென்று முலவாச்
சத்தி யந்திகழ்த் துதற்கொரு சான்றென வதனாற்
சித்த சுத்தமுள் ளவனெவன் யான்சொலும் ஜீவ
சத்தி யந்தனைக் கடைப்பிடித் துய்குவன் சரதம்.

(இ...ள்). என்று மழியாச் சத்தியத்தை விளக்கும் வேதத்திற்குச் சாட்சியாக, நான் இப்பூலோகத்திற்கு வந்து சேர்ந்தேன். அதனாலே இருதய சுத்தமுள்ளவன எவனோ அவன் என்னுபதேசமாகும் ஜீவ சத்தியத்தைக் கைக்கொண்டு பிழைப்பான். இஃதுண்மை என்றார். (உஉ0)

என்று நம்பனீ துரைத்தலும் யூதரை யெதிர்ந்து
கொன்று நீக்குதற் காவதோர் குற்றமு மிவன்பால்
இன்று தண்டனை யெங்ஙன மியற்றுவ லென்றான்
நன்று செய்வதற் கஞ்சிய நகரதி பதியே.

(இ...ள்). இவ்வாறு எம்பெருமான் சொன்ன உடனே, நன்மை செய்யப் பயந்து நாடாண்டு வரும் பிலாத்து "இவனைக் கொன்றொழிப் பதற்கான ஓர் குற்றமும் இவன் பேரிலில்லை, தண்டனை யெவ்வாறு கொடுப்பேன்" என்று யூதருடைய எண்ணத்துக்கு முற்றும் விரோதமாகச் சொன்னான். (உஉக)

ஆக்கி னைக்கரு கன்னல னிவனென வரசன்
மீக்கி ளந்தசொல் லிருசெவி வெதுப்பிட வெகுண்டு
போக்கின் றாகநின் றொருவருக் கொருவர்முன் போந்து
கூக்கு ரற்படுத் தாரந்தக் கொடுமன யூதர்.

(இ...ள்). "இவன் ஆக்கினைக்குப் பாத்திரனல்ல" என்று பிலாத்து சொன்ன வார்த்தைகள், யூதர்களுடைய இரண்டு காதுகளிலும் நுழைந்து வெப்பமுண்டாக்க, அவர்கள் கோபங்கொண்டு மரணத்தீர்ப்பு விதிக்க வேறு வழியில்லாதபடியால், ஒருவர்பின் னொருவராக பிலாத்துவின்முன் பேரய் கூக்குரலிட்டார்கள். (உஉஉ)

பொங்கு பேரொலி யவித்தவ ரிற்சிலர் போற்றி
இங்கி வன்கலி லேயநா டாதியிம் மட்டும்
நங்கு லஜனங் களுக்குப தேசததை நவிற்றி
வெங்கொ டுங்கல கத்தினை விளைத்தனன் மெய்ம்மை.

(இ...ள்). அவ்வாறு கோபித்துச் சத்தம் போட்டவரிற் சிலர், பிலாத்துவை வணங்கி, "இவன் கலிலேய நாடுமுதல் இன்னகர்மட்டும் நமது குலத்தைச் சேர்ந்த ஜனங்களுக் குபதேசஞ்செய்து மிகுந்த கலகத்தையு முண்டுபண்ணினன், இது உண்மை", என்றார்கள். (உஉ௩)

தன்னை யேவரு கிறிஸ்துவாந் தராபதி யென்றும்
பின்னை மன்னிறை செலுத்துதல் பெரும்பிழை யென்றும்
முன்னை யேசொலி யரசற்கு முழுப்பகை யானன்
என்னை யேதடை மரணதண் டனைக்கென விசைத்தார்.

(இ...ள்). இனி வரப்போகிற கிறிஸ்துவாகிய அரசன் தானே யென்றும், அரசனுக்கு வரி செலுத்துதல் பெரிய குற்றமென்றும், முன்னமே சொல்லி அரசனுக்குப் பெரிய விரோதியுமானன். இவ்வாறான குற்றங்களுக்குள் ளானவனுக்கு மரணதண்டனை விதிக்கத் தடையென்ன விருக்கிறது" என்றார்கள். (உஉ௪)

சொற்ற யாவையுங் கேட்டுடன் பிலாத்தெனுந் தோன்றல்
இற்றி வன்கலி லேயனு மதற்கிறை யெரோதென்
கொற்ற வன்னவ னிந்நக ரத்துளன் குறுகி
மற்றி வன்பிழை வகுக்கவென் றேவினன் வரைந்து.

(இ...ள்). பிலாத்து என்னும் அரசன் அங்கு சொன்னதைக் கேட்டவுடன், "இத்தன்மையை யுடையவன் கலிலேயனு? அதற்கு அதிபதியாகிய ஏரோது என்னும் அரசன் அந்த நாட்டிலே இருக்கிறபடியால் அவனிடம் போய் இவன் செய்த குற்றங்களைச் சொல்லுங்கள்" என்று சொல்லி யனுப்பினன். (உஉ௫)

(ஏரோது முன்னிலை.)

கலி விருத்தம்.

கறுத்த சிந்தையர் நன்றுநன் றெனக்கடி தேகி
இறுத்தெ ரோதெனு மிறைமுன மீசனை நிறுவி
வெறுத்தி ராயனைப் பகைத்தவன் வேதநூல் விரோதி
ஒறுத்தி டற்குரி யானிவ னென்றனர் உரைத்து.

(இ...ள்). கோபாவேசமுடைய யூதர்கள் "சரி" என்று ஏரோது என்னும் அரசன் முன்பாக உடனே ஈசனை கொண்டுபோய் நிறுத்தி," இவன் இராயனை வெறுத்துப் பகைத்தவன், வேதவிரோதி, தண்டனைக்கு இவன் ஏற்றவன்" என்றுரத்துக் கூவிச் சொன்னார்கள். (உஉ௬)

அண்ணலைக்கண்டு பேசவு மற்புதச் செயலைக்
கண்ணிஞற்கண்டு களிக்கவுங் கருத்துடை யெரோதென்
எண்ண முற்றமென் றேம்பவிற் பிணித்தெதிர் நின்ற
புண்ணி யன்றனை யுசாவினன் புதுமையை விரும்பி.

(இ...ள்). எம்பெருமானைக் கண்டு பேசவும், அவரது அற்புதச் செயலைக் கண்ணால் கண்டு சந்தோஷமடையவும் (வெகு நாளாக) எண்ணியிருந்த ஏரோது, தன்னெண்ணம் நிறைவேறு மென்ற வாசையினால், கட்டுண்டவராகத் தனக்கு முன்னின்ற புண்ணியமூர்த்தியைப் பார்த்து அவரது அற்புதத்தை எதிர்பார்த்தவனாய் பின்வருமாறு கேட்டான். (உஉஎ)

ஆவ லுற்றரு கணைந்துநின் ருத்திரத் தோடு
காவ லன்பல முறைபுகன் றிடவுநங் கருணை
ஜீவ தாரகர் செய்யவாய்த் துவரிதழ் திறந்து
நாவ சைத்தொரு மாற்றமு நவின்றிலர் நண்ப

(இ...ள்). நண்பனே! ஏரோது ஆவலுடனவர் சமீபத்திற் சென்று, அவசரத்துடன் பலமுறை பேசியும், கருணை நிறைந்த நம்மாத்தும வவதாரமானவர், தமதழகிய வாயின் சிவந்த உதட்டைத் திறந்து நாக்கசைத்து ஒரு வார்த்தையேனும் பேசாதிருந்தார். (உஉஅ)

மோன மித்தனை யோவென முறையிலா மன்னன்
வான நாயகன் றனையவ மதித்துநிந் தனைசெய்
தீன மாயொரு மினுக்குவத் திரமுடுத் தெழில்கூர்
மேனி யிற்றரிப் பித்துநின் றித்திறம் விரிப்பான்

(இ...ள்). ஒழுக்கமற்ற ஏரோது, மோட்சத்திற் கதிபதியாகிய நம் பெருமானைப் பார்த்து: "இவ்வளவு மௌனமா?" என்று கேட்டு அவரை மதியாது நிந்தனை செய்து, கேவலமான ஒரு பட்டுத் துணியை யணியக் கொடுத்து, அதனை யவரது அழகிய தேகத்திலுடுப்பித்து, அவர் முன்னின்று பின்வருமாறு சொல்லலுற்றான். (உஉகூ)

கோற லுக்குரி யானல னிவன்வயிற் குற்றந்
தேறு கிற்கிலன் யாதுமோர் திறத்தினுந் தெரியின்
மாறி யிங்கிவற் கொடுபிலாத் துறையுளை மருவிக்
கூறு மின்னென விடுத்தன னெரோதெனுங் கோழை

(இ...ள்). "யோசிக்குங்கால், எந்த விதத்திலு மிவன்பேரில் குற்றமியாதொன்றையுங் காணேன். ஆகையாலிவன் கொலைக்குப் பாத்திரனல்லன், மறுபடியு மிவனைக் கொண்டுபோய் பிலாத் தாண்மனையில் விட்டு (உங்கள் எண்ணத்தை) அவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று அச்சங் கொண்டுள்ள ஏரோது சொல்லி யவர்களை யனுப்பிவிட்டான். (உ௩௦)

விசாரணை காண்டம் முற்றிற்று.

ஆகக்காண்டம் மூன்றிற்குத் திருவிருத்தம் 230.

நான்காவது

# தீர்ப்புக் காண்டம்.

---

தீர்ப்புக் காண்டம் என்பதற்கு, எருசலேம் நகரில் வைதீக அதிகாரிகள்முன் விசாரணை நடந்தேறிய பின்னர், லௌகீக அதிகாரியாகும் பிலாத்து துரையிடம் கிறிஸ்துநாதரைக் கொண்டு போய் விட, அவன் குமரேசன் குற்றமற்றவ ரென வறிந்தும், யூதர்கட்குப் பயந்தவனாய் அம்மகானுக்கு கொலைத்தீர்ப்பு விதித்த வகையை யுணர்த்துங் காண்டம் என்பது பொருள்.

கலிவிருத்தம்.

அவ்வயி னரசவை யகன்றம் மானொடு
வெவ்வழற் புகையென வுயிர்ப்பு வீங்கிட
எவ்வகை யினுமிவற் கிறுதி யின்றெனத்
தெவ்வர்தத் தமிலுளஞ் செருக்கி யேகினார்

(இ...ள்). அப்போது அந்த மகானு பாவனுடன், அரசனது சபையை விட்டு நீங்கி, வெப்பமான நெருப்பின் புகைபோலும் பெருமூச்சுவிட்டு, "எந்த விதத்திலு மிவனுக்கு முடிவில்லையே" என்று அக் கொடியவர்கள் தங்கள் மனதிலூறு மாங்காரத்தோடு, பிலாத்துவிடம் போனார்கள். (உ௩௧)

வன்றிறற் பிலாத்தெனு மன்னன் மன்றணி
முன்றிலைக் குறுகிநம் பகவை முன்னுறீஇப்
பின்றைநின் றரசிடம் பெயர்ந்து மீண்டமை
கன்றிய மனத்தினர் கழறி னாரரோ.

(இ...ள்). மிகுந்த வல்லமையுடைய பிலாத்து என்னு மரசனது சபையின் வாசலுக்கு முன் வந்து, நம் பெருமானை அவன் முன் நிறுத்தி, கோபமான மனதையுடைய வவ்வி யூதர்கள், அவருக்குப் பின்னின்று, தாங்கள் ஏரோதிடஞ் சென்று திரும்பிவந்த விஷயத்தைச் சொன்னார்கள், (உ௩௨)

அதிபனங் கவர்சொலை யமையக் கேட்டுடன்
சதிபுரி குரவரை ஜனத்தின் மூப்பரை
முதியரை வருகென முறையிற் கூட்டிவைத்
தெதிரெழீஇ யிணையன வியம்பன் மேயினான்.

(இ...ள்). பிலாத்து அவர்கள் வார்த்தைகளை அமரிக்கையுடன் கேட்டு, வஞ்சனை புரியும் பிரதான ஆசாரியர்களையும், ஜனசமூக முகன்மைக் காரர்களையும், வயதில் முதிர்ந்தவர்களையும், ஒருங்கே வரவழைத்து, அவர்களை ஒழுங்காகக் கூட்டிச் சேர்த்துத் தான் எதிரில் நின்று பின் வருமாறு பேசத் தொடங்கினன். (உ௩௩)

உலகர க்ஷகனென வுரைக்கும் பேர்நனி
இலகிய மற்றிவ னியூத மார்க்கத்தின்
விலகிய போதனை விரித்திந் நாட்டினும்
அலகறு கலகமுண் டாக்கி னானென.

(இ...ள்). "உலக இரட்சக னென்று சொல்வதற்கு மிகவும் பொருத்தமாயுள்ள இவன், யூத மார்க்கத்திற்கு விரோதமான போதனைகளைச் செய்து, (கலிலேயாவில் மாத்திரமல்ல), இந்நாட்டிலும் மிகுதியான கலகத்தை யுண்டாக்கினான் என்கிறீர்கள்." (உ௩௪)

கைப்படுத் திவ்வயிற் கட்டி வந்தனிர்
மொய்ப்படு நும்முன முறையிற் றேர்ந்தனன்
மெய்ப்படு கிற்கில விரித்த குற்றங்கள்
மைப்படு மிருளொளி மருவத் தேய்தல்போல்.

(இ...ள்). "பின்னு மிவனைப் பிடித்துக் கட்டி யிச்சபைக்குக் கொண்டு வந்தீர்கள். கூடியிருக்கிற வுங்கள்முன், ஒழுங்கினபடி விசாரித்துணர்ந்ததில், வெளிச்சம் வீசினதும் கரியவிருள் மறைந்துபோனது போல், நீங்க ளவர் மேற் சாட்டின, குற்றங்கள் யாவும் யதார்த்தமானதாகத் தோற்றப்படவில்லை. (உ௩௫)

ஆண்டகை யெரோதெனு மரச னாய்ந்துயிர்
மாண்டுபோம் வகைபுரி மரண தண்டனைக்
கீண்டிய பிழையிவ னிடத்துக் காண்கிலேன்
மீண்டுபோ யின்னென விடுத்த தோருதிர்.

(இ...ள்). சிறந்தவனாகிய ஏரோது வென்னு மரசன், தான் நன்றாக விசாரித்துப் பார்த்ததும், இவனது உயிரை வாங்கும்படியான மரண தண்டனை விதிக்கத்தக்க குற்றமிவ்விடங் காணப்படவில்லை. ஆகையால் மறுபடியுங் கொண்டு போங்கள் என்று அவனனுப்பியதை "நீங்களே யோசித்துப் பாருங்கள்" என்றான் பிலாத்து மன்னன். (உ௩௬)

ஏதமொன் றிலாவுயிர்க் கிறுதி காட்டுதல்
வேதநூல் விதிக்கெதிர் விரோதம் வேந்தர்க்கு
நீதமு மன்றுல கருக்கு நேர்ப்படு
போதமு மன்றெனப் புரிவிற் கூறிமேல்,

(இ...ள்). "குற்றமொன்று மில்லாத உயிருக்கு, மூடிவையுண்டாக் குதல் வேத நூலின் னொழுங்குக்கு நேர் விரோதம். (அவ்வாறு செய்வது) அரசர்கட்கும் நீதியல்ல, உலகத்தாருக்கேற்ற ஞானமுமல்ல" என்று விருப்பத்துடன் சொல்லி, அதன்மேல், (உகூஎ)

நடுவிது வெனினுமிங் கிவனை நம்முனம்
வடுவுற வடித்திவண் வரைந்து போகென
விடுவது துணிந்தன னெனவி ளம்பினன்
அடுவதே துணிவென வசடர் பொங்கினர்.

(இ...ள்). "நியாயமிப்படி யிருந்தபோதிலும், இங்கிவனை நமக்கு முன்பாகக் காயப்படும்படி யடிப்பித்து, இவ்விடத்தை விட்டோடிப்போ வென்று சொல்லி யவனை விடுதலை செய்யத் துணிந்திருக்கிறேன்", என்று பிலாத்து சொன்னான். அதற்கு அந்த கீழ்மக்கள் "அவனைக் கொல்லு வதே எங்கள் நோக்கம்" என்று ஆத்திரமடைந்தார்கள். (உகூஅ)

பின்னரு முறைமுறை பிலாத்தெ னுந்துரை
நன்னய மொழிகளாற் றிருத்த நாடினன்
முன்னுறு நன்மையைச் சிதைக்கு மூடர்க்குப்
பன்னுநன் மதிபயன் பயக்கு மேகொலாம்.

(இ...ள்). மறுபடியும், பிலாத்து என்னு மரசன், கிரமமாய் நய நயப்பான வார்த்தைகளா லவர்களை வசப்படுத்தப் பிரயாசப்பட்டான். முற் காலத்தில் (பெரியோர்கள்) சொல்லியுள்ள நன்மைகளை யழிக்க வெழுந்த மூடர்கட்குச் சொல்லும் நல்ல புத்தி பிரயோசனத்தை யுண்டாக்குமோ?

ஆங்கமைந் திருமினென் றவரை யேவிப்போய்த்
தாங்குநீ தாசனத் திருந்து தன்னுளே
வீங்கிய வுயிர்ப்பொடு கவன்று வேந்தனும்
ஈங்கினிச் செயலெனென் றெண்ணுங் காலையில்.

(இ...ள்). அங்கே யிருங்கள் என்று அவர்களுக்குப் பிலாத்து உத் தரவு கொடுத்துப், தன்னைத் தாங்கு நீதாசனத்தி லுட்கார்ந்து தனக்குள்ளே அதிகரித்துள்ள பெரு மூச்சினால், கவலைப்பட்டு, இனி என்ன செய்கிற தென்று யோசித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில், (உசo)

இல்லவள் விடுத்ததூ தெதிர்ந்து வைகறை
புல்லிய கனவினை புகன்றப் புண்ணியற்
கல்லலை துஞ்செய லாவ தன்றெனச்
சொல்லின ளம்மனை யென்னச் சொற்றனன்.

(இ...ள்). தன் மனைவியா லனுப்பப்பட்ட தூதன், அவள் அன்று காலையிற் கண்ட கனவினுடைய விதத்தைக் கூறி, அப்புண்ணிய புருஷ னுக்கு யாதாமொரு தீங்குஞ் செய்யற்க வென உங்களுக் கெச்சரிக்கும் படி என்னை யனுப்பினார் என்று சொன்னான். (உசக

கேட்டுளக் கலக்கமோ டெழுந்து கேதமில்
நாட்டமொன் றுடையனாய் நடுப்பு ரிந்திடு
கோட்டியை யகன்றுபோய்க் குழீஇய யூதரை
மீட்டுநல் விநயமாய் விளித்து விள்ளுவான்.

(இ...ள்). அதைக் கேட்டு மன சஞ்சலத்தோ டெழுந்து, குற்றமற்ற ஒரு நோக்கத்தை யுடையவனாய், நீதியை நடப்பிக்கிற சபையை விட்டுப் போய் அங்கு கூடியிருக்கும் யூதர்களை மறுபடியும் வேண்டிய மரியாதை யுடனழைத்துச் சொல்லுகிறான். (௨௪௨)

மருவுபண் டிகைதொறும் வழக்க மாயுமக்
கொருவனைச் சிறைவிடுத் துதவு மாறுபோல்
பருவர லடையுமிப் பார மார்த்திக
திருவனை விடுதலை செய்து மென்றனன்.

(இ...ள்). (வருஷந்தோறும்) வருகிற பண்டிகையில் வழக்கமாக ஒருவனை விடுதலை செய்து (அவனுக்கு) உதவி செய்யும் முறைமையைப் போல, இப்பொழுது துன்பத்துடனே வைதீக வுபதேசஞ் செய்யும் (மோட்ச) செல்வத்தை யுடையவனை விடுதலை செய்வோம் என்றான்.

என்றசொல் விசைமுடி வெய்தி டாமுனம்
கொன்றுயிர் களைகவெங் குருசி லேற்றியிந்
நின்றவன் றனைப்பர பாசை நீக்குக
வன்றொடர்ப் படுசிறை மறங்கொள் வேலினாய்.

(இ...ள்). அவ்வாறு சொன்ன வார்த்தையின் சப்தம் முடிவதற் குள்ளாக வீரமுள்ள செங்கோலை யுடையவனே! இங்கே நின்றவனை சிலுவையிலேற்றி அவனைக் கொன்று உயிரைப் போக்குவீராக. விலங் கிட்டு சிறைப்படுத்தி யிருக்கும் பரபாஸ் என்பவனை விடுதலைச் செய்வீராக என்றார்கள். (௨௪௪)

மன்னர்மன் னனுக்கிறை வரியொ லாதெனச்
சொன்னவன் சொல்லருந் தேவ தூஷணம்
பன்னியோ னிவனைநீ பார மார்த்திகன்
என்னநீ விடுதலை யிசைப்ப தென்கொலாம்.

(இ...ள்). சக்கரவர்த்திக்குச் செலுத்த வேண்டிய கடமையாகிய வரியைக் கொடுப்பது தகாதென்றும், சொல்லத் தகாத தேவதூஷணஞ் சொன்னவனுமாகிய இவனை, அரசனாகிய நீர் வைதீக வுபதேசஞ் செய்தவனென்று விடுதலை செய்வதாகச் சொல்வது என்ன காரணம். (௨௪௫)

மற்றிவன் றனைவிடின் மன்னர் மன்னனுக்
குற்றநண் பினனெனு முரிமைப் பாடிலாய்
செற்றமோ டிவனுயிர் சிதைத்தி செய்பழி
பற்றுக வழிவழி யெம்மிற் பார்த்திவ.

(இ...ள்). அரசனே! இவனை நீர் விடுதலை செய்வீரானல், நீர் சக்கரவர்த்திக்கு ஏற்ற நண்பன் என்னுஞ் சுதந்தர மில்லாமற் போகிறது. இவன் உயிரைக் கோபத்தோடு நீக்கிவிடும். அப்பழி வம்ஸ பாரம் பர்ய மாய் எங்கள் மேல் வருவதாக. (உசசு)

அஞ்சிடேல் சிலுவையி லறைந்து கொல்கெனச்
செஞ்சவே பலமுறை செவிடு பட்டிட
விஞ்சிய கூக்குரல் விளைத்திட் டாரரோ
நஞ்சினுங் கொடியநெஞ் சுடைய நாஸ்திகர்.

(இ...ள்). விஷத்தைவிடக் கொடிய மனதையுடைய தேவ துரோகிகளாகிய அவர்கள் (பிலாத்துவைப் பார்த்து) "பயப்படாதே. அவனை சிலுவையிலறைந்துக் கொன்று விடு" என்று காது செவிடாகிப் போம்படி பலமுறையுங் கூவிச் சத்தம் போட்டார்கள். (உசஎ)

புரவலன் யூதர்செய் புரளி போர்த்தலில்
உரமிலா தஞ்சியாங் கோருபு றஞ்செலீஇ
வரமனே காரையெவ் வயினின் றுற்றனை
பரமனே தெரியெனப் பரிவிற் கேட்டனன்.

(இ...ள்). யூதர்கள் செய்யுங் கலகம் அதிகரித்தலால், அதை யடக்க முடியாதவனாகப் பயந்து, வேதத்திற்குக் காரணமானவரை அங்கு தனித்துள்ள வோரிடத்திற் கொண்டுபோய், "நீ எவ்விடமிருந்து வந்தாய்? நீ தெய்வந்தானா சொல்?" என்று பட்சத்துடன் கேட்டான. (உசஅ)

உம்பர்நா யகனெதி ருரைகொ டாமைபால்
வெம்பியா னுனைக்கொல விடுக்க வாயினும்
இம்பருண் டெனக்கதி கார மென்றுநீ
நம்புதி யேகொலா நவிற்று கென்றலும்.

(இ...ள்). வான உலகத்திற் கரசனாகிய இயேசுபிரான், மறு வார்த்தை யொன்றுஞ் சொல்லாமையால் பிலாத்து கோபித்து "உன்னைக் கொல்லவோ, விடுதலை செய்யவோ இவ்வுலகி லெனக்கு அதிகாரமுண் டென்று நம்புகிறாயா சொல்" என்று கேட்டவுடன், (உசக)

உன்னத நியமமா யுமக்கி ராவிடில்
என்னவோர் விரோதமு மியற்றொ ணாதெனக்
கன்னதா கலினுமக் கெனைய ளித்தவர்க்
குன்னரும் பாவமுண் டென்ன ஓதினார்.

(இ...ள்). "பரலோக ஏற்பாட்டின்படி, உனக்கு அதிகாரமில்லாவிடில் எவ்விதமான துன்பமு மெனக்குண்டாக்க உன்னால் முடியாது. அப்படி யிருப்பதால், உன் கையிலென்னை யொப்பிவித்தவர்களுக்கு நினைக்க முடியாத பாவமுண்டாகும்" என்றார். (உருo)

இத்தகு திருமொழி யெம்மை யாளுடை
வித்தகன் விளம்பலும் வேந்தன் விட்டிடற்
கெத்தனை முயன்றுமெட் டுணைநன் றின்றியே
பித்தரிற் றிகைத்துளம் பேதுற் றனனரோ.

(இ...ள்) நம்மை அடிமையாகக் கொண்டுள்ள கடவுள், இப்பரிசுத்த வார்த்தைகளைச் சொன்னதும், பிலாத்து அவரை விடுதலைச் செய்ய எவ்வளவோ பிரயாசப்பட்டும் எள்ளளவும் பயனில்லாமற் போனதால், பைத்தியக்காரனைப்போற் றிகைத்து மனம் வருந்தினான். (௨௫௧)

சிலுவையி லறைபறை யென்னுந் தீச்சொலாம்
வலுவயிற் செவியிரு மருங்குந் தைத்தலாற்
கொலுவயி னாசனங் குறுகிக் கூறினான்
உலவையிற் சருகென வுழலு முள்ளத்தான்

(இ...ள்). "இவனைச் சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்" என்னுங் கடுமையான வார்த்தைகள், விசைவுடன் அவன் காதுகளிரண்டு பக்கத்திலுந் துளைப்பதால் காற்றி லகப்பட் டலசடிப் படும் துரும்பைப் போன்ற மனதையுடைய பிலாத்து சபையிலுள்ள தன் னாசனத்திற்குப் போய் சொல்லுகிறான். (௨௫௨)

குழுமியீர் நும்முரை குறிக்கொண் டியாதுமோர்
வழுவிலாற் கீந்தனன் மரண தண்டனை
பழியிதென் பாலல வென்று பாவர்முன்
கழுவினான் கரகநீர் கவிழ்த்துக் கைகளை.

(இ...ள்). இங்கே கூடியிருக்கிறவர்களே! உங்கள் வார்த்தையையேற்றுக்கொண்டு, யாதொரு குற்றமுமில்லாத (இவனுக்கு) மரணதண்டனை விதித்தேன். அந்தப் பழி என்பேரில் இல்லை" என்று சொல்லிவிட்டு, பாவிகளாகிய யூதர்கள் முன்பாக கெண்டிகையைக் கவிழ்த்து அதிலுள்ள தண்ணீரால் தன் கைகளைக் கழுவினான்.

கரகம்—கெண்டிகை அல்லது கமண்டலம். நாம் செம்பு உபயோகப் படுத்துவதுபோல யூதர்கள் கெண்டிகை உபயோகப்படுத்துவது அந்நாட்டு வழக்கம். (௨௫௩)

ஏவமி லொருவருக் கிறுதி காட்டியே
தாவரும் பெரும்பழி சமைப்பன் றானுறு
ஜீவனுக் காயினும் ஜெகத்துக் காயினும்
ஆவது கருதிலா னார்கொ லாமிவன்.

(இ...ள்). குற்றமற்ற ஒருவருக்கு முடிவை யளித்து, பகை நிறைந்த பெரிய பழியை யுண்டாக்கி, தன்னுடைய ஜீவனுக்காவது பூலோகத்திற்காவது ஆகவேண்டியதை நினைக்காத இவன் யார்? (௨௫௪)

புறத்துறு களையினைப் போற்றிப் புண்ணியத்
திறத்தையே விளக்கின்ற பயிரைத் தேய்த்திகன்
மறத்தையே யுலகிடை வளர்த்து மன்னிய
அறத்தைவே ரறுப்பவ னார்கொ லாமிவன்.

(இ...ள்). (ஒரு வயலிலுள்ள) புல்லுருவியைப் பாதுகாத்து, அதின் பக்கத்திலுள்ள புண்ணியத்தின் தன்மையை யுண்டாக்குகின்ற பயிரைப் பிடுங்கி யழித்துவிடுபவன்போல, கொடிய பாவத்தை உலகத்தில் வளர்த்து, எந்நாளு நிலையாயுள்ள தருமத்தை வேரோடு பிடுங்கி எறிபவனாகிய இவன் யார்? (உ௫௫)

பங்கமில் பரமசற் குருப வித்திர
அங்கநோ வக்குரு சறைந்து கொல்கென
வெங்கொலை நாவினால் விளம்பு வான்விரைந்
தங்கையைக் கழுவுவா னார்கொ லாமிவன்.

(இ...ள்). குற்றமற்ற பரம சற்குருவின் பரிசுத்தமான சரீரம் வலிக்கும்படி, அவரைச் சிலுவையி லறைந்து கொல்லுங்கள், என்ற கொடிய ஆக்கினையை நாவினால் சொல்லி விரைவில் (அவ்வாறு சொன்ன தன் வாயைக் கழுவுவதற்குப் பதிலாக) தன் கையைக் கழுவினவனாகிய இவன் யார்? (உ௫௬)

விஞ்சிய வுணர்வினை வீட்டி நீதிசெய்
நெஞ்சிய லுரத்தையு நீத்துத் தன்மனை
வஞ்சிசொல் கனாத்திற மறந்து வஞ்சருக்
கஞ்சிநஞ் சருந்துவா னார்கொ லாமிவன்.

(இ...ள்). மனச்சாட்சியாம் பேறிவை யிழந்து, நீதி செய்யத்தக்க மன தைரியத்தையும் விட்டு, தன் தரும பத்தினி சொல்லி யனுப்பிய கனவின் திறமையையும் மறந்து, பகைவர்கட்குப் பயந்து விஷத்தைக் குடிப்பவனாகிய இவன் யார்? (உ௫௭)

உலகர க்ஷணியமுண் டர்க வுன்னதர்
இலகுகைக் கருவியா யிருந்தி யற்றியோன்
அலகறு முன்குறித் தவின மைந்திடா
விலகிய பிலாத்தெனும் வேந்தன் காண்டியால்.

(இ...ள்), உலகத்திற்கு இரட்சிப்பை யுண்டாக்கும் பொருட்டு ஜெகதீசனது கைக்கோர் உபகரணமாக விருந்து அதைச் செய்து முடித்தவன் எம்பெருமான் மனித அவதார மெடுக்குமுன் அவரது வருகையைப் பற்றி ஒருவர் பின்னொருவராய் எண்ணிக்கை யில்லாத தீர்க்க தரிசனத்தால் சொல்லப்பட்ட நிர்ப்பந்தத்தால் நீதிக்கு விலகிய பிலாத்து வென்னுமாச னென்பதை யறிந்துகொள்ளுங்கள்.

நாம் செய்த பாவங்களே யவர் பாடுகளனைத்திற்குங் காரணம் எனப் பின்வரும் 272ம் கவியில் வித்துவான் விரித்துரைத்துள்ளார். ஆயினும் அப்பாடுகளின் மூலம் உலகத்திற்கு இரட்சிப்பைச் சம்பாதிக்கும் தெய்வ நியமத்திற்கு (கொலைத் தீர்ப் பளிக்கவல்ல) பிலாத்துவே காரணமாக விருந்தான் என்பது கருத்து.

கவி 254 முதல் 257 மட்டில் வித்துவான் பிலாத்தின் விஷயாதி களைச் சீர்தூக்கி விளித்து அவனே கருவியானுன் என இப்பாட்டில் குறிப் பித்துள்ளதால் வித்துவானது மார்க்கப் பற்றுதலும் கவி யலங்காரமும் விளங்குகின்றது. (உருஅ)

இத்திற முன்குறிப் பியைந்தி டாதவுன்
மத்தரே கருவியாய் வாய்ந்தி ருந்தனர்
உத்தம ஞக்கையுத் தரித்த பாடுகள்
அத்தனைக் கும்மென வறிதி மைந்தநீ.

(இ...ள்). சற்குண பகவானது தேகத்தை யிம்சித்ததற்கும் அவர் பட்ட பாடுகளனைத்திற்கும் (தீர்க்கதரிசிகள் கூறிப்போன முன் கவியிற் சொன்ன) இத்தன்மையான விஷயங்களை முன்னறியுஞ் சக்தியற்ற பித் தர்களாகிய யூதர்களே காரணமாக விருந்தார்க ளென்பதை அன்புடைய வர்களே நீங்க ளறிந்துகொள்ளுங்கள்.

பிலாத்து வேந்தன்ல்லாது இவர்கள் மரண தண்டனைத் தரவல்லவ ராகார். தீபம் பொருத்துவதற்கு எண்ணெய், திரி, அக்கினி என்னும் மூன்றும் முக்கிய காரண மாக விருப்பதுபோல நமது பெரும் பாவங்களைப் போக்குவதற்கு முறையே யூதர்கள், பிலாத்து வேந்தன், கிறிஸ்துநாதர் ஆகிய யிம்மூன்றையு மொருமிக்கச் செய்தருளினுர் எல்லாம் வல்ல இறைவன் என்பதை இக்கவிகளால் விளக்கியுள்ளார். (உருகூ)

நெய்விளக் கிடிவிரு ணீங்கு மாறுபோல்
மெய்விளக் கிடில்வினை வீயு மல்லது
பொய்விளக் கிடுபுறச் சமய போதத்தாற்
கைவிளக் கிடில்வினை கழியு மேகொலாம்.

(இ...ள்). நெய் விளக்கேற்றிஞல் இருள் மறைவதுபோல, சத்திய வேத விளக்கை வைத்தால் பாவ வினை நீங்கு மேயன்றி, பொய்யாகிய தீப மிருஞ் சத்தியமற்ற பல சமய வுபதேசத்தைக் கொண்டு விகசிதஞ் செய் வித்தலால் பாவ வினை நீங்குமோ ? (உகூo)

உக்கிர தீவினை யுஞற்றி யொண்பழிச்
சிக்கறக் கைகழூஉ மதியின் றீக்ஷணஞ்
செக்கினை விழுங்கிப்பின் சீர ணித்திடச்
சுக்குநீ ரருந்துமச் சூழ்ச்சி யொக்குமால்.

(இ...ள்). கொடிய பாவத்தைச் செய்து, அதனால் வந்த பெரும் பழியை நீக்கும் பொருட்டுத் தன கையைக் கழுவி (என்மீது இப்பழி உராங் கொளாதெனச் சொல்லும்) புத்திசாலித்தனமானது, செக்கை விழுங் கினபின் அது சமிக்குமாறு, சுக்குக் கிஷாயங் குடிக்குமுபாயத்தை யொத் திருக்கின்றது. (உசக)

கள்ளனா கியபர பாசைக் காவல்விட்
டெள்ளரு மேசுநா யகனை யீனமாய்
விள்ளரு மாக்கினை விதித்தல் கேட்டுடன்
துள்ளினர் களித்தனர் துட்ட யூதரே.

(இ...ள்). திருடனாகிய பரபாசை விடுதலை செய்து, இகழத் தகாத இயேசு பிரானுக்குக் கேவலமும் வாயினாற் சொல்லவு முடியாததுமான கடூர தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பதைக் கேட்டவுடன், அக்கொடிய யூதர்கள் குதித்துச் சந்தோஷப்பட்டார்கள். (உசஉ)

வேந்தனுக் கிணைகொடு வெய்ய மூள்ளர்தாம்
போந்துபுண் ணியன்றனைப் புடைவ ளைந்தனர்
பாந்தளிற் சீறினர் பற்றி யீர்த்தனர்
காந்துபுன் மனத்தருங் கைக லந்தனர்.

(இ...ள்). கொடிய படைவீரர்கள், அரசன் விதித்த ஆக்கினையைக் கைக்கொண்டு, தரும சீலரைச் சுற்றி வட்டமாகச் சூழ்ந்துகொண்டார்கள். பாம்பைப்போற்சீறினார்கள், அவரைப் பிடித்திழுத்தார்கள். வெப்பந்தருங் கேவல மனதையுடைய மற்றவர்களும் (இத்தீய கருமத்திற்குட்பட்டு) அன்னோருடன் சேர்ந்துகொண்டார்கள். (உசங)

புக்கனர் மாளிகைப் புறத்தங் கோர்சிறை
மக்களுட் பதடிக ளாய வன்கணார்
தொக்கனர் பலர்பல தூஷ ணஞ்சொலிக்
கொக்கரித் திகழ்ந்தனர் குழுமி யோரெலாம்.

(இ...ள்). மனிதர்களில் பதருக் கொப்பானவர்களாகிய வக்கசடர்கள், அரண்மனைக்குப் பக்கத்திலுள்ள வோரிடத்தே போய் அவரைச் சூழ்ந்துகொண்டு பலவிதமாக தங்கள் வாய்க்கு வந்தபடி யெல்லாம் வைதார்கள். அங்கு கூடியிருந்த மற்றவர்களும் கர்ச்சித்து நிந்தை கூறினார்கள்.

முன்னுடை களைந்தொரு முருக்க லர்ந்தெனச்
செந்நிற வங்கிமேற் றிகழச் சேர்த்தினர்
கொன்னுனை யழுந்திவெங் குருதி பீறிடப்
பின்னிய முண்முடி சிரத்துப் பெய்தனர்.

(இ...ள்). முன் அவருடுத்தி யிருந்த வஸ்திரத்தை நீக்கிவிட்டு (சிகப்பு நிறப் பூவையுடைய) கல்யாண முருக்க மரம் பூத்தாற்போல்,

சிவந்த நிறமான நீண்ட அங்கி யொன்றை பிரகாசிக்க அவருக்குடுத்தினுர்கள். கூறிய முட்கள் பாய்ந்து அதனுல் சென்னியில் இரத்தம் பீரிட்டோட மிகக் கூர்மையான முட்களைப் பாய்ச்சித் தொடுக்கப்பட்ட முடியொன்றை அவரது தலையிற் சூட்டினர். (உசுடு)

கோலெனக் கையிலொரு கோலை நல்கினுர்
காலிணை முடக்கிமுன் னின்று காவல
மாலுறு மாசனீ வாழ்க வாழ்கவென்
றேலிடேப் பரிகசித் தூறி னுர்பலர்.

(இ...ள்). செங்கோலைப்போன்ற ஒரு கோலை அவர் கையில் கொடுத்தார்கள். அவருக்கு முன் இரண்டு கால்களையு முடக்கி நின்று (முழங்கால் படியிட்டாற்போல) "அரசனே! மாட்சிமை பொருந்திய வேந்தனே! நீர் வாழ்க வாழ்க" என்றோலமிட்டுப் பரிகாசஞ்செய்து பலர் கூச்சலிட்டார்கள். (உசுசு)

கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை யடித்து வேதனை
செய்தன ருமிழ்ந்தனர் திருமு கத்தினே
வைதனர் பழித்தனர் மறங்கொ ணீசரே.

(இ...ள்). அக்கொடியவர்கள் அவர் கையிலுள்ள கோலைத் திரும்பவும் வாங்கி அதனு லவர் தலையிற் குரூரமாயடித்து நோயுண்டாக்கி அவர் திருமுகத்திலுந் துப்பினுர்கள். அந்நீசப் பாவிகள் அவரை தூஷித்துக் கேலியுஞ் செய்தார்கள். (உசுஎ)

மலர்ந்தசெந் தாமரை யனைய வாண்முகம்
புலர்ந்துசெங் குருதியாற் பூசுண் டெஞ்சிய
துலர்ந்தது நாவுவுங் கருணை யூற்றிருந்
தலர்ந்தநேத் திரங்களுங் குழிபட் டாழ்ந்தவே.

(இ...ள்). விரிந்த செந்தாமரைப் புஷ்பத்தைப் போலொளியுள்ள அவர் திருமுகம் வாடி சிவந்த இரத்தத்தால் பூசப்பட்டு, மெல்லிய நாக்கும் வரண்டு அருள் சொரியுஞ் சுனைபோலும் பிரகாசித்தக் கண்களுங் குழிவிழுந்துபோயின. (உசுஅ)

நிந்தனை மொழிதிருச் செவிநி றைந்தன
நொந்தபுண் ணிடையெரி நுழைந்த தாமெனப்
பந்தனை மேனியிற் படிந்த செம்புனீர்
சிந்தின புண்ணியத் திவலை போன்மென.

(இ...ள்). நொந்திருக்கும் புண்ணில் கொள்ளியொன்றை சொருகுதல்போல் தூஷண வார்த்தைகள் அவரது பரிசுத்தமான காதுகளை நிறப்பின. கட்டப்பட்டிருக்கும் அவரது சரீரத்திலுள்ள சிவந்த புண்ணிலிருந்து வடியுநீரானது புண்ணிய தீர்த்தத்துளிபோலும் விளங்கின. (உசுகூ)

குன்றிய துடற்பலங் குருதி கோத்துயிர்
பொன்றிய தெனமுகம் பொலிவி ழந்ததால்
கன்றிநொந் துலந்தது கனக காத்திரம்
ஒன்றிய வெழினல மொருவிப் போயதால்.

(இ...ள்). தேக வலிமை குறைந்தது. இரத்தக் கறைபட்டு இறந்தவர் போலும், அவர் முகம் ஒளியற்றுப்போனதால், பொன்போன்ற அவர் சரீரமும், வாடி வதங்கிற்று. அவர் சரீரத்தில் பொருந்தியுள்ள அழகுங் குறைந்து போயிற்று. (உ௭0)

ஓதரும் வேதனை யுழந்து மொன்னலார்
நோதக வொருமொழி நுவலு வாரலர்
ஏதில ரோபொறைக் கிரங்கு வாருமில்
பாதகம் பாதகம் பரம பாதகம்,

(இ...ள்). சொல்லமுடியாத துன்பத்தை அவர் சகித்தும், அப்பகைவரது மனம் வருந்தும்படி ஒரு வார்த்தையுஞ் சொன்னவரல்ல. (அவ்விதமாக சகித்துக்கொண்டிருக்கும்) அவரது சாந்தத்தைக் கண்டு இரங்கினவர்களொருவருமில்லை. இது துரோகம், துரோகம், தேவதுரோகமே. (உ௭௧)

மாரணத் தீர்ப்பிடு மன்ன னேவலன்
கோரணிப் படுத்துமக் கொடிய ரோவலர்
ஆரணன் பாடுக ளனைத்தி னுக்குமுற்
காரண நமதுதீக் கருமங் காண்டியால்.

(இ...ள்). அவர்படும் இவ் வாதைக்கெல்லாங் காரணம்) அவருக்கு மரண தண்டனை விதித்த அரசனுமல்ல. பல கோளாறுக் கவரை யுட்படுத்திய கொடிய யூதர்களுமல்ல. நாம் செய்த பாவங்களே வேதநாயகனது துன்பங்களுக்கு மூல காரணமென்பதை யறிந்துகொள்ளுங்கள். (உ௭௨)

வாவென வந்ததிவ் வுலகம் வந்தபோற்
போவென வொல்லையிற் புவன கோசரம்
ஆவன யாவுமே யகலு நீறியத்
தேவிவை சகிப்பதென் சிந்தை தேர்தி நீ

(இ...ள்.) அவர் வாவென்றழைக்க இவ் வுலகம் (சிருஷ்டியால்) வந்தது. அது வந்த விதமாகவே போ என்றால் நாம் பார்க்கு மிவ் வுலகமும் அதிலுள்ள யாவும் சீக்கிரத்தில் எறிந்து அழியும். (இம்மகத்துவம் வாய்ந்த) கடவுள் தனைசெய்திய கஸ்திகளைச் சகிப்பது யாது காரணத்தை முன்னிட்டென்பதை என் மனமே நீ யோசித்துப் பார். (உ௭௩)

## எருசலேம் நகரத்தார் புலம்பல்.

### வேறு

*கலி விருத்தம்.*

*வரிசை தப்பிய மன்னன நீதியும் வம்பர்*
*குரிசி லைக்குரு சேற்றியு யிர்ப்பழி கொள்ளும்*
*பரிசு மோடிப்ப ரந்தது பற்றுசெந் தீயில்*
*புரிசை மாநக ருள்ளமெ ரிந்துபு கைந்த.*

(இ...ள்). நெறி கெட்ட அரசனது நடு நிலைமையும், தேவ குமாரனை துஷ்டர்கள் சிலுவை யிலறைந்து உயிரை நீக்கும்படியான விஷயமும், யாவருமறிய எங்கும் விரைவிற் பரவியது. (இச் சேதி கேட்டவுடனே) ஆழ்ந்த மதில்களை த்தனக் கணியாககொண்டுள்ள எருசலேம் நகரவாசிகளது மனம் பற்றிஎரியும் நெருப்பைப்போல சுவாலித்துப் புகைந்தது. (உஎச)

*புகரி லாதநம் புண்ணியர்க் குற்றமை மேன்மேல்*
*நகர மாந்தர்செ விசுடக் கேட்டலு நைந்தே*
*நிகரி லாக்கொடும் பாதக நேர்ந்ததிங் கென்னுப்*
*பகரு வாரங்க வரவர்க் கொல்வன பன்னி.*

(இ...ள்). மாசற்ற புண்ணிய புருஷனுக்கு ஒன்றின்மே லொன்றாக வந்த துன்பத்தை எருசலேம் நகரவாசிகள் யாவருந் தங்கள் காதுக ளதிரும் படிகேட்டு, மனமுடைந்து, இதைவிடக் கொடிய வேோர் பாதகம் இங்கு நடந்ததில்லையே என்று ஒவ்வொருவரும் தங்கள் மனதிற்பட்டவைகளைச் சொல்லிப் புலம்பினார்கள்.

அப் புலம்பலைப் பின்வரும் எழு கவிகளா லோர்ந்துணர்க (உஎரு)

*நாசம் நங்குலத் துற்றதின் றேடென நைவார்*
*ஈசன் மைந்தனை யோகொலை செய்வது மென்பார்*
*தேசி கன்வயி னெப்பிழை கண்டிது செய்தார்.*
*நீச ரென்றுநெ டிதுயிர்த் தேங்கினர் நிற்பார்.*

(இ...ள்). சிலர் இன்றுமுதல் நமது குலத்திற்கு நாசம் வந்ததென்று வருந்துவார்கள். சிலர் ஜெகதீசனது புத்திரனையோ வதை செய்கிறதென் பார்கள். இந்த சற்குருவினிடம் என்ன குற்றத்தைக் கண்டு இவ்வாறு செய்தார்க ளென்பார் மற்றவர். இவர்கள் கேவலமானவர்க ளென்று பெரு மூச்சுடன் ஏங்கிநிற்பா ரனேகர். (உஎசு)

*மின்ன லின்றிவி ழுந்ததிவ் வெள்ளிடி யென்பார்*
*கன்ன லொன்றிவித் தொன்னக ரஞ்சுடு காடாய்*
*மன்னு மென்பர்சி லர்சிலர் வானிருண் மல்கித்*
*துன்னு ஜோதிக ளுந்தொலை யும்மெனச் சொல்வார்.*

(இ...ள்). சிலர் மின்னுமலும் மழைக்குண மில்லாமலும் இடிவிழுந்த தென்பார்கள். இப்பழைய பட்டணம் ஒரு விநாடியில் சுடுகாடாய்ப்போகு மென்பார் சிலர். வானமானது இருண்டு அதிலுள்ள நட்சத்திரங்களும் ஒன்றிப்போம் என்று சிலர் சொல்லுவார்கள். (உஎஎ)

தலைக விழ்ந்துல கந்தடு மாறலிற் றண்ணீர்
நிலைய மேவிடு மென்பர்சி லர்சிலர் நீண்ட
மலையு மண்டல முந்துக ளாகிடும் வானுங்
குலையு மண்டமுங் குப்புறு மென்பர்கொ தித்தே.

(இ...ள்). உலகந் தலை கவிழ்ந்து நிலை மயங்கும்போது சமுத்திரம் பொங்குமென்பார் சிலர். நீண்ட மலைகளும் பூமியும் தூளாகிவிடு மென்பார்கள். வானமும் குலைந்துபோம். ஆகாயமும் குப்புறக் கவிழும் என்று ஆத்திரத்துடன் சொல்லுவார்கள். (உஎஅ)

கண்ணி ருண்டுக லங்குவ ரோர்சிலர் காந்தும்
புண்ணு ளத்தோட ழுங்குவ ரோர்சிலர் பொங்கித்
துண்ணென் றுட்கித்து டிப்பவ ரோர்சிலர் சூழ்ந்த
தெண்ணி யெண்ணியி ரங்குவ ரோர்சில ரேங்கி.

(இ...ள்). கண்களொளி மயங்கிக் கலங்கி யழுவார்கள் சிலர். எரிகிற புண்ணுன இருதயத்தோடு வருந்துவார்கள் சிலர். மனம் பொங்கி திடுமென்று பயந்து துடிதுடிப்பார்கள் சிலர். நடந்தவைகளை நினைத்து நினைத்து ஏங்கி மனமிரங்குவார்கள் சிலர். (உஎகூ)

காவிற் காட்டிக்கொ டுத்தவக் கள்வனிற் கள்ளக்
குரவ ரேகொடி யாரென்ப ரோர்சிலர் கூறில்
உரவு நீருல கத்திதை யொத்தநி யாயம்
விரவிற் றுண்டுகொ லோவென்ப ரோர்சிலர் வெம்பி.

(இ...ள்). வஞ்சனையுடன் காட்டிக்கொடுத்த (யூதாஸ் என்னும்) துரோகியைவிட மாய்மாலம் நிறைந்த பிரதான ஆசாரியர்களே கெட்டவர்களென்பார் சிலர். யோசிக்குங்கால் பெரிய சமுத்திரத்தால் சூழப்பட்ட உலகத்தில் இதுபோன்ற அநியாயம் நடந்தது உண்டோ என மனம் வாடுவார் சிலர். (உஅ0)

என்கொல் மேதினி கீண்டுவெ டித்தில தென்பார்
என்கொல் வானமி டிந்துவி ழுந்தில தென்பார்
என்கொல் வாரிதி நீர்சுவ றுதது மென்பார்
என்கொ லோமுடி வித்துணை தாழ்த்தது மென்பார்.

(இ...ள்). இப்பூமி ஏன் புரைவிட்டு வெடிக்கவில்லை யென்பார்கள். வானம் இடிந்து ஏன் விழவில்லை என்பார்கள். சமுத்திரஜலம் ஏன் வற்றவில்லை என்பார்கள். முடிவுகாலம் வராது இதுவரையில் தாமதமாக விருப்பது எதினாலோ என்பார்கள். (உஅக)

கண்ப டைத்தில மேலிது காண்கில மென்பார்
மண்ப டைத்தபி ணிக்கினி மாற்றிலை யென்பார்
புண்ப டைத்தநெஞ் சோடுயிர் போகல வென்று
எண்ப டைத்தவ ரின்னன பன்னிடு மெல்வை.

(இ...ள்). நமக்குக் கண்களில்லாவிடில் இதைப் பார்க்கமாட்டோம் என்பார்கள். இப் பூமியிலுள்ளவர்கள் வலிய வரவழைத்துக் கொண்டவித்

துன்பத்திற்கு இனிப் பரிகாரமில்லை என்பார்கள், நெஞ்சு புண் பட்டிருக்கும் பொழுது (எங்கள்) உயிர் ஏன் போகவில்லை யென்ற எண்ணமுடையவர்கள் இவ்வாறு சொல்லிப் புலம்புஞ் சமயத்தில். (உஅஉ)

(ஸ்காரியோத்து தற்கொலை)

மோச மாயருண் மூர்த்தியை முப்பது வெள்ளிக்
காசை நச்சியொன் னார்கையிற் காட்டிய கள்வன்
மாசி லானைவ தைத்துயிர் மாய்க்கெனும் வன்சொல்
நீச நெஞ்சினிற் றைத்தது நெட்டிலை வேல்போல்.

(இ...ள்). முப்பது வெள்ளிக்காசுக் காசைப்பட்டு, அருள்மூர்த்தியைப் பகைவர் கையில், மோசமாகக் காட்டிக் கொடுத்த துரோகியாகிய ஸ்காரியோத்தென்னும் ஈனனது நெஞ்சில், குற்றமற்ற எம்பெருமானை இம்சித்துக் கொன்றுவிடுங்க ளென்ற குரூரமான தீர்ப்பானது, நீண்ட தகடுபோன்று பிரகாசிக்கு மீட்டியைப் போற் பாய்ந்தது. (உஅங)

இதயத் துள்ளுற வூன்றலு மின்றெனு லாகிப்
புதைய லுற்றவ கக்கரி மெல்லெனப் போந்து
வதைபுரிந்தருள் வள்ளலை மாய்க்கவ குத்தாய்
எதைவி ழைந்துயிர் வாழுதி கேளென்றி டிக்கும்.

(இ...ள்). இந்த (வருத்தமான) எண்ணம், அவர் நெஞ்சிற் பதிய, கொஞ்ச நேரத்திற்குமுன காட்டிக் கொடுத்ததுபோல் குழியிலகப்பட்ட மதயானையை யொத்த (அவன் மனச்சாட்சி) மெதுவாக அவனைத் தூண்டி கருணை சமுத்திரமாகிய கடவுளை யிம்சித்துக் கொன்றுவிடச் செய்தாய். எதைக்கொண்டுயிர் பிழைக்கப்போகிறாய் என்றுகேட்டு அவனை வாதித்தது.

யூதாஸின் மனச்சாட்சி அவனை வாதித்த விதத்தை இதுமுதல் பத்துக் கவிகளா லின் நூலாசிரியர் விபரமாகக் கூறுதல் காண்க. (உஅச)

பணம்வி டங்கொள்ப ணுமுடி யென்பது மற்றக்
குணம்வி ளக்குவ தாட்கொலி யென்பதுங் கொள்ளாய்
மணம்வி ழைந்திறும் வண்டென லாயினை மாளாப்
பிணமெ னத்திரிந் தாரளு ருற்றனை பேதாய்.

(இ...ள்). மூடனே பணமானது விஷத்தைக் கொண்டிருக்கும் பாம்பின் தலையென்பதுந்தவிர பாம்பின் குணத்தையொத்த ஆட்கொல்லியென் பதையு நீ அறியவில்லையே (தேனின்) வாசனையை விரும்பி (அதிலிருந்து) சாகும் வண்டைப் போலானாய், மேலும் நீ சாகாப் பிணத்தைப்போல லைந்து நிறைந்த துன்பத்தை யடைந்தனை யல்லவா? (உஅரு)

களவி னாற்பொரு ளைக்கவர் வானசை தூண்டும்
அளவி லுன்னைய தட்டின னவது கொள்ளாய்
உளவ றிந்துனக் குற்றுழி யுண்மையு ரைக்கும்
வளவ னுமெனை யற்பமு மெண்ணலை மாற்றோய்.

(இ...ள்). வஞ்சகத்தினாற் பொருட் சேர்க்கும் பொருட்டு பண ஆசை உன்னைத் தூண்டுஞ் சமயத்தில் உன்னை (எச்சரித்து) அதட்டினது யார் என்பதை நீ அறிந்துகொள்ள வில்லையே. பகைவனே (பண ஆசை உன்னை மோசத்திற்குட்படுத்தும்) உபாயமறிந்து உனக்கு ஆபத்து வந்த சமயத்தில் நியாயத்தை எடுத்துக் காட்டுஞ் சிநேகிதனாகிய என்னை நீ சற்றும் மதிக்க வில்லையே. (உஅசு)

பொருளை நச்சினை போதமி லாய்புரை யில்லா
அருளின் வாழ்வினை யாக்கினைத் தீர்ப்பினுள் ளாக்கி
மருளு றும்புலை மக்களொ டோயெரி வாய்ந்த
இருளு றுங்கொடும் பாதலத் தெய்துவை யின்றே.

(இ...ள்). அறிவில்லாதவனே! பண ஆசையைக் கொண்டாய். கிருபாநிதியாகிய மாசற்றக் கடவுளைச் சிரசாக்கினைத் தீர்ப்படையும்படி செய்து அஞ்ஞான நிறைந்த கேவலமான மனிதர்களுடன் சேர்ந்து நெருப்பெரிகிற இருள் நிறைந்த கொடியபாதாள நரகத்தில் இப்பொழுதே போகப்போகிறாய்.

பழிக்குப் பாவத்துக் கஞ்சலை பல்லவர் தூற்றும்
மொழிக்கு நாணலை முன்பினாற் றாய்ந்திலை முற்றும்
அழிக்கு நீசப்ப சாசுக்க டித்தொழும் பாய்நேர்
வழிக்கு வாரலின் றாயினை யான்மதி மாண்டோ ராய்.

(இ...ள்). புத்தி கெட்டவனே, நீ பழி பாவத்திற் கஞ்சவில்லை. பலர் நிந்திக்கும் வார்த்தைகட்கும் நீ வெட்கப்படவில்லை. நீ முன்பின் யோசிக்கவுமில்லை. உன்னை அடியோடு கெடுக்கும் நீசப்பசாசுக் கடிமையாகி சன்மார்க்க மடையாமற் போனாய். (உஅஅ)

விதிவி லக்கையி கந்தவன் மெய்ந்நெறி விட்ட
பதித ரிற்பதி தன்கொலை பாதகன் நட்பிற்
சதிபு ரிந்தசண் டாளன்ற னைத்தெரி கிற்பின்
மதியி லீயுனை யன்றியிம் மாநிலத் தியார்கொல்.

(இ...ள்). நீ செய்யத்தக்கவை யிவை யென்றுஞ் செய்யத் தகாதவை யிவை யென்பதையு மாராயாது விட்டு விட்டவன். நல்லொழுக்கத்தைத் தவறின பாவியினும் பாவி. கொலை பாதகன். சிநேகத்தில் நயவஞ்சகங் காட்டின துரோகி. யோசித்துப் பார்த்தால் உன்னைவிட மதிகேடன் இவ்வுலகில் வேறு யார்? (உஅகூ)

அறந்தி றம்பிய வாயுள்ப டைத்தவில் யாக்கை
இறந்து பாழ்பட லீனமன் றாலிவ்வி கத்திற்
பிறந்தி ராயெனி னன்றெனப் பேசிய மாற்றம்
மறந்து விட்டனை யாங்கொன்ம றந்திரம் பில்லாய்.

(இ...ள்). பாவத்தைவிட்டு நீங்காதவனே! தருமமற்று நீண்ட நாட்கள் வாழ்வதைவிட இச்சரீரத்தை இழந்து கஷ்டப்படுவது கேவலமானதல்ல. நீ இவ்வுலகிற் பிறந்திராவிடில் நலமாகவிருக்குமென்று எம்பெருமான் முன் சொல்லிய வார்த்தையை நீ மறந்துவிட்டாயோ? (உகூ0)

*நன்றி கொன்றனை நல்லுணர் வற்றனை நாசந்*
*துன்றி நின்றனை தொன்னெறி தூர்த்தனை தூர்த்த*
*பொன்றி னும்வசை போவதின் றூற்புவி மீதே*
*பின்றி நின்றுநின் றெண்ணினிச் செய்குவை பேதாய்.*

(இ..ள்). மூடனே! நன்றியை மறந்தாய், நல்லுணர்வற்றவனானாய், உனக்கு கெட்ட காலஞ் சமீபித்திருக்கிறது. பழமையான சன்மார்க்கத்தைக் கெடுத்தாய். நீ மறந்துபோனாலும் இப்பழி யுன்னைவிட்டுப் போவதில்லை. ஆகையால் இப்பூமியிலிருந்து என்ன செய்யப் போகிறாய். (உகூக)

*மேவ லாரையு வந்தனை முப்பது வெள்ளிக்*
*காவ லாயரு ளாளனை விற்றனை யந்தோ*
*ஜீவ நல்லமு தத்தையு குத்தினை தீராத்*
*தீவி டத்தைய ருந்தினை யுய்வினைத் தீர்ந்தாய்*

(இ...ள்). சத்துருக்களுடன் சிநேகங் கொண்டாய். முப்பது வெள்ளிக் காசைப்பட்டுக் கிருபாநிதியை விற்று விட்டாய். ஐயோ! ஜீவனுக்காதாரமாகிய தேவாமிர்தத்தைச் சிந்தினவனானாய். எக்காலு முன்னைவிட்டுநீங்காத கொடிய விஷத்தை யுண்டாய். ஈடேற்றத்தைவிட்டு நீங்கினாய். (உகூஉ)

*குற்ற மற்றகு ருதிநி லத்துகக் கொண்டு*
*விற்ற காசெனும் வெந்தழ லுன்மடி மேவப்*
*பற்ற வைத்தனை யேகொடும் பாழ்மதி யின்னும்*
*உற்ற வோர்துணை காசென வுன்னுதி போலாம்.*

(இ...ள்). கெடு புத்தி யுடையவனே! குற்றமற்ற இரத்தம் பூமியிற் சிந்தும்படி யதை விற்றகாசாகிய கொடிய நெருப்பை உன் மடியில் வைத்து எரிய விட்டாய். பின்னும் அப்பணமே யுனக்காதாரமாக விருக்குமென்றெண்ணினாய் போலும். (உகூங)

*என்ற கத்துரு சாக்ஷியி டித்திடித் தின்ன*
*வன்றி றற்கொடு றுத்தம றுத்தொறு மாற்றம்*
*நன்றி கெட்டயு தாசுந விற்றில னுடில்*
*என்று முண்மைக்கெ திருரை யின்றென லாமால்.*

(இ...ள்). இவ்வாறு நன்றிகெட்ட யூதாஸின் மனச்சாட்சியே அவன் மனதைக் குத்திக் குத்தி வல்லமையோடு வாதிக்க அதற்கவன் மறு வார்த்தையொன்றுஞ் சொல்ல வியலாதிருந்தான். இதனை சீர்தூக்கிப் பார்க்குங்கால் உண்மையை மறுத்துச் சொல்ல வார்த்தை ஒருநாளு மில்லை யென்றே சொல்லலாம். (உகூச)

*கடிந்து புண்படுத் தும்மனச் சாக்ஷியைக் காய்ந்து*
*நொடிந்தி டானெனி னும்புகன் முட்டின னொந்தான்*
*மடிந்து போயில னுயினிவ் வாதையை மாற்ற*
*முடிந்தி டாதென வுள்ளம்வ லித்தனன் மூண்டான்.*

(இ...ள்). மனதைக்கடிந்து புண்படுத்தும் மனச்சாட்சியை வெறுத்து அதை யலட்சியஞ் செய்யாது விட்டவனாக விருந்தாலும் அடைக்கலமற்றவனாக மனம் வருந்தினான். "நான் செத்தாலன்றி இம்மனவாதையைவிட்டு நீங்கமுடியாது" என்றுந் தன் மனதை வல்லமையுடன் அடக்கி யொருவாறு திடங் கொண்டான். (உகூ௫)

வள்ள லார்திருக் கோயிலை வல்விரைந் துற்றான்
கள்ள வேடக்கு ரவரைக் கண்டெதிர் காட்டி
எள்ள ருங்குணத் தியேசுவை நுங்கையி லீந்தேன்
வெள்ளி யிற்படு முப்பது காசிதை வெஃகி.

(இ...ள்). அதிக விரைவுடன் தேவாலயஞ் சென்று பக்தியுள்ளார் போல வேஷம்போட்டு நடிக்கும் அங்குள்ள கள்ளக்குருமாரை நேரில்கண்டு, "வெள்ளியினாற் செய்யப்பட்டிருக்கு மிம்முப்பது காசாகிய இப்பணத்தின் ஆசையினால், யாவராலு மிகழப்படாத குணத்தையுடைய இயேசுபிரானை உங்கள் கையிலொப்புக் கொடுத்தேன்." (உகூ௬)

பேச ருங்கொடும் பாதகம் பேணிய பித்தேன்
மாசி லாதவி ரத்தம்வடிந்துக வாங்கிக்
காசு கொண்டினி னுவவர் கொள்ளவர் காசை
வீசி யேகினன் பேய்பிட ருந்திட வெம்பி.

(இ...ள்). சொல்லவுந் தகாத பெரிய பாதகஞ் செய்த பைத்தியக்காரன் யான். குற்றமற்ற இரத்தஞ் சிந்தும்படிச் செய்ய வாங்கின இப்பணத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்ல அவர்களதை வாங்காதபடியால், அப்பணத்தை வீசி யெறிந்துவிட்டுத் தன்னைப் பிசாசானவன் புறங்கழுத்தைப் பற்றித் தள்ள மன வாட்டத்துடன் நடந்தான். (உகூ௭)

எப்பெருங்கொடும் பாவிக ளுங்கரை யேற
இப்பு விக்கணு தித்தரு ளுங்கும ரேசன்
துப்பு றழ்ந்தசெஞ் சேவடிச் சூழலைத் துன்னான்
வெப்பு றழ்ந்தநி ரையக்கி டங்கிடை வீழ்வான்.

(இ...ள்). எப்பேர்ப்பட்ட கொடிய பாவிகளு மீடேற வேண்டி, இவ்வுலகத்தி லவதரித்தருளிய இயேசுபெருமானின் பரிசுத்தமான சிவந்த பாதத்தடியில் வந்தடையாதவனும் உஷ்ணமான நரகக் குழியில் விழுபவனுமானான்.

பணிந்த சிந்தைய பாமரன் சென்றொரு பாங்கர்
தனித்த சூழலில் நாண்கொடு தற்கொலை செய்தே
அநித்த தேகத்தை வீழ்த்தின னருயி ரந்தோ
இனித்திரும்பரி தாகிய துர்க்கதி யெய்த.

(இ...ள்). மனனடுக்கங் கொண்ட வம் மூடன், ஒரு பக்கமாகத் தனித்த இடத்திற்குப்போய்க் கயிற்றைக் கொண்டு தற்கொலை செய்து நிலையற்ற தன் சரீரத்தின் பொருந்தியுள்ள அருமையான உயிரைப் பிரித்து இனி மீட்பில்லா நரகத்தை யடைய தன் தேகத்தைக் கிடத்தினான். இது பரிதாபமே. (உகூகூ)

நன்மை தீமையை நாடிந விற்றுந லங்கூர்
தன்ம சாக்ஷியை மெய்த்துணை யாக்கிய தக்கோர்
ஜென்ம சாபல்லி யம்மடை வாரதைச் செற்ற
கன்மி கள்ளெவ ருங்கடைத் தேறலர் காண்டி.

(இ...ள்). நன்மை தீமையை யாராய்ந்து சொல்லு மேலோனாய் நீதி பராகிய ஜெகதீசனை, உண்மையான ஆதரவாகக் கொண்டுள்ள பக்தர்கள் ஆத்ம ரட்சிப்பை யடைவார். அவரை அசட்டை செய்த பாவிகள் யெவரு மீடேற மாட்டார்கள். (௩00)

சுடுக னற்சுடர் நச்சுப தங்கமுந் தூண்டில்
இடுமி றைச்சிநு கர்ந்திடு மீனமு மென்ன
நடுவி கந்தபொ ருளெனு நஞ்சைந யப்போர்
கெடுவ ராருயி ரையுற லேபெருங் கேதம்.

(இ...ள்). அனல் கொளுத்தும் நெருப்பின் சுடரை விரும்பிவரும் வீட்டில் பூச்சியைப் போலும், தூண்டி முள்ளில் தொகுத்திருக்கும் மாம் சத்தை யுண்ணும்படி வரும் மீனைப் போலும், அநீதியான பொருளென்னும் விஷத்தில் ஆசை வைப்பவர்கள் அழிந்து போவார்கள். அவர்க ளுயிரோ டிருப்பதுங் கேவலம். (௩0௧)

பழியும் பாவமுந் தன்னொடு பற்றவும் பாரில்
ஒழிவி லாவசை யும்மவ கீர்த்தியு மோங்கி
வழிவ ழிக்குநி லவவும் வைத்துயிர் மாண்டு
கழிவி லாவிருட் கங்குலுட் புக்கனன் காரி.

(இ...ள்). பாவமும் பழியுந் தன்னைச் சாரவும், இவ் வுலகிலென்று நீங்காத இகழ்ச்சியும் அபகீர்த்தியும் பெருகி பரம்பரையாக நிலை நிற்கவுஞ் செய்து, தானுமிறந்து போய், என்றும் மூடிநிற்கும் மரண இருளிலே யூதாஸ் காரியோத்து போய்ச் சேர்ந்தான். (௩0௨)

காரி வீசியெ றிந்தவக் காசுகைப் பற்றி
சோரி தோய்ந்தன வென்றொரு துண்டுநி லத்தைப்
பூரி யர்விலை கொண்டுபு தைத்திடு மீமச்
சீசரி யாக்கினர் தீர்க்கர்முன் செப்பிய சீர்போல்.

(இ...ள்). யூதாஸ் காரியோத்து வீசி யெறிந்த அக்காசை அம்மூடர்கள் எடுத்து அதில் இரத்தக் கறைபட்டிருக்கிறதென்று ஒரு சிறு இடத்தை விலைக்குவாங்கி தீர்க்கதரிசிகள் ஆதிகாலத்திற் சொல்லியபடி அவ்விடத்தைப் பிணம் புதைக்குங் களமாக்கினார்கள். (௩0௩)

தீர்ப்புக் காண்டம் முற்றிற்று.

காண்டம் நாலுக்குத் திருவிருத்தம் 303,

ஐந்தாவது

# மரண காண்டம்

---

## நீதி யிரக்க சமரசம்

---

பரமபதியாகிய கடவுள், நீதியில் தகிக்கும் அக்கினி யாகவும், இரக்கத்தில் ஒப்புயர் வற்ற கிருபையாம் தண்ணளி சுரக்குந் தன்மை யுள்ளவ ராகவும், விளங்குகின்றார். சிருஷ்டிப்பு வகையில் சிரேஷ்டம பெற்ற மானிடர்கள், அவரது நெறியினின்று விலகும்போது, நீதியின்படி அவர்களை தண்டிப்பதும், இரக்கத்தின்படி அபய மளிப்பதுவுமே, அக் கிருபாநிதியின் அருந் தொழிலு மிலட்சணமுமாகும்.

தீவினைக் கோர் களஞ்சியமா மிவ்வுலகின் கண்வாழும் மானிடர்கள், தெய்வ நியமத்தி னின்றும், விலகின காரணத்தால், பாபாந்தகாரச் சிறையி லகப்பட்டதின் பயனாய், தெய்வ கோபாக் கினையால் வரும் நரகதண்டனைக் காளாக விருக்கின்றனர். தெய்வ நீதியின்படி, பாவத்தின் பலனால் வரும் தண்டனையின் அகோரத்தை மானிடர்கள் சகிக்கக் கூடியவர்க ளல்லர். அந் நடுநீதி, சாந்தப் படுமட்டும், தெய்வ இரக்கத்திற்கு அவர்கள் அருகருமல்லர். அப்படிப் பட்டவர்களை, அவர்முற்றுந் தண்டித்தாலும், முழுதும் மன்னித்தாலும், தெய்வ இலட்சணத்தின் மகிமையைப் பின்னப் படுத்துமாகையால், நீதியையு மிரக்கத்தையுஞ் சமரசப் படுத்துவதே கருணைக் கடலாம் பகவானின் நியமமாயது.

ஆனது பற்றி; விண்ணுலகமே யடங்கா மகிமை வாய்ந்த தயாபரக் கடவுள், நீதி யிரக்க சமரசராக வேண்டுமென, இம் மண்ணுலகில், திருக்குமாரனாக அவதரித்து, மானிடர்கள் பேரிலுள்ள அன்பினால், அவர்கள் பாவங்க ளனைத்தையுந் தாமே யேற்றுக்கொண்டு, தமது ஒப்பற்ற இரக்கத்தை வெளியிட்ட தல்லாமல், பாவத்துட் சிக்கிய மானிடர்கள், தெய்வநீதியின்படி யடையவேண்டிய தண்டனைக ளனைத்தையுந் தாமே சகித்து, அதன் பயனாய் ஆத்தும கஸ்தியுடன், தமது திருச்சரீரத்தும் இரத்தம் பிரவாகிக்க, அவஸ்தைப்பட்டு, முடிவில் பாவ பிராயச்சித்த பலியாகி, பிராணத்தியாகஞ் செய்து, மங்காது சதா பிரகாசிக்குந் தெய்வநீதியையும் நிறைவேற்றி யருளினார்.

உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற செம்மறிப்புருவை யாகும் ஸ்ரீ கிறிஸ்து நாதர், கல்வாரிமலை யென்னும் யாகமேடையில், அப் பாவத்தின் அகோர மடங்க, தெய்வநீதி யென்னும் ஓமகுண்டத்தில் * சிலுவை யென்னும் பலிபீடத்தில், தன்னையே பலியாக வொப்புக் கொடுத்து, நீதியையும் இரக்கத்தையும் சமரசப்படுத்தின சத்திய சரிதையை விளக்கமாக வுரைப்பதால், இப்பாகத்திற்கு "மரண காண்டம்", எனப்பெயர் தருவதாயிற்று.

இவ்வுண்மையை மனம், வாக்கு, காயமென்னும் திரிகரண சுத்தமுடையாராய், உய்த் துணர்ந்து விசுவாசித்து, உத்தம மனஸ்தாபத்துடன், பாவத்தால் வருங்கேட்டை யுணர்ந்து, இரட்சா பெருமானாகிய ஸ்ரீ கிறிஸ்து நாதராகும், அவ் வவதார மூர்த்தியை, இதயாசனத திருத்தி, தியானத்திலும், நன் னடக்கையிலும், பற்றுடையோராய் வாழ்பவர்களே, இரட்சிப் படைந்து நித்தியானந்த பதவியைப் பெறுவார்கள். இஃதே, கிறிஸ்து சமய உத்தம சத்திய போதகம்.

கலி விருத்தம்

தன்னுயிர் போயாக்கை தலைகீழு றவிழுந்து
சென்னித கர்ந்துகு டர்சிதறிச் செத்தொழிந்த
துன்னரிய சாமித்து ரோகிசெய லிற்றாகப்
பன்னருநம் மான்சிலுவைப் பாடுகளை யுன்னுவாம்.

(இ...ள்). கிடைப்பதற் கருமையான தன்னுயிரை யிழந்து, தேகந் தலைகீழாக விழுந்து தலையுடைந்து, குடல் சிதைந்து மாண்டுபோன தேவதுரோகியின் விஷயமிவ்வாறு முடிய, வர்ணிப்பதற் கரிதான நம்பெருமானது சிலுவைப்பாடுகளை இனி சிந்திப்போமாக (௩0௪)

பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
வல்லானை யெள்ளிப்பு றக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்வித்து ணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாநம் மீசன்பொ றுத்திருந்தார்.

(இ...ள்). கெட்ட யூதர்களும். போர்ச் சேவகர் கூட்டமும், சர்வ வல்லமையுடைய கடவுளை இழிவாகப் பேசிக் கேலிபண்ணி வாய்க்கொழுப்பினால் சொல்லத் தகாத கெட்டவார்த்தைகளைச் சொல்லித் தைரியத்துடன் அவர்கள் தமக்குச் செய்யுந் தீமைகளை யெல்லாம், நம்பெருமான் பொறுத்திருந்தார். (௩0௫)

* பலியை யுட்கொள்ளும் பரிசுத்த அக்கினி. ஸ்ரீ கிறிஸ்து நாதருக்கு இது காரணத்தால் தேவ ஆட்டுக்குட்டி யென மற்றொரு பெயருமுண்டு. புருவை-ஆட்டுக்குட்டி.

புற்றரவிற் சீறிப்பு டைவளைந்து புல்லியர்தாந்
துற்றிவி ளைத்தகொடுந் துன்பந்த னியுழந்து
முற்றுங்கி ரகணத்தின் மூழ்குதி னகரன்போல்
செற்றமிலாத் தேவமைந்தன் றேசிழந்து தேம்பினர்.

(இ···ள்). அக் கீழ்மக்கள், புத்திலுள்ள பாம்பைப்போற் சீறி, அவரைச் சுற்றி வளைந்து நெருக்கி யுண்டாக்கிய துன்பமனைத்தையுந் தனியாக சகித்தவராய் முழுக்கிரகணத்தில் சூரியன் மறைவது போலும் கோபக்குணமற்ற தேவகுமாரனாகிய நம் பெருமான் பிரகாசமற்று வாடினர். (௩0௬)

செவ்வங்கி யைக்களைந்து தேவர்பிரான் முன்றரித்த
அவ்வங்கி யைத்தரித்தே யாகடியம் பல்பேசித்
தெவ்வர்கு முமிச்சி லுவைத னைச்சுமத்திக்
கவ்வைந கர்கலுழக் கட்டிச்கொ டுபோனர்.

(இ...ள்). நம்பெருமான் மேலிருந்த, சிகப்பு வஸ்திரத்தை நீக்கி அவர் முன்தரித்திருந்த உடுப்பையே (திரும்பவும்) உடுத்தி, யப்பகைவர்கள் யாவருமொன்றாகக் கூடிப் பரிகாசமான பல வார்த்தைகளைச் சொல்லிச் சிலுவையையவர்மேல் வைத்து துன்பத்துக் குள்ளான எருசலேம் நகரத்தார் அழும்படியவரைக் கட்டிக் கொண்டுபோனார்கள். (௩0௭)

நோக்கிலணு வொவ்வொன்று நூறுயி ரங்கோடி
மாக்கயத்தின் சும்மைம லிந்தபா வந்திரட்டி
ஆச்குசி லுவைய மலன்சி ரத்தேந்திக்
காக்கைக டனாகக் கல்வாரி நோக்கினர்.

(இ...ள்). யோசிக்குங்கால், ஒவ்வொரு அணுவும் பலங் கொண்ட நூறுயிரம் யானைகள் சுமக்கக் கூடிய பாரம்போன்ற பாவங்களைச் சேர்த்துச் செய்துள்ள சிலுவையைப் பரிசுத்தமான கடவுள், தன் தலையில் தாங்கி யிவ்வுலகை இரட்சிப்பதே தன் கடமையாகக் கருதிக் கல்வாரி மலையை நோக்கிச் சென்றார். (௩0அ)

வள்ளல்கு ருாயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளிய வதரித்த வெம்மான்ச ருவேசன்
கொள்ளைபு ரிந்துகொ லைததீர்ப்புப் பெற்றுவரு
கள்ளரி ருவரொடுங் கல்வாரி நோக்கினர்.

(இ...ள்). உத்தமர்கள், தம்மை மன்றாடி எதை விரும்பிக் கேட்பார்களோ, அதனை வரையாது கொடுக்குங் கருணைவாய்ந்த தேசிக மூர்த்தியானவர், பிற வுயிருக்காகத் தன்னுயிரை யிலட்சியஞ் செய்யாது மனிதாவதாரமெடுத்த கல்லாமல், எம்பெருமானாகிய ஒப்புயர் வில்லாதான், களவு செய்து அதனிமித்தம் மரண ஆக்கினை பெற வருமிரண்டு கள்ளர்களுடன், தானுங் கல்வாரி மலையை நோக்கிச் சென்றார். (௩0௯)

மாரணத்தின் கூரொடிய வன்பேய்த லைநசுங்க
ஆரணஞ்சொல் லுண்மை யவனிமி சைவிளங்கப்
பூரணமா ரக்ஷணிய புண்ணியங்கை கூடுதற்குக்
காரணமாஞ் செய்கைமுற்றக் கல்வாரி நோக்கினர்.

(இ...ள்). சாவின் கூர்மையான வீர முடைந்துபோக, கொடிய சாத்தானின் தலை பஞ்சுபோலாக, சத்திய வேத வசனங்களி னுண்மை இவ்வுலகில் யாவருக்குந் தெரிய, இரட்சிப்பின் மேன்மை பூரணமாகக் கைகூடுவதற்கு ஆதார மானவைகளைச் செய்து முடிக்க, கல்வாரி மலையை நோக்கிச் சென்றார். (கூ௰)

மரணம் என்பது எதுகை நோக்கி மாரணம் என்றாயிற்று.

ஈசன்சி னநோக்கி யீனநரரைப்பிணித்த
பாசவினை நோக்கிப்ப ரிந்துநடு நின்றுவரும்
பேசரிய துன்பப்பி ரளயத்தை நோக்கியிந்தக்
காசினியை நோக்கினர் கல்வாரி நோக்கினர்.

(இ...ள்). ஜெகதீசனது கோபத்தைப்பார்த்தும், மனிடரைக் கைவசப்படுத்தியுள்ள கேவலமான பாவ பாசத்தைப் பார்த்தும், மத்தியஸ்தராக (அதனை நீக்க) அன்புடன் நிற்பதினால் வரும் அளவற்ற துன்ப வெள்ளத்தைப் பார்த்தும், இவ்வுலகி லவதரித்த எம்பெருமான் கல்வாரி மலையை நோக்கிச் சென்றார். (கூ௧௧)

அற்புத மும்வானத் தசரீரியும புனிதச்
சொற்பயில் வுமெல்லாச் சுகுணங்க ளுமிவரே
தற்பரனென் றேலமிடச் சண்டாளர் தாமிதனை
அற்பமு மெண்ணாத தறவுமநியாயம்.

(இ...ள்). உலகி லவர் நடத்திய அற்புதங்களும், (அவர் ஞானதீட்சை பெற்ற சமயத்தில்) வானத்தி லிருந்துண்டான சத்தமும், பரிசுத்த (தீர்க்கதரிசன) வேத வசனங்களும், அவரில் வெளியான சகல நற்குணங்களும், (ஏகோபித்து) இவரே கடவுளென்று யாவருமறிய விளம்பியும், பாவிகளான யூதர்கள் இவைகளைச் சற்றேனும் நினைத்துப் பாராமற் போனது பெரிய அநியாயமே. (கூ௧௨)

தத்துநீர் வேலித்த ராதலத்தோர் செய்தவினை
அத்தனை யுந்தாங்கி யலமந்து மாங்கமைந்து
சத்தமி டாதேகுந் தகனப லிமறியாம்
உத்தமருஞ் சாந்தமா யூரூடு செல்கின்றார்.

(இ...ள்). பாய்கிற தண்ணீரால் சூழப்பட்ட, பூலோக வாசிகள் புரிந்த பாவங்க ளனைத்தையுஞ் சுமந்து வருந்தியும், பலிபீடத்திற்குத் தகனஞ் செய்யப்பட சத்தம் போடாமற் போகும் ஆட்டுக் குட்டியுமாக விளங்கிய உத்தம புருஷன் : அமைதலோடு (எருசலேம்) நகரின் மத்தியிலே போனார்.

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்யசி லுவைசு மந்தலசி மெய்வருந்தித்
துய்யதி ருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்ம றுகூடு வரக்கண்டா ரணிநகரார்.

(இ...ள்). நம்பெருமான், தனதுகைகள் சோர்ந்துபோய், வாயுலர்ந்து போய், கண்களிருண்டுபோய், காதுகளு மடைபட்டுப்போய், பாரமான சிலுவையைச் சுமந்தலைந்து, சரீரம் வருந்தி பரிசுத்த பாதங்கள் சளைத்து, கால் நடக்கவியலாது தடுமாட்டத்துடன வீதியின் நடுவில் வருவதை அழகான எருசலேம் நகரத்தார் பார்த்தார்கள். (நுசச)

## எருசலேம் மாது புலம்பல்

கல்லியல்வன் னெஞ்சவஞ்சக் கண்ணிலாப் பாதகராம்
புல்லியரே யன்றியிந்தப் பொல்லாங்கு போந்தமைகண்
டெல்லவ ருந்தத்த முயிர்க்கிறுதி யெய்ந்தனபோல்
அல்லலு ழந்தல மந்தாக்கை நிலைதளர்ந்தார்.

(இ...ள்). கல்லைப்போன்ற கொடிய வஞ்சக விருதயமுடைய இரக்கமற்ற துரோகிகளான ஈனயூதர்கள் தவிர, மற்ற யாவரும், இத்தீமைகள் நம்பெருமானுக்கு வந்ததைக் கண்டு மனம் வருந்தி, தங்களுயிர்க்கே முடிவுவந்தது போல துன்பப்பட்டு மயங்கித்தங்கடங்கள் சரீர நிலை குலைந்தார்கள்.

மாதருக்கு ளாசிபெற்ற மங்கலையா மன்னைமரி
காதலனுக் கோவிக்க தி நேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்றுது மெல்லியலார் தாங்குழுமி
வீதியி ருமருங்கு மொய்த்தார்வாய் விட்டழுது.

(இ...ள்). இஸ்திரீகளுக்குள்ளே ஆசீர் வதிக்கப் பட்ட கற்புள்ள தாயாகிய மரியாளின் குமாரனுக்கா இக்கதி வாய்த்ததென்று பெண்களெல்லா மொன்றாய்க் கூடி ஆறுமனவேதனையுடன் வாய் விட்டழுதுக் கொண்டு வீதியி னிருபக்கமும் வந்து கூடினார்கள்.

இஸ்திரீகளுக்குள்ளே ஆசீர் வதிக்கப்பட்ட மரியாளை "வையகம் வைகும் வாய்ந்த மாதரு ளெண்ணிலாசி துய்யகம் பொலியப் பூத்த சுந்தரி" யென வீரமாமுனிவர் தாம் பாடிய தேம்பாவணியில் கூறியிருத்தல் காண்க.

இதுமுதல் பதினைந்து கவிகளால் எருசலேம் மாதர்களின் அழுகையை விஸ்தரிக்கின்றார் நூலாசிரியர். (நுசசு)

காந்தண்ம லர்செங்க மலமல ரைப்புடைப்பப்
பூந்தண்க ருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவு தொக்கநறுஞ் சேதாம்ப லையலர்த்தி
மாந்தண்ட லைக்குயிலின் மென்மொழியார் மாழ்கினர்.

(இ...ள்). காந்தள் புஷ்பத்திற்குச் சமானமான கையால், சிவந்த தாமரைப் புஷ்பத்தை யொத்த முகத்தி லடித்துக் கொண்டு அழகிய குளிர்ந்த நீலோர் பல புஷ்பமாகிய கண்ணில் முத்துப் போன்ற நீர் துளி வடிய, தேன் வடியு முல்லைப் பூவையொத்த பற்கள் தெரிய, சிவந்த அல்லிப்பூவை யொத்த வாயைத் திறந்து, அழகிய குளிர்ந்த சோலையிலுள்ள குயில் போலு மினிய வார்த்தைகளை யுடைய பெண்கள் அழுதார்கள்.

காந்தண் மலர்-கார்த்திகைப்பூ. இது இஸ்திரீகளின் கரங்களுக்கொப் பாகப் புலவர்களாற் செய்யுளி லலங்கரித்துச் சொல்லப்படுவது.

"காந்தளஞ் செங்கைக் கன்னியர் சில்லோர் கைதொழுதிடை யிடை மீள" என அரிச்சந்திரப் புராணத்திலும் "காந்தண் மிசை யொரு தாம ரையி னலர் காணலெனவரு மாதவன்" என தேம்பாவணியிலும் கூறியிருத் தல் காண்க. (நக௭)

தீயடைந்த வல்லியெனத் தேம்பிச்செ யலழிந்தும்
மாயும்வகை யின்றுய்ம றுகுற்று யிர்பதைப்பப்
போயடைந்த தெம்மருங்கும் பொற்பெருச லேநகரத்
தாயிழையார் வாய்விட்ட முதகு ரலோசை.

(இ...ள்). நெருப்பி லகப் பட்டப் பச்சிலைக் கொடியைப் போல் வாடிச் சக்தியற்றுப் போய், அழிந்து போக வகையில்லாமல் உயிர் துடிக்கு மாறு, தாய் போன்ற இஸ்திரீகள் தெருவில் நின்று வாய்விட் டழுத சத்தமா னது அழகு பொருந்திய எருசலேம் நகரத்தி னெப்பக்கமுங் கேட்டது.

கண்டார்ப தைத்தார்க லுழந்தார்க ரைந்தழுதார்
கொண்டார்து ணுக்கங்கொ தித்தார்க டுவிடத்தை
உண்டார்போ லேங்கியு யங்கிநெ டிதுயிர்த்துத்
திண்டாடி நின்றினைய செப்புவா ராயினர்.

(இ...ள்). (அவர் சிலுவையைச் சுமந்து சென்றதைக்) கண்டவர்கள் பதறினார்கள், கதறினார்கள், மனமிரங்கி யழுதார்கள்; திடுக்கிட்டு நடுங்கினார் கள், மனங்கொதித்தார்கள். கொடிய விஷத்தைக் குடித்தவர்கள் போல வருந்தி வாடிப் பெரு மூச்சுவிட்டுத் திண்டாடி நின்ற ஸ்திரீகள் பின் வரு மாறு சொல்லிப் புலம்பினார்கள். (நக௯)

ஆவாவி தென்னவ நவுமநி யாயமென்பார்
தாவாவ றமோத லைசாய்ந்தி றுவதென்பார்
மூவாமு தல்வன்மு னியாத தென்னென்பார்
ஓவாது ழலெம்மு யிர்க்கொழிவின் றோவென்பார்.

(இ...ள்). சிலர் ஆ! ஆ! இதென்ன அநியாயமென்பார். சிலர் யாண்டு மழியா தருமமுமா அழிந்துபோயிற் றென்பர். சிலர் ஈஸ்வரன் கோபமடை யாம லிருப்பதேன் என்பர். சிலர் ஒழியாது வருந்துமு யிருக்கு முடிவில் லையோ யென்பர். (நஉ0)

இம்மைந்த னாவிக்கி றுதிவரக் கண்டுமரி
அம்மையு யிர்வாழா ளவனிமி சையென்பார்
செம்மைதிறம் பாத்தூய தேவசி னந்திருகி
மும்மையு லகும்மு டியுங்க ணத்தென்பார்.

(இ...ள்). சிலர் இச்சிறந்த திருக்குமாரனுடைய உயிருக்கு முடிவு வருவதைக்கண்டு தாயாகிய மரியாள் இவ்வுலகி லுயிரோ டிருக்கமாட்டாள் என்பர். சிலர் நியாயத்திற் கல்லாது வேறு விதத்திலுண்டாகாத பரிசுத்த தேவ கோபமுண்டாகி இம் மூவுலகையும் ஒரு க்ஷணத்திலழிக்கு மென்பர். (௩௨௧)

மாண்டாரு யிரளிக்கு மாமருந்தை வேரோடு
கீண்டெறி வாரிந்தக் கெடுதோஷி களென்பார்
கீண்டெறி வாரிந்தக் கெடுதோஷி களெனினும்
மீண்டுமு ளைக்கவொரு வேளைவரா தோவென்பார்.

(இ...ள்). சிலர் செத்தவர்கட் குயிரளிக்குஞ் சிறந்த மருந்தை யிக் கொடியவர்கள் வேரோடு கிண்டி யெறிந்து விடுவார்களென்பர். சிலர் அக் கொடியவர்க ளதனைப் பிடுங்கி யெறிந்தாலும் அது மறுபடியு முளைக்க ஒரு காலம் வாராதோ வென்பர். (௩௨௨)

புன்றொழிலர்க் கஞ்சிநடுப் போற்றாதார் பொங்கியழ
மன்றோரஞ் சொல்லியுயிர் வாழ்வதுவோ வாழ்வென்பார்
மன்றோரஞ் சொன்னோன்ம னைபாழாய் வன்குடியும்
பொன்றியெ ருக்கலரும் பொய்யாதி துவென்பார்.

(இ...ள்). சிலர் ஈனத் தொழிலையுடைய யூதர் கட்குப் பயந்து நீதியை நிலைநிறுத்தாமல் ஊர் ஜனங்கள் மனங்கசிந்தழும்படி நியாய சபையில் பட்ச பாதம் பேசி உயிரோடிருப்பதுவோ வாழ்வென்பர். அப்படி பட்சபாதம் பேசினவனது வீடு பாழாய்ப்போய் அவன குடியு மழிந்து அவன் வீட்டில் வெள்ளெருக்கஞ் செடி பூக்கும் இது பொய்யாகாது என்பர். (௩௨௩)

நள்ளிநர ஜீவரக்ஷை நல்கவரு ஞானகுரு
வள்ளலுக்கு வன்கொலையும் மாபாத கம்புரிந்த
கள்ளனுக்குக் காவல்வி டுதலையுங் கட்டுரைத்து
விள்ளுவதோ நீதிபுரி வேந்தருக்குச் சீலமென்பார்.

(இ ..ள்) நட்புடையவராக மானிடர்க்கு இரட்சிப்பை யளிக்க வந்திருக்கும் ஞானகுருவாகிய பிரபுவுக்குக் கொடிய கொலைத் தீர்ப்பும், பெரும் பாவஞ்செய்த திருடனுக்குக் காவல் விடுதலையும், உறுதியாகும்படி தீர்ப்புச் செய்து விடுவது நீதி செலுத்தும் அரசர் கட்கு அழகாமோ வென்பர் சிலர்.

கொல்லாது விட்டுவிடக் கொற்றவன்பல் கான்முயன்றும்
பொல்லாருக் கஞ்சிப்பு கன்றான்கொ லையென்பார்
பொல்லாருக் கஞ்சிப்பொ துநீதி யைப்புரட்டி
அல்லாத செய்வார்க்க றங்கூற்றே யாமென்பார்.

(இ...ள்). சிலர் (பிலாத்து என்னும்) அரசன், அவரைக் கொல்லாது விட்டு விடப் பலதர முயன்றும், கொடிய யூதர்கட்குப் பயந்து, கொலை தண்டனை விதித்தானென்பர். சிலர் தீங்கு புரியுஞ் ஜனங்கட்குப் பயந்து, பொது நீதியைப் புரட்டித் தகாதகாரியங்களைச் செய்பவர்கட்கு தருமநெறியே மரணந்தனைப்போலாகு மென்பர். (௩உ௫)

காட்டிக்கொ டுத்தோன்க ழுத்திலொரு கயிற்றைப்
பூட்டிமன வாதையினுற் பொன்றினனும் பொல்லாங்கு
சாட்டிக்கொலை புரிசண்டா ளர்மனச் சாக்ஷியுந்தம்
பாட்டிற்கி டப்பதென்ன பாவமதி பாவமென்பார்.

(இ...ள்). சிலர் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், தன் மனதிலுள்ள சஞ்சலத்தால் தன் கழுத்தில் ஒரு கயிற்றை மாட்டிக்கொண்டு செத்துப் போனனும். அநியாய குற்றஞ் சாட்டி யவரைக் கொலைசெய்த பாவிகளது மனச்சாட்சியும் (யாதொரு உணர்ச்சியுமற்று) சும்மாயிருப்பது என்ன காரணம். அது பாவத்திற்கு மேற்பட்ட பாவமென்பர். (௩உ௬)

நிந்தனையாஞ் செந்நெருப்பு நெஞ்சைக்கொ ளுத்திடவும்
நொந்தொருசொற் சொல்லாத நோன்மைநு னித்துணரின்
மைந்தருக்கிச் சாந்தம்வ ருமோமா மேகமெனுஞ்
சிந்தைசெ றுநருக்குச் சேராத தென்னென்பார்.

(இ...ள்). சிலர் தூஷண வார்த்தையாகிய கனன்ற நெருப்பு அவர் மனதைத் தாக்கியும், மனம் வருந்தி ஒரு வார்த்தையுஞ் சொல்லாத பொறுமையான குணத்தை நன்று யோசிக்கு மிடத்து மனிதர்கட்கு இவ்வாறான சாந்த குணம வருமோ? அவர் கடவுள்தான் என்னு மெண்ணம் அப்பகைவரது மனதிற்படாதது என்ன காரணமோ வென்பர். (௩உ௭)

செந்தாம ரைபோற்றி கழுந்தி ருவதனம்
அந்தோவ தங்கிய ழகுகுடி போயதென்பார்
நந்தாக்க ருணைந ருத்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தாகு லம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பார்.

(இ...ள்) சிலர் சிவந்த தாமரைப் புஷ்பம் போல் பிரகாசிக்கு மவர் திருமுகம் வாடி அழகு குறைந்து போனது என்ன பரிதாபமென்பர். சிலர் அழியாக் கருணை யென்னுந் தேனைச் சொட்டும் புஷ்பத்தை யொத்த கண்கள் மனக்கவலை நிறைந்தனவாய் பிரகாசமற்றுப் போயிற்றென்பர். (௩உ௮)

உன்னதமெய்ஞ் ஞானமு வந்துகுடி கொண்டதிருச்
சென்னிபுடை யுண்டிரத்தஞ் சிந்துவதோ செவ்விதென்பார்
மன்னுதிரு மேனிமுற்றும் வாரடியாற் கன்றிநைந்து
சின்னமுற லாவதுவோ தெய்வமே யோவென்பார்.

(இ...ள்). சிலர் ஓ! தெய்வமே, மேன்மை தங்கிய மெய்ஞ்ஞானங் களிப்புடன் தங்கும் திருச்சிரசு குட்டப் பட்டு இரத்தம் வடிவதோ அழ

கென்பர். சிலர் என்று மழியா திருமேனி முழுவதும் வாரடியாற் காயப் பட்டு நசுங்கிக் கேவலப் படுவதுவோ தகுதி யென்பர். (௩௨௯)

பெண்ணீர்மை குன்றாத பெய்வளையா ரிவ்வண்ணம்
புண்ணீருந் தீயிற்பு கைந்தாரு யிர்பொடிப்பக்
கண்ணீரின் றுன்பக்க டற்கெல்லை காணாராய்
எண்ணீர ராய்ச்செல்லு மெம்பெருமான் பின்சென்றார்.

(இ...ள்). இஸ்திரீகட் குரிய விலட்சணங் குறையாத வப் பெண்கள், புண்ணில் நெருப்புப் பட்டது போல் கலங்கி, அருமையான உயிர் துடிதுடிக் கக் கண்ணீர் விடுவதற்குக் காரணமாகிய துன்பமென்னுங் கடலுக்கு எல்லை காணாதவர்களாய் யாவராலுந் துதிக்கப்படத் தக்கவராக (அதிகக் கஷ்டத்து டன் வழி நடந்து) போகும் எம்பெருமான் பின்சென்றார்கள். (௩௩0)

மைத்தடங்கண் ணீர்சொரிய வாய்விட்ட ழுதாற்றிச்
சித்தமு டைந்தொ டர்ந்துவரு சேயிழையார்
பத்திமையுஞ் சிந்தைப்ப ருவரலுங் கண்டிரங்கி
உத்தமசற் போதவு பசாந்த ரீதுரைப்பார்.

(இ...ள்). விசாலமான கறுத்த புருவத்தையுடைய ஸ்திரீகள் கண்ணீருடன் வாய்விட்டழுது புலம்பி மனம் வருந்தித் தன்னைப் பின்றொடர்ந்து வரும் பெண்களது பக்தியையும் மனவருத்தத்தையுங்கண்டு மன மிரங்கி உத்தம நற்போதகஞ் செய்பவருஞ் சாந்தகுண மேருவுமான நம்பெருமான் பின் வருமாறு சொல்லுகின்றார். (௩௩௧)

எருசலேம் புத்திரிகா ளென்பொருட்டுக் கலுழாதே
துரிசறமற் றும்பொருட்டுஞ் சுதர்பொருட்டுங் கலுழ்ந்திடுமின்
வரிசைபெறு மகப்பெறும லடிகள்பாக் கியரென்று
உரைசெறியத் தருநாளிங் குளதாமென் பதையுணர்ந்தே.

(இ...ள்). எருசலேம் புத்திரிகளே! நீங்கள் எனக்காக அழாதீர்கள். குற்றம் நீங்க உங்களுக்காகவும் உங்கள் பிள்ளை கட்காகவு மழுங்கள் சிறப்பு தங்கிய புத்திரரைப் பெறாத மலடிகள் பாக்கிய வதிகளென்று சொல்லத் தருங்கால மிங்குண்டென்பதை யுணர்ந்து அழுங்கள். (௩௩௨)

அன்றுபுக விடமரிதா யவரவரே துயர்விஞ்சிக்
குன்றுகளே மலைக்குலமே யெமைமூடிக் கொள்ளுதிரால்
என்றுரைப்பர் பசுமரத்துக் கிதுசெய்வா ரெனிலந்தோ
தொன்றுலர்ந்து படுமரத்துக் கெதுசெய்யார் துணிவொன்றி.

(இ...ள்). அக்காலத்தி லடைக்கலம் புகுவதற் கிடமில்லாமல், அவரவர்கள் வருத்தப்பட்டு குன்றுகளே! மலைக்கூட்டங்களே! எங்களை மூடிக்கொள்ளுங்கள் என்று மனம் வெறுத்துச் சொல்லுவார்கள். பச்சை மரத்திற்கே அவர்களிவைகளைச் செய்வார்களானால், வெகுகாலமாகக் காய்ந்து பட்டு நிற்கு மரத்திற்குத் துணிவோடு எதைத்தான் செய்யமாட்டார்கள்" என்றார். (௩௩௩)

என்றுதுய ருறுமடவார்க் கிரங்கியிருந் துயரோடு
நன்றுமொழிந் தடர்சுமையா னலிவெய்தித் தளர்ந்தேகத்
துன்றுசிலு வையையாங்கோர் வழிப்போக்கன் றொடுத்தேந்தி
ஒன்றிவரு கெனக்கொலைஞ ருத்தமரைக் கொடுபோனார்.

(இ...ள்). மனவேதனைப் படும் பெண்களுக்காக மனமிரங்கி (இவ்வாறு சொல்லி), மிகுந்த துயரத்துடன் நல்வார்த்தைகளை யுரைத்து, தன் மேலுள்ள சிலுவையின் பாரத்தால், வருந்திச் சோர்வடைந்து போகத் தன் சிலுவையை, ஒரு வழிப்போக்கன் வாங்கித் தூக்கிக்கொண்டுவர அக்கொலை பாதகர்கள் அவனை வரவிட்டுப் புண்ணிய புருஷனைக் (கொல்கதா வென்னு மிடத்திற்கு) கொண்டு போனார்கள். (௩௩௪)

பெண்டிரெலா மழுதரற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுய ரெனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க.

(இ...ள்). பெண்களெல்லாம் அழுது சத்தம் போட, பிள்ளைகள் கதற அதைக் கண்டவர்களுங் கேட்டவர்களும் இரங்கி மனங் கரைந்துருகி, தடுமாற்ற முற்று, நிறைந்த துக்கமென்னு நெருப்பினால் வயிறெரிய, முற்காலத்தில் காவல் செய்யப்பட்டிருந்த சோதோம் பட்டணம் எரிந்து விழுந்தது போல எருசலேம் பட்டணமும் பதைத்து விசனத் தாழ்ந்திற்று.

பொருவரிய பரலோகப் புத்தேளிர் புதுமையிதின்
மருவுவதெம் முடிவோவென் றையுற்று மறுக்கமுறப்
பருவரல்கொண் டைம்பூத பௌதிகமாத் திரையாய
சருவசிருட் டியுந்திகைத்துத் தமைமறந்துநிலைகுலைய.

(இ...ள்). ஒப்பற்ற வானலோகத்திலுள்ள தேவதூதர்கள் "இதை விடப்புதுமை யெது? இது எப்படி முடியுமோ? என்று சந்தேகத்துடன் கலக்கங்கொண்டு வருத்தமடைய, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாய மெனும் ஐந்து பூதங்களாலாகிய, சகல சிருஷ்டியுந் திகைத்து, தங்களை மறந்து தத்தம் முறைமைகளை விட்டுமாறின. (௩௩௫)

குழனூலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய வழுதுகாந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோற் சாம்பியுயிர் தளர்ந்தேக.

(இ...ள்). ஊசியிற் பொருந்திய நூலைப்போன்று பிரியாத மகத்துவத்தையுடைய அருள் நிறைந்த சீஷர்கள் தங்களைத் தகிக்கும் நெருப்புப் போன்ற துக்கத்தால் மெலிந்து மறைவாக (அக்கூட்டத்துடன்) செல்ல மாசற்ற மெய்ப் பராபரவஸ்து வாகிய கடவுளை தன் திருக் குமாரனாகக், கொண்ட இளம் பெண்ணாகிய மரியம்மாளும் நெருப்பி லிடப்பட்ட புஷ்ப மாலையைப் போல் வாடி உயிர் தளர்ந்து (நம்பகவனுக்குப்) பின்னால் செல்ல.

எண்ணிலா மறவோர்தம் மிகனெஞ்சு பறையறைய
உண்ணிலவு விசுவாசத் தூரவோர்நெஞ் சுள்ளழியப்
புண்ணியருக் குறுங்கொலையின் புணர்ப்புன்னிப் பொருமியழு
கண்ணீரும் பெருமூச்சுங் ககனதுருத் தியிலடைய.

(இ...ள்). எண்ணிக்கைக் கடங்காத யூதர்களுடைய நெஞ்சு, அதிகமாகத் துடிதுடிக்க, உள்ளத்தே விசுவாசத்தையுடைய பக்தர்களது மனம் வேதனைப்பட புண்ணிய புருஷனுக்கு வந்த மரணத்தின் தன்மையை நினைத்து விம்மியழுகிறவர்களது கண்ணீரும் பெருமூச்சும், ஆகாயத்தை நிறப்பின.

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி யெவ்வுயிருஞ்
செப்பரிய துயருழப்பச் செருசலேயைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான்கொலைக்களத்தில்.

(இ...ள்) இவ்வித மதிக துக்கத்தையுடைய உயிர்களெல்லாஞ் சொல்லமுடியாத வருத்தத்தையடைய அஞ்ஞானநிறைந்த கொடியமனதையுடைய கொலையாளிகள் ஒப்பற்ற ஆதிமூலப் பொருளாகிய நமதேகநாயகனை எருசலேம் நகரத்தை விட்டு வெளியேற்றி, அவரது உயிரை வாங்கும் வண்ணம், கொலைக்களத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். (கூகூக)

ஈண்டினியான் புகல்வதெவ னெம்பெருமான் றிருமேனி
தீண்டினூர் சிலுவையொடு சேர்த்தினூர் செங்கையிலுங்
காண்டருமே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினூர்
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினூர் நிலங்கீண்டு.

(இ...ள்). இனி நான் சொல்லவேண்டியதென்ன, அங்கு எம்பெருமானது திருமேனியைத் தொட்டிழுத்து சிலுவை மரத்தோடு சேர்த்துச் சிவந்த கைகளிலும் தரிசிப்பதற்கே அருமையான பாதங்களிலும் இருப்பாணிகளை யடித்தார்கள். பிறகவரை நீண்ட சிலுவையி லறைந்த வண்ணந் தூக்கிப் பூமியைத் தோண்டி அதிலச் சிலுவையை நேரே நிறுத்தினூர்கள். (கூசுO)

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்து மிடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழிய
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றூர் குருசுமிசை.

(இ...ள்). அங்கு (நம்பெருமானுடன் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டுக்கொண்டு வந்த) வேறிரண்டு திருடர்களையும் அவரது வலப் பக்கத்தொருவனையும் இடப் பக்கத்தொருவனையுமாக, கொடூர மனதுடன் சிலுவையில றைந்தபின் னக்கொலையாளிகளது வேலை முடிந்து போக, ஆதியில் சொல்லப் பட்டுள்ள வேதவசனங்கள் பலிக்க அவ் வேதத்திற் காதாரமான கடவுள் குற்றவாளிகளின் நடுவில் சிலுவையிற் றெங்கினூர். (கூசுக)

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் மருள்வள்ளல்.

(இ...ள்)- அருமையான திருமேனி நைந்து, தவித்துப் போய்ச் சொல்ல முடியாத பலபாடுகள் படுஞ்சமயத்திலும், அருள் நாதனுகிய எம் பெருமான் "என் பிதாவே! இவர்கள் தாம் செய்வதை இன்னதென்றறிய மாட்டார்கள். ஆகையா லிவர்களது குற்றத்தை மன்னியும்" என்றன்புடன் தம்மழகிய பழத்தை யொத்த சிவந்த வாயைத் திறந்து சொன்னுர். (௩௪௨)

இத்தகைய வருப்பொறையும் மனநலமு மியைந்தவரே
வித்தகனுக் கடித்தெழும்ப ரெனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலருங் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவ ரெனவுரைக்குஞ் சீர்மைத்தால்.

(இ...ள்). இத் தன்மையான சிறந்த பொருமையும், நல்ல மனதையு முடையவர்களே ஜெகதீசனது பாதார விந்தங்களை வணங்குகிறவர்க ளென்று சொல்லத் தகும் உத்தம கிறிஸ்தவர்க ளாவார்கள். இக்குண மில்லாதவர்கள் கிறிஸ்தவரெனப் பெயர் பெறுதல் செத்துப் போனவர்களைத் தூங்குகிறவர்க ளென்று சொல்லுந்தன்மையை யொக்கும். (௩௪௩)

கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோ ரிரக்ஷகரென் றெடுத்துரைக்கும்
வேண்டுமோ யினிச்சான்று மிதைவிடுத்து வேறொன்றே.

(இ...ள்). அவரது திருக்கரங்களிலும் திருப் பாதங்களிலும் செலுத்தப்பட்டுள்ள இருப்பாணிகள் உடலைக் கிழித்துத் துளைத்துள்ளே செல்ல, அதனுல் வாதனையடைந்து மரணமடையுஞ் சமயத்திலும் "இவர்கட்கு மன்னிப்பைத்தாரும்" என்று சொன்ன வார்த்தையானது இவரே உலகிற்கு ஏக இரட்சகர் என் றெடுத்துக் காட்டுகிற தல்லவா? இதைவிடவேறு சாட்சியும் இனி வேண்டுமோ? (௩௪௪)

மன்றுடு மருட்சீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றுகப் பொருள்செய்யா ருடைகளைந்து பங்கிட்டார்
குன்றுத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றுக டியமான வெழுத்திட்டார் சிலுவைமிசை.

(இ...ள்). அவர்கட்காக மன்றுடும் அருள் நிறைந்த ஜீவவார்த்தைகளை, யக்கொடிய பாவிகள், ஒரு பொருட்டாக இலட்சியஞ் செய்யாமல், அவருடுப்பை யெடுத்துப் பங்கு போட்டார்கள். பிறகு "அழியாத நசரேயன் யூத குலத்திற் கரசன்" என்ற பரிகாசமான வார்த்தைகளைச் சிலுவையின்மேல் வரைந்து வைத்தார்கள். (௩௪௫)

கேடணவு தலைவரொடு கெழுமியபல் யூதர்களும்
மாடணவிக் காக்குநரும் வழிவருபுன் மனத்தவரும்
பாடணவி வருந்துநம பரமசுதனைப்பழித்துத்
தூடணங்கள் பலபேசித் துணிந்துபுறக் கணித்திகழ்ந்தார்.

(இ...ள்). கெட்டகாலம் நெருங்கிய தலைவரோடு கூட்டமாகக் கூடிய யூதர்களும், அருகில் காவல் காக்கிறவர்களும், அவ்வழியில் போகுங் கேவல மனதையுடையவர்களும், துன்பத்தை யடைந்து வருந்தும் நமது தேவகுமாரனைப் பழித்து, தூஷணவார்த்தைகளைப், பலவிதமாகத் துணிந்து பேசி, யவரைப் புறக்கணித்திகழ்ந்தார்கள். (௩௱௬௬)

வணங்காத முரண்கழுத்தர் வல்லுருக்கிற் கடினமுறீஇக்
குணங்காணாக் கொடுமனத்தர் கூறியதீ மொழியொன்றோ
அணங்காருங் குருசுமரத் தறையுண்ட வொருதிருட்டுப்
பிணங்காணா யிகழ்ந்ததுவும் பிதற்றியது பெருமானை.

(இ...ள்). பணிவுக் கமையாத கழுத்தையுடையவர்களும், இருப்பினும் வலுத்தமனதை யுடையவர்களுமான அக்கொடியோ ருரைத்த வார்த்தைகளை மனங்கொண்ட இரட்சாபெருமானது இடது பக்கத்தில் சிலுவையி லறையுண்டு கஸ்தியுடனிருக்கு மோர் திருடன் சர்வேஸ்வரனைப் பலவாறு தூஷித்திகழ்ந்தான். (௩௱௬௭)

அடுங்கொலைஞர் பொருட்டமல னகங்கனிந்த வருட்டிறமுங்
கெடுங்கொடிய ருணர்வின்றிக் கிளந்தபழி மொழிச்செருக்கும்
நடுங்கியுயிர் நவிசோர னச்சுமனத் தியற்கையுமோர்ந்
தொடுங்குயிர்மற் றொருசோர னுளம்பொறுக்கா துரைக்கின்றான்.

(இ...ள்). தன்னைக் கொல்லுங் கொலையாளிகட்காக பரிசுத்தமான கடவுள் மனங்கனிந்த வருளின் வல்லமையையும், கெட்டுப் போகுங் கொடியவர்கள் உணர்வற்று நிந்தித்துக் கூறிய கர்வமான வார்த்தைகளையும், தன்னுயிர் நடுங்கினவராய் துன்பத்தால் களைத்திருக்கும் பரமகிருபாகர மூர்த்தியின் அன்பு பொருந்திய மனதின் சுபாவத்தையும் அறிந்த உயிர் நீங்குந் தருவாயிலுள்ள மற்றோர் திருடன், மனஞ்சகியாது பின்வருமாறு சொல்லுகின்றான். (௩௱௬௮)

எஞ்சுறும ரணத்தீர்ப்பி யைந்துழந்து மேழைநீ
அஞ்சுவா யலையேயிவ் வமையத்து மமலனுக்கு
நஞ்சனைய நமக்கீது நேர்ந்ததுமெய் நடுநிலைமை
விஞ்சியாம்வி ளைத்தகொடு வினைப்பயனை யடைகின்றோம்

(இ...ள்). "விடுவித்துக் கொள்ள முடியாத மரணத்தீர்ப்பையடைந்து வருந்தும் மூடனாகிய நீ இச்சமயத்திற் கூட கடவுளுக்குப் பயப்படாமலிருக்கின்றாயே, விஷத்தை யொத்த கொடியவர்களாகிய நமக்கு இவ்வாறு நேர்ந்தது நியாயமே. நாம் மிகுதியுஞ்செய்த கொடிய பாவத்திற்குத் தக்க பலனை யடைகின்றோம். (௩௱௬௯)

மற்றிதனை யுணராது வன்னெஞ்சோய் மாசணுகா
நற்றவனை யிகழுவது நன்மையோ நன்மையலாற்
குற்றமிவ ரிடத்துளதேற் கூறுதியென் றறக்கடிந்து
தெற்றெனவுட் குழைந்துரைத்தான் ஜீவவழித் தலைநின்றான்.

(இ...ள்). இதைச் சற்று முணராத கொடிய மனதை யுடையவனே குற்ற மற்ற உத்தமனை யிகழல் நியாயமோ? நன்மையே யல்லாமல் தீமையவ ரிடத் திருப்பின் சொல்'' என்று மிகக் கோபித்து உடனுக்குடன் உள்ள முருகி மோட்ச பாதையில் பிரவேசிக்க முதன்மையாக நின்ற திருடன் சொன்னான். (௫௰)

உள்ளநாண்மு ழுதுமற முஞற்றியாக் கினையுழக்குங்
கள்ளனிவ னெனினுமனங் கண்டறிந்த சத்தியத்தைத்
தெள்ளிதுடன் வெளிப்படுத்திச் சிந்தையுடைந் துளந்திரும்பிக்
கொள்ளையிடத் துணிந்தானித் தியவாழ்வைக் குறிக்கோடி.

(இ...ள்). இக்கள்ளன் தான் உலகில் ஜீவித்த நாளெல்லாம் பாவஞ் செய்து தண்டனை யடைந்து வருந்துகிறவனாக விருந்தும், தன் மனதாற் கண்ட சத்தியத்தை உடனே தெளிவுடனறிக்கை யிட்டு வருத்தத்துடன் மனந் திரும்பி மோட்ச பதவியையே ஒரு இலக்காக வைத்து அதனையடைய தன் மனதிற்றிடங் கொண்டான். (௫௰௧)

சாக்குறிக ளடுக்காமுன் றனுகரணந் தளராமுன்
மீக்கிளறு நெடுமூச்சு விசவாமுன் விழிமயங்கி
நாக்குளறி வீழாமுன் நல்லுணர்வுற் றருட்கள்ளன்
நோக்கினான் றலைதிருமி நுவலரும்புண் ணியப்பொலிவை.

(இ...ள்). தெய்வ கடாட்சம் பெற்ற அக் கள்ளன் தனக்கு மரணக் குறி காணு முன்னும், மெய், வாய், செவி, கண், மூக்கு முதலியவைகள் தளர்ந்து போகா முன்னும் மேல் மூச்சு மிகுதியாக வருமுன்னும் கண்ணிருண்டு, நாக்குளறிப் போவதற்கு முன்னும் நல்லறிவுடன் தன் தலையை நிமிர்த்தி வர்ணிப்புக் கடங்காத புண்ணிய சொரூபத்தைத் தரிசித்தான்.

காண்டகைய பெருங்கருணைக் கற்பகத்தை யெதிர்கண்டு
மாண்டகைய வன்பினொடு மானதாஞ் சலிவழங்கி
ஆண்டகைநும் மரசியலி லடியேனை நினைந்தருள
வேண்டினே னெனவிரந்து வேண்டினான் மிகவிரும்பி.

(இ...ள்). அக்கள்ளன் கிடைப்பதற்கருமையான நல்லோர் விரும்பிய வற்றை யளிக்க வல்ல சிறந்த கருணாகரக் கடவுளை நேரில் தரிசித்து, மேலான வன்பு முற்றிய பக்தியுடன் அவரைமனதினால் வணங்கி, ''இரட்சகனே உமது அரசாட்சியில் அடியேனை நினைத்தருள வேண்டுகிறேன்,'' என மிக்க ஆவலுடன் கெஞ்சிக் கேட்டான். (௫௰௩.)

கள்ளமிலா வருட்கள்ளன் கசிந்துகரு ணையைநம்பி
உள்ளுணர்வோ டினிதுரைத்த வொருமன்றாட் டுயிர்நல்கும்
வள்ளல்திரு வுளத்தழுந்த மலங்காய்நீ பரதீசில்
உள்ளபடி யின்றேயென் னுடனிருப்பா யெனவுரைத்தார்.

(இ...ள்). தெய்வ கடாட்சம் பெற்ற கபடற்ற வக்கள்ளன், மனங் கசிந்து தெய்வ கிருபையை நம்பி, உணர்வுள்ள மனதுடன் இனிமையாகச் செய்யுமோர் ஜெபம், தன்னுயிரை (மற்றவர் சட்காக) கொடுக்கும் எம்பிரான் மனதிற்கெட்ட அவர் "நீ பயப்படாதே. உண்மையாகவே மோட்சத்தில் இன்று என்னுடனிருப்பாய்" என்று சொன்னார். (௫௰௪)

வேறு

எம்மாதிர மும்படு பாவியென் றெள்ளு கள்ளன்
அம்மாவுயிர் போமள விற்கதி யாக்க நச்சிப்
பெம்மானரு ளுக்கிலக் காகிமெய்ப் பேறு பெற்றான்
கைம்மாறின்ம காகிரு பைத்திறங் காண்டி மைந்த.

(இ...ள்). உலக முழுவது மிவன் கொடிய பாவியென்று தூஷிக்கவு டம் பெடுத்த வக்கள்ளன், தன் மரணத்தருவாயில் மோட்சகதியை நாடி, நம் பெருமானது அருள் நிறைந்த பேரின்பத்திற் குரியவனாகி, அப்பேற்றை யடைந்தான். மைந்தர்களே! பிறதி யுபகாரம் வேண்டாதச் சிறந்த கிருபை யின் தன்மை இது வென்பதை யறிந்து கொள்ளுங்கள். (௫௰௫)

தன்னேரிலின் றேங்கிய மூந்தனித் தாயை யன்பின்
முன்னாகவ மூங்கொரு சீடனை முற்று நோக்கி
அன்னாயிவ னுன்மகன் மற்றுனக் கன்னை நண்ப
என்னாவரு ளின்னுரை தந்தன ரென்று முள்ளார்.

(இ...ள்). என்னாளும் நிலையாயுள்ள (பிறப் பிறப்பற்ற) நம்பெரு மான், தன்னெதிரில் ஏங்கியழுது நிற்கும் ஒப்பற்றதாயாகிய கன்னிமரியாளை யும், தன்முன்னின்று வருந்தும் மெய்யன்பனான (யோவான் என்னும்) சீஷ னையும் கண்ணூன்றிப்பார்த்து: "அன்னையே, இவன் உன் மகன் நண்பனே இவள் உன் தாய்" என்ற அருள் நிறைந்த வார்த்தைகளைச் சொன்னார்.

ஆயிற்சிறந் தவற மாவதிவ் வாழி வைப்பிற்
தாயிற்சிறந் ததம ரின்றெனத் தக்க வன்பாஞ்
சேயிற்சிறந் தவரு ளாயகன் சிந்தை யார
வாயிற்சிறந் தமொழி காட்டுமிம் மாண்பை யோர்தி.

(இ...ள்). யோசிக்குங்கால், சிறந்த நீதியானது கடல் சூழ்ந்த விவ்வுல கத்தில் பெற்ற தாய்க்கு மேலான சுற்றத்தாரில்லை யென்பதே அவ்வாறு சொல்லத்தக்க வன்பு நிறைந்த புருஷோத்தமனான அருள்மூர்த்தி மனதா ரச் சொன்ன இவ்வாய்மொழியே இதனை ரூபித்துக் காட்டுகிறது. இந்நீதி யின் சிறப்பை யறிந்து கொள்ளுங்கள். (௫௰௭)

அன்பின்றலை நின்றருள் பெற்றவத் தொண்ட னையன்
துன்பின்றலை நின்றுக ருத்தொடு சொற்ற வாய்மை
என்பிங்குகு மட்டித யத்திலி ருத்தி யன்னை
தன்பங்கின ளாவவள் சொற்றலை தாங்கி நின்றான்.

(இ...ள்). பக்தியின் நெறிநின்று கிருபாகடாட்சம் பெற்ற அவ்வடியான், தனது குருநாதன் அவரது துன்பகாலத்திலுங்கூட அத்துன்பத்தைப் பொருட்படுத்தாது விவேகமாய்ச் சொன்ன வார்த்தைகளை, தான் மாண்டு தன்தேக வெலும்புகள் நொருங்கு மட்டும் மனதிலே வைத்து, அவ்வம்மையாரைத் தன்னைப்பெற்ற வன்னை போலும் ஆதரித்து, அவள் வார்த்தைகளைத் தலைமேற்கொண்டு கீழ்ப்படிந்து நடந்து வந்தான். (௩௫௮)

வாழிப்பெரு மானைவ தைத்துயிர் மாய்க்க மல்கும்
பாழித்துய ரின்பட லம்மெனப் பாரை மூடி
ஊழிக்கரு மாலைவ னந்தென வொல்லை யும்பர்
ஆழிக்கதி ரைப்புதைத் தோங்கிய தந்த காரம்.

(இ...ள்). நித்திய ஜீவியாகிய ஜகதீசனை வாதித்து, அவருயிரை மாய்க்கத் துன்பத்தின் கூட்டம் இப்பூமியில் நிறைந்தது போல, உலக முடிவுகாலம் வந்தாலென்ன கரியஇரவு ஆகாயத்திலுள்ள சூரியனை மறைத்து பலத்த அந்தகாரத்தால் உலகத்தையே மூடியது. (௩௫௯)

எல்லாவுல கத்தவர் பாவமு மேற்ற தேவ
நல்லாடுயர் வேதிகை மேவலு நம்ப னீதிச்
செல்லாரழ றீத்திட வப்பலி தீந்தெ ழுந்த
அல்லார்புகை யாமென வோங்கிய தந்த காரம்.

(இ...ள்). உலகிலுள்ள யாவருடைய பாவங்களையுஞ் சுமந்த கடவுளாகிய சிறந்த ஆட்டுக்குட்டி (சிலுவையென்னும்) உயர்ந்த பலி பீடத்தில் போய்ச் சேர்ந்தவுடனே, தெய்வநீதியாகிய (யாக குண்டத்திலுள்ள) அழியா நெருப்பெரிய, அத்திவ்ய தழலிலிருந்து கிளம்பிய கரிய புகையைப்போலும் இருள் மூடிற்று. (௩௬௦)

வாதிக்கும நீதவஞ் ஞானம காந்த காரம்
நீதிக்கதி ரோனைம றைத்திடு நீர்மை கண்டு
சாதிக்கமாட் டாதுல குக்கொளி தந்து நின்ற
ஜோதிக்கதிர் குன்றிட மையிருள் தொக்க தெங்கும்.

(இ...ள்). நீதியு முண்மையுமற்று துன்பத்தையே சதா தரக்கூடிய வஞ்ஞானம் நிறைந்தவிருள், மெய்ஞ்ஞான சூரியனும் இயேசுபிரானை மறைத்திருந்த தன்மையைக் கண்டு, சாதிக்கலாற்றாது உலகத்திற்குப் பேரொளியைக் கொடுத்துவந்த பிரகாசம் பொருந்திய சூரியனது கிரணங்கள் மறைய, கரிய இருள் எங்கு மூடியது. (௩௬௧)

காராழிபொங் கிக்கக னம்புதை பட்ட தென்கோ
பாராதியந் தம்புரி தீமைப்ப டாமி தென்கோ
தீராவனர்த் தததிரள் கூடிச்செ றிந்த தென்கோ
பேராதொரியா மமவரை ஆற்றிருட் பெறறி தன்னே.

(இ...ள்). ஒரு சாமம் வரையிலும் விரவியுள்ள இருளின் தன்மையை நோக்கி, கருங்கடலே பொங்கி ஆகாயத்தை மறைத்துப் போட்டதென்று சொல்லலாமா ? அலலது உலகததா ஆதிகாலந்தொடங்கி செய்துவந்த பாவத்தின் திறைச சிலேயே யிதுவென றுரைக்கலாமா ? அற்றேல் பொல் லாஙகின் கூட்டம் விலகாம லொன்றாய்க் கூடி நெருக்கிற்றென்கலாமா ?

சாமம்-ஏழரை நாழிகைப் பொழுது. இது மூன்று மணி நேரத்தைக் குறிக்கும். நாழிகை யொன்றுக்கு 24-நிமிஷம் எனககொள்க. (௩௬௨)

மெய்யானதீ பங்கிறிஸ் தியேசெனு மெய்மமை கண்டாம்
உய்யாவுயி ருக்குயி ராழுயி ரோயு மெல்லே
மையார்சணி ருண்டிட வாஞெளி யாவு மட்கி
வெய்யோஞெளி யுங்கரந் தாரிருண் மேய வாற்றுல்

(இ...ள்). நிலேயற்ற ஆன்மாக்களுக் காதாரமாகவுள்ள தன்ஞெப்பற்ற ஜீவனே பகவான் விடும நேரத்தில், கரிய கண்க ளிருளடைய, வானததின் ஜோதிகள் தன்ஞெளி மழுங்க, சூரியப் பிரகாசமும் மறைநதொழிய, இருட் படலம் மூடிவிட்ட படியால் (இவையனைததும் பொய்யெனத் தள்ளி) மெய்யான ஒளி இயேசு கிறிஸ்து நாதரே யென்னுஞ் சத்தியததையாமறிந் தோம். (௩௬௩)

மெய்புற்றதெய் வம்பசு பாசம்வி ளக்கி நாளுங்
கைபுற்றநெல் லிக்கனி யின்மறை காட்ட வின்னும்
ஐயுற்றலே யும்புலே மார்க்கர கத்தி னஞ்சில்
கையுற்றகூட் டிவிரு டொககது மண்ணும் விண்ணும்.

(இ...ள்). வேதாகமநூல், தொன்று தொட்டு வளர்ந்து வரும் பாவத்தை நமக்கு தெரிடக் காட்டி அதனை நீககவலல மெய்யான கடவுள் இயேசு நாதரே என்று உள்ளங்கை யிலுள்ள நெலலிப் பழத்தைப் போல் எப்போதும் விளக்கிக் காட்ட விருந்தாலும் புறமதஸ்த ரதனை யறியாராகி இன்னஞ் சந்தேகப் பட்டுத் திரிந்து தஙகள் ஆன்மாவையும் மனதையும் அஞ் ஞானத லாழ்ததி வித்துக் கிடப்பது போலும பூமியும் வானமும் இருண்டு நின்றது. (௩௬௪)

ஊறுற்றிடு காரிருண் மூடியு டற்ற வஞ்சிப்
பீறுற்றுள முட்கிய யாந்துபி தற்றி யாதுந்
தேறுற்றில வாய்ச்செய லற்றஜெ கததா லாம்பல்
கூறுற்றஜீ வவருக் கங்குலே வுற்ற மாதோ.

(இ...ள்). தீமை நிறைந்த கரிய விருள் மூடி நெருகக வதற்குப் பயந்து மனமுடைந்து வாடிக் களைத்துக் கததிக் கொண்டு ஒன்றுந் தெரியா

மல் செயலற்றுப் போயிருக்கு மூலகத்தில் வாசஞ் செய்யும் பலவகையான ஜீவ வருக்கஙகள் நடுங்கின. (ருசுடு)

பெருந்தீப்பிழம் பும்பிறங் காதொளிர் பெற்றி குன்றிக்
கருந்தீயென லாயின கண்ணொளி யற்றி மைத்தல்
பொருந்தாதுமு ழுக்குரு டாயின பொன்றி னுலொத்
திருந்தாரெவ ருமெவை யுஞ்சரித் தில்ல காண்டி.

(இ...ள்). சூரியன் பிரகாசிக்காமல் ஒளி குறைந்து கரிய நெருப்பைப் போல் தீய்ந்து போயிற்று. உலகிலுள்ள யாவரும் பார்வை யற்றுக் கண்களை மூடாமல் முழுதுங் குருடாகிச் செத்தவர்கள் போலிருந்தார்கள், (ஜீவப் பிராணிகளாகிய) யாதும் நடமாடவுமில்லை. (ருசுசு)

ஈர்த்தங்கல கையிருட் கும்பியி விட்ட பூவை
ஆர்த்தன்புவ டங்கொடி முக்குநப மைய னுற்றல்
பார்த்தும்பரு டுபல தேவக ணங்கள் ளையுள்
போர்த்தங்கிடைந் தார்நர கத்திருள் போர்த்த தென்னு.

(இ...ள்). பிசாசானவன் (அஞ்ஞானமாகிய) இருள் நிறைந்த சேற்றில் முழ்கி வைத்திருந்த இவ்வுலகை, அன்பென்னுஞ் சிறந்த கயிற்றாலிழுத்து இரட்சிக்கும் நம் மெருமானது திறமையை இவ்வுலகததார் அறிந்தும், வானுலகில் பல கடவுளருண்டென்று சொல்லு மஞ்ஞானத்தி லகப்பட்டவர்களாய் நரக விருளால் மூடப்பட்டிருப்பதேனோ. (ருசுஎ)

நளியுண்டமுந் நீருல கத்துந லம்பெய் கொண்மூத்
துளியுண்டுண வுண்டுபல் போகசு காயு வும்முண்
டளியுண்டரு ளுண்டற முண்டிவை யாய வெல்லாம்
ஒளியுண்டெனி லுண்டில தேலிலை யொன்று மன்னே.

(இ...ள்). குளிர்ச்சி பொருந்திய கடல் சூழ்ந்த உலகத்தில், நன்மை விளைவிக்கும் மேகத்தின் மழையுண்டு, உணவுண்டு, பல்விதபோகமும் சுகமான வாழ்வுமுண்டு. இரக்கமுமுண்டு. தெய்வ கடாட்சமுண்டு. தருமநெறியுண்டு, இவைகளனைத்தும் ஈசனது அருளிருந்தால் மாத்திர முண்டாகும் அஃதில்லாவிடிலொன்று மில்லாதனவாகும். (ருசுஅ)

இற்றாகவுச் சிதொடுத் தேழரை யென்னு நாழி
முற்றாகமு யங்கிய வல்லிருண் முற்று மெல்லை
எற்றேகைவி டுத்தனி ரென்னையென் றேவ னேயென்
றற்றாரருட் டாதையை நோக்கியோ ரோல மிட்டார்.

(இ...ள்). இவ்வாறிருக்க உச்சிக்காலமாகிய மதியந்தொடுத்து ஏழரை நாழிகை முடியுமளவாயில் சூழ்ந்திருந்த இருள் நீக்கின தருணத்தி லவர் "என் தேவனே! என்னை ஏனைகைவிட்டீர்" என மிகுந்த கருணையுடைய தம்பரம பிதாவை நோக்கிக் கூவினார். (ருசுகூ)

எவ்வாறுநம் மான்றிரு வுள்ளமி னைந்த தேயோ
எவ்வாறுதூ யதிரு மேனியி னைந்த தேயோ
எவ்வாறுதந் தையித யஞ்சகித் திட்ட தேயோ
எவ்வாறெ‍ன வுள்ளுவல் விள்ளுவ லேழை யானே.

(இ...ள்). எம்பெருமானது திருவுள்ளம் எப்படி வருந்தியதோ. அவரது பரிசுத்த திருமேனி எப்படிநொந்ததோ. தந்தையாகிய சர்வேஸ்வரனது மனம் (இவைகளை) எப்படிச் சகித்திருந்ததோ. ஏழையாகிய யான் எவ்வாறு என்னிருதயத்தி லவைகளை யுன்னி விஸ்தரிப்பேன். (௩எ௦)

செற்றுரொலி யாவைவி ளித்தனன் ஜீவ ரக்ஷை
பெற்றார்வது காண்டுது மென்றுபி தற்றி நிற்க
வற்றுவருள் வாரிதி தாகம ரீஇய தென்னச்
சொற்றார்சுரு திமொழி முன்னுறச் சொற்ற வாறே.

(இ ..ள்). அவர் விரோதிகள் "இவன் எலியாவைக் கூப்பிடுகிறான். இவன் விடுதலையடைவதை பார்ப்போம்." எனப்பலவாறு உளறிநிற்க முற்காலத்தில் வேதத்திற் கூறியுள்ள வண்ணமே வற்றாத கருணைசமுத்திரமாம் எப்பெருமான் "நான் தாகமாயிருக்கிறேன" என்று சொன்னார். (௩எக)

எல்லாவுல குமுடை யார்பொருள் யாவு முள்ளார்
தொல்லாதிமூ லப்பரஞ் சோதியர் தோற்ற நாசம்
இல்லாரொரு தாகம நாதிதொட் டெய்த லாலே
கொல்லாதுவி டாதவோர் தாகமுங் கொண்டி றந்தார்.

(இ...ள்). சகல உலகங்களையுஞ் சொந்தமாகவுடையவர். ஐசுவரியசம்பன்னர், பழமையாகிய முதலும் மூலமுமான பரஞ்சோதியார். உற்பத்தியும் அழிவுமற்றவராகிய இவர் (ஆன்மாக்களை இரட்சிக்க வேண்டுமென்கிற) தாகமாகிய வாஞ்சை ஆதி முதல் மனதில் கொண்டிருந்தபடியினாலே தன்னைக் கொல்லாமல் விடாத ஒரு தாகமென்பதை யடைந்து அதனேதுவால் மரித்தார். (௩எ௨)

காதுற்றொரு வன்கட லாம்பியைக் காடி தோய்த்தே
ஓதுற்றவீ சோப்பெனுங் கோல்கொடு யர்த்தி நீட்டிக்
கோதுற்றிலா தகும ரேசனுக் குக்கொ டுத்தான்
மாதுக்கதுக் கம்ஜலப் பஞ்சமும் வந்தி வற்கே.

(இ...ள்). இச்சப்தம் கேட்ட ஒருவன் கடற்காளானைக் காடியில் தோய்த்து வேதத்தில் சொல்லியவாறு ஈசோப்பெனுங் கோலைக் கொண்டு (அப்பானத்தைத்) தூக்கி நீட்டி மாசற்ற குமாரக் கடவுளுக்குக் கொடுத்தான். இவருக்கு தண்ணீர் கிடையாமற்போனது பெரியதோர் துக்கமான காரியமே.

பல்லாயிர கோடிய ஜீவரைப் பாவ பந்தத்
தல்லார்சிறை மீட்டவர்க் கோர்மிட றூர வுண்ணீர்
இல்லா திறுங் காற்புளிங் காடியி யைந்த தந்தோ
எல்லேமுக்கா கமடி வார்க்குல கீயு நன்றே.

(இ...ள்). பல ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை பாபக்கட்டுக் களா காதபடி அச்சிறையை நீக்கிய வருக்குக் குடிப்பதற்கு ஒருவாய் தண்ணீர் கூடக் கிடையாமல் கோலில் நீட்டிய புளித்தகாடி கிடைத்தது. என்ன பரிதாபம்! நம்மனைவருக்காகத் தம்முயிரைக் கொடுப்பவருக்கு உலகம் பாராட்டும் நன்றியிதுதானோ? (௩எச)

மருவாரளித் தபுளிங் காடியை வாங்கி யன்பின்
உருவாய்ந்தவர் யாவுமு டிந்தவென் றுய்த்தி யம்பி
ஒருவாதவெந் தாயுயிர் நல்கின னுங்கை யென்னுத்
திருவாய்மலர்ந் துதலை சாய்த்தனர் ஜீவன் விட்டார்.

(இ...ள்). அன்பேயுருவா யவதார மெடுத்த நம்பெருமான் அக்கொடியவர்கள் கொடுத்த புளிச்சக்காடியை வாங்கி "எல்லாமுடிந்தது" என உறுதியாகச்சொல்லி "என்று மழியாத வொப்பற்ற வென் பிதாவே உமது கையிலென்னுவியை ஒப்புவிக்கின்றேன்" என உரைத்து தலையை சாய்த்துத் தன்னுயிரை விட்டார். (௩எரு)

மரண காண்டம் முற்றிற்று

காண்டம் ஐந்துக்கு திருவிருத்தம் 375.

ஆறுவது

# சமாதி காண்டம்.

---

ஜெகத் குருவாகிய இயேசு கிறிஸ்துபிரான் உலகத்தின் பாவங்கட்காகத் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்து சிலுவையில் மரணமடைந்தபின் அவரது பரிசுத்த சரீரம் யூதர்கள் முறைப்படி சமாதி செய்யப்பட்ட விதத்தை வர்ணிக்கும் பாகத்திற்குச் "சமாதி காண்டம்" எனப் பெயர்.

அறுசீர் விருத்தம்

ஜீவாதி பதியேக திரித்துவத்தி லொன்ருன தேவ மைந்தன்
தாவாத கருணையினுற் பேரன்பு மயமான தனுக்கொண் டண்டி
மூவாத முதனீதி யிரக்கசம ரசம்புரிவான் முதுநீர் வையஞ்
சாவாத படிதானே பலியாகி ஜீவன்விட்ட தகைமை பாராய்.

(இ...ள்), ஜீவனுக்குத் தலைவரும் ஏக திருத்துவத்தி லொருவருமான தெய்வகுமாரன் கொடாத கருணை நிறைந்த தயையே உருவெடுத்து வந்தாற் போலும் (மானிட) சரீரத்துடனிவ் வுலகி லவதரித்து அழிவற்ற சிறந்த தெய்வ நீதியையும் இரக்கத்தையும் சமரசப் படுத்துமாறு பழமையான கடல் சூழ்ந்த உலக மழிந்து போகாவண்ணம் தன்னைத் தானே பலியாக ஒப்புக் கொடுத்து உயிரை விட்ட தன்மையைப் பாருங்கள். (௩௭௬)

சந்ததங்கற் பனைமீறிச் சண்டாள ராகிநன்றி தனையெண் ணுமற்
புந்தியற்றுக் கொடுங்கூளிக் கடித்தொழும்பு புரிந்தொழுகும்
பொல்லா ருக்காய்
அந்தரியா மிப்பொருளா யகிலாண்ட கோடிகளை யாட்டு விக்கும்
விந்தையுளார் மனுவாகி யுயிர்விடுத்த விந்தையைப்போல் விந்தை
யுண்டோ?

(இ...ள்). ஜகதீசனது கட்டளைகளை யெண்ணுரு மீறித் துரோகிகளாகி அவருக்கு நன்றி பாராட்டாதபடி அறிவை யிழந்து கொடிய சாத்தானுக்குப் பாதபணிவிடை செய்துவரும் கேவலமான மானிடர் கட்காய் ஒருவராலும் எளிதில் அறியக் கூடாத வஸ்துவாய் உலக முழுவதையும் நடாத்தி வரும் அற்புத மூர்த்தியானவர் மனித அவதார மெடுத்து உயிர்விட்ட ஆச்சரியத்துக் கொப்ப வேறு ஆச்சரியமு முண்டோ? (௩௭௭)

தனக்குலவாப்பெரும்பேறு தாவந்துவிழிக்கெதிரே சான்றுகாட்டி
மனக்கினிய வுபதேசம் வகுத்தசரு வேசனொரு மைந்தன் றன்னைப்
பணிக்கவதைத் துயிர்கவர்ந்த பாருலகைத் தகிக்காமற் பரம தாதை
சினக்கனலை யவித்தெழுந்த ஜீவகாருண்ணியநிலை தேறற்பாற்ரே.

(இ...ள்). அழிவற்ற பேரின்ப வாழ்வை இவ் வுலகத்திற் கழிக்க வந்து கண்ணுக் கெதிரிலேயே அவைகட்குச் சாட்சியாக நடந்து காட்டி மனதுக் கினிமையான உபதேசஞ் செய்த ஜகதீசனது ஏக புத்திரனை அதிக மாக வதைத்து அவரைக் கொன்றுபோட்ட இப்பெரிய உலகத்தை நெருப் பினு லெரிக்காது பாவிகளாகிய நமது பேரில் பரம பிதாவுக்குள்ள கோபமா கிய அக்கினியை யணைத்து வந்த இரட்சா பெருமானது ஜீவகாருண்யத்தின் தன்மை கிரகிக்க வல்லமோ? (௫௭௮)

வேறு

அலகிலாப் பரம நீதி யாயதென் னெண்ண மென்ன
இலகுவா ளுறையிற் சேர்த்தி யெரிந்தெழு கோப மாறி
உலகினுக் கொருவ ராகி யுத்தரித் ததனை யுள்ளிக்
குலவியே தாதை பக்கற் குதுகலித் திருந்த தம்மா.

(இ..ள்), இயேசுபிரான் அளவற்ற தெய்வ நீதி நிறைவேறிற்று என்னு மெண்ணத்தால் ஒளி பொருந்திய நீதியென்னும் பட்டயத்தை யதின் உறையில் போட்டு நெருப்பைப் போலெரிந்து நின்ற தேவ கோபம் சாந்தப்பட உலகை யீடேற்ற தான் ஏக அவதாரமூர்த்தியாக வந்து (அவ்வுல கின் பாவத்திற்கு) தன்னை ஈடாக ஒப்புவித் ததை நினைத்து ஜெகதீசனது வலது பக்கத்தில் களிப்புடன் வீற்றிருந்தார். (௫௭௯)

இதுவுமது

பரமகா ருணியம் பொங்கிப் பலித்ததென் னெண்ண மென்ன
வரமனோ கரரை வாழ்த்தி வாழ்த்திநாத் தழுத ழுப்ப
உரமிலா வான்ம கோடி யுய்ந்தமை யுள்ளி யுள்ளித்
தரமிலா துவகை யோங்கத் தாதைபாற் சிறந்த தன்றே.

(இ...ள்). கடவுளது அருள் வளர்ந்து பெறுகிற்று என்னு மெண் ணத்தால் வேதமூர்த்தியாகிய கடவுளை நாவு தடுமாறும்படி துதித்து ஞான மற்ற பல ஆன்மாக்கள் ஈடேறினதைப் பலதரம் நினைத்து அளவற்ற மகிழ்ச்சி அவர் மனதிலுதிக்க தன் பிதாவி னருகில் சிறந்து விளங்கினர்.

வேறு

கலி விருத்தம்

ஜீவனை யிழந்தவிச் செகத்துக் கிறிலா
ஜீவன்வந் தியையவுஞ் செறித்த நித்திய
ஜீவவா யிலுக்கொரு திறப்புண் டாக்கவும்
ஜீவனி னதிபதி ஜீவன் விட்டனர்.

(இ...ள்). தன் னுத்துமாவை யிழந்த இப் பூலோகத்திற்கு முடிவற்ற நித்திய ஜீவனாகிய இரட்சிப்பு வந்து சேரவும், அடைப்பட் டழிந்துபோன நித்திய ஜீவ வாசல் (மீண்டும்) திறக்கப்படவும், ஜீவனுக் கதிபதியான கடவுள் தன் ஜீவனை விட்டார். (௫௮௧)

கோழை யிப்பியைமணி குறித்துக் கூட்டுதற்
காழிநீர் குளித்துமூச் சடக்கு மாக்கள்போல்
ஏழைந ரான்மகோ டிகளை யீட்டுதற்
கூழியான் மரணத்துள் ளொடுங்கி னாரரோ.

(இ...ள்). அச்சத்தால் மறைந்து கிடக்கும் சிப்பியையும், முத்து மணியையும் எடுத்துச் சேர்ப்பதற்கு சமுத்திரத்தின் நீரில் குறிப்புடன் முழுகி மூச்சையடக்கு மனிதர்களைபோல் ஏழையாம் கோடிக்கணக்கான ஆனமாக்களை ஈடேற்றுவதற்கு என்றுமழியாத கடவுள் மரணத்தில் ஒடுங்கினார். (௩அ௨)

கண்ணிய வன்பினாற் கட்டுண் டோங்கிய
தண்ணளிச் சலதியின் முழுகித் தாழ்வுறீஇ
உண்ணிகழ் பொறையினா னுயிர்ப்பொ டுங்கினார்
புண்ணிய முலகெலாம் பொலியத் தோன்றினார்.

(இ...ள்). மேன்மையாம் அன்பினாற் பிணைக்கப் பட்டோங்கிய இரக்கமென்னுஞ் சமுத்திரத்தில் மூழ்கியவராய் தாழ்மையானது உள்ளத் தியங்க பொறுமையுடன் உயிரிழந்தார். இவ்விதமவர்செய்த நல்வினையினால் எல்லா வுலகத்துஞ் சிறப்பெய்த பிரகாசியா நின்றார். (௩அ௩)

முடிந்தது சஞ்சல முடிந்த பாடுகள்
முடிந்தது வறுமைநோய் முடிந்த சிந்தனை
முடிந்தது தீர்க்கர்சொன் முடிந்த முன்குறி
முடிந்தது கருதிய கரும முற்றுமே.

(இ...ள்). சஞ்சல முடிந்தது. பாடுகள் முடிந்தன. தரித்திரத்தின் கொடுமை ஒழிந்தது. பற்பல யோசனை முடிவுக்கு வந்தது. தீர்க்கதரிசி களது வாக்கு நிறைவேறியது. ஆதிகாலத்தில் வேதத்தில் குறிக்கப்பட்ட அடையாளங்கள் நிறைவேறின. ஜெகதீசன் நினைத்திருந்த சகல காரியங் களும் முற்றும் முடிவடைந்தன. (௩அ௪)

முடிந்தது பாவவி மோச னப்பலி
முடிந்தது பழமறைச் சடங்கு முற்றிலும்
முடிந்தது குவலயத் திரக்ஷை மொய்ம்புற
முடிந்தது ஜீவிய முழுது மென்பவே.

(இ...ள்). பாப விமோசனத் திற்கான பலியுங் கொடுத்தாய்விட்டது, பழமையான வேதத்திற் சொல்லப் பட்டுள்ள கிரியை களெல்லாஞ் செய்து முடித்தாயிற்று, பூலோகத்திற்கு இரட்சிப்பும் ஸ்திரமாக சம்பாதித்து முடிந்தது. (நம் பெருமானது) பூலோக ஜீவியமுஞ் சழிந்து போயிற்று என்னலாம். (௩அ௫)

இத்தகு வனவெலாம் பொருந்த வீறிலா
முத்தனார் முடித்தலின் முடிந்த தென்றொரு
வித்தக வாய்மொழி விளம்பித் தாமுடை
அத்தனுக் காவியை யளித்த வெல்லையே.

(இ...ள்). முடிவில் ஈசன்தா னெண்ணியவாறே தன் ஜீவியம் "முடிந்தது" என்ற ஓர் அற்புத மொழியால் தன் பிதாவுக்குத் தன்னாவியை ஒப்புக்கொடுத்த சமயத்தில் மேலே சுட்டிய காரியாதிகளெல்லாம் நடந்தேறின. (௩அ௬)

கிழிந்ததா லயத்திரை யிரண்டு கீற்றவாய்க்
கிழிந்ததா சாரியர் கேடு சூழுளங்
கிழிந்தது முதுமறைக் கிரியைச் சாஸனங்
கிழிந்தது தூடணங் கிளந்த வாயெலாம்.

(இ...ள்). தெய்வாலயத்திலுள்ள திரை இரண்டு பங்காகக் கிழிந்தது. பிரதான ஆசாரியரது கேடு நிறைந்த மனமுடைந்தது. பழமையான வேதத்திலுள்ள (பாவ விமோசனத்திற்கேற்ற) வீண் சடங்குகளும் போயின. அவரை நிந்தித்த வாய்களெல்லாங் கிழிந்தொழிந்தன. (௩அ௭)

அதிர்ந்தது கிடுகிடென் றாழி சூழ்புவி
அதிர்ந்தது பாதலத் தரச னாளுகை
அதிர்ந்தது கிறுகிறுத் தநீத மன்றலை
அதிர்ந்தது புறமதத் தஸ்தி வாரமே.

(இ...ள்). சமுத்திரத்தால் சூழப்பட்ட பூமி கிடுகிடென் றாடியது, பாதாள உலகி னரசனாகிய சாத்தானின் அரசாட்சி குலுங்கியது, நீதியற்ற (பிலாத்தின்) சபையும் பயந்து நடுங்கிற்று, புறமதங்களின் அஸ்திவாரங்கள் அசைக்கப்பட்டுப் போயின. (௩அ௮)

பிளந்தது வயின்றொறும் பெருமலைக்குலம்
பிளந்தது வஞ்சகப் பிசாசு னெஞ்சுரம்
பிளந்தது சந்நிதி மறைத்த பித்திகை
பிளந்தது தீவிடம் பிறங்கு பைத்தலை.

(இ...ள்). வழியிலுள்ள மலைக் கூட்டங்கள் யாவும் பிளந்தன. (உலகத்தைக் கெடுக்க நினைத்திருந்த) பிசாசின் மனதிலுள்ள வஞ்சகமான வைராக்கியம் சிதறிப்போயிற்று. கடவுளது சந்நிதானம் நமக்குக் கிடையாதபடி மறைத்திருந்த (பாவமான) சுவர் இடிந்து போயிற்று. நெருப்பையொத்த நஞ்சுடைய பாம்பின் தலை நசுங்கியது. (௩அ௯)

திறந்தது தூயவர் சேம வைப்பிடந்
திறந்தது கதிக்குறு ஜீவ வாயிலுந்
திறந்தது கருணையின் றிருவி ழிக்கடை
திறந்தது செறுத்துள ஜீவ வூற்றரோ.

(இ ..ள்). பரிசுத்தவான்களது கல்லறைகள் திறந்தன. நற்கதி யளிப்பதற்கேற்ற மோட்ச வாசலுந்திறந்தது. ஈசனது கருணை நிறைந்த கண்களுந் திறந்தன. இதுவரை மறைந்து கிடந்த ஜீவ ஊற்றுகளுந் திறந்தன. (௫௯0)

நற்சுதந் தரநமக் கருள நாயகன்
தற்சுதந் தரவுயிர் விடுத்த தன்மையைக்
கற்சுதந் தரமுறு கடின நெஞ்சுடை
அற்சுதந் தரரறிந் தகங்க லங்கினர்.

(இ...ள்). மோட்சமாகிய நல்ல சுதந்தரத்தை நமக்களிப்பதற்காக நம் பெருமான் தனக்குரிமையாயுள்ள உயிரை நமக்காகக் கொடுத்த தன்மையை பழமையான சடங்குகளைக் கையாடும் கல்போன்ற மனதையுடைய யூதர்கள் கேள்விப்பட்டு மனங்கலங்கினார்கள் (௫௯௧)

நிகழ்ந்தசம் பவங்கள்காக் குநர்த நெஞ்சினை
அகழ்ந்திட வஞ்சிமெய் யாக மற்றிவர்
இகழ்ந்திடற் பாலரோ வீச னோர்சுதன்
புகழ்ந்துபோற் றிடத்தகும் புனித ராமென்றார்.

(இ...ள்). அங்கு நடந்தவைகளைப் பார்த்தவர்கள் அவைகளை மனதில் நினைக்கக்கூட பயந்து "இவர் கேவலப்படக்கூடியவரோ? மெய்யாகவே ஜகதீசனின் ஏக புத்திரன் இவரே. துதித்துப்போற்றத்தகும் பரிசுத்த வானுமிவரே" என்றார்கள (௫௯௨)

தொக்குநின் றவரெலாந் துயரக் காட்சியோ
டக்கணத் தசம்பவ மாய யாவையுஞ்
சிக்கறத் தெரிந்துநெட் டுயிர்த்துத் தேம்பியே
துக்கமுற் றழுதுளந் துளங்கி யேகினார்.

(இ...ள்). அருகில் நின்றவர்களெல்லாம் அந்நேரத்தில் நடந்த துயரக் காட்சியாகிய சம்பவங்களை யெல்லாந் தெளிவாக அறிந்து பெருமூச்சு விட்டுக் கண்ணீருடன் துக்கமடைந்து அழுது மனங் கலங்கித் திரும்பிப் போனார்கள். (௫௯௩)

கிழிபடு மிதயத்துக் கெழீஇய நண்பினர்
வழிபடு கலிலெய மாதர் மற்றுளார்
விழிபுனல் சொரிதர வெதும்பிச் சேய்மையிற்
கழிதுய ரொடுமனங் கவன்று நின்றனர்.

(இ...ள்). சஞ்சலம் நிறைந்த மனதை யுடைய அவர் சிஷர்களும், அவரைத் தொடர்ந்து வந்த கலிலேய நாட்டுஸ்திரீகளும், அங்குள்ள மற்றவர்களும் கண்ணீர் வடியுமாறு அழுது மிகத் துயருடையவர்களாய் தூரத்தே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். (௫௯௪)

ஞானமா கியவொரு நாதன் றூங்கிய
மானவ தேகத்தை வரைந்திட் டாவியை
வானநா யகன்கரம் வழங்கக் கண்ணுறீஇத்
தானமும் வானமுந் தழங்கும் வேலைவாய்.

(இ...ள்). நீதியுள்ள ஒப்பற்ற கடவுள் மனித அவதாரமெடுத்துத் தூக்கிச் சுமந்த மாம்ச தேகத்தை விட்டுவிட்டு தன் ஜீவனை மோட்ச நாயகனு இய கடவுள் கையிலொப்புக் கொடுத்ததைப் பார்த்துக் கொண்டிருந்த வான மும் பூமியும் சமுத்திரமும் அவரைப் போற்றி வாழ்த்தின. (௩௯௫)

கொற்றவ னுத்தரங் கொண்டு யூதர்கள்
சொற்றவா றுயவண் றுதைந்த சேவகர்
குற்றுயிர்ச் சோரரைக் குறுகித் தொன்முறை
தெற்றெனக் கான்முறித் துயிரைச் சிந்தினர்.

(இ...ள்). அரசனது அதிகாரத்தை யுட்கொண்ட யூதர்கள் சொற்படி அங்கு வந்து சேர்ந்த சேவர்கள் சாகுந் தருணத்திலிருந்த கள்ளர்களிடஞ் சென்று ஆதி வழக்கத்தின்படி அவர்கள் கால்களை முறித்து உயிரை நீக்கி னார்கள். (௩௯௬)

அன்பினோர் படிவத்தை யாவி நீத்தலில்
என்பினை முறித்தில ரெனினு மீட்டியால்
வன்புறத் திருவிலா மருங்கு குத்தினன்
கொன்பயி லொருமறக் கொடுங்க ணாளனே.

(இ...ள்). அன்பே யோருருவமாக வந்த நம் பெருமானது சரீரத் தினின்று அவரது உயிர் நீங்கப் பெற்றமையால் சேவர்கள் அவரது காலெலும்புகளை முறிக்காது விட்டாலும், கொல்லுந் தொழிலை யுடைய பாவியாகிய ஒரு கொடியவன் அவரது பரிசுத்த விலாப் பக்கத்தில நோயுண் டாக ஈட்டியால் குத்தினன். (௩௯௭)

அனந்தர முலகினுக் கருளி யாண்டகை
தினந்தரு மான்மசஞ் சீவி யேயென
வனந்தரு திருவுடல் வடுப்பட் டவ்வழிக்
கனந்தரு குருதிபு நீருங் கான்றதால்.

(ஞ...ள்). நித்திய வாழ்வை உலகத்திற்கு எப்போதும் (அவரை நத்தி பணிந்தாற்கு) அளிக்கும் ஆத்ம சஞ்சீவியாகிய கடவுள் நீயே யென்றுரைப் பதுபோல அழகு பொருந்திய திருமேனி காயப்பட்டு அப்புண்ணின் வழி யாக மேன்மை தங்கிய இரத்தமுந் தண்ணீருங் கசிந்தொழுகின. (௩௯௮)

பாவவெங் கோடையிற் பாடுண் டெஞ்சிய
தாவரு மாத்துமப் பயிர்தழைத்திட
பூவரு புண்ணியப் பொருப்பி னோர்புடை
ஜீவநீ ரூற்றுக்கண் டிறந்த தென்பவே.

(இ..ள்). சிறந்த ஆத்துமப் பயிர் தழைக்குமாறு பூமியில் வந்தவதரித்து பாவமாகிய கொடிய உஷ்ணத்தில் பாடுபட்டு வருந்திய புண்ணிய மூர்த்தியாகிய பொருமையில மலைக்கொப்பான அவரது திவ்ய சரீரத்தினொரு பக்கம் கருணை நீர் வழிவதுபோலும் ஜீவதண்ணீரின் ஊற்றுக் கண்கள் திறந்தோடின. (௩௯௯)

ஓர்ந்திடாப் பத்தனோ ரடியி லொண்சிலை
ஆர்ந்தநன் னீர்சுரந் தளித்த வாறுபோல்
கூர்ந்தவீட் டியின்வழி குருதி கோத்தநீர்
ஆர்ந்ததிவ் வாக்கைநின் றவனி யுய்யவே.

(இ...ள்). (மோசே முனிவன் பாறை என்று) கவனியாமல் அடித்த ஒரே அடியில் கடினமான பாறையினின்று குளிர்ச்சியான நல்ல தண்ணீரை ஊற்றாக வரவழைத்த விதம்போல் (அவரைக் குத்தின) கூர்மையான ஈட்டியினாலுண்டான புண்ணின் வழியாக) இரத்தங் கலந்துள்ள தண்ணீரானது இவ்வுலகம் இரட்சிப்படைய வேண்டி அச் சரீரத்தினின்றும் புலப்பட்டது.

முடிவன யாவையு முடிய நோக்குறு
நெடிதுயிர்த் திரங்கியுள் ளழிந்து நின்றவோர்
அடியன்யோ சேப்புநம் மாண்டை யாளுகை
படிமிசை வரவெதிர் பார்த்தி ருப்பவன்.

(இ...ள்) நடந்தேறவேண்டிய காரியங்களையெல்லாம் முழுதுங் கவனித்துக்கொண்டிருந்து இரக்கத்துடன் பெரு மூச்சுவிட்டு மனம் வாடி நின்ற (அரிமத்தியா ஊராளுகிய) யோசேப்பு என்பவன் (அந்தரங்க) பக்தனும் நமதாண்டவரின் அரசாட்சி இவ்வுலகில் வர எதிர்பார்த்திருந்தவனுமாம். (௪0௧)

மிக்கசம் பத்துளான் யூத வேதியர்
தொக்கசங் கத்தினோர் தலைமைச் சூழ்ச்சியான்
புக்கன னரசிடம் புனித யாக்கையென்
பக்கலிற் றருகெனப் பரிந்து வேண்டினான்.

(இ...ள்). மேலும் அவன் மிகுந்த ஆஸ்தியுடையவன். யூதகுல சங்கத்திற்கு ஆலோசனை சொல்லுவதில் பிரதானமானவன். (பிலாத்து) அரசனிடம் அவன் போய் "அவரது பரிசுத்த சரீரத்தை என்னிடம் தாருங்கள்" என்று அன்பாகக் கேட்டான். (௪0௨)

திகிலுடை மன்னவன் றீரத் தேர்ந்துபின்
அகிலமேலோ கேஸ்வர னருளி யாக்கையை
இகலில்யோ சேப்பினுக் கீந்து நீயினித்
தகுமுறை யியற்றுதி சமாதி போயென்றான்.

(இ...ள்). (அவர் மரித்துப்போனதைக் கேட்டவுடன்) திகிலையடைந்த பிலாத்து (நூற்றுக்கதிபதியிடம் அதன் உண்மை முதலிய) சகலத்தையும் நன்றாக விசாரித்து ஜெகதீசனெடுத்தருளிய சரீரத்தை சாந்தபுருஷனாகிய யோசேப்புக்குக் கொடுத்து "நீ இனிமேல் போய் தகுந்த முறைப்படி யதை சமாதி வை" என்றான். (௪0௩)

உத்தரங் கிடைத்தமை வினவி யுள்ளுளே
பத்திசெய் நிக்கதே மெனப்ப கர்ந்திடும்
உத்தமன் பரிமள வுசித வர்க்கங்கள்
வித்தக வுடற்கெனக் கொண்டு மேவினன்.

(இ...ள்). அந்தரங்க சிஷனுயிருந்த நிக்கோதேமு என்னப்படும் ஓர் சிறந்த பக்தன் (யோசேப்புக்கு) உத்தரவு கிடைத்ததை யறிந்து (வெள்ளைப் போளமும் கரிய போளமுங் கலந்த) சிறந்த வாசனைத்திரவியங்களை அற்புத மான சரீரத்திற்கெனக் கொண்டுபோனான். (௪0௪)

கொலைக்களத் திருவருங் குறுகி யொல்லையிற்
றொலைக்கரும் பாவநோய் தொலைத்த யாக்கையை
நிலைக்குரு சகற்றிமே னிலவச் சாத்தினர்.
விலைக்கரும் பூந்துகில் விரித்து மூடியே.

(இ...ள்). இவ் விருவரு முடனே யவரைக் கொலை செய்த இடத்திற் குப் போய் இலகுவில் (நம்மைவிட்டு) நீக்க முடியாத பாவவினையை யொழித்த சரீரத்தை உயர்த்தப் பட்டிருந்த சிலுவையி லிருந் திறக்கி விலை மதிக் கப்படாத மெல்லிய வஸ்திரத்தை விரித்து அதன்மேல் அந்த சரீரத் தைப் பூமியில் படும்படி கிடத்தி மூடிவைத்தனர். (௪0௫)

விந்தைசே ரெழிற்றிரு மேனி மீதெலாங்
கந்தநற் றிரவியம் புனைந்து கண்கணீர்
சிந்திமெய் யன்புடை ஜீவன் முத்தர் தாந்
தந்தம சென்னியிற் றூங்கிச் சென்றனர்.

(இ...ள்). அற்புதமான அழகுவாய்ந்த அவரது திருமேனியின் மீது வாசனையுடைய நல்ல மருந்து வர்க்கங்களைத் தூவி யலங்கரித்து கண்களில் நீர்வடிய அச்சிறந்த பக்தர்கள் தங்கள் தங்களது தலையின்மேல் அச்சடலத் தைத் தூக்கிக்கொண்டு வழிநடந்தனர். (௪0௬)

வனக்குறும் பாம்பினோர் மருங்கு மட்டவிழ்
நனைக்குறு முகைவிரி நந்த னத்திது
வினைக்குரித் தாயயோ சேப்பு வேதியன்
தனக்கெனச் சமைத்தவச் சமாதி நண்ணினர்.

(இ...ள்). வனத்தின் ஒருபக்கத்தில் குறுகிய எல்லையையுடைய இடத்தில் தேன் நிறைந்த சிறிய மொட்டுகள் மலர்ந்து வாசனை வீசும் பூந் தோட்டத்தில் பக்தனாகிய யோசேப்பு தனக்கென்று சித்தப்படுத்தியிருந்த இடத்தில் (எம்பெருமானைச் சமாதிவைப்பது) பொருந்துமென்று (அத் திரு மேனியை) அவ்விடத்திற்குத் தூக்கிச் சென்றனர். (௪0௭)

கன்முறை யகழ்ந்தவக் காமர் வைப்பினில்
தொன்முறை விதிப்படி தூய யாக்கையைப்
பொன்முறை போற்றிடும் புலமைத் தாமென
நன்முறை வளத்தினர் நலங்கொண் மொய்ம்பினர்.

(இ...ள்), கல் மலையில் (யூத) வழக்கத்தின்படி தோண்டியுள்ள அவ் வழகிய இடத்தில் (யூதர்கள் நடத்தும்) பழைய முறைப்படி; பொன்னைப்

போற்றுவது அறிவுடைமையாகும் என்று முன்னோர் கூறியதுபோல நன்மையின் பலனே உருவாகிய அப்பக்தர்கள் அப்பரிசுத்த தேகத்தை நல்லவிதமாக அடக்கஞ் செய்தனர். (௩0அ)

ஆர்வமிக் குடையமெய் யடியர் மொய்ம்பினால்
வார்விழி புனலக வாரிப் பெய்தனர்
தீர்வரும் பரிமள திரவி யங்களை
சேர்வுறு கபாடக்கற் செறித்திட் டாரரோ.

(இ...ள்). அன்பு மிகுதியாக உடைய அப்பக்தர்களது கண்கள் மிகுந்த ஜலத்தை சிந்த நீங்காத மணம்பொருந்திய கந்தவருக்கங்களைத் தூவி அச்சமாதியை யடைவதற்கென்று செய்துள்ள கற்கதவை அப்பக்தர்கள் பலத்துடன் மூடினார்கள். (௩0௯)

உலகெலாம் புரிந்ததீ வினையை யுத்தரித்
தலகிலாப் புண்ணிய மமைத்த வாண்டகை
இலகுமே பெழிற்றிரு மேனி யீண்டொரு
சிலைகெழு சமாதியுஞ் செறிந்த தேயந்தோ.

(இ...ள்). உலகத்தாரெல்லாம் செய்த பாவத்திற் கென்று தாமே உத்தரித்து அளவற்ற புண்ணியத்தைச் சம்பாதித்த நம்பெருமானது மிகவும் அழகுபொருந்திய பரிசுத்த சரீரம் இங்கு கல்லால் செய்யப்பட்ட ஓர் சமாதியில் இப்பொழுது அடங்கியதே. என்ன பரிதாபம். (௩௧0)

தைவிக மானிட தனுவே டுத்தநந்
தைவிக ரக்ஷகர் தணந்த மானிட
மெய்வசுந் தரையிடை விரவி மீண்டெழுந்
துய்வதின் றேற்புவிக் குய்வின் றுருகுமால்,

(இ...ள்). கடவுள் மானிட சரீரத்தைப் பூண்டார். நமது தெய்வதத்துவம் பொருந்திய இரட்சகரது மானிட சரீரம் பூமியில் வந்து சேர்ந்து பின் உயிர்த்தெழுவது இல்லையென்றால், இப்பூலோகத்திற்கு இரட்சிப்பு எப்படியுண்டாகும்? (௩௧௧)

நேசயோ சேப்பென நிக்க தேமெனப்
பேசிய தொண்டரும் பிறரு நம்பிரான்
பூசமா திக்குறு புணர்ப்பெ லாம்புரிந்
தீசனை மதிக்குள்வைத் தேத்திப் போயினர்.

(இ...ள்). அன்புள்ள யோசேப்பு என்பவனும் நிக்கோதேமு என்பவனுமாகிய பக்தர்களும் மற்றுள்ளோரும் நம்பிரானது பெருமை பொருந்திய சமாதிக்குச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்து கடவுளைத் தங்கள் மனதில் தியானித்த வண்ணமாகச் சென்றனர். (௩௧௨)

அத்தனுக் கடித்தொழும் பமைந்த வன்புடைப்
பத்திமை வடிவெடுத் தனைய பாவைமார்
சித்தசஞ் சலத்தோடு கலுழ்ந்து தேம்பியே
தத்தம துறைபுள்போய்ச் சடைந்தி ருந்தனர்.

(இ...ள்). அவருக்குத் தொண்டுபுரியவல்ல அன்பு நிறைந்த பக்தியே உருவாகக்கொண்ட ஸ்திரீகள் மனசஞ்சலத்தோடுத் தேம்பி யழுது தத்தம் வீடுகளுக்குத்திரும்பி மனவாட்ட மடைந்திருந்தார்கள், (சகஙு)

அஞ்சுறு காட்சிகண் டலமந் தாவிநைந்
தெஞ்சிய பாதக ரியல்மு றைப்படி
செஞ்செவே யுலகமைந் தொழுகுஞ் சீர்மைகண்
டுஞ்சமென் றுளம்வலித் துரங்கொண் டாரரோ.

(இ...ள்). பயப்படக்கூடிய இக்காட்சிகளைக்கண்டு உள்ளம் வருந்தி நைந்து (முன்னேயே மனந்திரும்பிய பாதகர்கள் போக) மிச்சமாயிருந்த கொடியவர்களும் இயற்கையமைப்புப்படி உலகம் நேர்மையாக அமைந்து சீராக நடைபெறுகிறதைக் கண்டு தீமைக்காளாகாமல பிழைத்தோம் என்று மனமிழுக்கப்பட்டு இயேசுவைப் பினபற்ற தைரியங் கொண் டார்கள். (சகச)

வேறு

பொங்கரு ளுதன் பூதல ரக்ஷை புரிவான்வந்
தங்கம்வ ருந்தி யாருயிர் நல்கி யவனிக்குள்
மங்கிய டங்கக் கண்டுச கிக்க மாட்டான்போல்
வெங்கதி ருட்கிக் குடகட லிற்குப் புறவீழ்ந்தான்.

(இ—ள்). அருள் மிகுந்த (இயேசு) நாதர் இப் பூலோகத்திற்கு இரக்ஷிப்பை யுண்டாக்குமாறு அவதரித்து சரீரப்பாட்டுடன தனது அருமையான உயிரைவிட்டுத் தன் ஜோதி மங்கி பூமிக்குள் ளடங்கி யிருப்பதைக் கண்டு சகிக்க மாட்டாதவனைப் போல் சூரியன் தனது உஷ்ணமான கதிர்களை யொடுக்கி மேற்கடலில் தலைகீழாக விழுந்தான். (அச்சமயம் சூரியன் அஸ்தமனமாயிற்று என்பது கருத்து). (சகரு)

பாயொளி மட்கிப் போயது வெள்ளிப் பகலோனும்
மீயொளி மல்கி மேற்றிசை துற்றி விரிசெக்கர்
நோயமி குத்தோர் காயமு குத்த நிறைசோரி
தூயசி னத்தீ மாயவ டர்த்துத் தொகல்போலும்.

(இ...ள்). எங்கும் பரவியிருந்த ஒளி குன்றிப் போயது. வெண்ணிறம் பொருந்திப் பகலில்காயும் சூரியனது ஒளி குறைந்து அது மேற்கில் மறைந்தது. அச்சமயம் விரிவாய்த் தோன்றிய செவ்வானமானது, நோய் மிகுந்தவராகிய எம்பிரானது காயத்தினின்றும் வடிந்த இரத்தம் திரண்டெழுந்து கோப அக்கினிமாய்ந்து பாவாமல்போக எதிர்த்ததுபோலும் விளங்கியது. (சகசு)

நன்றிம றந்து நட்பிடை நாளு நயவஞ்சந்
துன்றிய கள்வர் நன்றியில் செல்வந் தொலைவெய்த
ஒன்றிவ ருத்தும் வன்மிடி போல வொளிர்செவ்வான்
நின்றில தாக வந்தது மாலை நிமிர்கங்குல்.

(இ...ள்). சிநேகத்தி னிடையில் எக்காலும நயவஞ்சகங் கொண்டுள்ள கொடியோரது நன்றியற்ற செல்வம் அழியும்படி அவர்களை நெருக்கி

வருத்தும் கொடிய தரித்திரத்தைப் போல் பிரகாசம் பொருந்திய செவ்வானமானது நிற்கக்கூடாததாக மாலைநேரத்துப் பெரிய இருள் வந்து மூடியது. (சகஎ)

பூவணை யாகக் கண்படை கொள்ளும் புனிதற்கோர்
மேவுவி தான மென்னவி ரிந்த மேல்வான்மீன்
ஓவற வெங்கும் பாயிரு ணக்கி யொளிகாலுந்
தீவம தாகவு தித்தது கீழத் திசைதிங்கள்.

(இ...ள்). பூமியையே மெத்தையாகக் கொண்டு நித்திரை செய்யும் அற்புதமூர்த்திக்கு அசுமானகிரியைப்போல் வானத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்தன. எங்கும் பரவியுள்ள இருள் முற்றும் நீங்கப் பிரகாசத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு விளக்கைப்போல் சந்திரன் கிழக்குப் பக்கத்தில் உதயமானது. (சகஅ)

சித்திர மாகச் செல்வனு றங்குஞ் செயல்கண்டு
நித்திரை பங்கமு றுதமை வுற்றிடு நெறிபோலும்
எத்திசை யும்முள வெப்பொரு ளும்முல கெல்லாமும்
அத்தின ராவினி சத்தம தாய வருங்காட்சி.

(இ...ள்). பிரபுவாகிய எம்பெருமான் அழகாக நித்திரை செய்யுந் தன்மையைக்கண்டு அந் நித்திரைக்கு யாதொரு பங்கமும் நேரிடாத வகையைப்போல் எல்லாத்திக்கும் அதிலுள்ள சகல பொருட்களும் (பொதுவாக) உலக முழுவதும் அந்த இரவில் நிசப்தமாக இருந்த தன்மையானது ஓர் அருமையான காட்சியே யாகும். (சகக)

காலமி தாக வன்மன யூதர் கதித்தோடிச்
சீலமில் மன்னன் பாலணை வுற்றுத் திருட்டாகக்
கோவியு யிர்த்தா னென்றவ னாக்கை கொடுபோகிச்
சாலம ருட்டிச் சீடர்பல் கேடு சமைப்பாரால்.

(இ...ள்). இதுவே சமயமென்றுகருதிக் கொடிய மனதையுடைய யூதர்கள் விரைவாக ஓடி நற்குணமற்ற அரச னிடஞ்சென்று "இவனது சரீரத்தை அச் சீஷர்கள் திருட்டுத்தனமாக எடுத்து மறைத்துக் கொண்டு போய் இவன் உயிர்த்தெழுந்தான் என்று ஜாலஞ்செய்து பலரை ஏமாற்றித் தீவினைகளை யுண்டுபண்ணுவார்கள்." (சஉ௦)

ஈண்டொரு மூன்று தின த்துயிர் பெற்றெழு வேனென்ன
மாண்டவ னோதிய துண்டுச மாதியை மற்றின்னே
காண்டகு காவல மைக்கென வொப்புரை கைக்கொண்டு
வேண்டிய வாறுபல் வீரரை வைத்தனர் வெங்காவல்.

(இ...ள்). "மேலும் செத்தவனாகிய இவன் இன்றையிலிருந்து மூன்றாம் நாளில் உயிரடைந்து எழுந்திருப்பேனென்று சொன்னதுண்டு. ஆகையால் இவன் சமாதியை உடனே கவனமாகக் காவல் வைக்கவேண்டும்" என்று சொல்ல அவ்வாறே அவ்விடையை யேற்றுக்கொண்டு பல வீரர்களைக் கடுங்காவலாக அமைத்துக்கொண்டனர். (சஉக)

இட்டனர் முத்திரை யேமமு றத்தனி யிமத்தின்
முட்டிய டைத்தவோர் கற்கத வத்தினை முற்றுக
அட்டதி காந்தமு மம்பர மும்மிதோ ரங்கைக்குள்
இட்டன முய்விலை யென்பவர் போன்மதி யில்லாரே.

(இ...ள்). எட்டுத் திக்குகளையும் ஆகாயத்தையும் உள்ளங் கைக்குள் ளடக்கிக் கொண்டோம். இதற்கு விமோசனமில்லை யென் றெண்ணு கின்றவர்களைப் போன்ற அமமதியினர் ஒப்பற்ற அச் சமாதிவாயிலில் கெட்டியாக அடைத்துள்ள கல்லாலாகிய கதவிற்கு முழுதும் அடையாள முத்திரை வைத்தார்கள். (சஉஉ)

கோலிய காவல ரேதிக ளோடுசூ ழிச்சேம
வாலிய வைப்பைவ ளைத்தனர் நின்றிட வாராந்தக்
காலைக டம்பக லெற்படு காலைக டந்தந்தி
மாலைக ழிந்ததி யாமமும் வந்தும ரீஇயிற்றால்.

(இ...ள்). காவற் செய்யும் சேவகர்கள் ஆயுதபாணிகளாய்ப் பரிசுத்த சமாதியைச் சூழ வளைந்து நின்றிருக்க, வாரத்தின் கடைசி நாளாகிய சனி வாரத்தின் காலைப்பொழுதும் பகற்பொழுதும் சூரியன் மறைகின்ற காலமுங் கடந்து, அந்தி மாலையுங் கடந்தது நடுநிசியும் வந்து கூடிற்று. (சஉங)

கைவரு லௌகிக வேலையொ ழிந்துக ருத்தோன்றித்
தைவிக நாளனு சாரிக ளாயுயர் சற்போதர்
உய்வரு ளுதனு யிர்த்தெழு வேனென வுய்த்திட்ட
மெய்வச னத்திற முள்ளியி ருந்தனர் விழிதுஞ்சார்.

(இ...ள்). வழக்கமாயுள்ள வீட்டுக் குரிய வேலைகளைச் செய்துவிட்டு மனதை ஜெகதீசன்பேரில் செலுத்தித் தெய்வீகநாளாகிய ஓய்வுநாளை யனுசரிக்கிறவர்களாய்ப் பெருமைபொருந்திய ஞானகுருவும் நற்கதியை நமக்கருளுபவருமாகிய நாதன் உயிர்த் தெழுவேனென்று சொல்லியிருந்த உண்மையான வாக்கின் பெருமையைச் சிந்தித்தவண்ணமாக அவ்விரவு முழுவதும் தூங்காமலிருந்தார்கள். (சஉச)

மாசில்ம டந்தை மார்சிலர் கந்த வருக்கங்கள்
ஆசற வீட்டி யாதிதி னத்தி னதிகாலை
ஈசனு டற்குப் பூஜிதை செய்வா மெனவெண்ணி
நேசம்வ டிக்குங் கண்ணொடி ருந்தார் நிசிமுற்றும்,

(இ...ள்). மாசற்ற மாதர்களிற் சிலர் வாரத்தின் முதல் நாளாகிய (மறு)நாட் காலையில் ஜெகதீசனது சரீரத்திற்குப் பூசை செய்யலாமென் றெண்ணி வாசனைத் திரவியங்களை மனதாரச் சேர்த்துவைத்துக் கொண்டு இரவு முழுவதும் அன்பினால் வடியுங் கண்ணீருடன் காத்திருந்தார்கள்.

சமாதி காண்டம் முற்றிற்று.

காண்டம் ஆறுக்குத் திருவிருத்தம் 425.

ஏழாவது

# உயிர்த்தெழுந்த காண்டம்.

---

இரட்சா பெருமானாகிய இயேசு கிறிஸ்து நாதர் உலகத்தின் பாவங்கட்காகத் தன்னையே ஜீவ பலியாக சிலுவை யென்னும் பலி பீடத்தில் ஒப்புக் கொடுத்து மாணமடைந்து சமாதி வைக்கப்பட்டபின் திருமறை கூறியுள்ளபடி அவர் மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்த விந்தையை விஸ்தரிக்கும் இப்பாகத்திற்கு உயிர்த்தெழுந்த காண்டம் எனப் பெயர்.

அறுசீர் விருத்தம்

இருநில முய்யக் கொண்ட வெம்பிரா னுக்கை யீமம்
மருவிய வாறீ தாக மறுத்துயிர்த் தெழுந்த வுண்மை
திருமுறை கிளக்கும் வண்ணந் தெரிப்பலென் றமலற் போற்றி
பொருவரும் பக்தி யென்னும் புனிதைமேற் புகல்வ தானாள்,

(இ...ள்). இப்பெரிய உலகம் இரட்சிப்படையுமாறு எம்பிரானெடுத்த சரீரம் இடுகாடடைந்த விதம் இவ்வாறிருக்க அவர் மரித்தபின் உயிர்த்தெழுந்த சத்தியத்தை வேதாகமத்தில் சொல்லிய வண்ணம் உனக்கெடுத்துரைப்பே னென்று ஒப்பற்ற பக்தி யென்னும் பெண்ணானவள் கடவுளைத் துதித்து (கிறிஸ்தியானுக்கு)ப் பின்னர் நடந்தவைகளைச் சொல்லலானாள். (சஉசு)

மைந்தகே ணம்பி ரானிம் மாநிலத் துயிர்த்தெழுந்த
விந்தையைத் தரிசித் தேத்தும் விழைவினால் விபுத ராவார்.
அந்தரத் தீண்டிப் பல்லாண் டணியிசை யலர்த்து மாபோல்
சிந்து நீர்ச் சுனையுங் காவும் புள்ளொலி சிறந்த மாதோ.

(இ...ள்). மகனே கேட்பாயாக, நம்பெருமான் இப்பூலோகத்தில் உயிர்த்தெழுந்த அற்புதத்தை (மனதால்) தரிசித்து அவரைத் துதிக்கும் ஆசையால் (பக்தர்கள்) பரிசுத்தவான்களாவார்கள். ஆகாயத்திலிருந்து மங்கள கீதம் பாடும் தொனியைப்போல ஆற்று நீரோட்டமும் சுனையின் நீரும் சோலையிலுள்ள பட்சி ஜாதிகளின் சப்தமும் விளங்கின. (சஉஎ)

விண்ணுற நிவந்த நாக வியன்கிளைப் பொதும்பர் மென்பூஞ்
சுண்ணமு மலருந் தீந்தேன் றுருகுதியும் வானந்தூய
ஒண்ணிறப் பனிநீ ரோடு கலந்துமென் கால் கொண்டோச்சல்
புண்ணியனெழுச்சிக் கோலம் புனைந்தெனப் பொலிந்த தன்றே.

(இ...ள்). வானத்தை யளாவும்படி உயர்ந்த பலவிதமான பெரிய மரங்கள் நிறைந்த சோலையில் மலருகின்ற பொதுவான புஷ்பங்களிலிருந்து மகரந்தப் பொடியுடன் ஒழுகும் இனிய மலர்த் தேனின் பெருக்கானது வானத்திலிருந்து விழுகின்ற பிரகாசமான நிறத்தை யுடைய பனி நீரோடு கலந்து தென்றல் காற்றுடன் வீசுதலானது புண்ணிய புருஷன் எழுந்த கோலத்தை யடைந்தாற்போல் விளங்கினது. (௪௨௮)

மருப்படி கமல வாவி மறிதிரை முழவ மார்ப்ப
அருப்புநாண் மலர்வாய் கிண்டி யழிபசுந் தேறன் மாந்திச்
சுருப்பிசை சுருதி காட்டப் புள்ளொலி யிசையிற் றுன்னத்
திருப்பள்ளி யெழுச்சி கூடுஞ் செவ்வியை யொத்த தம்மா.

(இ...ள்). வாசனையுடைய கமல மலர்கள் நிறைந்த குளங்களில் மறித்து அடிக்கும் அலைகள் மத்தளத்தைப்போல் தொனிக்க அன்று மலர்ந்த அரும்பின் வாயைக் கிளறி அதிலுள்ள இனிய தேனையுண்டு வண்டுகள் சுருதியிசை கூட்ட (அதற்கேற்ப) பட்சிகள் இராகத்தைப் பாட உயிர்த்தெழும் எம்பிரானுக்கு நித்திரையிலிருந் தெழுப்பும பொருட்டுப் பாடும் கீதத்தை யொத்திருந்தது (௪௨௯)

கோதிலாப் புனித வன்பு குலவுநீ ரகத்து நம்மான்
பாதடங் கஜம லர்ந்த பரிசெனப் பளிங்கிற் றோன்றுஞ்
சீதநீர்ப் பொய்கை யெங்குஞ் செழுங்கடி கமழுந் தூய
மாதர்மென் கமலப் போது வள்ளவாய் மலர்ந்த மாதோ.

(இ...ள்). அன்பென்னும் நீரையுடைய குற்றமற்ற பரிசுத்தவான்களது மனமென்னும் குளத்தில நம் பெருமானது பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்த தன்மையை யுடைய கண்ணாடியைப்போலுந் தெளிந்து குளிர்ந்த நீரையுடைய குளங்களெங்கும் செழித்த வாசனை நிறைந்த பரிசுத்தமான அழகிய மெல்லிய கமலப் புஷ்பங்களின் கிண்ணத்தைப் போன்ற அகன்ற வாய்கள் மலர்ந்தன. (௪௩௦)

வையகம் புதைத்த கங்குல் வாருணி யுற்ற நோக்கித்
துய்யதண் மதிய மென்னுந் துயலவரு சுறவத்தோடு
மையற விளங்கும் வான மீனொளி மழுங்கி மாய
வெய்யவ வலைஞன் றோன்றுன் விடிவலை வீசி னானல்.

(இ...ள்). பூமியை மறைத்த இருளெனனும் கடலைச் சமயம் பார்த்து பரிசுத்த குளிர்ந்த சந்திர னென்னும் சுறவும் சுறு மீனோடு குற்றமற்று விளங்கும் வான நட்சத்திரங்களும் ஜோதி குறைந்து மறைந்துபோக சூரியன் எனனும் செம்படவன் மறைநது நின்று விடியற்காலம் என்னும் வலையை வீசினான். (௪௩௧)

மெய்கண்ட விடத்துப் பொய்மை வெருத்தென வெருத்த திந்து
கைகண்ட களவி னுக்கங் கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட வுள்ளம் போலொளி யிழந்த தீபம்
மைகண்ட கங்குல் வாட்டும வைகறை கண்டு கண்டே.

(இ...ள்). மிகக் கரிய இருட்டைப் போக்கும் விடியற்காலத்தைப் பார்த்த அளவிலே; உண்மையானது உண்மையே என்று ரூபிக்குங் காலத்தில பொய்யானது (அவமானத்தால் முகம்) வெளுத்துப் போவதுபோல சந்திரன் (பிரகாசங் குன்றி) வெளுத்துப்போயிற்று; கையிலே வைத்திருந்த திருட்டுப் பொருளைச் (கள்வன் திடீரென) மறைத்து விடுவதுபோல நக்ஷத்திரங்கள் (திருட்டுப் பொருள்கள்போல்) மறைந்து போயின; (விபரீதமான) பொய்க் குற்றத்தைச் சாட்டுங் காலத்தில் (அப்பொய்க்காக) உண்மையான உள்ளம் மகிழ்ச்சி யடைவதுபோல் தீபங்கள் ஒளியை யிழந்தன. (சஙஉ)

இன்னதோ ரமையந் தன்னி லிருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய பரகதிப் பயனை யீட்டித்
துன்னிய ஜடவி போகத் துயிலுணர் குழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்த னுயிர்த்தெழுந் தருளிப் போந்தார்.

(இ...ள்). இத்தகைய நல்ல சமயத்தில் இப்பெரிய உலகத்திற்கெல்லாம் விஸ்தரிக்க முடியாத நன்மை பொருந்திய மோட்ச கதியின் பயனைச் சம்பாதித்து நிறைந்த நிஷ்டையிலிருந்து கலைந்து எழுந்த தன்மையைப் போல் மேன்மை தங்கிய தேவ குமாரனாகிய எமபிரான் உயிர்த்தெழுந்தருளிப்போனார். (சஙங)

வார்த்தையாய் நடுவ ராகி மன்னுயிர்க் கிரக்ஷை நல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி முறைவழா துயிர்த்தெழுந்த
தீர்த்தனைத் தரிசித் தேத்தி ஜெயஜெய வென்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி பெய்தனர் கெழுமி விண்ணோர்.

(இ...ள்). ஆதியிலே வார்த்தையுமாய் திரித்துவத்தில் நடு நாயகருமாய் மானிடர்கட்கு இரக்ஷிப்பளிக்க இரக்ஷணிய மூர்த்தியுமானவர் மரணத்துக்குள் ளடங்கி தீர்க்கதரிசன ஒழுங்கு கெடாவண்ணம் ஜீவனடைந் தெழுந்த பரிசுத்தனது வரவுகண்டு திரண்டெழுந்த வானோர்கள் அவரை தரிசித்துப் பலவாறு புகழ்ந்து ஜெய ஜெய வென்று வாழ்த்தி சங்கீதத்துடன் புஷ்பமாரி பெய்தார்கள். (சஙச)

தன்மமுந் தவமு மோங்கித் தழைத்தன வருள்மெய் வேத
கன்மமு மொழுக்கு வல்லே கதித்தன கருணை பூத்த
நன்மையு மெய்மை தானு நடநவின் றுலகை மெங்கும்
வன்மமும் பகையுந் தேய வளர்ந்தன மருவி மாதோ..

(இ...ள்), உலகமெங்கும் தருமமும் தவங்களும் தழைத்தோங்கி நின்று வளர்ந்தன; சத்திய வேதத்திற் சொல்லப்படும் காரியங்களும், அதின்படி நடத்தலுமான செய்கைகள் மிகவும் மலிந்தன; (உள்ளத்தில்) கருணை நிறைந்த நன்மை செய்வதும், உண்மைப் பக்தி உபசாரஞ் செய்வதுமே (எங்கும்) நர்த்தனமாடுவதுபோல் நிறைந்து வளர்ந்தன; இதனால் மூடவைராக்கியமும் பகைமையும் தொலைந்து போயின. (சஙரு)

அறந்தலை யெடுத்த தொல்லை யாரணத் துழனி யோங்கிச்
சிறந்தது ஜென்ம தோடத் தீக்கரு மத்தின் மூழ்கி
இறந்துபாழ் பட்டோ ராவிக் கிறிலா ஜீவன் வந்து
பிறந்தது சுகிர்த போதம் பிறங்கிய தவனி யெங்கும்.

(இ...ள்). உலக முழுவதும் தருமமானது தலையெடுத்து விளங்கியது, பழமையான வேதத்தின் ஓசையானது (ஒவ்வொரு வீட்டிலும்) கூறக கேட்கப்பட்டுச் சிறந்தோங்கி நின்றது; ஜென்ம தோஷத்திய கருமத்துள்ளேயே மூழ்கிக் கிடந்து இறந்து பாழாகினவர்களின் ஆவிக்குங்கூட இப்பொழுது அழிவிலாத (நித்திய) ஜீவன் கிடைத்தது, (பொதுவாக) ஒவ்வொருவருக்கும் சுகானந்த போதம் ததும்பி விளங்கியது. (சஙகூ)

ஆயபே ரன்பு மல்கு மாழியி னுதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோ ராக விளங்குபுண் ணியவே தாந்த
ஆயிரங் கரங்க ளோச்சி யலர்பரஞ் சுடரைக் காண்பான்
சேயொளி பரப்பிக் கீழ்பாற் றினகர னுதயஞ் செய்தான்.

(இ...ள்), நிலைபெற்ற பெரிய அன்பு பொருந்திய கடலி னிடத்தே யுதித்து (உலகத்திலே யுள்ள) மனிதவர்க்கங்களைப் பெருமைதரும் உயர்ந்த விண்ணோராக விளங்கும்படி செய்யும் புண்ணியம் பொருந்திய வேதசாஸ்திர ஞானபோதத்தின் ஆயிரங் கிரணங்களைப் போன்று; தன்னுடைய கிரணங்களென்னும் கரங்களை நீட்டிக்கொண்டு சிவந்த ஒளியை வீசிக் கொண்டு (இராப்பகலென்னும்) எக் காலத்தும் (அன்பென்னுங் குளிர்ச்சியான) பிரகாசத்தைத் தருகின்றவரும் (உலக எல்லா மண்டலங்களையும் படைத்ததினால்) அவைகளுக்கும் மேலான சுடராக விளங்குகிறவருமாகிய எம்பெருமான் (உயிர்த்தெழுந்து) செல்வதன் தரிசனத்தைக் காணும்பொருட்டுச் சூரியன் கிழக்குத் திசையி லிருந்து புறப்பட்டான். (சஙஎ)

நிருமல மூர்த்தி யேவ நிரையபா தலம்பு குத்தி
வருமமிக் கூரத்த பேயை வன்சிறைப் படுத்தி மீண்டு
கரும்பூ மியிலே தம்மான் கழனிழல் கருதி வந்த
தருமசக் கரமே யென்னத் தயங்கினன் றபனன் மாதோ.

(இ...ள்). ஜெகதீசன் ஆக்கியாபித்த வண்ணம் வைராக்கியம் மிகுந்த சாத்தானை நரகமாகிய பாதாளத்திலே அழுந்தவிட்டு (மீண்டும் மக்களைத் துன்புறுத்தா வண்ணம்) அப்பேயைப் பாதாளத்திலேயே சிறையிட்டு; தம்முடைய பிதாவாகிய சர்வேஸ்வரன் திருவடிகளை நினைந்த வண்ணம் இக் கரும விளைக் குரித்தான பூமியிலே உயிர்த்தெழுந்து மீண்டும் வந்த (அதர்மங்களை யறவொழித்த) தரும சக்கரமாகிய நமது ஏசுபிரானுக் கொப்பென்று யாவரும நினைக்க சூரியன் (சிறிது) மேலெழுந்து விளங்கினான்.

ஜெகமெலாங் கெடுத்த பேயைச் சிதைத்தழற் சிறைக்குள் ளாக்கிச்
சகலமு மடிப்படுத்த தன்னொரு குமரே சற்குப்
பகவனும் பரம தாதை பரிவுடன் தரித்த வெற்றி
மகிமையொண் மௌலிபோலுந் திகழ்ந்தனன் வயங்குவெய்யோன்

(இ...ள்), உலக முழுவதையுங் கெடுத்த சாத்தானை யழித்து அக்கினி யினின்று மீளாத சிறைக் குள்ளாக்கி சர்வ ஜீவர்களும் தனக்குத் தொண்டு புரியுமாறு செய்வித்த தனது ஒப்பற்ற குமரேசர்க்குக் கடவுளாகிய பரம தாதை அவ் வெற்றிக் கடையாளமாக அவர் அன்புடன் சூட்டிய மகிமைபொருந்திய கிரீடத்தைப் போலும் சுடரை விரித்துச் சூரியன விளங்கினான்.

அலகிலா வுயிர்க ளெல்லா மரும்பெறன் மகிழ்ச்சி பூத்த
குலவுகோ டாதி யாய கொழுங்கடி மலர்கள் பூத்த
விலகரு மவித்தை நீங்கி மெய்யொளி யுளந்தி கழ்ந்த
துலகுசூழ் கங்கு னீங்கி யுதயமுந் திகழ்ந்த தெங்கும்.

(இ...ள்). எண்ணிக்கைக் கடங்காத ஜீவகோடிக ளெல்லாம் பெறுவ தற் கருமையான சந்தோஷத்தால் நிறைந்தன. பொருந்திய கொம்பு முதலிய ஐந்துவகை வாசனையுள்ள புஷ்பங்கள் பூத்தன. நீக்குவதற் கியலாத அஞ்ஞானம் நீங்கி மனிதர்களின் இருதயத்தில் மெஞ்ஞானம் உதயமானது. உல கத்தைச் சுற்றியுள்ள இருளும் நீங்கி உதயகாலம் எங்கு முண்டாயது.

புஷ்பம்— கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ, நிலப்பூ என ஐந்து வகையாம். (௪௪0)

வண்டுணை விரிந்த செந்தா மரைமுக மலர்ச்சி காட்டித்
தண்டலை தாழ்த்தி மென்பூத் தடஞ்சினைக் கரத்தா னல்கி
எண்டகு புள்ளி னைய வின்னிசை யெடுத்துப் போற்றி
மண்டல மடந்தை யீசன் மைந்தனை வணக்கஞ் செய்தாள்.

(இ...ள்). பூமி யென்னும் பெண்ணானவள் வண்டுகள் தேனை யுண்ணும்படியாக விரிந்து மலரும் செந்தாமரை மலரின் மூலமாகத் தனது முக மலர்ச்சியைக் காட்டித் தனது தலையைத் தாழ்த்துவதுபோல் சோலையிலுள்ள விருட்சங்களைத் தாழச் செய்து, தனது விசாலமான கரங்கள் போன்றதாகிய மரக் கொம்புகளினால் புஷ்பங்களைச் சொரிந்து தனது குரலால் பாடுவது போல் எண்ணத்தகும் பட்சிகளின் இனிய ஓசையால் பாடித் துதித்து தேவ குமாரனை வணங்கினாள். (௪௪௧)

மயலுறும் பாவ தோட மருங்கறக் கெடுத்து மாந்தர்
உயவரு நலங்கொண் டைய னுயிர்த்தெழ லூர்த்த நன்மை
வியனிலத் தெங்கு மோடிப் பரந்துடன் விழாக்கொண் டென்ன
துயிலுணர்ந் தெழுந்து ஜீவத் தொகுதிகள் களித்த மாதோ.

(இ...ள்). மயக்கத்தை யுண்டுபண்ணக் கூடிய பாவ தோஷங்கள் இடமற்றுப் போகும்படி கெடுத்து மானிடர் உய்வதற் கேதுவாகும் நன்மை யைக் கருதி அவர் உயிர்த்தெழுந்த விசேஷமானது விசாலமான உலகமுழு வதும் விரைவில் பரவ நித்திரை தெளிந்தெழுந்த ஜீவ ஜெந்துக்களின் கூட் டங்கள் (காலையில்) விழாக் கொண்டாடினதை யொக்கச் சந்தோஷமாக ஆரவாரஞ் செய்தன. (௪௪௨)

கண்ணிய நிசிக்குள் ளாய கழிபெருந் துயிலை வீசி
எண்ணிலா வுயிர்கள் காலை யெய்பலோ டெழுந்த காட்சி
மண்ணியல் வினையின் மாய்ந்த மன்பதை யுயிர்த்தெழுந்த
புண்ணியர் தமக்குள் ளாகப் புத்துயி ரடைந்தாற் போலும்.

(இ...ள்). கணக்கி லடங்காத ஜீவராசிகள் வலையாகிய இரவி லகப்பட்டிருந்து மிகுதியான நித்திரையை விட்டொழிந்து சந்தோஷத்துடன் அதிகாலையி லெழுந்த புண்ணிய புருஷனில் பூலோகத்தில் இயற்கையா யுள்ள மானிட ஜீவனை புதிய உயிரை யடைந்தார் போலுமாயிற்று. (௪௪௩)

எந்தவா றடையு நம்மி லீறிலா ஜீவ னென்னுஞ்
சிந்தனை மருளே னம்மான் புண்ணிய ஜீவர்க் கெல்லாஞ்
சொந்தமாம் விசுவ சித்தோர் சுவர்க்கபேரின்பந் துய்ப்பர்
அந்தரி யாமி யேசு வென்பதை யயரே லைய.

(இ...ள்) நித்திய ஜீவன் நமக் கெப்படி உண்டாகு மென்று மனக் கவலைப் படுவானேன. நம் பெருமானது அருள் மானிட ஜீவர்க் கெல்லாஞ் சொந்தமாகும் அதை விசுவாசித்தவர்கள் மோட்ச பேரின்பத்தை யடைவார்கள். இயேசுநாதர் எங்கும் நிறைந்த கடவு ளென்பதைச் சற்றுஞ் சந்தேகியாதே. (௪௪௪)

வரைவின்றிக் கிருபை யார்க்கும் பொதுவென வழுத்தி னாலும்
பரமன்முன் குறித்தோ னுள்ள மொன்றிலே பழுக்கும் பத்தி
தரணிவான் கிரண மெந்தத் தலத்தினுந் தங்கு மேனும்
இரவிகாந் தத்தி னன்றோ விருங்கனல் பிறக்கு மம்மா.

(இ...ள்) சூரியனது ஒளி எவ்விடத்திலும் பிரகாசிக்கக் கூடியதாயிருந்தபோதிலும் (அவ் வொளியை கிரகிக்கக் கூடிய) சூரிய காந்தக் கண்ணாடியில் மட்டுமே பெரிய நெருப்புண்டாகும். அதுபோல கடவுளது அருள் எவருக்கும் (வித்தியாச மற்றதன்மையில்) பொதுவானதென்று சொன்னாலும் ஜெகதீசன் சமுகத்தில அவரருளை கிரகிக்கக் கூடிய தன்மையை யுடையவர்களது இருதயத்தில் மட்டுமே பூரண பக்தி யுண்டாகும். (௪௪௫)

ஒருநரன் வழியே பாவ முலகத்தை யுடற்றி நிற்ப
ஒருநர தேவனீட்டும் புண்ணிய முலகுக் கந்தப்
பருவரல் துடைத்து நித்ய பரகதிப் பயனை நல்கல்
திருவருண் மாட்சிக் கேற்ற திவ்விய முறையென் றோர்தி.

(இ...ள்). (ஆதாம் என்னும்) ஒரே மனிதன் மூலமாகப் பாவம் இவ் வுலகத்தை வருத்த (இயேசு வென்னும்) நரனும் தேவனுமாகிய ஒருவரது புண்ணியம் இவ்வுலகத்திற் பற்றிய அத்துன்பத்தை யொழித்து நித்திய மோட்ச கதியின் பயனை (இவ்வுலகத்தாருக்கு) அளிப்பது தெய்வ இலட்சணத்திற் குறிய ஒழுங் கென்பதை யறிவாயாக. (௪௪௬)

நம்பிரா னுயிர்த்தெ ழுந்த நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி யதிர வஞ்சிக் காவல ரயர்ந்து வீழ
உம்பர்நின் றிழிந்த தேவ தூதரோ ரிருவ ரொல்லை
இம்பரிற் சேம வைப்பை யெதிர்த்தனர் பகைவ ரஞ்ச.

(இ...ள்). நம் பெருமான் உயிர்த்தெழுந்த நன்மை மிகும் அந்நேரத்தில் பூமி யசைய, காவலர்கள் பயத்தால் சோர்ந்து விழ, வான வுலகத்திலிருந்து இறங்கி இரண்டு தூதர்கள் இப் பூலோகத்தில் (நம்பெருமானை யடக்கஞ் செய்து) உள்ள இடுகாட்டைப் பகைவர் பயப்படுமாறு விரைவாக வந்து சேர்ந்தனர்; (௪௪௭)

இருள்புலர் காலை கண்ட வேந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ யெழுந்தெம் மையன் சேமவைப் பதனை யண்மி
மருளறச் சமாதி வாயில் திறவுண்ட மாபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்துளந் திகைத்து மாதோ.

(இ...ள்). இருள் ஒழிந்த காலை நேரத்தைக் கண்ட ஸ்திரீகள் மூவர் இச்சிந்தையுடனெழுந்து நமது எஜமானனின் சமாதிக்குச் சென்று சமாதியின் கதவு திறந்திருக்குந்தன்மையைச் சந்தேகமறப்பார்த்து மனந் திகிலடைந்து ஒன்றுந் தோன்றாதவர்களாய்க் கலங்கி நின்றார்கள்.

(மகதலேனு மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளுமாகிய மூவர் கல்லறை சென்றனர்). (௪௪௮)

ஆயிடை யருகர் நின்று மலிரொளி மின்னி னார்ந்த
தூயுடை பரித்த தேவ தூதரோ ரிருவர் தோன்றி
நீயிரிச் சேம வைப்பி னேடுவ தெவன்கொல் ஜீவ
நாயகன் றனனை முன்ன நவின்றவா சகத்தை யோர்மின்.

(இ..ள்). அவ்விடத்தில் மிகவும் பிரகாசமான மின்னலையொத்த பரிசுத்தமான உடை தரித்த இரண்டு தேவதூதர்கள் அவர்கள் சமீபத்தில் தோன்றி "நீங்கள் இக்கல்லறையில் யாரைத் தேடுகிறீர்கள். ஜீவனுக்கதிபதியானவர் தன்னைக் குறித்து முன்னமேயே சொல்லியுள்ள விஷயங்களை யோசித்துப்பாருங்கள்" என்றும். (௪௪௯)

ஈண்டுளா ரல்லர் ஜீவ னிமைந்தெழுந் தருளி னாரக்
காண்டகு நம்பி நும்முன் கலிலேய நாடு சேர்வர்
பூண்டமெய் யன்ப ருக்குப் புகலுமிப் புதுமை யென்னாச்
சேண்டலத் தெழுந்து போனார் நிகழ்ந்ததை தெரியச் செப்பி.

(இ...ள்). "அவரிங்கே யில்லை. ஜீவன் பெற்று உயிர்த்தெழுந்தருளியுள்ளார். காணக் கிடைக்கப்பெற்ற நம்பிரான் உங்களுக்கு முன்னே கலிலேயாநாடு சேர்வார் இந்த ஆச்சரியத்தை மெய்யன்பு பூண்ட சீஷர்கட்குச் சொல்லுங்கள்" என்று நடந்த காரியத்தை யவர்களறியச் சொல்லியபின் மேலே எழுந்து போயினர். (௪௫௦)

வேறு

கலி விருத்தம்

உன்ன தேசனு யிர்த்தெழுந் தாரெனச்
சொன்ன சொல்லமு தஞ்செவி தோய்தலும்
மன்னு நித்திய வாழ்வுகை வந்தெனப்
பொன்ன ஞர்க்குட்சி றந்தது புத்துயிர்.

(இ...ள்). உன்னத ஈசன் உயிர்த்தெழுந்தார் என்னும் அமிர்தத்தைப் போன்ற செய்தி அந்த ஸ்திரீகள் காதில் பட்டவுடனே நிலையுள்ள மோட்ச பாக்கியம் தங்கட்குக் கிடைத்துள்ளதென அவர்கட்குள் புதிய உயிர் சிறந்து தோன்றியது. (௪௱௧)

வள்ளல் சொற்றவ சனமும் வைகறைப்
பள்ளி நின்றெழு பான்மையுந் தம்முளே
உள்ளி யுள்ளத்து வட்டெழு மோகையுந்
தெள்ளி தச்சமுங் கொண்டுதி யங்கினர்.

(இ...ள்). நம்பிரான் சொன்ன விஷயத்தையும் அதிகாலையில் அவர் சமாதியினின்று உயிர்த்தெழுந்த தன்மையையும் தமக்குள்ளே நினைத்து மனதிலுண்டாகும் சந்தோஷத்தால் நிறைந்து பயமுங் கொண்டு நடுங்கினர். (மத். ௨௮:௮) (௪௱௨)

உறையி றந்தவு வகைப்பெ ருங்கடல்
கரைபு ரண்டுகெ தித்ததுக் காக்கினி
விரைவின் மாய்ந்திட மெல்லிய லாரெழுந்
துரைசெய் வாந்திருத் தொண்டர்க்கென் றோடினர்.

(இ...ள்). விஸ்தரிக்கமுடியாத சந்தோஷமாகிய கடல் (அவர்கள் இருதயமெனனும்) கரை புரண்டு தங்கினது. துக்கமென்னும் அக்கினி சீக்கிரத்தில் ஒழிய அம்மாதரெல்லாம் எழுந்து "இதைச் சீஷர்கட்குச் சொல்லுவோம்." என்று வேகமாய்ப் போனார்கள். (௪௱௩)

தூதர் சொற்றசு மங்கல வார்த்தைகொண்
டேத மில்லவ ரேகுழி யெம்முயிர்
நாதன் கண்ணெதிர் தோன்றிந லங்கிளர்
மாத ரீர்நன்கு வாழ்கென வாழ்த்தினர்.

(இ...ள்). குற்றமற்ற ஸ்திரீகள் தூதர் சொன்ன மங்கள வார்த்தையை மனதில் கொண்டவர்களாய்த் திரும்பிப் போகுஞ் சமயத்தில் எம்முயிர் நாதன் அவர்கள் கண்முன் தோன்றி "நன்மை மிகுந்த மாதர்காள் நீங்கள் நன்கு வாழ்க" என்று வாழ்த்தினர். (௪௱௪)

அருளின் வாழ்வைய றங்கிள ராரணப்
பொருளை யன்பின்பு ணரியைப் புங்கவர்
தெருளுஞ் சின்மய தேசிக மூர்த்தத்தை
மருளொன் றின்றிம டந்தையர் நோக்கியே.

(இ...ள்). அருளவதாரத்தை, தருமமே உருவாகக் கொண்ட வேத மூர்த்தியை, கருணாசமுத்திரத்தை, வானோர் நன்றாயறிந்துகொள்ளும் அறிவின் மயமாகிய ஆசாரிய வடிவைச் சந்தேகமன்றி அம்மாதர்கள் பார்த்து.

உழுவ லன்பொடு ளங்கனிந் தொல்லெனக்
கழுதின் வன்றலை யைத்தெறு காற்றுணை
தொழுது வீழ்ந்தனர் பன்முறை தோத்திரித்
தெழுது பாவையன் னாரினி தேத்தினார்.

(இ...ள்). சித்தரித்த பதுமை போன்ற அந்த ஸ்திரீகள் தொடர்ந்து வரும் அன்பினால் மனங்கனிந்து கொடிய சாத்தானின் தலையை மிதிக்கும் இருபாதங்களையும் விரைவில் வணங்கிப் பலமுறை தோத்தரித்து இனிமையாக அவரை வாழ்த்தினார்கள். (௨௫௬)

நன்று யாவுந விவுறு சீடருக்
கின்றி யம்பியெ னைக்கலி லேயநாட்
டொன்ற விள்ளுமி னுள்ளங்க லங்கன்மின்
என்று ரைத்துக்க ரந்தன ரெம்பிரான்.

(இ...ள்). உடனே எம்பிரான் அம்மாதர்களைப் பார்த்து "பயப்படவேண்டாம். நீங்கள் மனவருத்தப்படும் சீஷர்களிடம் நலமுடன் சென்று நீங்கள் கண்டவைகளைச் சொல்லி என்னைக் கலிலேயா நாட்டில் வந்து காணும்படி அவர்கட்குத் தெரியப்படுத்துங்கள்" என்றுரைத்து மறைந்தருளினார். (௨௫௭)

ஓகை மாநற வுண்டுக ளித்தவத்
தோகை மார்பதி னொருநிருத் தொண்டர்பால்
ஏகி யீசனெ ழுச்சியும யாவையுஞ்
சோக நீங்கவ குத்தனர் சொல்லினார்.

(இ...ள்). சந்தோஷ மென்னும் பெருமை பொருந்திய தேனை உண்டு களித்த அம்மாதர்கள் பதினொரு சீஷர்களிடஞ் சென்று எம்பிரானுயிர்த்தெழுந்த விஷயம் யாவையும் அவர்கள் சஞ்சலம் நீங்குமாறு தெளிவாகச் சொன்னார்கள். (௨௫௮)

அணங்க னாருரை கேட்டுமெய் யாரணக்
குணங்கள் பூத்தகு ருத்துவ ராருயிர்
உணங்கி மீண்டிங்கு யிர்த்தெழ லொல்வதோ
இணங்கு றாதென வெய்தின ரையமே.

(இ . ள்). சத்திய வேதத்தின் தன்மையை யறிந்த ஆசாரியராகிய சீஷர்கள் தெய்வப் பெண்களை யொத்த இவர்களின் வார்த்தையைக் கேட்டு ‘‘ அருமையான உயிர் நீங்கியபின் மறுபடியும் அச்சரீரம் உயிர்பெற்றெழுவது சாத்தியமோ? அது கூடாத காரியம்’’ என்று சந்தேகப்பட்டனர்.

முற்ற றிந்தமு ழுமுதன் முன்னுறச்
சொற்ற வாய்மையு முள்ளிலர் தொக்குடன்
இற்றி துண்மையின் னேதனி யீமத்தின்
உற்ற றிந்திடு வாமென வோடினர்.

(இ...ள்). சகலமு மறிந்த முழுமுதற் கடவுளாகிய எம்பெருமான் (தன்னைக் குறித்து) முன்னமே சொல்லியிருந்தவைகளை நினைக்கவில்லை. உடனே நாம் ஒன்றுசேர்ந்து ஒப்பற்ற சமாதிஸ்தலத்திற்கு (கல்லறை)ச் சென்று இதன உண்மையை இப்பொழுதே கண்டறிவோமென ஓடினர்.

ஒன்று மன்பனு லம்பொரு பேதுரு
என்ற சீடரி ருவரு மீமத்திற்
சென்ற கத்துறத் தேடினர் காண்கிலர்
மன்றல் யாக்கையைச் சிந்தைவ ருந்தியே.

(இ...ள்). அன்புள்ள (யோவானும்) மலைக்குச் சமானமான பேதுருவாகிய இரு சீஷர்களும் ஈமத்தின் உள்ளே நுழைந்து வாசனைத் திரவிய மிட்ட சரீரத்தைத் தேடியுங் காணாது மனம் வருந்தினர். (சகூக)

திரும்பி யேகினர் சீடர்ம கதலேன்
ஒரும டந்தை தகம் முன்னத ஜீவனைக்
கரும பூமியிற் கண்டருள் பெற்றுடன்
தரும சீலரைச் சார்ந்தனள் சாற்றினள்.

(இ...ள்). சீஷர்கள் (ஒன்றுங் காணாதவர்களாய்) திரும்பிப் போனார்கள். ஒப்பற்ற ஸ்திரீயாகிய மகதலேனா மரியாளோ நமது உன்னத மூர்த்தியைக் கல்லறைத் தோட்டத்தில் கண்டு அவரது அருளை யடைந்து உடனே (யோவான் பேதுரு வென்னும்) சீஷர்களிடஞ் சென்று அதைத் தெரிவித்தாள். (சகூஉ)

தாயை நாடிய கன்றெனத் தற்பரன்
சேயை நாடித்த விக்கின்ற சீடனுந்
தூயன் சூழ்குது யர்க்கட னீத்துய
நாய கன்திருச் சேவையை நல்கினர்.

(இ...ள்). தாய்ப் பசுவைத் தேடுங் கன்றைப்போல தெய்வ குமாரனை நாடித் தவிக்கின்ற சீடனாகிய பரிசுத்த பேதுரு அடைந்திருக்கும் துன்பக் கடலி னின்று கரை யேறி உய்யுமாறு எம்பெருமான் அவனுக்குத் தரிசன மானார். (சகூங)

எம்ம வூருக்கன் றேகிய சீடரின்
மம்மர் நீங்கம திவிளக் கேற்றியும்
அம்ம வங்கவ ரோடுண வாற்றியுஞ்
செம்மல் சிந்தைதெ ருட்டினர் செவ்விதின்.

(இ...ள்). அன்று எம்மா என்னும் ஊருக்குச் சென்ற பக்தர்களின் அறியாமை நீங்குமாறு அவர்களது அறிவை வெளிப்படுத்தியும் அங்கு அவர்களுடன் போஜனம் செய்தும் எம்பிரானச்சமயத்தில் (தன் பிரசன்னத்தால்) அவர்கள் மனதை நன்றாகத் தெளிவாக்கி யருளினார். (சகூச)

ஈண்டு காட்சியெ திர்ந்தவ ரெய்தியாம்
மீண்டெ ழுந்தருள் வித்தகன் றன்னைநேர்
காண்டல் செய்துட னுண்டுக ளித்தனம்
மாண்ட போதன ரீரென்று வாழ்த்தினர்.

(இ...ள்). இங்கு அவரைத் தரிசித்தவர்கள்; மாட்சிமை பொருந்திய அறிவுடையோராகும் சீஷரிடஞ் சென்று நாங்கள் மறுபடியும் உயிர்த்தெழுந்த அற்புத மூர்த்தியை நேரில் தரிசித்து அவருடன் உண்டுங் களித்தோம்" என்று சொல்லியச் சீஷர்களை வாழ்த்தினார்கள். (சகூரு)

தக்க சான்றிது வென்னினுந் தம்முளே
புக்க வையம்பொ திந்துபு றஞ்செலா
தொக்க வாங்கொரு றையுளி னுள்ளுறத்
தொக்கி ருந்தனர் பன்னொரு தூயரும்.

(இ...ள்). இஃது போதுமான சாட்சியா யிருந்தும் அப்பன்னிரண்டு சீஷரும் தமக்குள்ளே புகுந்த சந்தேகமானது நீங்காமல் நிறைந்து, எல்லோரும் ஒருமிக்க அங்கு ஒரு வீட்டில் கூடியிருந்தனர். (சகூகூ)

ஆன போழ்தத்த டியவர் நாப்பணே
தூன லந்திகழ் மேனியிற் றோன்றிநந்
தீன ரக்ஷக தெய்வத மெய்ச்சமா
தான மல்கித்த ழைக்கவென் றாரரோ.

(இ...ள்). பலவீனரை இரட்சிக்கும் எம்பெருமான் அச்சமயத்தில் அவ்வடியார்கள் நடுவில் பரிசுத்தமான கன்மையை விளக்கும் சரீரத்துடன் தோன்றி "தெய்வத்தன்மை பொருந்திய மெய்ச் சமாதானம் உங்களில் பெருகித்தழைக்க" என்று (ஆசி) கூறினார், (சகூஎ)

அண்டர் நாயகன் றோன்றிய ளிதழ்
விண்ட வாய்மொழி கேட்டும்வி ழிக்கெதிர்
கண்டு மின்னுங்க லங்கின தன்றிமெய்த்
தொண்ட ருள்ளந்து றந்தில தையமே.

(இ...ள்). இப்பூலோக அதிபதியான கடவுள் நேரில் காட்சி கொடுத்தும் புஷ்பத்திற்குச் சமானமான அவரது வாயின் வார்த்தைகளைக் கேட்டும் அவரைக் கண்ணாரக் கண்டும் இன்னும் கலங்கினார்களே யன்றி அம்மெய்த் தொண்டர்களது மனதிலுள்ள சந்தேகம் நீங்கவில்லை. (௪௬௮)

ஐய முந்திகி லுங்கலந் தம்புவி
உய்ய வந்திங்கு யிர்த்தெழுந் துன்னத
தெய்வி கந்திகழ் மேனியைத் தேற்கிலார்
வெய்ய வாவியி தென்றுவெ ருண்டனர்.

(இ...ள்). சந்தேகமுந் திகிலும் கலந்த மனத்தராய் இவ்வழகிய உலகம் இரட்சிப்படைய இங்கு அவதரித்து (மரித்து) உயிர்த்தெழுந்த உன்னத தெய்வத்தின் ஜோதி விளங்கும் சரீரத்தை அறிந்துகொள்ளக் கூடாதவர்களாய் அதை ஒரு கொடிய ஆவியென்று நினைத்துப் பயந்தார்கள்.

சிந்தை தேருந்தி ருத்தகு தெய்விக
மைந்த னோர்ந்தும னங்கலங் காதிர்நீர்
எந்த வாவியும் யானுறு மானவ
விந்தை யாக்கைப டைத்தில மெய்ம்மையால்.

(இ...ள்). மனதிலுள்ளவைகளை யறியும் பெருமை பொருந்திய தேவ குமாரன் (இவர்களது சந்தேகத்தை) யறிந்து "நீங்கள் கலங்க வேண்டாம். எந்த ஆவியும் நானடைந்துள்ள அற்புத சரீரத்தை மெய்யாக அடைந்ததில்லையே." (௪௭0)

பாரு மின்பரி சித்தென்ப தாதியை
ஒரு முன்னுரை யானன்றி யுண்மைவே
றுரு மில்லர்மற் றையுற லீமொனுத்
தேரு மாறுதெ ருட்டினர் சிந்தனை.

(இ...ள்). "என் பாத முதலிய சரீரத்தைப் பரிசோதித்துப் பாருங்கள். வேதநூற்களில் முன்னே சொல்லப்பட்டவன் நானேயல்லாமல் உண்மையாகவே வேறொருவரு மில்லையென்பதை யறியுங்கள். சந்தேகப் படவேண்டாம்'; என்று அவர்கள் நம்புமாறு மனதை தெளியவைத் தருளினார். (௪௭௧)

மேலு மேலும்ப லமுறை வித்தகக்
கோலங் காட்டிக்கு ரவர்க்குக் கோதறு
சீல மல்கத்தெ ரித்தனர் செம்பொருள்
ஞால மீதொரு மண்டல நாடியே.

(இ...ள்). இப்பூலோகத்தில் நாற்பது நாட்களிலிருந்து பலதரம் சீஷர்கட்குத்தான் பற்பல விடங்களில் அற்புதங்களைச் செய்தபோது அப்போதிருந்த கோல வடிவங்களைக் காட்டி குற்றமற்ற நல்லொழுக்கத்தை மெய்ப்பொருள் விளங்குமாறு விரும்பிக் காட்டினார். (௪௭௨)

ஆதி மெய்யடி யார்திறத் தன்றியும்
பாதி யாயிர வர்க்கொரு பக்கலிற்
பூத லத்திலு யிர்த்தெழு புண்ணிய
நாதன் சேவைய ளித்தனர் நன்குற.

(இ...ள்). உத்தம சீஷர்கட்கு முதலாகக் காட்சி கொடுத்ததுமல்லாமல் வேறோரிடத்தில் ஐஞ்நூறு பேருக்கும் நன்மையுண்டாகுமாறு இவ்வுலகில் உயிர்த்தெழுந்த புண்ணியமூர்த்தி தரிசனமானர். (சஎங)

இத்தி றங்கிறிஸ் தியேசுவி னீறிலா
மெய்த்த வத்திரு மேனிவி ளங்கலிற்
சித்த சஞ்சல நீங்கித்தி கழ்ந்தனர்
சுத்த மெய்விசு வாசத்திற் றேமிலார்.

(இ...ள்). இவ்வண்ணம் மெய்த் தவத்தால் வந்த கிறிஸ்து இயேசுவின் அழியாச் சரீரத்தை ஆங்காங்கே கண்டதினாலே சுத்த மெய்விசுவாசத்தில் குற்றமற்றவர்கள் மனதில் சஞ்சலம் நீங்கப் பெற்றவர்களாய் விளங்கினர். (சஎச

அஞ்சி நெஞ்சம ழுங்கிய யர்ந்துவீழ்ந்
துஞ்ச காவல ரோடியு லப்பிலான்
எஞ்சு றுதலெ ழுச்சியும் யாவையும்
வஞ்ச கக்குர வர்க்குவ குத்தனர்.

(இ...ள்). பயந்து மனம் நடுங்கிச் சோர்ந்து விழுந்து தப்பிப் பிழைத்த காவற்காரர்கள் ஓடி அழிவில்லாத எம்பெருமான் குறையற்ற விதமாக உயிர்த்தெழுந்ததையும் மற்ற சங்கதிகளையும் வஞ்சகம் நிறைந்த பிரதான ஆசாரியனுக்கு விளங்கக் கூறினார்கள். (சஎரு)

பங்க முற்றப திதர்ப லர்குழிஇச்
சங்க முற்றுநந் தாபத ரேகாந்
தங்கம் வெளவிய கன்றன ரென்னவவ்
வெங்க ணார்க்குவெ றுக்கையை வீசினர்.

(இ...ள்). மறுபடியும் தீமை செய்வதற்காக சமயநெறிதனில் தவறிய பாதகர் பலர் சேர்ந்து ஒன்றாய்க்கூடி ஆலோசித்து சிற்சில கொடியவர்கட்குப் பணத்தை (இலஞ்சமாகக்) கொடுத்து தமது சீஷர்களே அச் சரீரத்தைத் திருடி ஒளித்துக்கொண்டு போய்விட்டார்களென்று சொல்லும்படியாக ஏவினர்கள். (சஎசு)

களியர் பொய்ப்படு கட்டுரை யோபுவி
தெளியுந் தெய்விக மெய்ம்மைசி தைத்திடும்
அளிய புன்மதி யாதித ருக்கனர்
ஒளிபு தைந்திடு மோவிர லொன்றிலே.

(இ...ள்). இக்கொடியவர்கள் சொல்லும் பொய் வார்த்தையோ பூலோக மறியும் தெய்வ சத்தியத்தை யழிக்கும்? பரிதபிக்கக்கூடிய அற்ப புத்தியல்லவா இது. சூரியனது பிரகாசத்தை ஒரு விரலில் மறைக்க முடியுமா? (சளள)

மன்ன னஞ்சிவ றிதுள மாழ்கினன்
ஒன்ன லார்நெஞ்சு ரங்கிழி பட்டனர்
பன்ன லாந்தர மன்றுவெம் பாழ்மதி
துன்னி யோரெவ ருந்துணுக் குற்றனர்.

(இ...ள்). அரசன் பயந்து ஒன்றுஞ் செய்யத் தெரியாமல் வாடினான். பகைவர்கள் தங்களது உரங்கொண்ட மனம் உடையப் பெற்றார்கள். கொடிய பாழான புத்தியை யுடைய யாவரும் நடுக்கமடைந்ததைச் சொல்வது எளிதல்ல. (சளஅ)

பத்தர் யாரும்ப வித்திர சிந்தையின்
உத்த மவிசு வாசத்து ரத்தலின்
மத்தர் வாயடை பட்டும றங்கிளர்
சித்த மாழ்கிய டங்கிய செவ்விவாய்.

(இ...ள்). தெய்வ பக்தர்கள் யாவரும் பரிசுத்த சிந்தையின் உத்தம விசுவாசத்தில் வலிமை பெற்றிருந்ததினாலே மூடர்களின் வாயடைப்பட்டுப் பாவம் நிறைந்த அவர்களது உள்ளங்கள் சோர்ந்து அச்சமயத்திலடங்கின. (சளகூ)

## உயிர்த்தெழுந்த காண்டம் முற்றிற்று.

காண்டம் ஏழுக்குத் திருவிருத்தம் 479.

எட்டாவது

# பரமேறிய காண்டம்.

---

ஸ்ரீ இயேசு பகவான் மரணத்தின்பின் மூன்றும் நாள் உயிர் பெற்றெழுந்து நாற்பது நாள்வரை பின்னும் இவ்வுலகில் சஞ்சரித்து பலருக்குப் பல தடவைகளில் பிரசன்னராகி பிறகு மேக வாகனராய் வானுலகத்திற் கெழுந்தருளிய அற்புதத்தை வர்ணிக்கு மிப் பாகத்திற்கு பரமேறிய காண்டமெனப் பெயர்.

*உம்பர் நாயக னுயிர்த்தெழுந் தருளிய வுண்மை*
*இம்பர் மெய்ப்படுத் தீரிரு பதுதினத் திறுதி*
*கொம்பி ருலிழிந் தொழுகொலி லாசலங் குறுகி*
*நம்பு தொண்டர்க்கு வேதியர்க் கிவையிவை நவிலும்.*

(இ...ள்). *தேவலோக அரசன் உயிர்த்தெழுந்த சத்தியத்தை இப் பூலோகத்தில் ஸ்திரப்படுத்திய நாற்பதாம் நாள் முடிவில் மரக்கொம்பிலேயிருந்து தேன்ஒழுகும் ஒலிவ மலையை யணுகி விசுவாசிகளாகிய சீஷர்கட்கு நம்பெருமான் பின்வருமாறு சொல்லுவார்.* (சஅ0)

*நண்பு ளீருல கெங்கணு நாசமூ ஹங்கட்*
*கெண்பெ றிஞ்சுவி சேஷத்தை யியம்புவி னிதயக்*
*கண்ப டைத்தவன் கதிநலம் பெறுகுவன் காணும்*
*பண்பி லாதவ னுக்கினைத் தீர்ப்பினுட் பாடுவான்.*

(இ...ள்). *"நட்புள்ளவர்களே! உலகமெங்குமுள்ள மானிடத் தொகுதிகட்கு பெருமை பொருந்திய சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். இருதயக் கண்ணையுடையவன் மோட்ச கதியை யடைவான். அதை கிரகிக்கும் தன்மையற்றவன் ஆக்கினைத் தீர்ப்புக் குட்படுவான்."* (சஅக)

*கண்டு கேட்டமெய்ச் சான்றுநீர் கருதிலென் றந்தை*
*விண்ட வாறினி யருட்பலம் விண்டலத் திழிந்து*
*மண்ட லத்துமை மருவுமட் டெருசலே மருவித்*
*தொண்ட ரீர்மலங் காதவண் டரித்திருந் துன்னி.*

(இ...ள்). *"யோசிக்குங்கால் சகலத்தையும் கண்ணால் கண்டும் காதால் கேட்டுமுள்ள சாட்சிகள் நீங்களே. என் பிதா சொன்னவண்ணம் மறுபடியும் பரிசுத்த ஆவி வானுலகைவிட்டு பூவுலகத்தில் உங்களிடம் வரும்வரை எருசலேம் சென்று சீஷர்களாகிய நீங்கள் கலங்காமல் தியானத்துடன் காத்திருங்கள்."* (சஅஉ)

ஒன்றி நும்முட னிருப்பன்யா னுலகமுள் ளளவும்
என்று வாய்மையி னிலகுசெவ் வாய்மலர்ந் தியம்பி
நின்றெ ழிற்றிருக் கரங்களை வானுற நிமிர்த்தி
நன்று மங்கல விடையருள் ளாசுயு நவின்றார்.

(இ...ள்). "உலகம் உள்ளளவும் உங்களிடம் நானிருப்பேன்" என்று சத்தியமே விளங்கும் சிவந்த மலர்போன்ற வாயைத் திறந்து சொல்லி அங்கு நின்றவண்ணமே அழகு பொருந்திய கைகளை மேலே யுயர்த்தி நன்மையான விடைபெறும் ஆசீர்வாதத்தை யளித்தார். (சஅங)

ஆசி மங்கள சாதன மருளிய வமையம்
மாசி லாவருண் முகிலையோர் மழைமுகில் வளைப்பத்
தேசு மல்கிய திருவுருக் காண்கிலார் சீடர்
மூசு பைம்புயல் விசும்புற முடுகுதல் கண்டார்.

(இ...ள்). ஆசீர்வாத மங்கள சாதனத்தை கொடுத்த சமயத்தில் மாசற்ற அருள்மேகமாகிய எம்பிரானை ஒரு மழை மேகம் வளைத்துக் கொள்ள சீடர்கள் அழகு பொருந்திய அவரது உருவத்தைக் காணாமல் நெருங்கிய கரிய மேகங்கள் ஆகாயத்தில் நிறைந்து சென்றதைக் கண்டார்கள். (சஅச)

மிக்க பேரதி சயத்தொடு மேலுற நோக்கித்
தொக்கு நின்றவே தியர்பருங் கோரிரு தூதர்
புக்கிவ் வாண்டவை யேகிய புதுமையே போல
மைக்க ரும்புயன் மீதுற மீண்டினி வருவார்.

(இ...ள்). மிகுந்த பேரதிசயத்துடன் ஆகாயத்தைப் பார்த்து நெருங்கி நின்ற சிஷர்கட்குச் சமீபத்தில் இரண்டு தூதர்கள் தோன்றி, "கடவுள் இவ்விடத்தில் சென்ற ஆச்சரியத்தைப்போல, மைபோன்ற கரிய மேகத்தின்மீது திரும்பவும் (இவ்வுலகில்) வருவார்." (சஅரு)

என்கொல் வானுற நோக்கிநீர் நிற்பதிங் கென்னு
மின்கு லாவிய வுடையினர் விள்ளிடை கரப்பப்
புன்க ணேடி யவரெலாம் பொருப்பைவிட் டகன்று
நன்கொ ருப்படு மனத்தராய் நகரியின் மேவி.

(இ...ள்). "நீங்கள் இங்கு வானத்தைப் பார்த்து நிற்பது எதற்காக" என்று சொல்லி பிரகாசம் பொருந்திய உடை தரித்துள்ள ஆகாயத்தில் மறைய சிஷர்களெல்லாம் மனவருத்தத்துடன் ஒலிவ மலையைவிட்டு நீங்கி நன்மை மிகுந்த எசமனமுடையவர்களாய் (எருசலேம்) பட்டணத்திற்குச் சென்று, (சஅசு)

நம்பி ரான்றிரு வாக்கினி னலந்திக ழாவி
இம்ப ருற்றிடு காறுமா லயந்தரித் திருந்து
பைம்பு யற்றிர ளேக்குவான் பயிரெனக் குரவர்
உம்பர் நோக்கிய சிந்தைய ரொருங்குதொக் கிருந்தார்.

(இ...ள்). நம்பிரான் சொல்லியவண்ணம், சீஷர்கள் நன்மை மிகுந்த பரிசுத்த ஆவி இங்கு வரும்வரை, தெய்வாலயத்திற் றங்கி மேகத்தின் கூட்டத்தை நோக்கும் பயிரைப்போல வானுலகை நோக்கிய மனதுடைய வராக ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். (௪௮௭)

மேக வாகனா ரூடராய் விட்புலத் துருவி
மாக மீதுமீ துயர்பதம் யாவையும் வரைந்து
சோக நீங்கிய சுரகணந் தொழுதுவாழ்த் தெடுப்ப
ஏக நாயகன் சந்நிதி யடைந்தன ரெம்மான்.

(இ...ள்). மேகத்தை வாகனமாகக் கொண்டவராய் எம்பெருமான் மேலுலகஞ் சென்று மென்மேலு முயர்ந்திருக்கும் இடங்கள் யாவையுந் தாண்டி துக்கம் நீங்கிய தேவர் கூட்டங்கள் அவரை வணங்கி வாழ்த்திப் போற்ற ஏகச் சக்ராதிபதியாகிய ஜெகதீசனின் சந்நிதியை யடைந்தார்.

ஒரும கன்பர திரித்துவத் தொருத்துவ ருரிமைத்
திரும கன்றம தாணையி னொழுகிய செல்வன்
கரும பூமியிற் பிரிந்துபோய்க் கடுந்துய ரடைந்து
வரும கன்னெனிற் றாதையி னுவகையார் வகுப்பார்.

(இ...ள்). ஒப்பற்ற ஒரே குமாரன், பரம திரித்துவத்திலொருவ ரென்னு முரிமையை யுடைய பரிசுத்தப் புதல்வன், தமது கட்டளைப்படி நடந்தச் செல்வன், மோக்ஷத்தைவிட்டுப் பிரிந்து பாவம் நிறைந்த உலகத்திற் சென்று கொடிய வாதனை யடைந்துத் திரும்பவும் தம்மிடமே வந்த சுதனென்றால், (அக்காலத்து) பிதாவாகிய ஜகதீசன் தமது திருவுள்ளத்திற் கொண்டுள்ள சந்தோஷத்தை விஸ்தரித்துரைக்க யாவராற்கூடும். (௪௮௯)

புனித மாயுயர் போதமாய் விளங்கிய புத்தேள்
கனித னீர்மையிற் காதலற் குவந்துகை யளித்த
தனித மாரருள் பொழிகிரு பாசனந் தன்னில்
இனிது வீற்றிருந் தருளினர் கிறிஸ்துவா மீசன்.

(இ...ள்). கிறிஸ்துவென்னும் எம்பிரான், புனிதமா யுயர்ந்த ஞான மாய் விளங்கிய ஜெகதீசன் கனியுமருளினாலே தன் குமாரனுக்குச் சந்தோஷத்துடன் கொடுத்த ஒப்பற்ற நிறைந்தவருட் சொரியுங் கிருபாசனத்தில் இனிமையாக வீற்றிருந்தருளினார். (௪௯0)

### குமாரக்கடவுளின் வேலை.

*சந்த தம்பர ஜீவருக் கிரக்ஷணை சமையச்*
*சுந்த ரத்திரு மேனியிற் றிலங்குமைங் காயந்*
*தந்தை யார்திரு விழிப்படுத் தின்னருள் தழைப்ப*
*விந்தை யாகமன் றூடலே நம்பிரான் வேலை.*

(இ...ள்). மானிடர்கட்கு இரட்சிப்பை யுண்டாக்கத் தனதழகிய பரிசுத்த சரீரத்தில் விளங்கும் ஐந்து காயத்தை அடிக்கடி தந்தையாகிய ஜெகதீசனுக்குக் காட்டி அவருடைய இனிய அருள் பெருகும்படி ஆச்சரியமாக மன்றாடுதலே நம்பெருமானது வேலையாகும். (௪௯௧)

### பரிசுத்த ஆத்மத்தின் கிரியை.

*மூன்றொன் றாகிய முழுமுதன் முந்துமுன் னையம்போல்*
*தோன்றல் வேண்டலிற் றாதையார் தூயநல் லாவி*
*ஆன்ற ஜீவகோ டிகளுய மெய்யறி வளிப்பான்*
*ஏன்று வந்தரு ளுருக்கொடு மகிதலத் திறுத்தார்.*

(இ...ள்). திரித்துவத்தில் ஒன்றாகிய முழுமுதற் கடவுள் முன்னே குறித்துள்ளபடி கிறிஸ்துபிரானின் வேண்டுதலினால் பிதாவினது பரிசுத்த ஆவி அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்பை யடையும்படி யவர்கட்கு மெய்யறிவைக் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டு இவ்வுலகம் வந்து அருளுருவங் கொண்டுவியாபித்திருக்கின்றார். (௪௯௨)

*கோதி லாத்தவம் புரிந்துதே வாலயங் குழீஇய*
*ஆதி தேசிக ரிடத்தனல் வடிவமா யமர்ந்து*
*பூத லத்தினங் கிறிஸ்துவின் புண்ணியம் பொலியக்*
*காத லாய்வர மளித்தனர் கதிவழி காட்டி.*

(இ...ள்). குற்றமற்ற தியானம் புரிந்து தெய்வாலயத்தில் கூடியிருந்த ஆதிமுதலாயுள்ள பக்தர்களிடம் ஜோதி வடிவமாயமர்ந்து இப்பூலோகத்தில் நமது கிறிஸ்துபிரானின் தத்துவம் விளங்குமாறு அன்புடன் அவர்களுக்கு வரமளித்து அதன்மூலம் மோட்ச வழியைக் காட்டினார். (௪௯௩)

### திருச்சபையின் சிறப்பு.

*அன்று தொட்டருட் குருபரம் பரைநிய மத்தால்*
*இன்று காறுநின் றவித்தையை யிகலற நூறி*
*ஒன்றி யாலம்வித் தீண்டல்போ லுலகெலாம் பரம்பிக்*
*குன்று றாதமெய்த் திருச்சபை குலவுகின் றதுகாண்.*

(இ...ள்). அந்நாள்முதல் குருபரம்பரை வரிசையில் இதுவரையிலும் நிலைபெற்று நின்று அஞ்ஞானத்தின் பகை கெடும்படி தொலைத்து ஆல்மரத்

தின் விதை செழித்து வளருவதுபோல் உலகமெல்லாம் பாவிக் குறையா மல் சத்தியவேதத் திருச்சபையானது வளர்ந்து வருகின்றது. (சுகூச)

### பரிசுத்த ஆத்மத்தின் பணி.

அனந்தர் நீக்கிமெய் யறிவினைக் கொளுத்தியாண் டகைபான்
மனந்தி ருப்பிர க்ஷணவிசு வாசத்தை வளர்த்துத்
தினந்தி னம்புதி தாக்கியான் மாக்களைத் தெருட்டல்
அனந்த மங்கள வாவியி னருட்செய லறிதி.

(இ...ள்). உலக மயக்கத்தை யொழித்து மெய்யறிவை யுண்டாக்கி மானிடர்களைக் கடவுள் பக்கம் மனந்திரும்ப வைத்து இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தை யவர்களது இருதயத்தில் வளரச் செய்து பிரதிதினமும் புதிதாக ஆத்துமாக்களை கடவுளண்டையில் கொண்டுவந்து சேர்ப்பதே எந்நாளுந் துதிக்கப்படக்கூடிய பரிசுத்த ஆவியினது அருள்நிறைந்த வேலை யென்பதை யறிந்துகொள்ளுங்கள். (சுகூரு)

### வாழ்த்து—வெண்பா.

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ்சக் கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய்—புந்திக்குள்
வீற்றிருக்கும் ஜேசு விரைமலர்ப்பூஞ் சேவடிக்கே
ஆற்றுகமெய் அன்பின் பணி.

(இ...ள்). இருதயாசனத்தில் வீற்றிருக்கின்ற இயேசு ஸ்வாமி யினுடைய வாசனைகொண்ட மலர்போலும் அழகிய சிறந்த திருவடி களையே, எப்போதும் என் நெஞ்சு சிந்திக்கக்கடவது, என் தலை எப்போ தும் வணங்கக்கடவது, என் கரங்கள் எப்போதும் கூப்பித் தொழக்கடவது, என் வாய் எப்போதும் வாழ்த்தக்கடவது, அத்திருவடிகளுக்கே என் சரீர மானது எப்போதும் உத்தம பணிவிடையை அன்புடன் செய்யக்கடவது.

### வேறு.

மல்குக ஜீவர்க் கெல்லா மதிநலந் தருமெய்ஞ் ஞானம்
புல்குக வறங்க ளெங்கும் புரையிலாச் செங்கோ லோங்கி
வெல்குக மெய்ம்மை யென்றும் விளங்குக கல்வி செல்வம்
பல்குக வுலக மெங்கும் பரம்புக நன்மை மாதோ.

(இ...ள்). இவ்வுலகத்திலுள்ள ஜீவகோடிகட்கெல்லாம் அறிவை மிகுதியாகக் கொடுக்கும் மெய்ஞ்ஞான முண்டாகக் கடவதாக. தருமநெறி நிறைந்த போதனைகள் எங்கும் பரம்பக் கடவதாக. குற்றமற்ற தெய்வ அரசாட்சி யோங்கி அஞ்ஞானத்தை ஜெயிக்கக் கடவதாக. சத்தியம் எந் நாளும் விளங்கக் கடவதாக. கல்வியும் சம்பத்தும் வளரக் கடவதாக. நன்மை உலகமெங்கும் பரம்பக் கடவதாக. (சுகூஎ)

நன்றுல கனைத்துந் தந்து நலம்பெறு தந்தை யாக
வென்றிசேர் மைந்த னாக விமலாவி யாக வென்றும்
மன்றல்சேர் திரியே கற்கு மகிமையுங் கனமு வாறு
தென்றுமுள் ளனபோ லின்று மென்றுமுண்டாக வாமென்.

(இ...ள்), உலக முழுவதையும் சிருஷ்டித்து நன்மை பொருந்திய பிதாவாகவும் (சாத்தானைச் சிறையிட்டு) வெற்றியிற் சிறந்த குமாரனாகவும், மேன்மை பொருந்திய பரிசுத்த ஆவியாகவும் எந்நாளும் விளங்கிவரும் திரியேக தெய்வத்திற்கு மகிமையும் கனமும் மாறாமல் ஆதியிலுள்ள து போல் இன்றும் என்று முண்டாவதாக. ஆமென். (சகஅ)

பரமேறிய காண்டம் முற்றிற்று.

காண்டம் எட்டுக்குத் திருவிருத்தம் 498.

---

இரக்ஷணியசரிதம் மூலமும் உரையும் முற்றுப்பெற்றது.



இரக்ஷா பெருமான் இணையடி நமஸ்தே.

# மதிப்புரை.

வெளிற்றனுமான வுரைகளை நுழைத்து விபரீதங் கொள்ளற் கிடங் கொடாமலும், சான்றோருளிய பெருநூற்களின் சாராம்ஸமாகவும் இலக்கிய விலக்கணப் பொலிவெலாம் நிறம்பப் பெற்றுக் கற்றோருடன் சொற்பயன் விளங்க விபரித் துரைத்தகாலத்து மற்றோரையு மனமகிழச் செய்து இகபர சாதனங்க ளிரண்டையுந் தரவல்ல அதிமுக்கியமானச் சில செந்தமிழ்க் காவியங்கள், ஆரிய மதத்தினர்களுக் கிருப்பதுபோல, கிறிஸ்தவர்களுக்கு யாண்டுங் கிடையாதெனச் சிலர் கொள்ளு மருட்சியை நீக்க இரண்டு சிறந்த நூற்கள் வெளிவந்துள்ளன. அவற்று ளொன்று உரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கும் மற்றொன்று புரோடெஸ்டான்டு கிறிஸ்தவர்களுக்கும் உரித்தானதாய் பிரகாசியா நிற்கின்றன.

இவை யிரண்டும், உலக ரக்ஷகராகத் திருவவதாரஞ் செய்தருளிய கிறிஸ்து நாதர் தமது வொப்பற்றத் திருவாக்கா லருளியபடியால் அதனை அருள்வேதமென இற்றை யீராயிர வருடங்களாகப் பவுல் அப்போஸ்தலர் முதல் மற்றைய குருக்களாலும் பெரியோர்களாலும் போதிக்கப்பட்டு வரும் ஞான விஷயங்களையும் கிறிஸ்து நாதரின் திவ்ய சரிதையையும் தன்னுள் விரவக் கொண்டு, பத்திய ரூபமாக வெடுத்துக் காட்டுஞ் சிறந்த நூற்களாம். இதனைத் தேம்பாவணி எனவும் இரக்ஷணிய யாத்திரிகம் எனவும் வியந்து கூறுவர் விவேகிகள்.

## தேம்பாவணி.

தேம்பாவணி (1729). இஃதியற்றியவர் இத்தாலியா தேசத்து காஸ்டிகிலியோவென்ற பட்டணத்திற் பிறந்தவர். இவர் உரோமன் கத்தோலிக்கு மார்க்கக் குருவாக வபிஷேகம் பண்ணப் பெற்று தம்மத விருத்தியை நாடி தக்ஷணத்திலே கோவா பட்டணத்தில் (1706) முதலாவதாகப் பிரவேசித்துத் தமிழ்நாடெங்குஞ் சுற்றித் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆரியம் முதலிய பல பாஷா விற்பன்னராகத், தமிழ்ப் பாஷையில் மிக்கத் தேர்ச்சிப் பெற்று, இந்நூலைத் தமிழகர் வியக்க நிலை நாட்டிய நிறைமொழியாளர் வீரமா முனிவராவர். (Constantine Joseph Beschi 8-11-1680—4-2-1747) தமிழ்க்கவி தொடுப்பதில் ஐரோப்பியரில் இவருக் கிணையாயினர் பிறரில்லையென்றே சொல்லலாம்.

## இரக்ஷணிய யாத்திரிகம்.

இரக்ஷணிய யாத்திரிகம் (1894). இஃதெழுதியவர் கிறிஸ்தவ கம்பரெனக் காரணப் பெயர் பூண்டச் செந்தமிழ்க் கவிசிரேஷ்டர் ஸ்ரீமத் H. A. கிருஷ்ணபிள்ளையவர்கள் (23-4-1829—3-2-1900) இவர் தமிழகர் வியக்குந் திருநெல்வேலியைச் சார்ந்த பாளையங்கோட்டையில் வேளாளர் குலத்திற் பிறந்தவர். 1858ம் ஆண்டில் கிறிஸ்து மார்க்கத்தைத்

தழுவி நன்னடக்கையாலும் குணத்தாலும் கல்வி திறத்தாலும் யாவராலும் புகழ்ந்துப் போற்றப் பெற்றவர்.* இந்நூலிலுள்ள கவிதைகளின் போக்கும் இயற்கைக்கு விரோதமில்லாது வேண்டிய கற்பனையாதி லக்ஷணங்களும் அதனை யுற்றுநோக்கி வாசித்து ஆராய்ச்சிச் செய்தாலன்றி எளிதிற் கண்டுணரச் சாத்தியப் படாததாகும். தமிழ் தெரிந்தோர் யாவருங் களிப்புடன் வாசிக்கவும் மகிழ்ச்சியுடன் மனங்கொள்ளவும் சில பலக் கவிதைகளைப் படலங்கடோறும் வெகு சிங்காரமாகத் தொகுத்து முள்ளார். இஃது 5 பருவங்களாகவும், அஃது முறையே 47 படலங்களாகவும் மொத்தத்தில் 4000 திவ்ய செந்தமிழ்க் கவிகளை யுங் கொண்டுளது.

இராமாயணம், மகாபாரதம், திருத்தணிகைப் புராணம், சீறாப்புராணம் முதலிய சிறந்தச் செந்தமிழிலக் கியங்களோடு, இரக்ஷணியாத்திரிகம் என்ற திவ்யநூலை யொப்பிட்டுப் பார்த்த காலத்து எவற்றுநூ மின்னூல் பின் வாங்கக் கூடியதாகக் காணப்படவில்லை. பக்திரசந் ததும்பவும், முத்தி பெறு மார்க்கம் பிரகாசிக்கவும், அன்றி வாசிப்பவர்களது உள்ளத்தைக் கவரவும், பொருள் விரித் துரைசெய்யுங் காலத்து கற்றோர் மனதையுங் கொள்ளை கொள்ளும் போக்காகவும் இதனை யாத்திருப்பது, ஆசிரியரது ஆற்றலையும் உண்மை பக்தியையும் நன்கு புலப்படுத்துகிறது. ஆஸ்திக ஞானவாசிரியராய் இவ்வரிய நூலை யுலகோபகாரமாகத் தமிழுலகுக் குதவிய ஸ்ரீமத் கிருஷ்ணபிள்ளையவர்களை உலகவீடேற்றத்தைப் பெரிதும் காடி யுழைக்க வெழுந்தப் பேராசிரிய ரென்னலாம். இந்நூலைக் கற்றோர் இவரைக் ' கிறிஸ்தவக் கம்பன் '' எனச் சிறப்பித்துக் கூறுவது சாலவும் பொருந்தும். (காளிதாச மகாகவியை பரத கண்டத்து ஹோமர் என்றபடி).

இந்நூலாசிரியர் காலத்திற்குப் பின்னரிதனை நெடுங்காலமாக மீண்டு மச்சியற்று வாரின்றி இத்திருநூல் கிடைப்பதும் அருமருந்தாயிற்று. இப் பெருங் குறைவை நீக்கினர் சங்கைக் குறிய (Rev. H. A. Popley, B.A.) பாப்லி போதக ரவர்கள். இப்பெரியாரே இதனிரண்டாம் பதிப்பை வெளியிட்டுத் தமிழுலகினுக் குபகரித்தனர்.

## இரக்ஷணிய சரிதம்.

ஸ்ரீமத் கிருஷ்ணபிள்ளையவர்கள் தாமியற்றிய விப்பெருங்காப்பியத்தில் இரக்ஷணிய சரிதமென்னும் பகுதியில் கிறிஸ்துநாதர் தஞ் சீஷர்களுக்குத் திருவிருந்தளித்ததுமுதல் மோக்ஷா ரோகணம் வரைக்குமுள்ள சரிதத்தை மிக்கத் தெளிவாகவும் நேர்மையாகவும் அவரது திவ்ய உபதேச மொழிகளைப் பாகுந் தெளிதேனும் பாலுங் கலந்தாற் போலும் வேதாகமத்திற் கூறியபடி தமது வொப்பற்ற விதவ சமர்த்தாலும் அதியற்புதக் கவிதைகளாலு மிக்காப்பியத்திற் றெளிவாக விவரித் தலங்கரித்துள்ளார். இன்னூலுரையாசிரியராகும் ஸ்ரீ P. S. கடம்பவன சுந்தர நாயனர், திருவாளர் கிருஷ்ணபிள்ளையவர்களது ஜீவிய சரித்திரத்தை (1924) வெளியிட்டது போலவே, அவரது நூலின் முக்கிய பாகமாகிய இரக்ஷணிய சரிதப் படலம் 500 கவிகளுக்கும் தெளி பொருள் விளக்க உரையொன்று நயம்பட வெழுதி, பள்ளிமாணவர் முதல் பாவண ரீறாக உள்ளத் தமிழர் யாவரையும்

*இவவுரையாசிரியர் எழுதி 1924ஹூ வெளியேற்றியுள்ள இவரது ஜீவிய சரிதிரங் காண்க.

மகிழ்வித் துள்ளார். இவர் பரத கண்டம் தக்ஷண பாகம், சோழ மண்டலம், தஞ்சை மாநகரத்திற் கருகிலுள்ள திருக்காவளூரிலே வேளாளர் குலத்திலே காணியாளர் மரபிலே வந்த ஸ்ரீமத் குமார நாயனுர் என்ற சிறந்த தமிழ்ப் புலவரது குமாரரான ஸ்ரீமத் சுந்தர நாயனுரவர்களது தவப்பேருக 1887 ஆம் ஆண்டில் தோன்றியவர். இவர் 1908 ஆம் ஆண்டில் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். ''புருஷராய் ஜனன மெடுத்தபேர் மெய்ஞ்ஞானப் போதத்தை யறிவதொன்று'' என்றமுது மொழிக் கேற்பத் தக்க வாசியர் களை யடுத்துத் தமிழ் பாஷையிற் பேரன்பு பூண்டவராயக் கற்றுத் தெளிந்த தல்லாமல்,

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
> கற்றனைத் தூறு மறிவு"

என்ற திருவள்ளுவரது திருவாய் மொழியையும் மனங் கொண்டு தமிழா ராய்ச்சிச் செய்வதே தமக்குரிய பல முக்கியமான வேலைகளி லொன்ருகக் குறிப்பிட்டு நமது தாய் மொழியை யினிது போற்றி மதித்து வருகின்றனர். பனமுள வருந்தி யுழைத்துப் பகுத்தாய்ந்து, உண்மையிற் றெரிந்ததைத் தொகுத்து, உலக நன்மையைக் கருதியவராய், தேவ வூழியமா மிம்மேலான காரியத்திற் றலையிட்டு,

> "தட்டானிடத்திற் றங்கப்பணிகள் சமைப்பதுவும்
> வட்டாடுவாரைத் திருத்தி நன்மார்க்கத்தில் வைப்பதுவும்
> பட்டாங்கிலுள்ளதைக் காகிதத்தச்சிற் பதிப்பதுவுந்
> தொட்டார் மனதைப் பலவாறு நாளுந்துயர் செய்யுமே."

என்ற வான்றோர் மொழியையும் கஷ்ட நஷ்டங்களையும் பொருட் படுத்தாது மனஞ் சலியாதுழைத்து இவ்வரிய வுரையை யாவரும் விருப்போடெடுத்து வாசித்து, அதனல் நற்பய னடையும் வண்ணம் அதனை யுருப்படுத்தி மலை மிசைதோன்றும் மதியம்போ லொளிகாலச் செய்த இவ்வுத்தமர் நீடூழி வாழ்க. இவரது அருமையும் ஞான நெறியைப் போதிக்கக் கூடியதுமான இரக்ஷணிய சரிதப் படலத்தின் பரிசுத்தமான உரை, நீர் சூழ்ந்த விப பூமுகத்தி லென்று நின்று தமிழகந் தோறு மங்காது பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவன் கருணை செய்வாராக. சுபம்.

### இதுவுமது—அறுசீர் விருத்தம்.

பித்தரைப்போற் பிதற்றுமற் பராபரமொன் றுண் டென்றுப்
புகன்றிப்பூவி
லுத்தம சற்போதனைக் கோருறைபிடமா யுலகமுய்ய வொருவராகி
யித்தரையில் மநுவுருகொண் டொரு சிலுவைமிசையாவி
யீந்துயிர்த்த
வித்தகரின் ஜீவிய மிரக்ஷணிய சரிதமென விளங்கிற்றம்மா.

இவ்வரிய பெருநூலைக் கவிவலவர் கிருஷ்ணபிள்ளை யியற்றி
மேலாம்
அவ்வரிய பகவானி னருஞ்செயலைக் கவியாலே யலங்கரித்தார்
எவ்வெவரு மதன்பயனை நனிமாந்த வுரைதெளிவா யெழுதித்தந்தா
னவ்விய மற்றோர்மெச்சுங் கடம்பவன சுந்தரப்பேர றிஞன்
மாதோ.

இரங்கூன்,
12—12—1931

இப்படிக்கு,
ந. சபாலமூர்த்திப்பிள்ளை.

சாத்துக் கவி

பெங்களூர் சித்திரக்கவி நாவலர் ஸ்ரீலஸ்ரீ **A. V.** ஜோசேப்புபிள்ளை
யவர்கள் மாணாக்கரும்

ஷையூர் செயின்ட்மேரிஸ் வித்தியாசாலைப் பிரதமப் பண்டிதரும்
இயற்றமிழ்ப் போதகாசிரியருமான

ஸ்ரீமான் **C. S.** ஞானப்பிரகாசம் பிள்ளையவர்கள் கூறிய

அறுசீர் விருத்தம்

மடமகற்று நூல்கள் பலவாய்ந்த ஸ்ரீ கிருஷ்ண பிள்ளை
மானிலத்தோர்
திடம்பெற வியற்றியருள் இரக்ஷணிய யாத்திரிகந்
தெரிய யார்க்குந்
தடம்பொழிற் சூழ்ப் புதுக்கோட்டைக் கடம்பவன சுந்தர
வேட்டுநும் விளக்கப்
புடமிட்ட பொன்போன்ற வுரைக்கு நிகர் யார்வகுத்தார்
புவியிலம்மா.